உ

கணபதிதுணை.

திருவாலவாயுடையார்

திருவிளையாடற்புராணம்.



செல்லிநகர்ப்

பெரும்பற்றப்புலியூர் நம்பி

இயற்றியது.

இது,

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையராவ்

பல கையெழுத்துப்பிரதிகளைகொண்டு

ஆராய்ந்து

நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

(இரண்டாம் பதிப்பு)

விலை ரூபா 2—8—0.

பிரபவவரு சித்திரைமீ.

1927.

Copyright Registered.

Formes 1 to 47 Printed at the Commercial Press, Triplicane
and the remaining portion at the Kesari Press.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

பக்கம்.

க. இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின் முதற்குறிப்பகாதி ... ... 4.

உ. முகவுரை ... ... 5—13

ங. இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பியின் வரலாறு 14—20.

ச. நூலாராய்ச்சி ... ... 20—29.

[இதில், நூலிலுள்ள முக்கியமான சில குறிப்புக்கள், அகில வகைகள், நூலாசிரியர் கூற்றுக்கள் பொருளணிகள், மடக்கணிகள், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் அருமைத் திருநாமங்கள், இந்நூலால்தெரிந்த ஊர்களின்பெயர் கள், குலங்கள், சங்கப்புலவர்கள், சாதிகள், பழைய வழக்கங்கள், தனிப்பாடல்கள், தாண்டவம் திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் பதிகங்கள், அவரது திருநா மங்கள், திருவிளையாடல் சம்பந்தமான சிலபழமொழி கள் முதலியன, தீர்த்தங்கள், நாடுகள், நியாயம், நூல் கள், மடங்கள், மந்திரங்கள், மலைகள், மரபு, வித்தை கள், சில அரியமொழிகள் ஆகிய இவற்றை முறையே அறிந்துகொள்ளலாம்.]

ஞ. இதிற்காணப்படும் விசேட வேறுபாடுகள் ... ... 30 - 34.

ஈ. ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள் திருநாவுக்கரசுநாயனருக்குக் காலத்தால் முந்தியவரென்பது ... ... 35 - 6.

எ. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் மூலமும் குறிப்புரையும் க - ஈகச.

அ சில கையெழுத்துப்பிரதிகளிற்கண்ட கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் ... ... ஈ கஞ.

கூ. நூற்சிறப்புப்பாயிரம் ... ... ஈ ககூ.

கo. திருவாலவாயுடையார் திருவிளையாடற் பயகாமாலை மூலமும் குறிப்புரையும் ... ... ஈடகள-ஈடo.

கக. கடம்பவனபுராணம், கo - இலீலாசங்கிரக அத்தியாயம் மூலமும் குறிப்புரையும் ... ... ஈடஈக-ஈடஅள.

கஉ. திருவுசாத்தான நான்மணிமாலை, உஅ - ஆம் செய்யுளும் குறிப்புரையும் ... ... ஈடசஅ-ஈடo.

கங. திருவிளையாடற் கருணைத்திருவிருத்தம், கக - ஆம் பாடல் ஈ ஈடo.

கச. திருவிளையாடற்புராணச் செய்யுண் முதற்குறிப்பகாதி ஈடஈக-ஈடச.

கஞ. பயகாமாலைச் செய்யுண் முதற்குறிப்பகாதி ... ... ஈடஈஞ.

ககூ. இலீலாசங்கிரக அத்தியாயச் செய்யுண் முதற்குறிப்பகாதி ... ஈ ஈகூ.

கள. அறுபத்தி நான்கு திருவிளையாடல்கள் முதலியவற்றின் அகாதி ... ... ஈ ஈளஅ.

கஅ. அரும்பத முதலியவற்றின் அகாதி ... ... ஈடஈகூ-ஈடஉ.

கஉ. பிழையும் திருத்தமும். ... ... சஉச.

இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய * நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அருணகிரி - அருணகிரிப்புராணம்.
அழகர்கல - அழகர்கலம்பகம்.
இரகு - இரகுவம்சம்.
இ. கொ - இலக்கணக்கொத்து.
இலீலா - இலீலாசங்கிரக அத்தியாயம்.
இறை - இறையனாரகப்பொருள்.
ஐங்குறு - ஐங்குறுநூறு.
கட - கடவுள்வாழ்த்து. ணம்.
கடம்ப, கடம்பவன - கடம்பவனபுரா
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கல் - கல்லாடம்.
கலி - கலித்தொகை.
கலிங்க - கலிங்கத்துப்பரணி.
குறுந் - குறுந்தொகை.
கூர்ம - கூர்மபுராணம்.
கோயிற்பு - கோயிற்புராணம்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சீவக - சீவக சிந்தாமணி.
சுந்தர - சுந்தரமூர்த்தி நாயனார்.
சூடா - சூடாமணிநிகண்டு.
சூளா - சூளாமணி.
ஞான - ஞானவாசிட்டம்.
தக்க, தக்கயாக - தக்கயாகப்பரணி.
தத்துவ - தத்துவராயர் பிரபந்தங்கள்.
தாயு - தாயுமானவர் பாடல். [ணம்.
திருக்காளத்தி - திருக்காளத்திப் புரா
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார். [னர்.
திருஞா திருஞானசம்பந்தமூர்த்திநாய
திருநா - திருநாவுக்கரசுநாயனர்.
திருநாகைக்காரோண - திருநாகைக் காரோணப் புராணம்.
திருமயிலை - திருமயிலைத்திரிபந்தாதி.
திருவா - திருவாசகம்.
திருவாத - திருவாதவூரர் புராணம்.
திருவிளை - திருவிளையாடற் புராணம்.
திவ் - திவ்யப்ரபந்தம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியர்.
நள - நளவெண்பா. [மாலை.
நால்வர்நான்மணி - நால்வர்நான்மணி மாலை.
நாலடி - நாலடியார்.
பக் - பக்கம்.
பதி - பதிகம்.
பட்டினப் - பட்டினப்பாலை.
பதிற் - பதிற்றுப்பத்து.
பயகர - திருவிளையாடற் பயகரமாலை.
பரி - பரிபாடல்.
பா - பாயிரம்.
பி - ம் - பிரதிபேதம்.
பிரபு - பிரபுலிங்கலீலை.
பு. வெ - புறப்பொருள் வெண்பா மாலை.
புறநா - புறநானூறு. [மாலை.
பெரிய - பெரிய புராணம்.
பெரும்பாண் பெரும்பாணாற்றுப் படை.
பொருந - பொருநராற்றுப்படை.
மணி - மணிமேகலை.
மதி, மதிரை, மதுரைக் - மதுரைக்காஞ்சி.
மதுரைக்கல - மதுரைக்கலம்பகம்.
மதுரைப்பிற் - மதுரைப்பிற்றுப்பத்தந்தாதி. [தமிழ்.
மீனாட்சி - மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ்.
யா. வி - யாப்பருங்கலவிருத்தி.
முருகு - திருமுருகாற்றுப்படை.
வி - பாரத, வி - பாரதம் - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

---

* நூல்களிலுள்ள உறுப்புக்களின் பெயர்கள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

முகவுரை.

தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணு வென்றேன்
றேதியே மலர்க ளேவி யோருங்கின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ்சூடு
மாதியே யால வாயி லப்பனே யருள்செய் யாயே.

திருவாலவாயென்பது பாண்டியநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினைந்து ஸ்தலங்களில் முதலாயது;

பதினைந்துஸ்தலங்களாவன :

"கூடல் புனவாயில் குற்றால மாப்பனூர்
சேடகிரிதல் வேளி யிராமேச-மாடானை
தென்பரங்குன் றாலசுழிய றென்றிருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றாடூ வணம்" என்பன.

இத்தலம், கருணைக்கடலாகிய ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் ஆன்மாக்களை உய்வித்த நாமவெய்ப்பை, சுந்தரசிவயோகி பாடல்கள் செய்தருளிய ஒப்புயர்வற்ற பெருமைவாய்ந்தது; இதற்குரிய தேவாரப் பதிகங்களாவன :

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

தேவாரத்தின் முதல்			பண்
நீலமாமிடறது		....	குறிஞ்சி
மந்திரமாவது	...	....	காந்தாரம்
மானினேர்விழி	....	...	கொல்லி
காட்டுமாவது	....	....	கொல்லிக்கம்
செய்யனே	....	....	,,
வீடலாலவாயிலாய்	....	....	,,

வேதவேள்வியை	....	....	காலடிமேல்வைப்பு
ஆலநீழல்	....	....	திருவியமகம்
மங்கையர்க்கரசி	....	....	புறநீர்மை

திருநாவுக்கரசுநாயனார்

வேதியா	....	....	திருநேரிசை
முளைத்தாணை	....	....	திருத்தாண்டகம்.

இத்தலத்திற்குரிய பழையவரலாறுகளைப் புலப்படுத்தும் வடநூல்களும், வடமொழித் துதிகளும், தனித்தமிழ் நூல்களும், தனிப்பாடல்களும் பல உள்ளனவென்பது யாவருக்கும் தெரிந்ததே. வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப்பெற்றனவாய் மூர்த்திவிசேட முதலியவற்றை விளங்கத் தெரிவிக்கும் நூல்கள் சில; அவை திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், திருவிளையாடற் புராணம், அட்டமிப் பிரதக்ஷிணமான்மிய மென்பனவாம்; அவற்றுள், —

க. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமென்னும் இந்நூல், உத்தரமகாபுராணமென்னும் வடநூலின் ஒருபகுதியாகிய சாரசமுச்சய மென்பதினின்று மொழிபெயர்த்து, செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர்நம்பி பென்பவரால், செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இஃது, "ஓதிய" (பக். உ) வென்னுஞ்செய்யுளாலும், "அம்பதமத்தார்" (பக். ஙகங) வென்னுஞ் செய்யுள் முதலியவற்றாலும் விளக்குகின்றது. இந்நூலின் செய்யுட்டொகை, கஅருங. இது பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவிளையாடலெனவும் வழங்கா நிற்கும்; இதனுடைய மற்றைச் சிறப்புக்கள் பின்னர் அவ்வவ்விடத்து எடுத்துக்காட்டப்படும்.

உ. கடம்பவனபுராண மென்பது, தென்னாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாதபண்டித னென்பவரால் நீபாரண்யமாஹாத்மியம் அல்லது கதம்பவனபுராண மென்னும் வடநூலிலிருந்து மொழி பெயர்த்துச் செய்யுள் நடையாக இயற்றப்பெற்றது. இதன் செய்யுட்டொகை, கoஙo. இதில் இலீலாசக்திபக அத்தியாயத்தின் முதலிலுள்ள, ஙச - செய்யுட்களாற் கூறப்பெற்ற, ஙச - திருவிளையாடல்களும் மேற்கூறிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ள முறைப்படியே அமைந்துள்ளன. இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

* உத்தரமகாபுராணமென்னும் வடநூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

சுந்தரபாண்டியமென்பது, தொண்டைநாட்டிலுள்ள வாயற்பதியிலிருந்த அனதாரியென்னும் புலவர்பெருமானுஞ் சுந்தர பாண்டியமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள் நடையாக இயற்றப்பெற்றுள்ளது; "மிண்டரை வெல்லும் வலீச் சிங்க ராயன் விலிகொடுப்பத், தண்டமிழ் மேக முரத்தூரில் வேதி யன் முனம்மிற்பக், கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான், வண்டமிழ்க் கும்ப னனதாரி யருதொண்டை மண் டலமே" என்னுந் தொண்டைமண்டலசதகத்தாலும், "கம்பனென் றுந் தாதனென்றுங் † சாழிபோட்டக் கூத்தனென்னுங், கும்பமுனி யென்றும்பேர் கொள்வ தோ - அம்புவியின், மன்னு வலர்புகழும் வாய லன காரியப்ப, னங்காளி லே பிருந்த கால்" என்னும் பழைய வெண் பாவாலும் பாராட்டப் பெற்றவர் இந்த அனதாரியேயென்று தெரிகின் றது. இந்நூல் செய்யப்பெற்றகாலம், ஏலி. கசஅசு; கி. பி. 1563. இஃது இன்னும் அச்சிடப்படவில்லை; முழுமும் கிடைக்கவுமில்லை.

ச. திருவிளையாடற்புராணமென்பது பரஞ்சோதிமுனிவரென் பவரால் ஸ்ரீ ஹாலாஸ்யமாகாத்மியமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இதன் செய் யுட்டொகை கூகூகூ. இக்காலத்து எல்லாராலும் மிகுதியாகப் பாராட்டிப் படிக்கப்பெற்றுவருவது இந்நூலே. இஃது அச்சிடப்பட் டுள்ளது.

ஞ. அட்டமிப்பிரதகூணமான்மியமென்பது தேவாரத்தல முறையை முதலிற்பதிப்பித்த ஸ்ரீ மகராஜபுரி வாலியுமாக இருந்த ஸ்ரீ இ. இராமஸாமிப் பிள்ளையவர்களால் வடநூலிலிருந்து வசன நடையாக முன்பு இயற்றிப் பதிப்பிக்கப்பெற்று வழங்குகின்றது.

இந்த நூல்கள் ஐந்தனுள், முதலாவதும் நான்காவதுமாகிய நூல் கள் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளுடைய அற்புதத்திருவிளையாடல்கள் அறுபத்துநான்கையும் மிகச் செவ்வையாக விரித்துப் பாராட்டித் தெரிவிப்பனவாம். இவ்விரண்டனுள் ஒன்றனேமெமற்றொன்றற்குள்ள வேறுபாடுகள் பல.

இந்நூலிலுள்ள மூர்த்திபரிக்கரசளித்த திருவிளையாடல் (நிக) முதலிய மூன்றுகதைகளும் அந் நூலிற்காணப்படவில்லை; அதிலுள்ள வருணனைவிட்ட கடலிலவற்றசெய்த திருவிளையாடற்கதை இதி

இந்நூல் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியனீபுத்தகசாலையிற் கிடைத்தது.

† காளியொட்டக் கூத்தனெனறும் வழங்குவதுண்டு.

லுள்ள (கஉ) நான்மாடக்கூடலான திருவிளையாடலிலும், அதிலுள்ள நாகமெய்த திருவிளையாடல், மாயப்பசுவைவதைத்த திருவிளையாடற் கதைகள் இதிலுள்ள (கூசு) மதுரையான திருவிளையாடலிலும், அதி லுள்ள திருநகரங்கண்ட திருவிளையாடற்கதை இதிலுள்ள (ருங) புலிமுலைபுல்வாய்க்கருத்திய திருவிளையாடலிலும் அமைக்துள்ளன; இதில் திருவிளையாடல்கள் அமைந்துள்ள முறைவேறு ; அதிலமைந் துள்ள முறைவேறு; அது கதையை விரித்துக்கூறுவது ; இது சுருக்க மாகக் கூறுவது; அன்றியும், சங்கச்செய்புட்களிலுள்ள பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள இங்ஙகாவரலாறுகளை விடாமல் தழுவிச்செல் வது இது ; அது அன்னதன்று.

சில நூற்றாண்டுகளுக்குமுன் இந்நூலை எல்லாராலும் படிக்கப் பெற்றுவந்ததன்றி, இந்நூலிலுள்ள திருவிளையாடல்களின் முறை யையும் இதன் சொன்னடை பொருணடைகளையுமே தழுவிப் பலர் இத்தலசம்பந்தமான நூல்களைச் செய்துவந்தார்களென்று தெரி கின்றது. இது திருவிளையாடற் பயகரமாலை, கடம்பவன புராணத் துள்ள இலிலாசங்கிரக அத்தியாயம், † திருவுசாத்தான நான்மணி மாலையின், உள - ஆம் செய்புள் முதலியவற்றால் நன்கு விளங்கும்.

இதுவே திருவிளையாடலென்று முற்காலத்திற் பாராட்டப் பட்டுவந்ததென்பதையும் இதன்செய்புட்கள் பழைய உரைகளில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுவந்தனவென்பதையும் கோ லமறுத்தற்குத் திருப்போரூர்ச்சிதம்பரசுவாமிகளெழுதியவுரை நன்கு விளக்குகின்றது ;.மெய் நூல், எ, ககூ-ஆம் செய்புட்களின் உரைகளைப் பார்க்க.

மேற்கூறிய உண்மை யாவருக்கும் விளங்கும் பொருட்டே பழையவுரையுடன் மிதிலைப்பட்டியிற் கிடைத்தகான மெய் திருவிளை

---

* இந்நூலாசிரியரின் பெயர் வீரபத்திரக்கம்பர் என்று ஓர் எட்டுப் பிரதி யால் தெரியவந்தது.

† இந்நூலை இயற்றியவர், நொச்சியூர்ப் பழனியப்பஞ்சேர்வைகாரர் ; இவரும் திருவுசாத்தானத்தின் பழைய தமிழ்ப்புராணமியற்றிய அம்பலவா ணமுனிவரென்பவரும் ஒரேகாலத்தினர். மெய் முனிவருடையகாலம், இற் றைக்கு ஈஉ0 வருடங்களுக்கு முந்தியதென்றும் இதனை, அம்முனிவர் தமது காத்தால் எழுதிய சதாசிவபியாக்கியானமென்னும் புத்தகத்தில் எழுதப்பட் டுள்ள சகாத்தம் தெரிவிக்கின்றதென்றும் ஆண்டுள்ளார் சொல்லுகின்றன ரென்றுஞ்சொல்லி, மெய் நான்மணிமாலையை எனக்குவாங்கித்தந்தவர், பின் னத்தூர், ஸ்ரீ அ. நாராயணஸ்வாமி ஐயரவர்கள்.

யாடற்பயகரமாலை மூலத்தையும் இலீலா சங்கிரக வத்தியாய முதலிய வற்றையும் வேறுசில பழைய பிரதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து குறிப்புரையுடன் பதிப்பித்து இப்புத்தகத்தின்பின்னர்ச் சேர்த்திருக்கிறேன்.

பயகரமாலையென்றும் பெயரைப் பயங்கரமாலையெனத் திருத்தி விட்டதல்லாமல், இத் திருவிளையாடலையே மேற்கோளாகக்கொண்டு அதுசெய்யப்பெற்றதென்பதையுமறியாமற் சில பாடல்களை மாற்றியும் சில பாடல்களைக் குறைத்தும் சிலபாடல்களை நூதனமாக இயற்றிச் சேர்த்தும் சற்றேறக்குறைய 150 - வருடங்களுக்குமுன் யாரோ ஒருவர் பதிப்பித்து விட்டனர்.

இப்புத்தகத்தில் கஉக, கஙச, கசள, ககo, உஉள-அ-ஆம் பக்கங்களின் கீழே 'இது வெள்ளிபாட்டு' என்றும், 'சிலபிரதிகளிற்காணப்படவில்லை' என்றும் குறிப்பிட்ட செய்யுட்களாவும் வெள்ளி பாடல்களென்றே ஓர் எட்டுப்பிரதியில் வரையப்பட்டிருந்தன. [வெள்ளி-வெள்ளியம்பலவாண முனிவர்.]

இதுகாறும் கூறியவாற்றால், வெள்ளியம்பலவாண முனிவர், திருப்போரூர்ச் சிதம்பரஸ்வாமிகள், திருவிளையாடற் பயகரமாலைநூலாசிரியரான வீரபத்திரக்கம்பர், இலட்சூர் வீமநாதபண்டிதர், கோச்சியூர்ப்பழனியப்பஞ்சேர்வைகாரர் ஆகிய இவர்களுடையகாலத்திற்கு இந்நூலாசிரியருடைய காலம முற்பட்டதென்பது வெளியாகின்றது.

இந்நூலால், சங்கநூல்கள் சம்பந்தமான சிற்சில பழைபசெய்திகளும், சிலநாடுகள், சிலமலைகள், சிலஊர்கள், சில புண்ணியதீர்த்தங்களும், சில சிவஸ்தல விசேடங்களும், திருவிளையாடல் சம்பந்தமான சில பழமொழிகளும், சில திருவிளையாடல்கள் முதலியன நடந்தமைக்கு அறிகுறியான இடப்பெயர் முதலியனவும், சில புலவர்களுடையசரித்திரங்களும், அவர்களுள் இன்னுரின்னார் இன்னஇன்ன அமயத்து இன்னஇன்ன பாடல்கள் இன்னஇன்ன நூல்கள் செய்தனரென்பதும், சில நூற்பெயர்களும், திருவாசகத்திலுள்ள பதிகங்களுள் இன்னஇன்னபதிகங்கள் இன்னஇன்ன அமயத்துப் பாடப்பட்டனவென்பதும், சில அபசபரமபரைகளும், பற்பல பழைய வழக்கங்களும், இக்காலிற் பெரும்பாலும்வழங்காத சிற்சில அரிய சொற்களும் வாக்கியங்களும், இக்காலத்துப் புலப்படாதனவாகிய இசை, குதிரை, நவமணி முதலியவற்றின் இலக்கணங்களும், ஒரு

வகையான யுத்தபரிபாஷைகளும், சில சாதிவகையும், சில குலவகை யும், இன்னும் எத்தனையோ அரியவிஷயங்களும் அறியலாகும்.

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் இத்தூலுள்ளே பெரும்பாலும் சொக் கனென்றே வழங்கப்பெறுவர். 'சொக்கன்' என்பதற்கு அழகன் என்பதுபொருள்; சொக்கு - அழகு; பேரழகென்றும் பொருள் கூறுவதுண்டு; இதனை, இத்தூல், இத்திரன் பழி தீர்த்தருளினா யாடல், உக்ரஸ்தம் செய்புளாணர்க. பண்டைக்காலத்து இப்பெயரே பெரும்பாலும் வழங்கப்பெற்றுவந்தமையின், இத்தூலாசிரியரால் இத் திருநாமம் மிக எடுத்தாளப்பட்டதென்று தெரிகின்றது. அங்ஙனம் வழங்கி வந்தமையை, சொக்கலிங்கம், சொக்கர்தீபாராதனை, சொக் கத்தாண்டவம், சொக்குப்பாட்டு, சொக்கரகப்பம், சொக்கர் தலைக்கிடு (சொக்கர்லேஞ்ச), பழைய சொக்கநாதர் கோயிலென்னும் உலக வழக்காலும், தேவாரம், கடம்பவனபுராணம், சுந்தர பாண்டியம், மதுரை மும்மணிக்கோவை, மதுரைச் சொக்கநாதருலா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைத் திருப்பணிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாதவூரர்புராணம், பழைய திருப்பெருந்துறைப் புராணங்கள் முதலிய தூல்களாலு மூணர்க. அன்றி, வடமொழிப்பெயராகிய 'சுந்தரர்' என்பதை எடுத்தாளுதலி லும் தென்மொழிப் பெயராகிய 'சொக்கர்' என்பதைத் தமிழ் தூலில் எடுத்தாளுதல் அழகென்று இவர் எண்ணி யிருக்கலா மென்றும் தோற்றுகிறது; சுந்தரமென்ற திருநாமமும் இதிற் சிறுபான்மையாக வழங்கும்.

தாமியற்றிய திருவிளையாடற்புராணச் செய்புட்களைப் படித்துக் காட்ட தினைந்து, ஒருநாள், அந்திப் பொழுதில் வேம்பத்தூர்க்கு வந்த பரஞ்சோதி முனிவரை அவ்வூர்க்கவிஞர்களுள்ளே தண்டிகை பெற்று விளங்கிய பெரியார் அறுபத்துநால்வர் மறுநாட்காலையில் வரச் சொல்லிவிட்டு, இன்னஇன்ன பகுதியை இன்னர் இன்னர் இயற்று தற்குரியரென்று அன்றிரவில் யோசித்துத் தமக்குள் நிச்சயித்துக் கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாக அறுபத்துநான்கு திருவிளை யாடல்களையும் விடியற்காலத்துள் தனித்தனியே செய்து முடித்து அவற்றை ஒருங்குசேர்த்துவைத்துக்கொண்டிருந்து, காலையில்வந்த பரஞ்சோதிமுனிவரை நோக்கி, இதைக்கேளுமென்று தாமியற்றிய தூலைப் படித்துக்காட்டி, திருவிளையாடற்புராணம் தமிழில் முன்னமே யிருக்கையில் நீர் செய்தது எதன் பொருட்டென்றுவினவ, அம்முனி வர் மனமொந்து சபித்துவிட்டுப் போயினர்; அதனால், இத்தூல் வழங்

காது போயிற்றென்று ஒரு கட்டுக்கதை கூறுவாரும், வடநூல் ஆதாரமில்லாமையால் இந்நூலை ஒருவரும் அங்கீகரிக்க வில்லையென்று சொல்லுவாரும், சோமசுந்தரக் கடவுளை அருமையாகச் சொல்லாமற் பத்தியின்றி, 'சொக்கன் சொக்கன்' என்று பலவிடத்துங் கூறியிருத்தலால் இதை ஒருவரும் கையால் தொடவில்லை யென்பாரும், பரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடல் வழங்கத் தொடங்கியபின்பு இது வழங்குதலற்றதென்பாரும், இன்னும் தத்தமக்குத் தோற்றியவண்ணம் பற்பல கூறுவாருமாக அங்கங்கே பற்பலர் உளராயினர்; இவைகள் யாவும் சுதாஇகதிகக்கியாயமென்பது இந்நூலை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இனிது விளங்கும்.

இப்புத்தக ஆராய்ச்சிக்குக் கருவிகளாக இருந்த தமிழ் நூல்கள் அட்டமிப்பிரதக்ஷிணமான்மியம், அருணகிரிப் புராணம், அழகர் கலம்பகம், இரகுவம்மிசம், இலக்கணக்கொத்து, ஐங்குறுநூறு, கடம்பவனபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம், கல்லாடமும் திருமெல்வேலி மாலையும் பெருமாள் பிள்ளையுமையும், கலிங்கத்துப் பரணி, கலித்தொகை, காளையார் கோயிற்புராணம், கூடி வசனம், குமரித்தொகை, கூடலழகர் புராணவசனம், கோயிற்புராணம், சிதம்பரபுராணம், சிலப்பதிகாரம், சிவக சிந்தாமணி, சுந்தரபாண்டியம், சூளாமணி, ஞானவாசிட்டம், தக்கயாகப்பரணி, தத்துவராயர் பிரபந்தங்கள், தாயுமானவர் பாடல், திருக்காளத்திப் புராணம், திருக்கானப்பேர்ப்புராணம், திருச்சிற்றம்பலக்கோவையார், திருநாகைக்காரோணப் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருப்பூவணப் புராணம், திருப்பெருந்துறைப் புராணங்கள் (பழையன, புதியது), திருவாசகம், திருவாதவூரர்புராணம், திருவிளையாடற் பயகர மாலையும் அதனுரையும், திருவிளையாடற் புராணம் (பரஞ்சோதி முனிவர் செய்தது), திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருவேடகப் புராணம், திவ்யப்பிரபந்தம், தேவாரம், தொல்காப்பியம், நளவெண்பா, நாலடியார், பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், பிரபுலிங்கலீலை, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெரியபுராணம், மணிமேகலை, மதுரைக்கலம்பகம், மதுரைச் சொக்கநாதர் உலா, மதுரைச் சொக்கநாதர்

* இந்நூல் வடநூலாதாரங்கொண்டே இயற்றப்பெற்றதென்பதை, "குறைவற", "அவைநடு", "ஓதரிய", "வியாதன்வான்மீகி" என்னும் முதற்குறிப்பையுடைய இந்நூற்செய்யுட்களாலுணர்க.

மும்மணிக்கோவை, மதுரைத்திருப்பணிமாலை, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி, மருதவனப் புராணம், யாப்பருங்கல விருத்தி, வில்லி பாரத மென்பன; வடநூல்கள்: ஸ்ரீவாதபுரமாஹாத்மிய முதலியன.

பயகரமாலை முதலியவைகளும் மேற்கோள்களாக இப்புத்தகத்தில் அங்கங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ள பாடல்களும் சிலசில விடத்து அச்சுப் புத்தகப்பாடங்களுக்கு வேறுபட்டிருந்தும்; அங்ஙனந் தோன்றுவதைகள் ஏட்டுப்பிரதிகளிற் காணப்பட்டவை யென்று கொள்க.

முதல் நூல்கள் அகப்படாமையின், இதிலுள்ள குதிரையிலக்கண முதலிய பகுதிகளுட் சிலவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை; இதன் குறிப்புரையில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டிய இசை மரபுச் செய்யுள் முதலியன பழைய உரைகளிற்கண்டவை.

படிப்போரும் தேடுவோருமற்ற மூலையிற்கிடந்த இந்நூற் கையெழுத்துப் பிரதிகளிலிருந்த பாடவேறுபாடுகளும் பிழைகளும் அளவுபடுவனவல்ல. ஆதலால், இதைப்பதிப்பித்தகாலத்தில் சேர்ந்த உழைப்பிலும் பொருட்செலவிலும் இதன ஆராய்ச்சி செய்தகாலத்து சேர்ந்த உழைப்பும் பொருட்செலவும் மிக அதிகம்.

பரிசோதனைக்குக் கருவியாகக் கொண்டஇந்நூற் கையெழுத்துப் பிரதிகள்:

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துப் பிரதி க
திருப்பெருந்துறை ஆலயத்துப் புத்தகசாலைப் ... ,, க
சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் ... ,, க
மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் ... ... ,, க
களக்காடு ஸ்ரீ சாமிநாத தேசிகரவர்கள் வீட்டுப் ... ... ,, க
திருநெல்வேலி ஸ்ரீ கவிராசநெல்லையப்பபிள்ளையவர்கள்வீட்டுப் ,, க
வேம்பத்தூர் ஸ்ரீ பிச்சுவையரவர்கள்வீட்டுப் ... ... ,, க
,, ஷெ. ஸுர் சாமாவையரென்கின்ற ஆண்டிஐயரவர்கள் வீட்டு [சாலி. சுசுஎசு; கி. பி. 1753] } க
,, பின்னத்தூர் ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்கள்தந்த ... ,, க
,, மதுரை ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள்தந்த ,, க
கும்பகோணம் மகாதளம் பேட்டை இராமலிங்கதேசிகர் வீட்டுப் ,, க
பட்டுக்கோட்டையைச்சார்ந்த சிதம்பரவிடுதிகோவிந்த ஐயர்வீட்டுப் க

இந்நூலாராய்ச்சிக்காக ஸ்ரீ வாதபுரமாஹாத்மியமாகிய வடநூலை வருவித்துதவியவர், மதுரை ஹைகோர்ட் வக்கீல் ம-ரா-ரா-ஸ்ரீ வே. முத்துராமலிங்க ஐயரவர்கள்.

மதுரையின் சம்பந்தமான சில விஷயங்களைச் சொன்னவர்கள் மதுரை ஸ்ரீமத்-பரமேசுவரபட்டரவர்கள் முதலியோர்.

இதன் முதற் பதிப்பு 1906-ஆம் வருஷம் வெளியாயிற்று. அதன் பின்பு செய்து வந்த ஆராய்ச்சியால் இந்நூலும் குறிப்புரை முதலியனவும் அடைந்த திருத்தங்கள் பல.

முதற் பதிப்பில் மூலத்துக்குப்பின்னே தனியே பதிப்பிக்கப் பெற்றிருந்த பாடபேதங்களையும் குறிப்புரையையும் சிலபயன் கருதி மூலங்கள் உள்ள பக்கங்களில் அடிக்குறிப்பாக அமைத்தும், அதில் தனித்தனியே காட்டப்பெற்றிருந்த பழைய தமிழ்நூற்பிரயோகங்களையும் 64-திருவிளையாடல்களைத் தனித்தனி முறையே பாராட்டியுள்ள தேவாரம்முதலிய மேற்கோள்களையும் பிறவற்றையும் உரிய பக்கங்களில் குறிப்புரையோடு சேர்த்தும் படிப்பவர்களுக்கு அநுகூலமாக இருக்கும்படி இது பதிப்பிக்கலாயிற்று.

இந்நூலால் தெரிந்த ஊர்கள் முதலிய வற்றின் பெயர்களும், இந்நூலாராய்ச்சியால் தெரிந்த பல அரியவிஷயங்களும், இந்நூலிற்காணப்பட்ட அரும்பதங்களும், திருவிளையாடற்பயகாமாலை, இலீலாசங்கிரக வுத்தியாயம், திருவுசாத்தானகரன்மணிமாலை உ-ஆம் செய்யுள், திருவிளையாடற் கருணைத்திருவிருத்தம், க-ஆம் பாடல் இவற்றிலுள்ள அரும்பதங்களும் இப்புத்தகத்தில் 'அரும்பத முதலியவற்றின் அகராதி' என்னும் பகுதியில் அமைந்துள்ளன.

நூற்பரிசோதனைக்கு உடனிருந்து உதவிபுரிபவர்கள் விஷயத்தில் நான் கவலையுறுவண்ணம் பலவருடங்களாக மாதவேதனமளித்து ஆதரித்துவரும் ஸ்ரீ சேது ஸமஸ்தானாதிபதிகளும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துத்தலைவர்களும், சென்னைச் சட்டசிரோபணசபையங்கத்தினர்களும், தமிழ் யூனிவர்ஸிடிக்கமிட்டியின் தலைவர்களுமான கௌரவம் பொருந்திய மகாராஜ ராஜஸ்ரீ பா. இராஜ ராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்களுடைய பேருதவியை இப்போதும் தமிழகத்துக்குத் தெரிவிக்கிறேன்.

இந்நூலைப்போலவே, இனிப்பதிப்பிக்கக் கருதிய நூல்களுள் ஒவ்வொன்றையும் கருதிய வண்ணம் பதிப்பித்து நிறைவேற்றுதற்குப் பொருட்டும் பிரதியுதவி ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளை அன்புடன் செய்தவர்கள் பெருவாழ்வடைந்து மகிழ்வெய்தும் பொருட்டும் திருவருள் சுரக்கும்படி சங்கப்புலவர் கடவுளில், மதுரைப் பேராலவாயாபென்னும் திருநாமம்பூண்டு வீற்றிருந்து அவர்களுடன் தமிழாராய்ந்தருளிய ஸ்ரீமீனாட்சிசுந்தரேசருடைய திருவடித்தாமரைகளைச் சிக்கெனச் சிக்கின்றனன்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
சென்னை, 15—4—1927.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

இந்நூலாசிரியராகிய

பெரும்பற்றப்புலியூர்நம்பியின் வரலாறு.

இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பியென்பவர் பாண்டிவளநாட்டுள்ள செல்லிநகரிற் பிராமணவருணத்தில் ஸ்மார்த்தர்களாகிய வேம்பத்தூர்ச்சோழியர்வகுப்பிற் *கௌணியகோத்திரத்திற் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசருடைய திருவடிக்கண் மிகுந்த பத்திச்செல்வம்வாய்ந்த குடும்பத்திற் சனித்தவர். இவர்க்குப் பெரும்பற்றப்புலியூர்நம்பி யெனவும், இவர்பரம்பரையிற்பிறந்தவரும் மதுரைத் திருப்பணிமாலையிற் கூறப்பெற்றவருமாகிய ஒருவருக்கு ஆனந்ததாண்டவநம்பியெனவும் பெயர்கள் அமைந்திருத்தலையும் இந்நூற் கடவுள்வாழ்த்திற் பெரும்பற்றப்புலியூர்த்தலமுதலியன அமைந்திருத்தலையும் உற்றுநோக்குகையில், இவர் குடும்பத்தார்கள் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசர் திருவடிக்கண் மிக்க அன்புடையவர்களென்பது வெளியாகின்றது.

இவர்பெயர் தில்லைநம்பி யெனவும் வழங்கும்; வேம்பத்தூர்ச்சோழியர்களில் அநேகருடைய இயற்பெயர்களின்பின் நம்பியென்பது சார்த்தப்பட்டுப் பண்டைக்காலத்தில் வழங்கிவந்ததென்பதை அவர்கள் வீட்டிலுள்ள பழைய ஓலைச்சாதனங்களில் இன்றும் காணலாகும்.

செல்லிநகரென்பது செல்லிநகரென்றும் பரசுராம சதுர்வேதிமங்கலமென்றும் செய்யுட்களில் வழங்கப்பெறும்; அக்கிரகாரத்தைச் சதுர் வேதிமங்கலம் அல்லது சதுர்வேதமங்கலமென்றல் மரபு; இது பழைய சிலாசாஸனமுதலியவற்றிலும் விளங்கும்; இங்ஙகர், இக்காலத்துப் பனையூரென்று வழங்கப்படுகின்றது. இது, சங்காபுரியினர் கோயில் தாலூகா, கரிவலம்வந்தநல்லூர்க்குச்சமீபத்தில் உள்ளது; செல்லியாரம்மையென்று பெயருள்ள தூர்க்காதேவியைத் தனக்கு அதிதேவதையாக உடைமையின், இவ்வூர் செல்லிநகரென்று பெயர் பெற்றதென்று சொல்லுகின்றனர்.

---

*கௌணிய கோத்திரம் - கௌண்டின்னிய கோத்திரம்; புறநானூற்றிலுள்ள 'நன்முய்ந்த'(கசுசு) என்னும் செய்யுளின் ஆசிரியரான சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பவரும், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் இந்தக்கோத்திரத்தினரென்பது அறிதற்பாலது.

[வேம்பத்தூர்]

வேம்பத்தூரென்பது, பாண்டிவளநாட்டில் மதுரைக்கு வடகிழக்கில் இரண்டுகாதத்தில் வைபைநதிக்கு வடக்கே உள்ளது ; இது நிம்பையென்றும் வழங்கும் ; நிம்பம்- வேம்பு ; பிரமோத்தரகாண்டத்தின் பாயிரத்தில், "தேசான" என்னும் செய்யுளில், "நிம்பை, யீசான மாமுனிவன்" என இப்பெயர் வந்திருத்தல் காண்க. பண்டைக்காலத்தில் இப்பெயர் வேம்பற்றூரென்றே வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. மணலூரிலிருந்த குலசேகரபாண்டியனுல், இவ்வகுப்பினர்க்கு முன்பு தானஞ்செய்யப் பெற்றதாதலின், இவ்வூர், குலசேகரசதுர்வேதமங்கலமெனவும் பெயர்பெறும் ; இவ்வூரைக் குலசேகரபாண்டியர் தானஞ்செய்தாரென்பதை,

> "தனக்கொருபத் தேழு கலிக்கொருபத் தாறு
> புனக்குடிமிக் கோமான் புதல்வன் - மனக்கினிய
> தென்னிம்பை யூரதனைச் சீர்மறையோ ருக்களித்தான்
> கன்னன் குலசே கரன்"

என்னும் பழைய வெண்பாவாலுணர்க.

குலசேகரபாண்டியனென்பவன், அகரமேற்றகினேந்து சாகேதபுரி யென்ற இடத்திலிருந்து பிராமணர் இரண்டாயிரத்தெண்மரை அழைப்பித்து, அவர்கள் நாமாவலியைப் பதிந்துகொண்டு, முறையே ஒவ்வொருவருக்கும் மனையும் நிலமும் கொடுத்துக் கொண்டே வந்து, இறுதியில் எஞ்சிய கணபதியென்னும் பெயருள்ளவரை அழைத்தகாலத்து, யாதுகாரணத்தாலோ அவர் வரவில்லை; அப்பொழுது, ஸ்ரீ மஹாகணபதி, ஒரு பிரமசாரி வடிவங்கொண்டுவந்து, 'யான் கணபதி' என்று கூறி, அவற்றை ஏற்றுக்கொண்டு மறைந்தருளினர். உடனே அரசன் வியந்து பரவசமுற்று அவருக்கென்று கொடுத்த மனையிற் கோயில்கட்டுவித்து, அதில் அவருடைய திருவுருவத்தைப் பிரதிஷ்டைசெய்து நிலத்தையும் தேவதானமாக விட்டனனென்றும் அவ்வூரே இதுவென்றும் ஒரு பழைபசரிதம் பாண்டிநாட்டில் கர்ணபரம்பரையில் வழங்கிவருகின்றது. வேம்பத்தூரில் அக்கிரகாரத்திற்குமேற்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாகணபதிக்கு அமைந்துள்ள இரண்டாயிரத்தெண் விநாயகரென்னும் திருநாமமும் இந்தப் பழைய சரிதத்தை வலியுறுத்தும்.

வானமாமீமதுரை (மானமதுரை) யிலிருந்த குலசேகரபாண்டியனென்ற ஓரரசன், இரண்டாயிரத்தெட்டுக் குடும்பத்தார்க்குப் பாண்டி

காட்டில் வேப்பத்தூர் முதலிய உ00அ-ஊர்களைக் கொடுத்தானென்று கூறுவதுமுண்டு; இதனை, மதுரைத்துதிமணிமாலை யென்னும் புத்தகம் ஒருவகையாகத் தெரிவிக்கின்றது.

வேம்பற்றூரென்பதும் குலசேகரசதுர்வேதமங்கல மென்பதும் இவ்வூர்க்குப் பெயர்களென்பதை இவ்வூர்ப் பெருமாள்கோயிற் கருப் பக்கிருகச்சுவரின் வெளியேயுள்ள சிலாசாஸனத்தாலும்அறியலாகும்; அகநானூறு, கடுசு-ஆம் செய்யுளுக்கும், புறநானூறு, சுகை-ஆம் செய்யுளுக்குமுரிய ஆசிரியரின் பெயராகிய வேம்பற்றூர்க்குமரனு சென்பதிலுள்ள வேம்பற்றூரென்பது இவ்வூராகவே கருதப்படுகின்றது. இவ்வூர்ப்பிராமணச் சிறுவர்களும் தமிழ்க்கவி செய்தலில்வல்லுநராயிருந்தனரென்பதைத் தமிழ் நாவலர் சரிதையும் புலப்படுத்தும். இவ்வூர்ச் சோழியர்களில் அநேகர் வேறு வேறிடஞ்சென்று தங்கள் தங்கள் கல்விமிகுதியையும் வருத்தமின்றிச் செய்யுட்களியற்றும் வன்மையையும் நன்கு புலப்படுத்திப் பண்டைக்காலத்திலிருந்த அரசர் முதலியோர்களால் நன்கு மதிக்கப்பெற்று முற்றாட்டாக அவர்கள்கொடுத்த ஊர்களைத் தமக்கிருப்பிடமாகக் கொண்டு தமிழ் நூலாராய்ச்சி செய்து வந்தார்கள்; ஆனலும், இவர்கள் வேம்பத்தூரா ரென்றே எல்லாராலும் அழைக்கப்படுவார்கள். இவர்கள் அங்ஙனமிருந்த ஊர்களுள் இப்பொழுது தெரிந்தவை: வீரசோழன், அல்லது வீரை, தென்காசி, கீழைப்பாவூர், வல்லநாடு (திருநெல்வேலிக்குக்கிழக்கே ஒரு காதவூரத்திலுள்ளது) இருப்பையூருணி (கோயிற்பட்டிக்குக்கிழக்கேயுள்ளது), திருநெல்வேலி, கரிவலம்வந்தநல்லூர், கற்குளம் (வல்லநாட்டைச் சார்ந்தது), பணையூர், குறுங்காவனம் அல்லது குறுங்களாவனம் (கீழைப்பாவூருக்குச் சமீபமாகவுள்ளது) என்பன. இக்குழாத்தினர் எல்லோரும் ஒரேவிதமான சமயக்கொள்கையை உடையவர்களல்லர்; தங்கள் தங்கள் முன்னோர்கள் தழுவிவந்ததும் வைதிகமாயதுமானகொள்கை எதுவோ அதனையே மேற்கொண்டவர்கள். இவ்வாறு அவரவர்கள் இயற்றிய நூல்களாலும் தனிப்பாடல்களாலும் விளங்கும்.

பாடுதுறைமுதலிய பற்பல நூல்களியற்றிய தத்துவராயரும், வரதுங்க ராமபாண்டியருடைய ஆசிரியராகிய ஈசானமுனிவரும், ஆனந்தலகரி சௌந்தரியலகரி முதலிய நூல்களியற்றிய வீரைக் கவிராச பண்டிதரும், ஞான வாசிட்ட நூலாசிரியரான ஆளவந்தான் அல்லது ஆளவந்தான் மாதவபட்ட ரென்பவரும், பகவத்கீதையியற்றிய ஸ்ரீ பட்டரும், பராபரை மாலைபாடிய அம்பிகாபதியும், நெல்லை வருக்கக்

கோவைபாடிய திருநெல்வேலிப் பெருமாளையரும், ஐயாயிரம்பாட லுள்ள பாகவதமியற்றிய செவ்வைச்சூவோரும், அழகர்கலம்பகமியற்றிய கவிகுஞ்சரமையரும், அழகர் பிள்ளைத் தமிழியற்றிய சாமிகவிராயரும், பிரபந்ததீபிகை இயற்றிய முத்துவேங்கடசுப்பையரும் இத்தவேம்பத்தூர்ச் சோழிய வகுப்பினரே.

இக்குழாத்தினர்க்கு வேம்பத்தூர்ச்சங்கத்தாரென்றும் ஒரு பெயர் பண்டைக் காலந்தொடங்கி வழங்கிவருவதுண்டு; இஃது அழகர்கலம்பக முதலியவற்றால் விளங்கும்.

முற்காலத்தில் ஏதேனும் நூலியற்றிய தமிழ்ப்புலவர்கள் அந்நூலைக்கொணர்ந்து இவ்வூர்ப்புலவர்களுக்குக் காட்டிச் செவ்வை செய்வித்து இவர்களுடைய உடன்பாடு பெற்றபின்பே அந்நூலைவெளிப்படுத்துதல் பெரும்பான்மையான வழக்கமாக இருந்ததென்று பலர் சொல்லக் கேள்வியுண்டு.

கம்பர் தாமியற்றிய இராமாயணத்தை இவ்வூரில்வந்து படித்துக் காட்டி இவர்களால் நன்குமதிக்கப் பெற்றனரென்பதும், காளமேகப் புலவர் இங்கே வந்து இவ்வூரார்பில் ஒருவர் சமத்தியாகக்கொடுத்த, 'கண்டங்கத் தரிக்கொத்துக் காய்'' என்பதை இறுதியடியாக அமைத்து, கொடுத்தவர் எண்ணிய வண்ணமே ஒரு செய்யுளும் ஆங்கிருந்த வேறுசிலர் விரும்பியவண்ணம் அருமையான சில சிலேடைவெண்பாக்களும் வருத்தமின்றிக் குறித்தகாலத்துட் பாடிமுடிக்க, இவர்கள் நன்குமதித்து இவ்வூருக்குத் தெற்கேயுள்ளதும், ''காளமேகத்தாறு'' என்று இக்காலத்தில் வழங்கப்படுவதுமாகிய கூ-மா அளவுள்ள நன்செய்நிலத்தை அவருக்கு முற்றாட்டாகக் கொடுத்தனரென்பதும் கன்ன பரம்பரைச் செய்திகள்.

திருச்சிராபுரம் மஹாவித்வான் ஸ்ரீமீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர்களாற் சிறந்த கவிஞரென்று பாராட்டப்பெற்றவரும் பல வருடங்களுக்கு முன்பு இராமநாதபுரத்தில், பல தமிழ்ப்புலவர்கள் தனித்தனியே கொடுத்தவிஷயங்களை யமைத்து, அவர்கள் குறித்த இரண்டடை நாழிகைக்குள், கூ-சிலேடை வெண்பாக்களை எளிதிற் பாடி, சிலேடைப்புலியென்னும் பட்டப்பெயரையும் உயர்ந்த சில பரிசில்களையும் ஸ்ரீ பாஸ்கரஸேது பதியவர்களாற் பெற்றவரும் தனஞ்சயகோத்திரத்தினரும் மேற்கூறிய வீரைக்கவிராச பண்டிதருடைய வழித்தோன்றலுமாகிய பிச்சுவைய ரென்பவரும் வேறு சில வித்துவான்களும் இவ்வேம்பத்தூராரே.

---

*ஸமஸ்யாவென்னும் வடமொழி இங்ஙனம் சிதைந்து வழங்குகின்றதென்பர்.

இவர்கள் சரித்திரங்களாகக் கன்னபரம்பரையில் வழங்குவன வும் செய்புள்முகமாக உள்ளனவும் இன்னும் எவ்வளவோ பல; அவை விரிவஞ்சி நிறுத்தப் பெற்றன.

கடைச் சங்கப்புலவர்காலந்தொடங்கி இன்றுவரை, தமிழ் மணங்கமழப் பெற்றுப் பற்பல வித்துவான்கள், தமிழ் நூல்களையே ஆராய்ச்சி செய்துகொண்டும் பாடஞ்சொல்லிக் கொண்டும் நூதன மாக நூல்களியற்றிக்கொண்டும் தமிழ்ச் சுவையைப் பிறருக்குப் புலப் படுத்தி வீற்றிருத்தற்கு இடமாகவிளங்கும் இந்த வேம்பத்தூரின் பெருமை என்போலியரால் எங்ஙனம் சொல்லற்பாலது; "பாட் டுக் குருகுந் தமிழ்ச்சொக்கநாதரே" அறிந்தருளுவார்.

சற்றேறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னே இவ்வூரு க்கு வந்து இவர்களுடைய தமிழ்ப்பயிற்சியையும் செய்யுள் செய்யும் வன்மையையும் குணவிசேஷங்களையுமறிந்து மகிழ்ந்த பழனி மாம் பழக்கவிசிங்கநாவலர் மிக்க அன்புடன் இவ்வூரார் விஷயமாகப் பாடிய வெண்பாக்கள் வருமாறு:—

க. "வேதநூல் வாழிதவ வேள்வித் துறைவாழி
நீதிநூல் வாழி நெறிவாழி - ஓதுதமிழ்
வல்லாராய் நிம்பை வளம்பதிவாழ் மாசனங்கள்
எல்லாரும் வாழி யினிது"

உ. "பொங்குகடல் வாழி புயல்வாழி சீர்வாழி
தங்குநூல் வாழி தமிழ்வாழி - துங்கமிகுந்
தேசமெங்கும் போற்றத் திறல்படைத்த வேம்பத்
மாசனங்கள் வாழி மகிழ்ந்து." [தூர்

[நூல் இயற்றிய இடம்]

இந்நூலாசிய நடையூர் செல்லிநகராக இருந்தாலும், இதனைப் பாடுங் காலத்தில் இவரிருந்தஇடம், கார்வளங்கொண்மண்டலத்திற் கப்பிஞ்சிநகர மென்னும் பெயரையுடைய சிறுநகரென்றுதெரிகின்றது; இதனை, "கார்வளங் கொண் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டுரைத் தோன்" [பக்கம் ஈகசு] என்னும் நூற்சிறப்புப்பாயிரத்தாலுணர்க; கார்வளங் கொண்மண்டலமென்றதை மதுரைக்குக்கிழக்கே யுள்ள தான மழைக்குப்புணை கொடுத்தமங்கல நாடென்று சொல்லுகின் றனர்.

* மதுரைக் கலம்பகம், எசு.

[பெற்றபரிசில்]

இந்நூலை ஆக்குவித்தானாகிய பாண்டியனொருவன் மிக்கசிறப்புடன் இதனை அரங்கேற்றுவித்துப் பல்லக்குமுதலிய விருதுகளையும் பல இரத்தினபரணங்களையும் கொடுத்தளித்தானென்றும், அப்பொழுது இந்நூலாசிரியர் மகிழ்ந்து, "பல்லக்கு மேலேறி" (பக்கம், ஈகசு) என்னும் வெண்பாவைப் பாடினரென்றும், பின்னர் மகிழ்ந்து இவருடைய சனனபூமியாகிய செல்லிகனையும் அதனைச் சார்ந்த ஊர்களையும் இவரும் இவர் பரம்பரையோரும் அனுபவிக்கும் படி முற்றாட்டாகக்கொடுத்தானென்றும், அதுபற்றி, செல்லியூரும் அதனைச்சார்ந்த ஊர்களும் செல்லிநாடென்று வழங்கப்பெற்று வந்தனவென்றும், இவர் பரம்பரையோர் மிகுந்த செல்வமுடையவர்களாகிப் பலதருமங்களைச்செய்து விளங்கினரென்றும் சொல்லுகின்றனர். இதனை,

"கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்லி நாடன் கவுணியர்கோன்
நன்னர்க ளெண்ணிய வானந்த தாண்டவ நம்பிகற்பாள்†
தென்னவர் போற்றிய வங்கயற் கண்ணம்மை செல்விதிருச்
சன்னிதிக் கோபுரங் கட்டின டம்மந் தழைக்க வென்றே"

என்னும் மதுரைத்தீருப்பணிமாலைச்செய்யுளும் வலியுறுத்துகின்றது.

[காலம்]

மேற்கூறிய செய்யுளிற் கூறப்பட்டுள்ள ஆனந்ததாண்டவநம்பி அம்பிகையின் சந்நிதிக்கோபுரம் கட்டுவித்தகாலம், சாலிவாகனசகாப்தம், ககஙo [கி. பி. கஉஉள - அ; கொல்லம், சoஉ - சoக] என்று மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றமையால், ஆனந்ததாண்டவநம்பியென்பவர், இற்றைக்கு எoo-வருடங்களுக்கு முன்னிருந்தாரென்றுமட்டும் ஒருவாறு தெரிகின்றது; அதற்குமுன், இந்நூலுடையார்காலம் இவ்வளவினதென்று தெரியவில்லை.

---

* இவ்வெண்பாவிலுள்ள, 'பல்லக்குமேலிட்டோம்' என்பதற்குப் பல இரத்தினபரணங்களை மேலே அணிந்தோமென்றும் பொருள்கொள்ளலாம்.

† கற்பாள் - பத்தினியார்; மனையியார்; ஆனந்ததாண்டவநம்பியேகோபுரம் கட்டியதாக மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றதனை; அஃதை எழுதினோரால் நேர்ந்தபிழையோ வேறுயாதோ உண்மைவிளங்கவில்லை.

‡ தம்மம் - தருமம்.

[ஞானசிரியர்]

சிதம்பரம் மாளிகைமடத்திலிருந்த வெண்காடருடைய சிஷ்ய ராகிய விநாயகரென்பவர் இவருடைய ஞானசிரியர்; இதனை இந் நூற் கடவுள் வாழ்த்து, உரு ஆம் செய்புளாலுணர்க. இங்கேகூறிய மாளிகைமடத்துத் தலைவரொருவர், வேதாரணியபுராணப் பாயிரத்திலும் திருக்கானப்பேர்ப்புராணப் பாயிரத்திலும் துதிக்கப்பெற்றுள்ளார்.

[குணவிசேடங்கள்]

இந்நூலாராய்ச்சியால்விளங்கிய ஆசிரியருடைய குணவிசேடங்கள் பல; அவை, வேதாகமங்களில் மிக்க பிரீதியுடைமை, வடமொழிப் பயிற்சி, தமிழ்ப்பாஷையில் மிக்க அன்பு, தமிழில் ஐந்திலக்கணவுணர்ச்சி, சங்கத்தமிழ்நூல் முதலியவற்றிலும் பழையவுரைகளிலும் தேவாராதிகளிலும் திவ்யப்ரபந்தங்களிலும் மிக்கபயிற்சி, நடுவுநிலைமை, எல்லாவருணத்தாரிடத்தும்எல்லாச்சாதியாரிடத்தும் அன்புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, சிவசின்னங்களில் அன்புடைமை, தம்முடைய கருத்தைப் பிறர் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் செய்புள் செய்யும் வன்மை, அங்ஙனஞ்செய்யும் செய்புட்கள் படிப்பவர்களுடைய மனங்களைக்கவரும்படி இடத்துக்கேற்ற சந்தங்களில் அவற்றை அமைத்தல், பலவகைத்துறை செய்யும் அழகு, வடநூற்கருத்துக்களை அங்கங்கேபயைத்தல், பிறரை நல்வழிப்படுத்தநினைத்தல், சரிதங் கூறுகையில், பரமகருணாநிதியாகிய சிவபெருமானுடைய திருவருளின் பெருமையை நினைந்துநினைந்து மனமுருகி இடையிடையே செயலற்றிருத்தல் என்னும் இவையும் பிறவுமாம். இங்கே எடுத்துக்கூறியவையெல்லாம் இந்நூல் அரும்பதமுதலியவற்றின் அகராதியைப் பார்ப்பவர்களுக்கு இனிதுவிளங்கும்.

நூலராராய்ச்சி.

[நூலிலுள்ள முக்கியமான சிலதறிப்புகள்]

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலுக்கும் இதற்குமுள்ள வேறுபாடுகள் பலவற்றுள், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் வையைநதியை அடைத்தற்குக் கூலியாளாக வந்து வேலைசெய்யாமல் உழப்பிய பொழுது, பாண்டியனுடைய ஏவலாளர்கள் சினந்து அவர் முதுகில்

அடித்தாரென்று ஆசிரியர் கூறியிருப்பதொன்று; (கூ) கூள - ஆம் செய்யுளைப்பார்க்க; பலநூல்கள் பாண்டியனே அடித்தானென்று கூறியிருக்கவும் இவர் இங்ஙனம் கூறியதற்குக் காரணம் இன்னதென்று புலப்படவில்லை; இந்நூலைச்செய்வித்த அரசனுடைய வேண்டுகோளாக இருத்தல் கூடுமென்பது சிலருடைய கருத்து; "அந்தகாள் பிட்டுக் காகமண் சுமந்த வரணேமன் னவன்றன தாளா, மைந்தரி லொருவ னடித்ததாத் துணிர்தோர் வண்டமிழ்க் கவிஞரே னினனே" என்பது புலவர்புராணம், திருவாதவூரர். நிஅ.

பழைய நூலாசிரியர்களும் பழைய உரையாசிரியர்களும் பாண்டியர்களிற் சிலரைத் தெய்வப்பாண்டிய ரென்று கூறுதல் மரபு. இந்நூலாசிரியர் அதனைத் தழுவி, சுந்தரமாறரை, "தெய்வப்பாண்டியன்" (கட. கக) என்றும், "தெய்வவான்வழுதி" (கூ : ச) என்றும் கூறியிருக்கின்றனர்.

ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயில், இத்தலத்துள்ள கோயில்கள் பலவற்றிற்கும் காலத்தால் முந்தியதும் பெரியதுமாதலின், அதனை விளக்கவேண்டி இந்நூலாசிரியர் அதனைத் தொல்லையாலயமென்றும் பெரியகோயி லென்றும் அங்கங்கே வழங்குவர்; இத்தலத்திற் கோயில்கள் பலவுள்ளன வென்பதை, "நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு, முவணச் சேவ லுயர்த்தோ னியமமு, மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமுங், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலப். ஊர்காண். எ - கo) எனவும், "வடதிரு வாலவாய்திரு நடுவூர், வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை, பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைந்த, சென்னி மாபுரஞ் சேரன் றிருத்தளி, கன்னி செங் கோட்டங் கரியோன் றிருவரை, ... ஒருபரங் குன்றஞ், சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்" (கல். 'நெடுவரைப் பொங்கர்' - ஙக) எனவும் வருவனவற்றாலுணர்க.

இந்நூலாசிரியர், இலேமறைகாய்போற் பழைய நூல்களில் அங்கங்கே மறைந்துகிடந்த அரியசெய்திகளை இதனுள் உரிய இடங்களில் அமைத்து விளக்கிச்செல்லுகின்றனர். இதனால், நெடுநாளாக இருந்த ஐயங்கள் ஒருவாறு தீர்வனவாயின. அவற்றுள், சிலவருமாறு:—

க. 'நான்குமாடங்கள் கூடுதலின் நான்மாடக் கூடலென்றாயிற்று. அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திரு

---

*இங்கேகாட்டிய எண்களுள், ( ) இவ்வடையாளத்திற்குட்பட்டது திருவிளையாடலையும் ஏனையபாடலையும் புலப்படுத்தவன; பின்வருவனவற்றையும் இப்படியேகொள்க.

நடவூர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்' என் பது, கலித்தொகை, கூஉ-ஆம் பாடல், நச்சினர்க்கினியம். இத்தவுரை யில் முன்னுள்ள திருவாலவாய் முதலிய நான்கும் இன்னவையென்று இந்நூல், சஎ-ஆம் திருவிளையாடலாலும் பின்னுள்ள கன்னி முதலிய நான்கும் இன்னவையென்று இந்நூல் திருநகரச் சிறப்பிலுள்ள கஉ-ஆம் பாடல் முதலிய நான்கினாலும் ஒருவாறு விளங்குதல் காண்க.

உ. 'நீலமணியின் குற்றம் வந்த வழிக் கண்டுகொள்க' என் பது சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, ககூ0-ஆம் அடி, அடியார்க்கு நல்லாருரை; நீலத்தின் குற்றம் பன்னிரண்டென்றும் அவற்றின் பெயர்கள் இவையென்றும் இந்நூல், (உடு) ககூ-ஆம் செய்புளால் விள ங்குகின்றது. இதனால் அடியார்க்குநல்லாரிலும் இந்நூலாசிரியர் தமிழ் நூலாராய்ச்சியில் மிக்கவரென்பது வெளியாகும்.

[துதிவகைகள்]

கடவுள் வாழ்த்திலன்றி நூலினுள்ளே அங்கங்கேவந்துள்ள விநா யகர்துதி, சிவஸ்துதி, அம்பிகைதுதி, திருஞான சம்பந்தர்துதி, மூர்த்திநாயனர்துதி முதலியன யாவரும் படித்தறிந்து இன்புறு தற்பாலன.

[நூலாசிரியர் கூற்றுக்கள்]

நூலாசிரியர் கூற்றுக்களாக இந்நூலுள் அங்கங்கே காணப்படுங் கவிகள் பல உள்ளன: அவை ஒருபகுதிப் பட்டனவல்ல; அவை வருமாறு :—

க. உலகத்தாரை நோக்கிச் சிவபெருமானுடைய திருவருளின் பெருமையை இவர் கூறுதல் போலவும் பிறர் கூறுதல் போலவும் உள் ளன; (திருநாட்டுச் சிறப்பு) கச, (உஎ) க, (நக) உஉ, (நஉ) உடு, (நஎ) ககூ, (நஅ) எக, (சச) நுஅ, (சடு) கஅ, (சசு) நக, (நுச) நு0, (சுநு) உக.

உ. திருவிளையாடல்களைச் சொல்லிக் கொண்டு போகையில் அன்பின் மிகுதியால் இடையிடையே இவருடையமனம் உருகிய தென்பதைப் புலப்படுத்துவன: (நு0) நகூ, (சஅ) நஎ.

---

*இவற்றிற்கும், பின்னேயுள்ள பொருளணிகள் முதலியவற்றிற்கும் உரிய பக்க எண்களையும் விவரணங்களையும் அரும்பத முதலியவற்றின் அகராதி யென்னும் பகுதியிற்கண்டு கொள்க.

க. ஒவ்வொருபகுதியின் இறுதியிலே சரித்திரத்தின் அருமையை நினைந்து மனமுருகிச் செய்துள்ள சிவஸ்துதியாகவுள்ளன: (நி) எ, (எ) கக, (கூ0) நிகூ, (கூஉ) உநி, (சஅ) சக, (நி0) கஅ.

ச. படிப்பவர்களும் கேட்பவர்களும் அடையும்பயனைப் புலப்படுத்துவனவாய்ச் சில பாடல்கள் சில திருவிளையாடல்களின் இறுதியிலுள்ளன: (கூஅ) எஉ, (நிகூ) ககூ.

ரு. பாவத்தால் ஒருவர் வருந்துவதைக்குறித்து வருந்துதலையும், புண்ணியத்தால் ஒருவர் மகிழ்தலைக்குறித்து மகிழ்தலையும் புலப்படுத்துவன:(கூச)உ, ச, (கூஅ) நிக, (கூக) உகூ.

கூ. திருவிளையாட்டிற் சம்பந்தத்தாற் பெருமையடைந்த சில சாதியாரின் விசேடத்தைக்கூறுவன:(உகூ) உநி, (நிகூ) கஅ.

இங்ஙனம் வருவன இன்னும்பல.

[பொருளணிகள்]

இவருடைய வாக்கிற் பலவகைப் பொருளணிகள் அங்கங்கே வந்துள்ளன வெனினும் மிகுதியாகக் காணப்படுவன, கருத்துடையடையணியும், கருத்துடையடைகொளியணியுமே.

[சொல்லணிகள்]

சொல்லணியைச் சார்ந்த மடக்கணிகளே இந்நூலிற் பரக்கக் காணலாம் ; அவை வருமாறு :

அத்தியிலத்தி சொரிந்ததால்-யானையானது இலத்தியைச் சொரிந்தது ;

அருகாருகராக்கண்டோம் - சைனர் பாண்டியனைச் சமீபித்தவராகப் பார்த்தோம் ;

ஆவிசேர் தண்ணீர் வேட்டங் காவிசோர்ந்து; ஆவி-தடாகம், உயிர்;

இடையிடையும்படி: இடையும்படி-வருந்தும்படி;

உக்கிரமாய் நனிவரக்கண் டுக்கிரவேல் விறற் செழியன் ;

கடல்வலிய சத்திவிடச் சத்திவிட்டகாவலன்: சத்தி-வலி, வேல்;

கரிகரியாக-யானைகரியாக ;

கனகதோ கனகவாவி-பொற்றுமரைவாவி;

கூடமதாகக் கற்பித்தருளினன் கூடமில்லான்: கூடம்-மாளிகை விசேடம், வஞ்சனை;

கைதவகேள் கைதவமாகாது - பாண்டியனே கேட்பாயாக; உனக்கு வஞ்சனையாகாது;

கைதவமோவில்லை கைதவ ;

கோதைதன் பரிசனத்தால்....பரிசனங்களோடும்;

கோலக் கோலம்-பன்றித்திருவுருவம்;

சந்திரமாவனித்தான் சந்திரமாகுலத்தான்: சந்திரமா - பொற் குதிரை ;

சம்புமா சமாதியாலே சம்புமாத்தாழ்க்க: சம்புமா - சிவபெரு மானுடைய பெரிய, நரிகளாகிய குதிரைகள்; [தாள் ;

சரங்கொடுஞ் சரம்போற் றைப்பச் சரங்கொண்டாள் சரமிலா செட்டியாஞ்செட்டி - வைசியர்குலத்திற் பிறந்த உருத்திரசன் மாகிய முருகக் கடவுள் ;

செட்டியுஞ் செட்டியா யுதித்தான் ; [குற்றி;

தாணு தாணுவேயெனவிருந்தான்: தாணு - சிவபெருமான்,

துதிக்கைபின்றித் துதிக்கையால் வளைத்தெடுத்து: துதிக்கை-துதிசெய்தல், தும்பிக்கை;

நரிகாணரியாது;

நாமளித்த வேலையற நாமளித்த வேலையெறி: நாமளித்த வேலை-அச்சத்தை உண்டுபண்ணிய கடல், யாம்கொடுத்த வேற்படையை ;

பத்திரங் கொடுத்தெதாதுங்கிப் பத்திரன் பணிந்து நின்றான்: பத் திரம்-திருமுகம்; பத்திரன்-பாணபத்திரர்;

பயங்கொண்டு வந்தெதவரும் பயம் கொள்ள: பயம்-நீர், அச்சம்;

புயலகத்துப் பெரும்புயல்: புயல்-மேகம், நீர்; [ஈன;

பைங்கண் வேழத்தை....செங்கண் வேழம்: வேழம்-கரும்பு, யா

மாலையங்குழல்சேர் பாணர்மாலையர் மாலியெய்தி: பாணர் மாலை யர்-பாணர்மகளிர், விறலியர்; மாலை-மயக்கத்தை;

மாலையைக் கழுத்திலிட்டோர் மாலை நின்றுலாவ;

மாறன் மாறி: மாறன்-பாண்டியன்;

மாறனுழ்துயர் கெட மாறியாடினார்;

மாறன் மாறனென்றுங்கருப் பெயர் பெற்றோன்;

வளையினல் வளைத்தனன்;

வாசியை வாசியாக-குதிரையை விசேடமாக;

விடைவிடைகொண்டு-இடபம் விடுத்தல்கொண்டு; "சொல்விடை கேட்டுச் செல்விடை வெற்பும்" என்பது மதுரைமும்மணிக்கோவை, உஅ;

வேடனிடு சூட்டினிய கேடிறசை நாடுபவர் வேடனுடல் வீடவடு வோர்;

வேலியை யேவவேலி வேலிகல்வேலி யென்று: வேலி - கடல், காலம், தொழில்.

இந்நூலில், வேறுபொருளின்றி விரைவு முதலிய காரணங்களால், சொற்கள் அடுக்கிவருதலும் காணப்படும்; அவை வருமாறு:

அஞ்சேனஞ்சேன், அரகர, இடந்தருமிடந்தரும், உதவுமுதவுவம், என்கையில் வளைகொரிந்தென்கையில் வளைகொரிந்தது, என்னவிடென்னவிடு, எனக்கெனக்கு, ஒக்குமொக்கும், காத்தருள் காத்தருள், சிவசங்கர சிவசங்கர, தருமகெறி தருமகெறி, திருச்சிற்றம்பலந் திருச்சிற்றம்பலம், திருவம்பலந் திருவம்பலம், தூயிலுணர்தியிலுணர்தி, நல்ல நல்ல, நில்லும் நில்லும, நிறைக்கன நிறைத்த, பொன்னம்பலம் பொன்னம்பல ர, போனது போனது, வணங்குமினீர் வணங்குமினீர், வந்துபோம் வந்துபோம், வரும் வரும், வளர்க்கிட வளர்க்கிட, வளைத்திடும் வளைத்திடும், வளைபல்கொள்ளும் வளையல்கொள்ளும், விடும் விடும், விடு விடு.

இதில் அவ்வவ்விடத்து வந்துள்ள

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் அருமைத்திருநாமங்கள் :

அடிமைக்குநல்லவர், அடியவர்க் கெளியசுந்தரன், அடியவர்க் கெளியசொக்கன், அடியவர்க்கெளிபவர், அடியவர்க்கெளியவெம்பெருமான், அடியவர்கிறத்தநல்லவன், அடியவர் நன்மை தின்மையறிபவன், அடியார்க்கு இனியன கொடுக்கும சொக்கன, அடியார்க்கு நல்லான், அடியார்குறைதீர்ப்பான், அடியார்நங்கட் கெளியவன், அணுக்கட்குநல்லவர், அதிரவீசியாடுவான், அநகநாயகன், அபிடேகச் சொக்கன், அருடேங்குநாதன், அருந்தவன், அருவமெய்யினன், அருளாகரன், அழகன், அழகார்மெய்யன், அழகியசொக்கன், அழகியபெருமான், அற்றவர்க்கற்றசிவீன், அற்றவர்க்கற்றசெல்வன், அன்பர்க்கன்பன், அன்பர்சுமைபூண்டுகொண்டான், அன்பர்தம்பிழைபொறுப்பவன், அன்னையொப்ப அணுக்கட்குநல்லவன், ஆதி, ஆதிகரதன், ஆதிகாயகன், ஆதிமுனி, ஆலவாய், ஆலவாய்த்தருமமூர்த்தி, ஆலவாய் மெய்பன், ஆலவாயமுதமன், ஆலவாயமுதவாக்கன், ஆலவாயமுதவாயான், ஆலவாயமுது, இசைக்குநல்லசங்கரன், இசைக்குநல்லான், இசைச்சொக்கன், இயற்சொக்கன், உற்றவர்கட்குற்றவன், எளியசொக்கன், எளியவர்க்கெளியசொக்கநாதன், ஒப்பிலழகன், கருணைமெய்யன், கருணைமேனிப் புண்ணியன், காரணமுதல்வன்,

காரணவான், குஞ்சரந்தாங்குங் கோயிற்குழகன், குஞ்சரந்தாங்குங் கோயிற்கூத்தன், குழகன், கூடமில்லான், கூத்தன், சாலநல்லவன், செந்தமிழ்க்கினிய சொக்கன், செந்தமிழ்பயிலுஞ்சுந்தரன், செழியர் நாதர், சேட்டநாதன், சொக்கமூர்த்தி, சொக்கவேந்து, சொக்கன் (சொக்கர்), சொக்கு, தனக்கு நல்லவர்க்கு நல்லோன், தெய்வப்பாண்டியன், தெய்வவான்வழுதி, தென்னவர்கிளைக்கு நல்லசெல்வன், தொழுபவர்க்கெளியான், நயந்தவையாவையும் நல்கவல்லவன், நல்லடியார்க்குநல்லான், நற்றமிழிறைவன், நற்றவன், நாயனர் (நாயன்), நேசர்கட்கென்றும்நேசன், பண்ணிசைச்சொக்கன், பத்தர்கள் பத்தன், பத்தர்பத்தன், பத்தர்வாழ்வு, பழிக்கஞ்சுசொக்கன், பழியஞ்சுஞ் சொக்கன், பாண்டிநன்னாடன், பாவறிந்த காவலவன், புகழ்க்கினியான், புகழ்க்குநல்லசொக்கன், புகழ்க்குநல்லோன், புகழ்கொண்டான், புழுகுநெய்ச்சொக்கர், முனிவன், மெய்யர்க்குமெய்யன், மெய்யன், யாவும்வல்லவன், வணங்குவோரிணங்கன், வாசிவாரியப் பெருமான்.

[ஊர்கள்]

ஆலுடையார்கோயில், இராமேச்சரம், இருஞ் சிறை, உத்தரகோசமங்கை, உப்பூர், ஏழூர்கள், கட்டுநல்லூர், கழுவர் படைவீடு, காசி, காவணநல்லூர், காவிரிப்பூம்பட்டினம், காளையார் கோயில், கொடுங்கோளூர், சிதம்பரம், சீகாழி, செல்லிநகர், தனிச் சயம், திருநெல்வேலி, நிருப்புத்தூர், திருப்புறம்பயம், திருப்பூவணம், திருமருகல், திருவாதவூர், திருவிடைமருதூர், திருவேடகம், நரிக்குடி, நாமூனூர், பட்டமங்கலம், பரசுராமசதுர்வேதிமங்கலம், பழமதுரை, பெருங்கிராமம், மணலூர், மாடக்குளக்கீழ்மதுரை, மானமங்கலம், வடதிருவாலவாய், வேதாரணியம்.

[குலங்கள்]

ஆதிமரபு, ஆமாத்தியர்குலம், உக்கிரகுலம், கொந்தகக்குலம், சந்திரகுலம், சூத்திரகுலம்.

[சங்கப்புலவர்கள்]

இடைக்காடர், இறையனர், உருத்திரசன்மர், கபிலர், நக்கீரர், பரணர், மதுரைப்பேராலவாயார்.

* இவர்கள் ஆசிரியர், இயல்வாணர், கவிமன்னர், கவிவாணர், சான்றவர், தமிழ்வாணர், நன்புலேர், நாவலர், மாசிலாசிரியர், முத்தமிழ்வாணரென இந்நூலுள்ளே பாராட்டிக் கூறப்படுகின்றனர்.

சங்கப்புலவர்களல்லாத தமிழ்ப்புலவர்கள் : காரியார், நரியார்.
சாதிகள்: அதி, பன்றிக்குறும்பர் பன்னிருவர், வன்னியர்.

[சிலபழையவழக்கங்கள்]

ஒருவர் ஒரு செய்தியைச் சொன்னவுடன் அதனை மறவாமலிருத்தற்கு ஆடையின் தலைப்பை முடிந்து கொள்ளுதல், தும்மியவர்கள் சிவாயவென்றல், பரிகலசேடமுண்ணல்.

[தனிப்பாடல்கள்]

பாடல்கள்	ஆக்கியோர் பெயர்
"அங்கங்குலுங்க"	சோமசுந்தரக்கடவுள்
"குன்ற மெறிந்தாய்"	நக்கீரர் [பேராலவாயார்
"கொங்கு தேர்வாழ்க்கை"	இறையனர் அல்லது மதுரைப்
"சங்கறுப்பது"	நக்கீரர்
"நெட்டிலை யிருப்பை"	கபிலர்
"மதிமலிபுரிசை"	சோமசுந்தரக்கடவுள்.

தாண்டவம் : சொக்கத்தாண்டவம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பதிகங்கள்: சடையாய், செய்யனே, தளிரிளவளர், தேனுறவன்னி, நீலமாமிடற்று, பிரமனூர், போகமார்த்த, மங்கையர்க்கரசி, மந்திரமாவது, மானினேர்விழி, வாழ்கவந்தணர், வானிற்பொலி, வேதவேள்வியை, வேயுறுதோளி.

[திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், அறங்கூரை நாயனார், காழி நகர்ப் பெருமான், கொச்சைமுனி, கொச்சைப்பாலர், கௌணியர் கோன், சிரபுரப்பாலர், சோழியவைதிகச் சிறுவர், ஞானபூரணர், ஞானமாமுனிவர், ஞானவேந்தர், நாலுகவிப் பெருமாள், பொய்யிலாயாணை, மறைஞானி, வாது செய்த வாரணம், வைதிகவாரண மென இந்நூலுட் பாராட்டிக்கூறப் படுகின்றனர்.]

[திருவீழாயாடல் சம்பந்தமான பழமொழிகள்]

அடியார்க்கு நல்லார் பத்திரம், அழகிய சொக்கனென்னும் தோலாக்கை, ஆபத்துக்குத் தெய்வமேதுணை, இலச்சினைவாயில், உடையவனறிந்திடாத சரக்கிலை, காமனுக்குக்கண்ணில்லை, கொல்லொணப்படை எவர்க்கும் வெல்லொணாது, சடைகொடி வெருட்டல் வேண்டா, சொக்கன்றாசு, தன்னைக்கொல்ல வந்ததாயினும் பசுவைக் கொல்லலாகாது, நெற்றிக்கண் காட்டினலும குற்றம் குற்றமே, பட்டகுணம் சுட்டாலும் போகாது, பாணர்தம்மடியார் பரதேசம்

போனல் விறகையும் சுமந்துகொண்டு மீளவருவார், பார்ப்பான் முறையீடு பசுப்பாய்ச்சலோடு சரி அல்லது முட்டிப்பார்ப்பான் முறையீடு மொட்டைப் பசுவின் பாய்ச்சலோடு விட்டுப்போனது, மன்னவனெப்படி மன்னுயிரப்படி, மின்னுமலிடிக்குமா.

[தீர்த்தங்கள்]

எழுகடல், கங்கை, கம்பளை, கல்லணை, கன்னியாகுமரி, காவணவாவி, காவிரி, கொண்டாழி, சரவணப்பொய்கை, பூதங்கண்டகுளம், பொற்றமரைப் பொய்கை, மணிகர்ணிகைத்துறை, மாவலிகங்கை, மொய்யார் பொய்கை, வலவை, வையை.

[நாடுகள்]

கப்பிஞ்சிநாடு, கருநாடதேயம், களவேள்வி நாடு, காட்டுநாடு, கார்வளங் கொண்மண்டலம், சோணாடு, சோழனாடு, துவரைநாடு, பாண்டிநாடு, மிழலைநாடு.

நியாயம்:—காகதாலியம்.

[நூல்கள் (வடமொழி, தென்மொழி)]

இறையனூர் பொருள், உத்தரமாபுராணம், உத்தராகம கோசங்கள், கணிதநூல், கபிலரகாதி, கைலைபாதிகாளத்திபாதி அந்தாதி, திருமுருகாற்றுப்படை, நக்கீரரியற்றிய நூலிலுள்ள ஐந்தாம்பனுவல், புரவிநூல், மடைநூல், மயனூல்.

மடங்கள்:—நில்லைமாளிகைமடம், வாகீசசுவாமி மடம்.

மந்திரங்கள்:—அகமருடணம், சடாக்கரம், பஞ்சாக்கரம், பிரணவம், மிருத்தியுஞ்சயம்.

[மலைகள்]

இடபகிரி, இலத்திமலை, எண்கிரிகள், கைலை, கொடுங்குன்றம், சமணெளிமலை, திருக்கழுக்குன்று, திருப்பரங்குன்றம், நாகமலை, பசுமலை, பன்றிமலை, பொதியில், முதிய வெற்பு, மேருமலை, யானைமலை.

மரபு : மானமங்கலத்தார் மரபு.

வித்தைகள் : அக்கினித்தம்பம், இந்திரஞாலம், நோக்கு வித்தை.

[அரிய மொழிகள்]

அகம், அங்கம், அங்கம்நூற்றெட்டு, அணரிட்டு, அதி, அவதானம், இராவுத்தராயன், இருப்புமுட்டு, உழப்பாது, உழப்பி, உழை, உளத்தடைத்து, ஊசும், ஒப்பார், கறம், கிஞ்சில், குதிரையிராவுத்

தன், குழப்பி, குழம்பல், கெருடி, கைத்தலை, கொச்சை, கொந்தக் குலம், கொற்று, சாக்கியர், சாத்தலோதல், சாளர சங்கீதம், சாறு, சிலும்பல், சிறுக்கன், சீரா, சுமமாடி, சொட்டை, தப்பு, தவ்வும், திண்ணிமை, திருக்கைச் சிறப்பு, துவர்பிடித்து மறிப்ப, தொத்துவர், தொப்பாரம், நரியாது, நன்பு, நாயன், நையாண்டிபாடல், பருந்து, பணிக்கு, பரிச்சாத்து, பரிவேத்தர, பழுத்து நரைத்த, பாஞ்ராலிகம், பாராவளை, பிசகல், பிறிதுராபம், புழுகு, பூரிக்க, பேரிளமை, பொக்கணம், மகன்மை, மச்சம், மலர், மழுப்பவல்லான், மாமடி, மாலை, மாறு, மூசி, மொக்கணி, மொஞ்ராக்கையர், மொத்தம், வருந்த, வணிக சூரியர், வரிசை, வழிசெய், வன்னியர், விலாவொடித்தல், வேணும், வைபாளி அல்லது வைகாளி.

திருவிளையாடல் முதலியவற்றிலும் கேள்வியாலும் அறிந்த வைகள்: அட்டாலைமண்டபம், அமணமலை, அன்னக்குழி மண்டபம், இந்திரேசுவரர், எழுகடற்றெரு, எழுநூற்றுமங்கலம், ஐராவதகணேசர், ஐராவததீர்த்தம், ஐராவதநல்லூர், ஐராவதீசுவரர், கஞ்சரீடபுரம், காஞ்சனமாலை கோயில், காராக்கிரகக்குகை, காவணநல்லூர், கிழியறுத்தல், குருவிருந்தநூறை, குலசேகரபாண்டியன் வடிவம், கூடை தட்டிப் பறம்பு, கொந்தகை, கோச்சடை, சங்கத்தார்களுடைய திருவருவங்கள், சங்கத்தார் கோயில், சாம்பனத்தம், சுந்தரமாறன், செல்லூர், தந்தினெரி, தனஞ்சயன் வடிவம், திருப்பாச் சேர்த்தி (மதுரைக்குக் கிழக்கே வையைக் கரையிலுள்ளதொரூர்; சைனர்கள் இட்ட மந்திர ஏடுகள், திருநம்பாமற் சென்று கரையிற் சேர்ந்த இடமென்பர்), திருவாலவாய் கல்லூர், திருவாலவாய்த் தம்பிரானர், திருவீதிகள் ஐந்து, தின்னுகரி, தொடர்நரி, நக்கீரர் கோயில், நக்கீரர் திருவுருவம், நடுவூர், பதஞ்சலி முனிவர் ஸ்தோத்திரம், பாவர், பரிவீரமங்கலம், பாண்டிய மண்டலாதீசுவரர், பாண்டியன் படித்துறை, பாண்டியனகழ்வீதி, பாணர் (தையற்காரர்), பிட்டுத் தோப்பு, பிள்ளையார்பாளையம், பூதகுடி, பூதங் கண்டகுளம், பெருங்கருணை, மடைப்பள்ளிச் சாம்பல், மண்டியூர், மதிச்சயம், மாநகரி, முத்திரைகள் மூன்று, மேலைக்கடை, வளையற்காரமண்டபம், வாகீசசுவாமி மடம், விழுப் பாதராயர், வெள்ளியம்பலத்தெரு, வேப்பமாலை, வேறுநிலை.

வேறு பாடுகள்.

பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடலிற் காணப்பெறும் அரிய விஷயங்கள் பல இத்திருவிளையாடலில் அவ்வவ்விடத்துக் காணப்படுகின்றன; அவற்றுட் சிற்சிலவருமாறு :

(காப்பு) கற்பகவிநாயகர் : இவர் சுந்தர பாண்டியத்திலும் திருவிளையாடற் பயகரமாலையிலும் துதிக்கப்பெற்றுள்ளார். இவர் கோயில் மதுரையில் இப்பொழுது காணப்பட்டிலது.

(கடவுள்வாழ்த்து) இதில், பெரும்பற்றப்புலியூர்த்துதி, பாண்டிநாட்டுத்துதி, இத்தலத்துத் திருநாமங்களுள் கான்கன்துதி, மதுரைத் திருச்சிற்றம்பலம், வெள்ளியம்பலம் ஆகிய இவற்றின் துதிகள், உக்கிரப்பெருவழுதியார் துதி, நாற்பத்தெண்ணுபிர முனிவர்கள் துதி இவைகள் உள்ளன.

(பதிகம்) இதன இறுதியில் முதற்குறிப்புச் செய்யுளொன்று உள்ளது; அச்செய்யுள், பழையகாலத்தில் இப்பதிகம் பாராயணம் செய்யப்பெற்று வந்ததென்பதைத் தெரிவிக்கின்றது.

(திருநகரச்சிறப்பு) மதுராநகரம் கன்னி, கரியமால், காளி, ஆலவாய்த் தருமமூர்த்தி என்பவர்களாற் பாதுகாக்கப்படுவது.

(க) விருத்திர ஹத்தியைப் போக்குதற்குத் தேவலோகத்திற் பலவிமானங்கள் இந்திரனுற் செய்விக்கப்பெற்றன. சிவலிங்கப் பெருமானுடைய அழகிய வடிவத்தைக் கண்டு, இந்திரன், சொக்கனென்னும் திருநாமத்தைச் சாத்தினன். இத்தமிழ் நூலுக்கு முதனூல், உத்தர மகா புராணமென்னும் வடநூலிலுள்ள சாரசமுச்சய மென்னும் பகுதி. இச்சரிதத்தை முதலிற் கூறியவர்கள், வியாசர், வான்மீகி, எச்சரென்பவர்கள்; பின்பு கூறியவர் அகத்திய முனிவர்.

(ங) மலயத்துவசன் ஆதிமாபில் வந்த வடிவமங்கையை மணம்புரிந்தனன்.

(ச) மலயத்துவசன் மலைக்கொடி மன்னனென்றும் கூறப்படுவன். பங்குனி உத்தரத்தில் தடாதகைப்பிராட்டியார்க்குத் திருமணம் நிகழ்ந்தது; முருகக்கடவுள் பக்கத்திலிருந்து திருமணத்தைச் செய்வித்தனர். திருநந்திதேவரே குண்டோதரராகவந்தனர்.

(ஞ) இந்திர விமானத்திற்குத் தென்பாலுள்ளதாகிய வெள்ளியம் பலத்திற் பதஞ்சலி முனிவருக்காகச் சிவபெருமான் திருநடனம் செய்தருளினர்; அது சொக்கத் தாண்டவமென்று பெயர்பெறும் [மதுரையில், திருக்கோயிலுக்குத் தெனபால் வெள்ளியம்பலமென்று பெயருள்ள ஒரு மண்டபமிருத்தலும், அதில் இக்காலத்துப் பங்குனித் திருவிழா நடைபெறுதலும், வெள்ளியம்பலம் தென்பாலுள்ள தென்றதற்கும் பீங்குனி உத்தரத்தில் திருமணமுதலியன நடைபெற்றதற்கும் சான்றுகவுள்ளன.]

(ஃ) தடாதகைப் பிராட்டியார் பச்சைத்தேவி (மாகதவல்லி) யென்று வழங்கப்பெறுவர்.

(எ) சிவபெருமானது கட்டளைப்படி குண்டோதரனுர் பல குளங்களை உண்டாக்கினுர். அக்குளங்களுட் காவணமுள்ளவாவியைத் தன்பாற்பெற்ற

ஊர் காவணநல்லூரென்று கூறப்படும். ஒரு வாவிக்கரையில், சடங்குக் கந்தர் எழுந்தளிருயிருக்கின்றனர். இங்கே சடங்குக் கந்தரென்றது, திருப்பரங் குன்றத்துக் கோயில் கொண்டெழுந் தருளிய ஸ்ரீ கல்யாண ஸுப்ரமணியக் கடவுளேயென்றுசொல்லுகின்றனர்.

(அ) அக்கினிமூலையிலுள்ள தடாக மொன்றில் எழுகடல்களும் அடங் கின.

(கo) உக்கிரனுர் சடையுடன்பிறந் தார்; அதனால், கோச்சடிலவரும மென்பது அவர்க்கு உபநயனத்திருநாம மாயிற்று. சுந்தரமாறருக்கு வீதகுடு மிப்பெருவழுதி யென்பதும் திரு நாமம் [மதுரைக்கு மேற்கேயுள்ள, 'கோச்சடை' என்னுமூர், கோச்சடி லவரும ரால் அந்தணர்களுக்கு முற் றூட்டாகக் கொடுக்கப்பெற்ற அகர மென்று திருவிளையாடற் பயகரமாலை யுரை தெரிவிக்கின்றது.]

(கக) உக்கிரனுர், ஆதிமரபிலவதரித்த வடிவணங்கை மணம்புரிந்தனர். சுந்தரமாறர் பதினெறு தெய்வவருடம் அரசாண்டார்; கிரீடமணிந்து அரச போகத்தை அனுபவித்துக் கொண்டிருந்ததுபற்றி, சொக்கநாதர், அபிடேகச்சொக்க ரென்றும் புழுகுநெய்ச்சொக்கரென்றும் திருநாமம் பெற்றனர்.

(கஉ) வருணன விட்டகடல், புட்கலாவருத்தமுதலிய நான்கு மேகவேந்தர்களாற் குடித்துக் குறைக்கப்பட்டது; அப்பால் வருணன் கட்டளைப் படி மேகங்கள் பெய்த பெருமழையை மேற்கூறிய நான்கு மேகவேந்தர்கள் நான்கு மாடங்களாகித் தடுத்தனர். அதனால், அவ்விடம் மாடக்குளக்கீழ் மதுரையென்று பெயர்பெறும்.

(கங) எல்லாம் வல்ல சித்தருக்கு ஆக்கினேச் சித்தரென்பது திருநாமம்.

(கடு) சோமசுந்தரக்கடவுள் சங்கப் புலவராக எழுந்தருளியிருந்த பொழு தே அவருக்கு மதுரைப் பேராலவாயா ரென்பதும் இறையனு ரென்பதும் திருநாமம். அவராலியற்றப் பெற்றது இறையனர் பொருளிலக்கணம். சங் சப்புலவர்கள் தாமியற்றிய பாடல்கள் அப்பொருளிலக்கணத்தின்படி அமை க்கப்பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந் தார்கள்; அவர்களுள், நக்கீரனுர்மட்டும் அழுக்காற்றால், 'யானியற்றியதூலில் ஐந்தாம்பனுவலுக்கு ஒப்பில்லை' என் று கூறினர்.

(கசு) தருமியின்தந்தையார் பெயர் சிவமுனியென்பது.

(கஅ) சிவபெருமான் தமிழ்நூற்கரு த்தை அகத்தியருக்கு நோக்கால் உப தேசித்தனர்.

(கக) இறையனுரகப்பொருளுக்குப் பலரியற்றிய உரைகளுள் உப்பூர்கி ழார் மகனுர் உருத்திரசன்மர்மெய்யு ரைகளைக்கண்டனர்.

(உக) பழமதுரையை அழிக்கவந்த கடல்சுவறும்படி பாண்டியன் வேலை யெறிந்தான்; அப்பொழுது அக்கடல் வடிந்து அவன் காலைக்கழுவியது அதுபற்றி அப்பாண்டியற்கு வேலை வடிம்பலம்பநின்றனென்பது பெய ராயிற்று. அவ்வரசனுக்குச் சங்கமண் டபம் அமைக்கப்பெற்றது.

(உ) வலையரசனுக்கு அதியரைய னென்பதுபெயர். உத்தரகோசமங் கையில் அறுபத்துநால்வர் சிவபெரு மான்பால் ஞானோபதேசம்பெற்றனர். அவர்கள்பால் உத்தராகம கோசங் களைச் சிவபெருமான் வைத்தருளின மையின், அத்தலம் அப்பெயர் பெற் றது; இதனை உத்தரகோசமங்கைப் புராணம் வலியுறுத்தும்.

(உஎ) காடுவெட்டியென்னும் சோ ழன் பொருட்டு மூர்க்கப்பெற்ற வடக் குமதில்வாயிலுக்கு இலச்சினைவாயி லென்பது பெயர்.

(உஅ) மாணிக்கம் பிறத்தற்குஇலங் கைத்தீவிலுள்ள சமனெளிமலையைச் சூழ்ந்த வலவை, மாவலிகங்கை, கம் பளை, கல்லோயென்னும் நதிகள் நான கும் இடங்களாகும். இதில், நவமணி யின இலக்கணங்கள் விளங்கவிரித்துக் கூறப்பெற்றுள்ளன.

(உக) தீழைமதிற்பால் அட்டாலை மண்டபம் தெய்வக்கம்மியாரால் கட்டப் பெற்றது; வில்லீரவடிவங்கொண்டு அதில் எழுந்தருளி யானையை எய்த

சிவபெருமானுக்கு அட்டாலைச் சேவகரென்பது திருநாமம்; யானை சொரிந்த இலத்தி இலத்திமலையென்று பெயர்பெற்றது. யானைமலையிற்பாண்டியன் நரசிங்கமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தனன.

(உஎ) திருவாதவூர், காளையார்கோயில், திருப்பெருந்துறை என்கிற இத்தலவரலாறுகள் விரித்துக்கூறப்பெற்றுள்ளன. இந்தத்திருவிளையாடல்முதலியவற்றுள், திருவாசகத்துள்ளபகுதிகளுள் இன்னது இன்னது இன்ன இன்ன அமயத்து ஸ்ரீமாணிக்கவாசகஸ்வாமிகளால் அருளிச்செய்யப்பெற்றதென்பது வெளியாகின்றது.

(உஅ) நரிகளைக் குதிரைகளாக்கிய இடம் மிழலைநாட்டில்நரிக்குடியென்று வழங்கப்படும். திருவாதவூரிற் சிவபெருமானுடைய பாதச்சிலம்பொலி கேட்கப்பெற்றது [குதிரை இலக்கணங்கள் இதில் மிகுதியாகக் கூறப்பெற்றுள்ளன.]

(உ0) சிவபெருமான் கூலியாளாகி வந்தபொழுது, வேலைசெய்யாததுகண்டு பாண்டியனுடைய வேலைக்காரர்கள் அடித்தார்கள்.

(உஉ) இந்திரனுக்குமுன்னம்அடிய ஈசானகோணத்தில், சிவபெருமான் பாண்டியனுக்காக மாறியாடி, திருவடியின்மேற்கொடிகட்டினர். அதனால், அதிரவீசியாடுவார், மாறியாடிக்கொடியிட்டபெருமானென்னும் திருநாமங்கள் அவருக்கு உண்டாயின.

(உஊ) யமதூதர்கள் சில பழங்கதைகளைத் தம்முட்பேசிக்கொண்டார்கள்.

(உஙி) இக்காலத்துவழங்காதனவாகிய யுத்தவிசேஷங்களும் அவற்றிற் குரியபரிபாஷைகளும் இதிற்கூறப்பெற்றுள்ளன.

(உசு) தத்தனென்னும் பாண்டியன் அரசாளுகையில் சமணரனுப்பிய நாகமுமிழ்ந்த விடவாற்றின்கொடுமை சிவபெருமானுடைய சடையிலிருந்த சந்திரனிடத்துள்ள அமுதத் துளியால் சமனமுற்று, மதுரமாயிற்று. அதனால், இங்கர்க்கு மதுரையென்பது பெயராயிற்று. பின்பு அவர்களனுப்பிய மாயப்பசு வதைக்கப்பெற்றது.

(உஎ) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், இன்ன இன்ன அமயத்தில் இன்ன இன்னபதிகம் பாடியருளினரென்பது இதனால் விளங்குகின்றது.

(உஅ)சைனர்களைவாதுசெய்துவென்றதுபற்றித் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்க்கு வாதுசெய்தவாரணமென்னும் திருநாமமுண்டாயிற்று; சைனர்களை வற்றிய கழுக்களின் வரிசைமுடிந்தவிடம், கழுவர்படை வீடென்று வழங்கும்; சைனர்களோடு பேசியதோஷம் தீர்தற்பொருட்டுத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்திருவேடகத்திற் பிரதிஷ்டை செய்து பூசித்தசிவலிங்கப்பெருமானுக்குச்சிறுமையிரீரென்பது திருநாமம். அத்தலத்தில், வையையாற்றின் தென்கரையில், பாண்டியன் படைவீடுசெய்து அதிற் சிலகாலமிருந்து வழிபாடு செய்துவந்தான்.

(உகூ) சுந்தரசாமந்தரென்னும் சேனாபதி, கொந்தகக்குலத்துப்பிறந்தவர்.

(உசு) மாமனுகவந்தவர்கூறும் வார்த்தைகளில் சிலவர்த்தகபரிபாஷைகள் வந்துள்ளன.

(உஉ) சிவபெருமான் பட்டமங்கலத்தில் அட்டமாசித்தி உபதேசித்தருளினர்.

(உஙூ) உண்ணுதற்குரியநீரிற்சேர்த்தற்குத் தக்க வாசனைப்பொருள்கள் இவையென்பது தெரிகின்றது.

(உசு) உக்கிரகுலத்துப் பிறந்தபாண்டியன், இந்திரன்பூட்டிய ஆரத்தைத் திருப்பரங்குன்றத்தில் வைத்தனன். திருப்பரங்குன்றம் முருகக்கடவுள்முதலியோராற் பூசிக்கப்பெற்றது. நக்கீரர் பிரமராக்கதத்தால், அங்குள்ளகுகையில் அடைக்கப்பட்டுத் திருமுருகாற்றுப்படையைப்பாட, அதைக்கேட்ட முருகக்கடவுள், அவரை விடுவித்து, 'நம்மைக் கிழவனென்றனையே' என்ன, நக்கீரர், "குன்றமெறிந்தாய்" என்னும் வெண்பாவால்துதிப்ப, அதிலுள்ள, 'என்றுமிளையாய்' என்பதைக் கேட்டு, மகிழ்ந்து, திருமுருகாற்றுப்

படையைப் படிப்பவர்கள் வேண்டிய வரத்தைக்கொடுப்போம்; நீ மதுரைக்குச்செல்வாயாக' என்றருளிச்செய்தனர். பாண்டியன் மேகங்களைப்பிடித்துக்கட்டியஇடம் கட்டுநல்லூரென்றும், அவற்றைச் சிறைப்படுத்தியஇடம், இருஞ்சிறையென்றும், அவன் தனித்துநின்று போர்செய்து இந்திரனை வென்றஇடம் தனிச்சய மென்றும் வழங்கப்படும். மேகத்துக்குப் புணை கொடுத்தவன் களவேள்விநாட்டிலுள்ள ஏழூரையுடையஒருவன். அவன் புணைகொடுத்தற்கு 'நாம் முன்' என்று சொல்லிக் கொண்டு வந்தமையால், அவனூர் நாமுனூரென்று பெயர்பெற்றது. மேகங்கள், தமக்குப்புணைகொடுத்தற்கு முதலில்எழுந்தவர்களுடைய இடமாகிய துவரைநாட்டில் முதலில் மழைபெய்தற்குத்தோன்றி, புணை கொடுத்தவனுடைய இடமாகிய களவேள்விநாட்டிற் பின்பு பெய்யாநிற்கும்.

(சசு) சோழனைஉட்கொண்டு ஆழ்த்தியமடு கொண்டாழி யெனப்பெயர் பெற்றது; அது மதுரைக்கு மேற்கேயுள்ளதோரோடை.

(சள) மதுரை, நடுவூர், வாலவாய், ஆலவாய், திருமுடங்கலெனப் பெயர் பெற்றது; இத்தலம் சிவபெருமானுடைய படைவீடு.

(சஅ) திருவிடைமருதூரில் வரகுணபாண்டியர் சிலகாலமிருந்து பக்தி பரவசராய்ப் பலவகையானவழிபாடுகள் செய்துவந்தனர் [திருவிடைமருதூர்த் திருகோயிலிலுள்ளபாண்டியன் தோரணமென்றவாயிலின் வலப்பக்கத்தே வரகுணபாண்டியருடையதிருவுருவம் அமைக்கப்பெற்றுள்ளது.]

(சஆ) வரகுண பாண்டியருடைய குமாரர் அட்டாலவீரரைப்பிராரர்த்திக்க, அவர் வில்வீரராகத்தோன்றிச் சோழன் முதலியபகைவர்மீது விடைக்குறியம்பயெய்தனர்.

(சஇ) சிவபெருமான் மூர்த்தியார்க்கு அரசளித்தனர்.

(சஈ) காரியார் நாரியாரென்னும் புலவர்களுடைய பாக்களைச் சிவபெருமான் பகுத்துக் கொண்டருளினர்.

(சஉ) புலியின் முலைப்பாலைச் சிவபெருமான் புல்வாய்க்கன்றுக்கு அளித்தருளினர். மணலூரிலிருந்துவந்தஒருவணிகனுல் இத்தலம்காணப்பெற்றது [மதுரைப்புதுமண்டபத்திற் கீழைக்கோடியிலுள்ள பெரிய கருங்கற்றூணொன்றிலும் திருப்பரங்குன்றத்தில் அவஜஸ்தம்பமண்டபத்தில் வடபாலுள்ள பெரியகருங்கற்றூண்களுள் ஆறுவதிலும் சிவபெருமானுடையதிருவுருவும் புலியைக்கொண்டு புல்வாய்க்கன்றிற்குப் பாலருத்திய வண்ணமாகப் பெரியோர்கள்அமைத்திருத்தல், பண்டைக்காலத்தில் இத்திருவிளையாடல் நிகழ்ந்ததென்பதை நன்குவிளக்குகின்றது.]

(சஊ) இதில் இசையிலக்கணங்கள் பலவந்துள்ளன.

(சஅ) காட்டுநாட்டிலுள்ள வண்ணியர் தலைவன், கஉ-பிள்ளைகளைப்பெற்றான்; அவர்கள் தீச்செய்கையால், முதியவேறிப்பில், ஒரு பன்றியினிடத்தில் கஉ - குட்டிகளாகப்பிறந்தார்கள் [சோமசுந்தரக்கடவுள் பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகிப் பாலளித்ததிருவுருவும், மதுரைப்புதுமண்டபத்திலும் திருப்பரங்குன்றத்துத் அவஜஸ்தம்பமண்டபத்திலுமுள்ள ஸ்தம்பங்களில் அமைக்கப்பெற்றுள்ளது.]

(சக) அப்பன்றிக்குட்டிகள் பன்னிரண்டும் வன்னியர்களாயின. அவைகள் வளர்ந்தமேல் பன்றிமேலென்று பெயர்பெற்றது; அவர்கள் பன்றிக்குறும்பர்பன்னிருவரென வழங்கப்பெற்றார்கள்.

(சஎ) கரிக்குருவிச்சாதிகள் மிருத்யுஞ்சயமந்திரம் ஜபித்தலை இன்றும் அறியலாகும். அம்மந்திரம் விரைவிற் பலனை அளிக்கும் [காஞ்சிப்புராணம், பன்னிருநாமப்படலம், சஅ-ஆம் செய்யுளைப்பார்க்க.]

(சஉ) உக்கிரகுலத்திற்பிறந்த பாண்டியனெருவன் மேருமலையிற் கயிலையும் செண்டையும் பொறித்தனன்,

(சுஉ) விடவைத்தியர் இத்தனை வகையினரென்பது இதிற்கூறப்பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் ஒருவனுக்குத் திருமருகலில், "சடையாய்" என்னும்பதிகத்தாலும், ஒருவனுக்குத் திருப்புறம்பயத்தில் திருநோக்காலும் விடநோயைத் தீர்த்தருளினர்.

(சுசு) வேதங்களையும் வேதாங்கங்களையும் முனிவர்களுக்குச் சிவபெருமான் உபதேசித்தருளினர்.

பாஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடலிற்கூறப்பட்டது போல இன்னபாண்டியன்காலத்து இன்ன திருவிளையாடல் நடந்ததென்பதும் இன்ன பாண்டியன்மகன் இன்னனென்று இடைவிடாமற் பாண்டிய பரம்பரையைச் சொல்லிக்கொண்டு போதலும் இதிலில்லை. பின்னுள்ள பாண்டியர்களின் பெயர்கள் மட்டுமே இந்நூலிற் காணப்படுகின்றன:

(க) உக்கிரஞர் ; (உ) சுந்தரமாறர் ; (ங) தத்தன் ; (ச) மலயத்துவசன் ; (ஞ) வரகுணர் ; (சு) வரகுணருடைய மைந்தர் ; (எ) வீரமாறன்.

ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள்

திருநாவுக்கரசுநாயனார்க்குக் காலத்தால் முற்பட்டவரென்பது.

திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்கள்.

தி ரு வ ா ரூ ர்.

பண் - கா ந் தா ர ம். ,

தி ரு ச் சி ற் ற ம் ப ல ம்.

உ. நரியைக் குதிரைசெய் வானு நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல்லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
வரவரைச் சாத்திகின் ரூனு மாரூ ரமர்ந்தவம் மானே.

தனித் திருத் தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கக. குராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
குடமுழாநந் தீசனேவா சகனுக் கோண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றனெடுங் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங் கைக்கொண்டார் பயங்கள் பண்ணி
யிராவணனென் றவனைப்பே ரிடம்பக் கொண்டா
ரிடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே.

மேற்கூறிய இரண்டு பாடல்களுள், முதலாவதிலுள்ள, 'நரியைக் குதிரை செய்வானும்' என்பதற்குப் பொருளும் சரித்திரமும் வெளிப்படை.

இரண்டாவதிலுள்ள, 'குடமுழாநந் தீசனேவா சகனுக் கொண்டார்' என்பதற்குப்பொருளும் அதிலுள்ள சரித்திரமும் இங்கே ஆராய்தற்பாலன: இந்த வாக்கியத்திற்கு, (சிவபெருமான்) குடமுழாவைவாசிக்கும் திருநந்தி தேவரை ஸ்ரீ மாணிக்கவாசகராக அவதரிக்கும்படி திருவுளத்திற் கொண்டருளினனென்பது பொருள்; குடமுழா - ஒருவகைவாத்தியம்; வாசகன் - ஸ்ரீ மாணிக்க வாசகர்.

பண்டைக்காலத்திற் பூமியிற் பௌத்தமதம் அதிகரித்த பொழுது வேதாகம ஒழுக்கம் குன்ற, அக்குறையை அகற்றக்கருதிய

தேவர்களுடைய பிரார்த்தனைப்படி, சிவாஞ்ஞையால் திருநாவுக்கரசு தேவர் ஸ்ரீ வாதபுரத்தில் ஸ்ரீ சம்புபாதாசிருதரென்னும் பிராஹ்மணரைத் தமருக்கும் அவர் பத்தினியார் சிவஞானவதியார்க்கும் புத்திரராக அவதரித்தருளினரென்பது, திருப்பெருந்துறையின் வடமொழிப் புராணமாகிய ஸ்ரீ ஆதிகைலாஸமாஹாத்மியம், ஈஈ - ஆம் அத்தியாயத்திலும் ஸ்ரீமாணிக்கவாசகருடைய வடமொழிச் சரித்திரமாகிய ஸ்ரீமணிவாக்கிய சரித்திரம், ஊ - ஆம் அத்தியாயத்திலும் விரித்துக் கூறப்பெற்றிருத்தலின், இதற்கு இதுவே பொருளென்று தெரிகின்றது.

இதனால், ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள், திருநாவுக்கரசு நாயனார்க்குக் காலத்தால் முற்பவரென்று கன்று புலப்படுதல் காண்க.

மேற்கூறிய வட நூல்களிரண்டினையும் ஆராய்ந்து தெளியும்வண்ணம் கல்ல சமயத்தில் அனுப்பிய திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ அருடையார் கோயில் டிரஸ்டி ஸ்தானீகத்திலிருந்த ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரானவர்களுடைய பேருதவி ஒருபொழுதும் மறக்கற் பாலதன்று.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாயுடையார்
திருவிளையாடற்புராணம்.

காப்பு.

சுருதிநான் மறைதொழுஞ் சொக்க நாயகன்
றிருவிளை யாடலெட் டெட்டுஞ் செப்பிட
முருகலர் சடைமுடி முக்கண் மும்மதக்
கரிமுக னிணையடிக் கமலம் வாழ்த்துவாம்.

கற்பகவிநாயகர்.

சொற்பக வினையக னூலன் றாய்மையோ
ரற்பக வினையக னறுமு கேசன்முன்

குறிப்புரை.

காப்பு.

க. சொக்கநாயகன் - சுந்தரேசர்; க: உரு; சொக்கு - பேரழகு; "சொக்கணிந்த சுடரொளி வண்ணனே",''எக்க ராமமண் கையருக் கெளியே னலேன் றிரு வாலவாய்ச் - சொக்க னென்னு ளிருக்கவே", "தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச் - சொக்கனே யருள்" (தேவாரம்); "மொக்கணி யதனின் முழுத் தழல்மேனி, சொக்க தாகக் காட்டிய தொன்மையும்" (திருவாசகம்); "புழுகு நெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க - ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண் - டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந் ததநீ - பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே", "கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே" (மதுரைக்கிலம்பகம்: நிகூ, சுஙூ) திருவிளை யாட லெட்டெட்டு: தீருநாட்டுச். க; திருநகரச். கஅ; க: ஙடு; "எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன்" (கல்: கூசு); "பண்ணிய கலைகள் போலப் பக ரறு பத்துகான்கு புண்ணிய வாடல்செய்து பொலிதரு நகருமுண்டால்" (திரு நாகைக்காரோண. தலவிசேட. சக.)

உ. சொல் பக வினைய். அன்பு அகம் இல் நாயகன். முன் - தமையனார். பொற்பு அகம்வில் - அழகிய மலையாகியவில்; அகம்: வடமொழி. நாயகனுடைய முனிவன் - சிவபெருமான்; "முன்பே யென்னை யாண்டுகொண்ட முனிவர

(பிரதிபேதம்.) 1திருவாலவாயுடைய நாயனார் திருவிளையாடல்', 'திருவா லவாயுடைய நயினார் திருவிளையாடல்'

பொற்பக விஞ்ஞகன் முனிவன் புத்திரன்
சுற்பக விஞ்ஞகன் கழல்க ளேத்துவாம். (உ)

சித்திவிநாயகர். வேறு.

வாஞெழுகு முகின்மேனி வேதன் றேட மதுரைநா யகனடியார் வினைக டீர்ப்பா, னூஞெழுகு புரம்[1]படைத்த மக்கள் போல்வந் தலாவுதிரு விளையாடற் [2]பனுவல் சொல்லக், கூஞெழுகு பிறைக் கோட்டுப் பனைக்கை நால்வாய்க் குடவுதரச் செழும்பவளக் குன்றம் போலத், தேஞெழுகு மலர்க்கடம்ப வனத்துலாவு சித்திவிநா யகனி ருதாள் சென்னி சேர்ப்பாம். (ங)

வாழ்த்து. வேறு.

ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவன் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக [3]காதலாற்
சால வீச னடியார் தழைகவே. (ச)

கடவுள் வாழ்த்து.

பெரும்பற்றப்புலியூர்.

நிறங்கட்கப் [4]புறநாத னினைந்துட்சிற் கனஞுகிச்
செறிந்தச்சித் திரகாயக் திருத்தக்கட் செவிகாண
வறங்கட்குப் [5]புகலாகு மகண்டப்பொற் பொதுகாஞும்
பிறங்கப்பொற் புடைதிகழ் பெரும்பற்றப் புலியூரே. (க)

முனிவர் முழுமுதலே" (தி நவா. எண்ணப்: ங.) இவ்வெருமானே அருத்தவன், நற்றவனென்பர் பி ஞும்; உ: கங; கரு: நு; "தாழ்சடைப் பொலிந்த வருத்த வுத் தோற்கே" (புறநா. கட.) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

ங. முகின்மேனி - திருமால். புரம் - உடம்பு. பனுவல்-நூல், செய்யுள்.

கடவுள் வாழ்த்து.

க. நிறங்கட்கு அப்புறநாதன்: நிறம் - வர்ணம்; உருவம். உள்நினைந்து. சித்தனன் - ஞானப்பிழம்பாக உள்ளார். சித்திரகாயம் - டலி; "கடும்புலிக னயர்த்துசித்ர காயமெனும் பெயர் விளக்க" (அழகர்கலம்பகம், க); இங்கே வியாக்கிரபாதர்; அ: உலகறிசுட்டு; அழகுமாம். கட்செவி - பாம்பு; பதஞ்சலி முனிவர். செறிந்து திருத்தக் காண. 'போற்றி' என்று ஒருசொல் வருவித்து முடிக்க. பின் வேண்டுமிடத்தும் இப்படியேகொள்க.

(பி - ம்.) 1'படைத்தான் மாக்கள்போல்' 2'பாடல்' 3'காதலாஞ் சாலும்' 4 'புறஞகினைந்துட் சிற்குணஞகி' 5'புலஞகும்'

திருச்சிற்றம்பலம். வேறு.

பொருப்பைப் பண்பொடுங் குனித்துச் சண்டவெம் புரத்தைப்
பொன்றமூன் சிரித்துக் கண்டவன், கரப்பொற் குன்றகிர் நிறத்துச்
சிங்கமென் கருத்துட் டங்குமஞ் செழுத்துச் [1]சம்புவண், டரக்குக்
கொண்பதஞ் சலிக்குத் தென்றலந் தழைப்பந் தொக்தொமென்
றிசைத்துச் சந்ததந், திருத்தச் செம்பதம் புரிப்பித தன்பு யத் திருச்
சிற் றம்பலந் திருச்சிற் றம்பலம். (உ)

திருவம்பலம். வேறு.

அருளுந்தொகும் பொருளுந்திருந் தழகுந்தொழுங் குலமுந்தரும்
பரிவொன்றுசந் ததியும்புகும் பழியஞ்சுமொண் டொடியும்பொருந்
துருவுந்திறம் பிறவுந்துளங் கொளியும்பிறங் கறிவுஞ்செழுந்
திருவும்பெரும் புகழுந்தருந் திருவம்பலந் திருவம்பலம். (ஊ)

பொன்னம்பலம். வேறு.

முன்னங்கருங் கண்ணன்கிடந் திம்மண்குடைந் துண்ணெந்துறுந்
தன்னண்டமென் றன்னம்பறந் துன்னம்பெருங் கின்னம்பங்
பன்னும்பழஞ் சொன்மந்திரம் பன்னுங்களென் றுன்னும்பதம்
பொன்னஞ்சிலம் பின்னந்தரும் பொன்னம்பலம் பொன்னம்பலம். (எ)

சபாபதி. வேறு.

திருமேவுஞ் [2]சதுவேதச் சிரமேவும் பரஞ்சோதி
யருமேவுந் திருவுருக்கொண் டம்மையுடன் செமமைபெற
மருமேவும் பெரும்பற்றப் புலியூர்மா மணிமன்றுட்
குருமேவும் [3]படிமேவிக் கூத்தாடுங் குழல்போற்றி (ஏ)

உ. பொன்றக்கண்டவன் - அழியச்செய்தவர். கரப் பொற்குன்று-யானை; கயாசுரன். தரக்குக்கு - வியாக்கிரபாதருக்கு; தரக்கு - புலி. தென்றலம் - தென்னாடு. புரிப்பித்து - குஞ்சிப்பித்து; வகையச்செய்து. 'திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்' என்பது அடுக்கு; பின்வருவனவைகளுமிப்படியே. இங்ஙனம் அன்பின் மிகுதிபால் அடுக்கிக்கூறல் ஒருசாராசிரியர் கொள்கை; "அதிரும்படி கடனம்படி திருங்கழலதிருங்கழல்" (அருணகிரிபுராணம், கடவுள் வாழ்த்து, உ) என்பதனாலும் விளங்கும்.

ஊ. திருவம்பலம் அருள் முதலியவற்றைத்தரும்; சதுர்முதலியவற்றைத்தரும்.

எ. கைத்துறும் - கைத்துறுவார். தன அண்டம் - பிரமாண்டம். அன்னமென்றது பிரமதேவரை. கின்னம்பறிம்- உன்முழுவார். மழஞ்சொல்லாகிய மந்திரம் - பஞ்சாக்கரம். பன்னுங்கள்: முன்னிலைப்பன்மைவேவல். பதம் - திருவடி. கண்ணன் இம்மண் குடைந்து உன்னைத்தும்; அன்னம் பதந்து கின்னம்பறிம்; ஆதலால மந்திரத்தைப் பன்னுங்கென்று கூறி, சிலம்பு பதத்தைத்தருதற்கு இடமாகிய பொன்னம்பலமென்க.

ஏ. அரு - அருமை. மரு - மருவுதல்; அர்த்தயாமகாலத்தே ஏனைத் தலமூர்த்திகள் அங்கே மருவுவார்களென்பது புராணவரலாறு. போற்றி - பாது காத்தருள்க; வியங்கோள்.

(பி - ம்.) [1]'சம்புவொண்டரக்குக்கு' [2]'சதுர்வேத' [3]'படிமேவுங்கூத்து'

சோக்கநாதர். வேறு.

அரியசடை முடிபோற்றி யருள்பொழிசெம் முகம்போற்றி
விரையிதழி மலராணிதூல் விளங்கியமார் பகம்போற்றி
மருவுமுயர் பேரழகு வளருதர நிலைபோற்றி
திருவளர்செந் தமிழ்ச்சொக்கன் திருவடித்தா மரைபோற்றி. ()

அங்கயற்கண்ணம்மை. வேறு.

பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
யிங்கெமக் கருள வல்ல விணையிலா வெம்பி ராட்டி
பங்கயத டஞ்சூழ் கூடற பவழமால் வரையை நீங்கா
வங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி. (எ)

பாண்டிநாடு.

ஆவியர் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பா
ஞவலந் தீவம் போற்றி நாவலந் [1]தீவந் தன்னுண்
மூவர்கட் கரியா னிற்ப மூத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் ஞடு போற்றி. (அ)

மதுரை. வேறு.

தேனிமிருந் தொடைவாகைச் செழியர்திருக் குலம் விளங்க
வீனமிலபல லுகங்கடொறு மிருநிலத்தியா வருமுய்ய
வானபெரு நான்மறைக்கு மரியயறருந் தெரியாதார்
மானிடராய் விளையாடும் [2]மாமதுரை நகர்போற்றி. (ஈ)

கடமபவனம. வேறு.

தலம்புகழ்தரும்பொரு வரும்பரம[3]சம்புவ ருணம்பனெழி லம்
பொனெலியார், சிலம்படி[4]யலம்பொலி பரம்பிரசதம்படர் சிதம்பர
நிரம்பு மருளா, லலம்பெறநிலம்பெறு நமம்பிகையுமிம்பரு மரம்பைய
ருமும்ப ருமெலா, நலம்பெருகுமிம்படி யிரும்பிசைநயம்பட நடம்புரி
கடம்ப வனமே. (கo)

கூ. இதழி மலர் - கொன்றைமலர். இதில, கேசாதிபாதாந்தம் முறையே கூறப்பெற்றுள்ளன.

எ. பவழமால்வரை - செவ்வெருமாலை.

அ. ஆவியர்தென்றல் - உயிர்போன்ற அழகியதென்றல்; தென்றல்வெற்பு-பொதியின்மலை. நாவலந்தீவம் - சம்புத்தீவு முவலாகடகரியான் - சோமசுந்தரக் கடவுள்; சோமசுந்தரகடவுள் மதிற்பச சங்கப்புலவர்கள் இருந்தது, "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் செய்யுளைக் குற்றங்கூறியவர் யாவரென்றபொழுது; திருநாட்டுச். கூ; கசு: ஐ o; கஎ: எ.

கூ. "பல்லுகம்" என்றது நாலைரு யுகஙகளையும்; திருநகரச். கஅ.

கo. இரசதம்படர் சிதம்பரம் - வெள்ளியம்பலம். அலம் - நிறைவு.

(பி - ம்.) [1]'தீபத்தனின்' [2]'மதுரைமாநகர்' [3]'சம்புவெழி நங்குமொழி நம்பனெலி' [4]'அலம்பவொளி பம்பிரசதம்'

கூடல். வேறு.

ஆடுபவர் பாடுமறை யேடெதிர்தெ ரிவகை யாடவிலை யாடி
பெரியோர், வேடனிடி சூடினிய கேடிறசை நாடுபவர் வேடனுடல் வீட
வடுவோர், சேடன்மதி யோடுநதி யோடுதலை யோடுவிதி தேடுமுடி
சூடு முரவோர், கூடுமிட நீடுசத மாடுமென மூடுமுகில் கூடுமுயர்
கூட னகரே. (ஙக)

மதுரை. வேறு.

விதுவரவ மிதழிதிரி பதகைதலை பொதிசடையர் விதமருவு கதிய
தருள்வோர், சதுமறைவி புதர்முனிவர் திரிபுதல்வர் துதிசெயிய சத
நிகழ்தொல் பொதுவில் வருவோர், பதிகரள நதியையதி மதுரமுறு
நதிசெய்திற லதுலருயர் சதுர நிடம்வான், மதிதவழு சுதையிலகு
புதுமைதரு நிதிநிகழு மதிறழுவு மதுரை நகரே. (ஙஉ)

திருவாலவாய். வேறு.

உருகாத நீச ராயினு முணராத மூட ராயினுங்
கருதாத சீல ராயினுங் கசியாத நேச ராயினும்
வரையாத யாவ ராயினும் வலமாக நாக ராயர்சூழ்
திருவால வாயுண் மேவுவார் [1]சிவமாவ ராணை யாணையால். (ஙங)

மதுரைத்திருச்சிற்றம்பலம். வேறு.

[2]மூன்மலர்கான் முகன்றிருமான் முனிவர்புரந் தரன்றேவர்
நன்மறைகண் டடிபரவ நலமலிகா லங்கடொறுங்
தொன்மடமா துடனயர்ந்து சுந்தரனன் னடமாடுந்
தென்மதுரை மாநகர்சேர் திருச்சிற்றம் பலம்போற்றி. (ஙச)

ஙக. மண்முழுதி - தமிழ்வேதமாகிய திருமுகப்பாசுரமெழுதிய ஏடு. வேடன் - கண்ணப்பர், வேள்தன் உடல் - மன்மதனுடைய உடம்பு. சேடன் - பாம்பு. சேடனையும் மதியையும் ஓடுகின்ற நதியோடு தலையோட்டினையும் முடியிற்சூடும் உரவோன். கூடும் இடம் கூடல் நகர்.

ஙஉ. விது - சந்திரன். திரிபதகை - கங்கை; ஆகாயம், பூமி, பாதாள மென்னும் மூன்று வழியாய் செல்லுபவள். விதம் - சாலோக முதலிய நான்கு வகை. திரிபுதல்வர் - அசுரர். கரளநதி - விடநதி; விடநதியை மதுரநதியாகச் செய்த வரலாற்றை, ஙசு-ஆம் திருவிளையாடலாலுணர்க.

ஙங. கருதாத சீலர் - நினையாத இயல்பையுடையவர். வரையாத - கொள்ளப்படாத. நாகராயர் - பாம்பின் அரசர்; என்றது மதுரையின் எல்லை காட்டிய பாம்பை; தேவராசருமாம்.

ஙம-ஙங. இச்செய்யுட்களில், இத்தலத்தில் காரணப்பெயர்களாகிய கடம்பவனம், கூடல், மதுரை, திருவாலவாயென்பவை முறையே பாராட்டப் பட்டுள்ளன; தீருநகராச். அ - ஙக.

ஙச. சுந்தரன் - சொக்கநாயகர்; எழுவாய். நன்னடம் - சொக்கத்தாண்டவம்; 'சுந்தர நன்னடம்' என்று பாடங்கொண்டு, சொக்கத்தாண்டவமெனினுமாம்; ரு: ரு - ஆம் பாடல்பார்க்க. இத்தலத்தில், சிவபெருமான், திருமால் முதலியவர்கள் பொருட்டுப் பண்டைக்காலத்தில் நடம்புரிந்தருளினரென்பது,

(பி - ம்.) [1]'சிவமாவராவராணையால்' [2]'முன்வழி'

வேள்ளியம்பலம். வேறு.

மருமல ரயன்மா லேத்த மதுரைமா தேவி வாழ்த்தப்
பரவரு முனிவர் [1]போற்றப் பதஞ்சலி முனிவன் காணப்
[2]பொருவருங் கடவுண் முன்னம் பொன்னினம் பலத்து ளாடி
மரு[3]கடம் புரிந்த வெள்ளி யம்பலம் போற்றி போற்றி. (கந)

கான்மாலியாடியவர்.

கதிதரு மறைகள் பாடக் கருணைமெய் காட்டித் தென்னன்
துதிசெய [4]வாருங் காணச் சோதிகின் றற்ற வீசித்
திகழுறு மதுரை யத்தண் [5]சிற்பர வெளியாந் தொல்லைப்
பொதுவினுண் மாறியாடும் பூங்கழல் போற்றி போற்றி. (கசு)

விநாயகர்.

குறைவற வடசொற் சொல்லுங் கதைதமிழ்க் கொத்தி முலே
நிறைவுற நடத்து தற்கு நீள்பணைத் தடக்கை வெற்றிச்
சிறுபதப் பெருவயிற்றுச் செக்கர்முக் கட்க ளிற்றை
யுறவுற விதயகூடத் துரியபா சத்தாற் சேர்ப்பாம். (கஎ)

முருகக்கடவுள்.

விடங்கரு மடங்க லென்ன விண்ணவ ரெண்ண நக்குத்
தொடர்ந்தமர் கடந்த சீற்றச் சூருடல் பிளந்த வேந்த

கடம்பவனபுராணமுதலிய நூல்களிற் கண்டவரலாறு; இஃது இத்தூலிற் பரக்கக்காணப்படும்; "நாடிரு முனிவர்க் காடிய பெருமான்", "கூடன்மா நகராடிய வழுதை", "சூதக்குள்ளப் பேய்க ளமிப்ப, வெங்குரு வுயிரு மின்பநிறைக் தாட, காடகத்தினோ டாடிய பெருமான்" (தல்.கக, உ), உருவென்பவற்றாலுமுணர்க.

கரு. மதுரைமாதேவி - தடாதகைப்பிராட்டியார்; மதுராபதித்தெய்வமுமாம். பதஞ்சலிமுனிவர்க்காக கடம்புரிந்ததை, "வித்தபதஞ் சலிக்குகடஞ் செய்தவாறும்" (பர. க.) என்பதனாலும், முடியும் திருவிளையாடலாலுமுணர்க; "பதஞ்சலிக் கருளிய பரமநாடக" (திருவா. போற்றி. கஉ அ.)

கசு. மதைகள்பாட: "அருமறைகாதம்பாட" (கஉ: கசு.) சோதி - சிவபெருமான்; எழுவாய். நிறம் - பீலி. அதிரவீசி - ஆடுமென்க; கஉ: கஉ, உங; "அதிரவீசி யாடுவாய்" (தேவா.)

கஎ. வடசொல்லென்றது, உத்தரமா புராணத்துள்ள சாரசமுச்சயமென்னும் பகுதியை; க: கரு. தமிழ்க்கொத்து - தமிழ்ச்செய்யுட்களின் தொகுதி; தமிழ்நூல்களின் தொகுதியுமாம்; "செழுத்தமிழ்க்கொத்தறிவிக்க வல்லாரில்லே" (கஅ: எ); "கோக்குந் தமிழ்க்கொத் தினைத்தும்வாழ்க" (தக்கயாக. இறுதித் தாழிசை.) பாசம் - அன்பு, கயிறு.

கஅ. மடங்கல் - சிங்கம். என்னத்தொடர்ந்து. சூர் - சூரபன்மன்; கடம்டமர் கந்தனென்ற இயைக்க சிவலிங்கப்பெருமானுக்குரிய ஸ்தலவிருக்ஷத்தை அத்தலத்துள்ள முருகக்கடவுளுக்கும் உரியதாகக் கூறுதல் மரபாதலின், 'கடம்பமர்...கந்தனே' என்றார்; ஸ்ரீகாம்பரமூர்த்திக்குரிய மாமரத்தை, "மாவடிவைகுஞ் செவ்வேள்" என முருகப்பிரானுக்கும் கூறியிருத்தல் காண்க; அன்றி,

(பி - ம்.) 1 'போற்றும்பதஞ்' 2 'பொருவரு மமரர் சூழப் பொன்னின்' 3'கடம்புரியும்' 4'யாருங்காணச்' 5'சிற்பரவெளி'

வுடம்பிடிப் படைத்த டக்கை யுத்தம மயூர வூர்திக்
கடம்பமர் மன்றற் றெய்வக் கந்தனைச் சிக்தை செய்வாம். (கஅ)

உக்கிரப்பெருவழுதியார். வேறு.

தாரார் நிம்பத் தொடையிலங்கச் சசிமா மரபு தனில்வந்து
பாரார் பெருவாழ் வுறத்தெய்வப் பாண்டிய னென்று முடிசூடிப்
பேரா தரவா லரசாளும் 1பெருமான் றிருமா மகவாய்மூச்
சீரார் சங்கத் தமிழாய்ந்த தென்னன் பொன்னங் கழல் போற்றி. (கக)

கலிமகள். வேறு.

புத்தக மக்க மாலை வராபயம் பொருந்து கையாண்
முத்தணி யணிவாள் வெள்ளை முளரியா சனத்தாண் மண்ணிற்
சத்தமோ டத்தங் கண்ட தவளமெய் வாணி வேதா
வுத்தம மனைவி வெண்டே சுடையடா ளினைகள் போற்றி. (உ)

சைவசமயாசாரியர் முதலியோர்.

படிபுகழ் சண்பை வேந்தர் மலரடி போற்றி பத்தி
வடிவுடை யியமேற் காவுக் கரசடி போற்றி மாலை
முடிகொள்சுந் தரர்தாள் போற்றி மூகுசை வாத வூர
ரடியிணை போற்றி 2மறைஞ்சுங் கடியவ ரடிகள் போற்றி. (உக)

நாற்பத்தெண்ணாயிரமுனிவர்.

பலந்தரு தவத்தான் மிக்கோர் பத்தினை ராக்கி யத்தோர்
புலங்களுங் கடந்தோ ரீசன் றனையலாற 3போற்ற லில்லோர்

"கூடம்பமர் செல்வன்" (பரி. அ: கஉ) எனத் திருப்பரங்குன்றத்துச் செவ்வேள் கூறப்பட்டிருத்தலால், இத்துதி அவரைச்சார்ந்ததென்றலுமாம்; இயல் பாகவே கடம்பின் அடியில் அவர் எழுந்தருளியிருப்பதாகக் கூறுதல மரபாத லின், பொதுமைபற்றிக் கூறி யு ளனலுமாம்; "சதுக்கமுஞ் சுற்றியும் புதுப் பூங் கடம்பும்" (முருகு. உஉ), "கடம்பமர் தெடுவேள்" (பெரும்பாண். எடு) என்பவற்றாலுணர்க.

ககூ. பாரார் - பூமியிலுள்ளார். இங்கே, 'தெய்வப்பாண்டியன்' என்றது போல, "தெய்வவான்வழுதி" என்றார் பின்னும் (ப: ச.)

உ0. அக்கமாலை - உருத்திராக்கமாலை; "அக்கமாலை கொடங்கையினெண் ணுவார்" (தேவாரம்.) வராபயம்-வரமும் அபயமும். கண்ட-செய்த, அறிந்த.

உஉ. தரியையாதி நான்குமார்க்கம் - சரியை, கிரியை, யோகம், ஞானம். நாற்பத்தெண்ணாயிரவரென்னும் பெயர், தில்லைமூவாயிரவர், திருப்பெருந்துறை முக்கூற்றுவர், திருவீழிமிழலை ஐங்கோற்றுவரென்பவரோ டு குழுஉப்பெய ரென்றும், இவர்கள் இத்தலத்திலும் சிதம்பரம், காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருப்பூவணமுதலிய தலங்களிலும் திருத்தொண்டுபுரிந்து எழுந்தருளியிருந்த சிவதேசச் செல்வர்க ளனறும் தெரிகின்றன; "வேதாரண்ய நாதபத்தெண் ணாயிரரும்" (திருவாலங்காவுலா, கடுக); "எட்டுத்திக்குத் தீர்காத்பத் தெண்ணா யிரவரெனும், ஒப்பற்ற வேடத் துயர்தேரும்" (திருப்பூவணநாதருலா,

(பி - ம்.) 1'பெருமாடருமா' 2'மற்றுங்கடியவர்' 3'போற்றுகில்லோர்'

கலக்திகழ் சரியை யாதி நான்குமார்க் கத்தோர் நீற்ரு
லிலங்கிய நாற்பத் தெண்ணு யிரவர்தாள் போற்றி போற்றி. (உஉ)

ஆசிரியர்.

வாக்தருக் தொல்லைத் தில்லை மாளிகை மடத்து மன்னு
[1] மருக்தவ முனிவெண் காட னருள்விகா யகன்ம னத்தாற்
பரிக்தெனே யாண்டு கொண்ட படர்சடைக் கடவு ணீதி
திருக்திய பரம ஞான சிவனடி சென்னி சேர்ப்பாம். (உக)

அவையடக்கம்.

அளக்தபே ரறிவி னேங்கு மாசிலா சிரியர் முன்னர்த்
தளர்க்தசிற் றறிவே னின்று தமிழ்க்கவி சாற்று மாறு
வளர்க்தநீள் புவன முற்றும் வக்தபே ரிருளை யோட்டி
விளங்கிய பருதி முன்னர் மின்மினி விளங்கல் போலும். (க)

அவைகடி வோங்குக் தெய்வ வகத்தியன் முன்னஞ் சொன்ன
கவிபொதி கதையை யானுக் தமிழ்செய்வே னென்கை காணிற்
புவிமிசை விசும்பி னீடும் பொருப்பிடை முடவ னேறிச்
சுவைதரு தேனை யுண்ண வெண்ணுவான் முணிதல் போலும். (உ)

வேறு.

ஏய [2]பத்தி முனிவ னியம்பிய
சேய சொக்கன் திருவிளை யாடலைக்
காய்ப சிக்குக் கடலைக் குடிக்குமோர்
நாயை யொக்குக் தமியே னெடுனுதல். (ங)

ஓது பாலர் மழலை யுரையையுர்
தாதை தாயர் [3]தயாவுறக் கேட்டெனப்
பேதை யேன்புன் மொழிபெரு மான்புக
ழாத லானல் லறிஞர் வியப்பரே. (ச)

ஆகத்திருவிருத்தம் - ஙக.

கூ0) எப்பவற்றும் முணர்க; இவர் நாற்பத்தெண்ணாயிர மாகேசரென்றும் கூறப்படுவர்.

உக. கடவுள் - முனிவன்.

அவையடக்கம்.

உ. தெய்வஅகத்தியன் - தெய்வமுனிவராகிய அகத்தியர்; "அமர முனிவ னகத்தியன்" (மணி: பதிகம், கக; உஉ: ஙகு.)

ங. முனிவன் - அகத்தியர். தமிழ்மன் கவிபுதல் கடல்குடிக்கும் ஒரு நாயை யொக்குமென்க: "ஒருசுணங்கனை யொக்குக் தகைமையேன்" (பெரிய. அவை.) என்றார்.

(பி - ம்.) [1]'அருக்தமிழ்முனி' [2]'புத்திமுனிவர்' [3]'தயாவுறக்கண்டனம்'

பதிகம்.

இந்திரன்வெம் பழிவிடப்பூ சித்த வாறு மிறைஞ்சயிரா வதசா பந் தீர்த்த வாறு, முந்துலகாண் மும்மூலையாள் பிறந்த வாறு முடிசூடி மணந்துபா ராண்ட வாறும், வந்தபதஞ் சலிக்குடஞ் செய்த வாறும் வயப்பூதஞ் சொன்றிமலே தொலைத்த வாறு, முந்தியுறு பசிக்கன்னக் குழிகள் காட்டி யுதகத்துக் கியல்வைகை யழைத்த வாறும். (க)

உன்னருமேழ் கடலழைத்த வாறு மாமி யுடனுட மாமனைமண் ணழைத்த வாறு,மன்னுசடை யுக்கிரஞர் பிறந்த வாறும் [2]வளையொடு வேல் செண்டளித்து மறைந்த வாறுந், தென்ஞன்மா டக்கூட லான வாறுஞ் சீலமலி சித்தரா யுலாவு மாறு, [3]மூன்னோர்கல் லிபங்கரும்பு வாங்கு மாறு [4]மொழியறிசங் கப்பலகை கொடுத்த வாறும். (உ)

மறுவறுபொற் கிழியறுத்த வாறுங் கீரன் வருந்தாமல் வந்து கரை யேற்று மாறுங், குறுமுனிக்குத் [5]தமிழ்நோக்கா லுரைத்த வாறுங் கூறுபொரு ஞரை[6]யூம ணுணர்ந்த வாறுங், கறுவியிடைக் காடன்பின் போன வாறுங் கடல்சுவற வுக்கிரன்வே லெறிந்த வாறு, மெறிகடல்வாய் வலைவீசி மணந்த வாறு மியல்வணிக ஞய்வளையல் விற்ற வாறும். (ஈ)

க. பூதம்-குண்டோதரன். உக்கி-வயிறு. அன்னக்குழிகள் நான்கு: எ: ஈ.

உ. சடைஉக்கிரஞர் - சடையையுடைய உக்கிரப்பெருவழுதிபார்; கo: ஈ; "நெடுஞ்சடை யுக்கிரப் பயந்தருணிமலல்" (கல். எஅ.) செண்டு- ஒருவகை ஆயுதம்; இஃதுஐயஞர் திருக்கரத்திலுள்ளது; "செம்பொற்கிரிதிரித்தசெண்டு" (சிலப். ரு: கரு-அ, மேற்.) "செண்டு கொண்டுகரி காலனெஞ காலி லிமையச், சினைய மால்வரை திரித்தருளி" (கலிங்க.இராச.க), "மால்வரையைப் பண்டொ ருகாற் செண்டாற் றிரித்தகோ விக்கிருத்தசெய்" (நள.சுயம். கஈரு), "செண்டு தரித்தோன் றிருப்பவளத் தாரமுதம்" (வி. பாரதம், இராச. அo.) "செண் டா லவள்பைங் குழல்பற்றி" (ஸ்ரீ-நகு. உகக) என்பவற்றாலுணர்க; இதனைத் திருக்கரத்திற் கொண்டிருத்தல்பற்றி இராசம ஞர்கோயிற் பெருமாளது திரு நாமம் செண்டலங்காரரென வழங்குகின்றது. கல்லிபம் - கல்லானை. மொழி யறிசங்கப்பலகை; "பாவறிசங்கப்பலகை" என்பர் பின்னும்; கரு: உ.

ஊ. கீரன் - நக்கீரர். நோக்காலுரைத்தல் - பார்வையால் உபதேசித்தல்; "திருநோக்கா லுபதேசித்து", "பார்வையினு லுபதேசஞ் செய்தபின்னர்" கஅ: எ, கூ. ஊமன் - உருத்திரசன்மனூர்.

(பி - மி.) [1]திருவிளையாடற்றொகை' [2]வளைசெண்டு வேல்கொடுத்தமறை ந்தவாறும்' [3]'முன்னர்க்கல்லிபங்' [4]'மொழிந்தறிசங்கப்பலகை' [5]'தமிழ்வர்க்க முரைத்த' [6]'ஊமனுரைத்த'

திருக்கடையை விடைக்குறியிட் டடைத்த வாறுஞ் செட்டி யாய் மாணிக்கம் விற்ற வாறும், [1]வருத்தவரும் வாரணத்தை யெய்த வாறும் வாதவூ ரர்க்குபதே சித்த வாறுங், கரக்குமின நரியைமா வாக்கு மாறுங் காவலுறு பரியைநரி யாக்கு மாறும், விருப்பினடி [2]யுண்டியர்மண் சுமக்த வாறும் விருத்தனிளை யோன்பால ணை வாறும்.

தார்வேந்தன் றெழுமாறி யாடு மாறுஞ் [3]சார்ந்தபடி பழியஞ்சி யாய்ந்த வாறுந், தீராவன் பாதகங்க டீர்த்த வாறுங் திறலுடையோ னுடனங்கம் வெட்டு மாறுங், காராரு [4]காகமலை செய்து விட்ட கடி மதுர மாக்கிநகர் மதுரையாக்கிப், போரேற்றைப் பசுவைமலை செய்த வாறும் [5]பூழியரு ருடல்வெப்பந் தீர்த்த வாறும். (ரு)

பாலகனுல் வலியசமண் குண்டர் மாளப் பாண்டியன்மு னீண்ட கழு வேற்று மாறுஞ், சீலமுறு படைமெய்க்காட் டிட்ட வாறுஞ் சேர்ந்துலவாக் கிழிவேந்தற் கீந்த வாறு, மேல்வணிகன் மாமனுப் வந்த வாறும் வியந்தட்ட மாசித்தி பகர்ந்த வாறுஞ், சாலுறுதண் ணீர்ப் பந்தர் சமர்க்க ளத்துத் தற்பணிந்த கொற்றவற்கு வைத்த வாறும். (ரூ)

மின்னணி[6]யா ரம்பூண விக்திரன்றன் மேன்முடிமேல் வளைசா ட மிக்க மேக,மன்னவரைப் பிடித்துவிலங் கிடச்சிறைத்த மாறனுக்கே சார்வாகி நின்ற வாறும், பொன்னனையா டனக்கருளு மாறுஞ் சோழன் பொன்றக்கொண் டாழிக்கட் டாழ்த்த வாறு, மன்னுநகர் திருஞடிவூர் திருமு டங்கல் வாலவா யாலவா யான வாறும். (எ)

வரகுணற்குப் பிரமகத்தி யொழித்து மண்மேல் வரவழைத்துச் சிவலோகங் காட்டு மாறும், பொருபடையுள் விடைக்குறியம் பெய்த வாறும் புக்கிலுல வாக்கோட்டை வைத்த வாறு,மரசரிமை மூர்த்திக்கு

சு. விடைகுறி - ரிஷபமுத்திரை. வாரணம் - யானை.

ரு. காகம் மலைசெய்து-பாம்பை மலையாகச்செய்து; கூர்: கசு. கடி-விடம்.

சு. பாலகன் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர். மேல் - அதன்பிற். சால் - பாண்டவிசேடம்; மிகுதியுமாம். தற்பணிந்த - தன்னைப்பணிந்த.

எ. மேகமன்னவர்: கஉ: ச; சஅ: கூசு, கூக. கொண்டாழி - மதுரையின் மேற்கேயுள்ளதோர் ஓடை; கொண்டு ஆழ்த்தியதென்பது பொருள்; சசு: உரு, உஎ; "மண்டிருவேட்டுப் பஞ்சவற் பொருத, இள்ளியுங் இனையுங் கிளர்படை நான்குங், திண்மையுஞ் செருக்குந் தேற்றமும் பொன்றிட, வெளிவா யுரக நிருணீட் நிருவுக், குலைக்கொண் டாழி குறியுடன் படைத்து, மறியப்புணை த்த மரங்கெழு பெருமான்" (கல். அகூ.) நகர்-மதுரை; எழுவாய். திருஞடிவூர்: சஎ: கூ. திருமுடங்கல்: மெ. கச. வாலவாய், ஆலவாய்: மெ. கக.

அ. புக்கில் - வீடு. மூர்த்தி-மூர்த்திநாயனர். புலவர் - காரியார், காரியார். பகுத்துகொள்ளல் - பங்கிட்டுக்கொள்ளல்; கo: கo; நுஉ: கஉ. புல்வாய்-மான்; "புல்வாய் புலியின் முலியுண்ணும்" (திருநாட்டுச். கூ.) இவ்வருமைச்

(பி - ம்.) [1]'வருத்திவரும்' [2]'உண்டிமண்' [3]'சார்ந்தபழியஞ்சியாய்வந்த' [4]'காகமலையெய்து', 'காகமலையேவி' [5]'பூழியன்றன்' [6]'ஆரம்பூணு விக்திரன்றன் வின்முடி'

கல்லு மாறு மரும்புலவர் பாப்பகுத்து கொண்ட வாறும், வெருவுபுலி முலைபுல்வாய்க் கீந்த வாறும் விறகாளாய்ச் சாதாரி பாடி மாறும். (அ)

பரிந்துதிரு முகஞ்சேரற் கீந்த வாறும் பாணனுர்க் குயர்பலகை யிட்ட வாறுங், [1]கரக்திருந்தே யிசைவாது வென்ற வாறுங் [2]கருணை யுற்றுப் பன்றித்தா யான வாறுக், [3]திருந்துமரிக் குருளைகளீ ராறு மோங்கத் திறலுடைய வன்னியர்க ளாக்கு மாறும், பொருந்துவலி [4]கரிக்குருவிக் கீந்த வாறும் பொன்வரையிற் கயல்செண்டு பொறித்த வாறும். (கூ)

சிவனெதிவன் னியுங்கினறும் [5]வணிகன் முல்லைத் தேவிக்குச் சான்றழைத்துக் காட்டு மாறு, [6]நவமுறமீ னயிலாம லேத்தும் பத்தி நாரைக்குச் சிவலோகங் கொடுத்த வாறுக், [7]தவமுறுகண் ணுவன்முதலா முனிவர் வேண்டச் சார்த்தகலி யுகத்திறந்த வேத முற்று, முவகையுற வரு [8]கிருத யுகத்தா திக்க ணுணர்த்தியவா றுஞ் சிறியே னுரைக்க லுற்றேன். (கo)

பதிகமுத ணினைப்புச்செய்யுள். வேறு.

இந்திர னுன்ன ரும்பி னியைமறு திருதார் பால
வந்தமின் ணணியா ரம்பூ வரபரி சிவனெ டென்றே
சுந்தரன் வினையா டற்குச் சொல்லிய தமிழ்ப்பொ ழிப்பா
முந்திய கவிபத் திற்கு முதனினைப் புணர்த்தி னேனால். (கக)

ஆகத்திருவிருத்தம் - சுஉ.

சரிதம், "புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி" (தி.நவா. போற்றி.) என்பதனுலும், "தழல்விழிப் பேழ்வாய்த் தாக்கின் றுளிமுலை, பைங்கட் புல்வாய் பா லுணக் கண்ட, வருணிறை பெருமான்" (கல். சஉ) என்பதனுலும், "பொன் னெயிற் கடம்ப வனத்தபுல் வாய்க்குப் புலிமுலை யளித்தபுண் ணியம்போல்" (தி.நக்காளத்தி. பரத்து. நிகு) என்பதனுலும்பாராட்டப்பெற்றிருத்தல்காண்க.

கூ. சேரன் - சேரமான் பெருமாள் நாயனுர். பாணனுர் - பாணபத்திரர். பன்றித்தாய் - பன்றிக்குட்டிகளுக்குத் தாய். வன்னியர்கள் - சேனைத்தலைவர் கள்; மந்திரிகள்; சித்தாசாரக்களென்னும் பொருளிலும் வழங்கும் (ஞான. அபி க்த. எ); "கருமுகிற் கணிகிறத் தழற்கட் பிடையெயிற், நரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச், செங்கோன் முனையிட் டருளிர் தேக்கிக், கொலை களவென்னும் படர்களை கட்டுத், தீப்பட ராணை வேலி கோலித், தருமப் பெரும்பயி ருலகுபெற விளக்கு, நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்" (கல். சo.) பொறித்தல்-எழுதுதல்; "கயலொடு செண்டுக் தீட்டி" என்பரிபினுலும்; சுக: கள.

கo. முல்லை-கற்பு; "தானுடை முல்லை யெல்லாக் தாதகப் பறித்திட் டானே" (சீவக. சுஅசு.)

கக. பொழிப்பெனினும் பதிகமெனினும் தொகையெனினுமொக்கும்.

(பி - ம்.) 1'கரக்திருக்தேழிசை' 2'கருணையுறுபன்றித்' 3'திருக்தெனக்கு ருளை' 4'கருக்குருவிக்கு' 5'வணிகர்முல்லை' 6'நவமுறுமீன்' 7'தவமுதல்' 8'கிரே தாயுகத்தாதிக்கணுயர்த்திய'

கருத்தினே முடிக்குங் கங்கைத் துறை[1]மணி கன்னி கைக்கண்
மருத்திகழ் மலர்த்த டஞ்சூழ் வளமைசேர் வார ணாசிப்
புரத்தம கிலை நாதன் புண்ணிய மூர்த்தி யென்றன்
சிரத்தினிற் கரம்வைத் தாண்ட சேவகன் றிருமுன் முன்னம். (க)

மேதகு சமதக் கியன் பராசரன் விசுவா மித்ரன்
சாதுகா ரதன்றூர் வாசன் சனகாதி பிருகு வத்ரி
கோதமன் பரத்து வாசன் கோசிகன் காசி பன்கோ
மூதுரை வசிட்டன் முன்னு முனிவர்யா வருந்தி ரண்டார். (உ)

பூமிதெற் குயரா வண்ணம் பொதியிலி லிருக்க வல்லான்
பாமுழு துணர்ந்தோ னேழு பரவையைக் குறிய கையா
2 லோமுறை யிருக்கா லள்ளி யொருக்காலா சமித்தோ னங்க
ணமதி வல்லோன் ரெல்லை யகத்திய னென்பான் வந்தான். (ங)

ஆங்கவன் றன்னேமிக்க வருந்தவ முனிவர் யாரு
மோங்குமா சனத்தி ருத்தி யுயருப சார நல்கித்
தேங்கமழ் தாமஞ் சூட்டிச் சிறந்தபூ சனைகள் செய்து
தாங்கரு முவகை யோடுந் துதி செய்து தாழ்ந்து சொல்வார். (ச)

க. மணி கன்னிகை - கங்காநதியிலுள்ள கட்டங்களுள் ஒன்று; இது மணிகன்றிகை யெனவும் வழங்கும் (கந்த. மார்க்கண்டே. உசுவ, பார்க்க.) வார ணாசிப்புரம் - காசி; காரணப்பெயர். அகிலநாதன் - விசுவநாதர். ஆசிரியரைச் சிவமாகப்பாவிக்க வேண்டுவது மரபாதலின், 'என்றன் சிரத்தினிற் கரம்வைத் தாண்ட சேவகன்' என்றார். முன்னம் - முற்காலத்தில்.

உ. சனகாதி - சனகர்முதலியோர். கோ - தலைமை.

ங. ஒருக்கால் - ஒருமுறை; "படுவழி னினக்கொ ருக்காற் பலித்தது கொண்டு" (சுஅ: கஉ); சிதம்பரபுராணம். தன்மத. கள, பார்க்க.

உ - ங. 'முனிவர் யாவரும் றிரண்டார்' எனவே அகத்தியருடைய வரவும் அடக்குமாயினும் தலைமைதோன்ற வேறுகூறினர்; இங்ஙனங்கூறுதல் மரபு; 'முனிவர் வந்தார் அகத்தியனும் வந்தான்' (தொல். பா. விரு.) என்பதனையு முணர்க.

(பி - ம்) 1 'மணிக்கன்னிகை' 2 'ஓமுறை'

1 முன்புயிர்த் துன்பந் தீர முதல்வனே மலயக் குன்றி
லன்புற விருத்தி காஞ மருச்சனே புரியப் பெற்றாய்
தென்புவி விசேட நின்போற் 2றெரிதர வல்லா ரில்லை
3நன்புற வறிவா யாங்க ணவில்வதொன் றுண்டி கேண்மோ. (நி)

கலந்தருங் கங்கை முன்னு நதிகளின் கரைக்கண் மிக்க
பலந்தரும் 4பெரியதான வைபவம் பலவுஞ் சொற்றாய்
வலந்தருந் தென்ன னுட்டி வைகைமா நதியின் பாங்கர்த்
5 தலந்தரும் புகழ்வி ளக்கந் தரு6சிவ தலங்க டம்முள். (சு)

சுந்தர மாக வாங்குச் சொல்லுமொண் டானந் தின்க
ணந்தமில் புகழான் மிக்க வருள்வடி விறைவன் செய்த
7 சிந்தைசூ ரவதா னத்தின் றிறங்களோப் பிறங்க வின்று
8 முந்தைமா மலய மன்னு முனிவனீ கவிறி யென்ன. (ஏ)

வேறு.

ஆங்கினிய மந்திரத்துக் காருயிராம் பிரண வம்போ
லோங்கவனி மாமடந்தைக் குயிரதுதென் னவனுடி
வாங்கருஞ்9சீ ரங்காட்டி வளஞ் சிறிது கேண்மின்கள்
பாங்குடையீர் வினவியவா றழகிதென 10முனிபகர்வான். (அ)

ஆகத்திருவிருத்தம் - நிo.

நி. முதல்வன் - சிவபெருமான். மலயக்குன்று - பொதியில்மலை; இது வைப்புத்தலங்களுள் ஒன்று; "கயிலையும் பொதியிலு மிடமென வுடையார்", "பொதியிலானே பூவணத்தாய்" (தே.) நன்புறம்மை; க: கஉ; கள: க; "நன் புறு கல்லூர்ப் பெருமணம்" (தே.): "நன்புருகு ஞானச் சுடர்விளக் கேற்றி னேன்" (தி.வி.)

சு. தானவைபவம் - தலவிசேடம்; தானம் - ஸ்தானம். வைகை - வேக வதி யென்பதன் மரூஉ; வையை யெனவும் வழங்கும்.

எ. சுந்தரமாக ஆங்குச் சொல்லும் ஒண்தானம் - ஸுந்தரகேஷத்திரம். அவதானம்=அபதானம் - திருவிளையாடல்; வடமொழி; "சுந்தர னவதா னங்கள்" என்பர்பின்னும்; கo: நிசு.

(பி - ம்.) 1 'முன்புவித்துயரம்' 2 'தெரிதரவறிவாரில்லை' 3 'நன்குற' 4'பெரியதானம்' 5'தலம்புகழ்தரவிளக்கம்' 6 'சிலன்றலங்கள்' 7 'சிந்தைகூர்தரு தானத்தின்', 'சிந்தைகூரபதானத்தின்' 8 'முந்திமா' 9 'சீர்நன்னாட்டுவளஞ்' 10 'முனிபகர்ந்தான்'

திருநாட்டுச்சிறப்பு.



ஒருவினை யாட்டி னுண்மை யொருவரா லுணரா ஞாலம்
பெருவினை யாட்டைத் தாங்கும் பிஞ்ஞகன் மதுரை மன்ன
னருள்வினை யாட்டி னேங்கி யமையறு பத்து நான்கு
திருவினை யாட்டு நாட்டைச் செப்புவ லொப்பக் கேண்மின். (க

வேறு.

அடிக்குரிய தமிழ்த்தொடைக ளலர்க்குரிய கடிப்பொழில்க
ணடிக்குறுவ துகிற்கொடிக ணஞ்சுறுவ வஞ்சியர்கண்
குடிப்பபமது மதுகரங்கள் கோடுவன நீடுசிலை
வடுப்படுவ வுடுப்படுமா வஞைப்புறுவ நதிப்புதுநீர்.

வேறு.

முருகன் சங்கத் திருப்பவனம் முக்கட் கடவு ணிற்பவன்வா
ளரசன் புயலை விலங்கிட்டோ னனலும் புனலு மியலறியும்
புரமூ மதுர மானபுரம் புல்வாய் புலியின் முலைபுண்ணு
நரியும் பரியா நதியிதழி மணக்குங் கன்னி நன்ஞாடு. (கூ)

க. மதுரைமன்னன் - சோமசுந்தரக்கடவுள்; ச: நு; சு: எ. வினையாட்டு ஐந்து - படைப்பு முதலிய ஐந்தொழில்கள். திருவினையாட்டுநாட்டை - பாண்டி நாட்டின்வளத்தை ஒப்பச்செப்புவல்.

உ. அடி - அடிபடுதல், பாதம். அலர் - பழிமொழி, பூ. நடுக்கு - அஞ்சி நடுங்குதல், அசைதல். நஞ்சுறுவ - கைக்துறுவன, விடம்போல்வன. மது - கள், தேன். கோடுவன - நல்வழிதப்பிச்செல்வன, வளைவன. வடு - குற்றம், மா வடு. உடு - நக்ஷத்ரம். வளைப்புறுவ - தடுக்கப்படுவன, சூழ்வன. அடி முத லியவற்றை இந்த நாட்டுமனிதர்களினின்றும் நீக்கித்தமிழ்ச்செய்யுட்கள் முத லியவற்றிற் காட்டலால், இச்செய்யுள் ஒழித்துக்காட்டணி.

கூ. முருகனென்றது உருத்திரசன்மரை. நம் முக்கட்கடவுள்; அவர் நின்றமை, "மூவர்கட் கரியா னிற்ப மூத்தமிழ்ச் சங்கத் தெய்வப், பாவலர் வீற் றிருக்கும் பாண்டிநன் ஞாடு"(கடவுள். அ) என்பதனாலும் அறியலாகும். வள ரசன் - உக்கிரகுலத்திற்பிறந்த பாண்டியன். நெருப்பும் நீரும் தமிழின் இயல தியமென்பதை, "யாரறிவார் தமிழருமை யென்னின் றேனென் னறிவீன மன்றேவன் மதுரை மூதூர், நீரதியு நெருப்பதியும்" (மதுரைப்பதிற். சரு) என்பதனாலுமுணர்க; தேவாரம்வரைத்த ஏடுகள் முறையே நெருப்பில் வேவாத தும் வையைநதியில் எதிர்த்தேறியதும் இங்கே அறியற்பாலன. புரமும் மதுர மானபுரம்: கூசு: கரும் மான் புலியின் முலைப்பாலுண்ணுமென்றதை நாகூ-ஆம் திருவினையாடலாலும், இத்தூற்பதிகம் அ - ஆம்பாடலின் குறிப்புரையாலு முணர்க. வையை, கங்கையாதலின், 'நதியிதழிமணக்கும்' என்றார்.

வேறு.

கலமுறு மொழிசேர் கல்ல பெருங்கிளை யென்று நாடித்
தலமிசை யுயர்கு லத்துச் சார்ந்துகண் காண நிக்க
குலவரை யிடத்துத் தோன்றிக் குவலய முழுதும் பெற்ற
நிலவிய மரக தஞ்சேர் நித்திலம் [1]பிறக்க நாடு. (சு)

தாரணி மவுலிக் கொற்றத் தசரதன் மகனர் வந்து
கூருகி ரெண்கு மூண்ருக் குரக்கின வெள்ளங் கொண்டு
வாரிநீள் குலேப்ப டித்து வலியவா ளரக்கற் காய்ந்து
காரண வானே [2]யேத்தி யருமம்பழி கழுவு நாடு. (நி)

பரிபடுந் துறைகெ ருங்குங் குடிபடும் பரிமென் றென்றல்
வரைபடுங் கரும்பு சாலி வயல்படு மணியும் பொன்னுந்
தரைபடுந் துங்கச் சங்குந் தமிழ்படுஞ் சார்ந்த செங்கட்
கரிபடுங் காடு வங்குக் கடல்படும் பவள முத்தம். (கூ)

வேறு.

நாளும் புதுநீர்த் தமிழ்நறிப்பா னரர்த்த மஞ்ச ணெருங்கிஞ்சி
நீளுங் கருணே [3]தாண்முரியக் கதலி புதைய நெடுங்கமுகின்
பாளை பலவின் கனிதெங்கம் பழம்போய்ச் [4]சாடி வீழ்த்தினேய
வாளை யாளை விழப்பாயும் [5]வளைவெண் டாள வயலெங்கும். (எ)

வேறு.

நஞ்சளையுஞ் சனச்செங்கட் கருங்குழல்வெண் ணகைகமடவார்
பஞ்சளையுஞ் சீறடியிற் பண்ணளேநூ புரமேங்க
நெஞ்சளைபொற் பந்தளைகைச் சங்களைகம் பலிநீடு
மஞ்சளையிஞ் சியையளையும் வண்டலை [6]தண் டலேயெங்கும். (அ)

சு. மொழி - சொல், கணு; "மொழியுமினிதீர்" (அழகர்கலம்பகம், கஎ.) இனை - குலம், மூங்கில்; "பிறந்தே னல்ல இனையிலே பெண்மை றைந்தான்" (உபதேசகா: கண்காணம்-மேல்விசாரிப்பு; "தண்காணியினெடுத்து" என்பர்பின்; உள: உ0. குலவரை - இயம். மரகதம் - உமாதேவியார். நித்திலம் - சிவபெருமான். நாடிப் பிறந்த வங்க. 'மரகதஞ்சேர்' என்றது, நித்திலத்திற்கு அடை; திருநெல்வேலியில் இறைவன் மூங்கிலடியில் முளைத்தபத்தி அவர் திருநாமம் வேய்முத்தெனவழங்குந். இச்செய்யுள் நிலேடையணி.

ரு. குரங்கு இனம். குலே - கரை; சேது. வாள் - சுக்கிரவாள். அரக்கன் - இராவணன். காரணவானே - சிவபெருமானே; ச: உ0.

சு. துறை - கடற்றுறைகள். நெருங்குங்குடிபடும்பதி: "அயலிலேவேறடி நெருங்கக் குடிநெருங்கி யுளதவ்வூர்" (பெரிய. திருநாளேப். ரு.) கடல்படும் பவளமுத்தம்: கூ.

எ. தமிழ்நறி - வையைநதி; "தமிழ்வையைத் தண்ணம்புனல்" (பரி. சு: சு0); "தமிழறிக்துவை நிகமுடன் சைவமு நிறுத்தும், அமிழ்த வெண்டிரை வையை" (திருவிளை. நகரப். கஎ.) நரந்தம் - நரந்தப்புல். வளை - சங்கம்.

அ. பஞ்ச - செம்பஞ்சு. சங்கு - வளையல். வண்டு அலேகின்ற.

(பி - ம்.) 1 'பெற்ற' 2 'ஏத்தவரும்' 3 'தாண்முரித்து', 'தாண்முரிந்து' 4 'சாடிவீழ்த்து' 5 'வளைவண்டானவயல்' 6 'தண்டலேயளையும்'

வேறு.

அன்னங் திகழும் வயற்களத்து மலைநீர்ப் பொருனை நதிமுகத்தும்
பொன்னஞ் சங்கங் துகிர்முத்தம் படிவ தல்லாற் பொலிவோங்க
மின்னு நுசுப்புப் பாரவட மேரு மூலமங் கையர்களத்துந்
துன்னுங் கிரண மதிமுகத்தும் படிமொண் சங்கந் துகிர்முத்தம்.(கூ)

வேறு.

ஏந்துதண் செழுநீர் வாவி யெழுந்தசெங் கழுநீர் விண்டு
[1]வார்ந்தகண் ணீராற் சேறு படும்பழ னங்கண் மாதர்
[2]சேர்ந்தகுங் குமத்தின் விட்ட தெளிதரு பனிநீர் வெள்ளம்
பாய்ந்தசந் தனத்தாற் சேறு படுத்தன மலைத்த டங்கள். (கo)

மொழிதருங் குயில்கள் சாய நருமட மயில்கண் மொய்க்கும்
பொழிறருங் கரைக்கண் டெண்ணீர்ப் பொய்கையுண் மாலைப் போது
முழுகுவான் செல்லு மாதர் முகத்தையுந் தனத்தை யுங்கண்
டழகுதோய் பதும நாணி யலர்வுறு குவிவு மூவல். (கக)

வேறு.

காணெருங்கும் வரை[4]வளங்க டருமென்னுங் கடிக்குறிஞ்சி
யானெருங்கு மினியவளந் தருமென்று மணிமுல்லை
வானெருங்கும் பொழில்வளங்க டருமென்றும் வயன்மருத
மீனெருங்குங் கடல்வளங்க டருமென்றும் வியனெய்தல். (கஉ)

அடுகுறவர் திறம்பெருகு மலர்குறிஞ்சி யாஞயர்
குடிநெருங்கும் படர்முல்லை கொழுமள்ளர் குழுத்துவன்னுங்
கடிமருதம் விளையளவர் கணநிறையுங் கழிநெய்தல்
படைமறவர் [5]நிரம்புநெறி பரன்முரம்பு தரும்பாலை. (கங)

வேறு.

பண்டைநான் மறைக்கு மெட்டாப் பராபரன் மனிதர் போல
மண்டலத் தினிந்து வேந்தர் வல்லிடை [6]மணந்து கோலி
னெண்டருஞ் புவன மூன்று மிருந்தர சாளக் கண்டீர்
தண்டமிழ்ப் பாண்டி நாட்டின் றகவுண்டோ மற்றேர் நாடு. (கச)

ஆகத்திருவிருத்தம் - கச.

கூ. அன்னம் - அன்னபக்ஷிவை. பொருனைநதி முகம் - கொற்கைத்துறை. பொன் - அழகு. களத்துச் சங்கமும் முகத்துத் துகிர்முத்தமும் படிமென இயைக்க; களம் - கழுத்து.

கo. கண்ணீர் - கள் நீர். [மாதர்.

கக. பொழில் தரும் - பொழிலெவளரச்செய்கின்ற. கரைக்கண் செல்லு

கஉ. ஆன் ஆயர். விளை அளவர் - முத்து விளைகின்ற அளத்தையுடையவர். பரல முரம்பு - பருக்கைக்கல்லாலாகிய மேடு.

கச. வேந்தர்வல்லி - தடாதகைப்பிராட்டியார். ஆள - ஆளுதலால்.

(பி - ம்.) 1 'வாய்த்தகண்ணீராற்' 2 'சேர்ந்த' 3 'சந்தனத்தண்சேறு 'வளங்க டருவதென்றும்' 5 'நிரம்புநெறிப்பரன்' 6 'மணந்துகாணவெண்'

திருநகரச்சிறப்பு.

மலரு மித்திரு நாட்டியல் வாணர்சொற் கோலா
1லுல கனத்தையு நிறுப்பமுன் வாடிடா தோங்கு
மலகில் வண்புக ழுடையது மதுரையாங் கதனை
யிலக யான்சிறி தறிந்தவா றியம்புவல் கேண்மின். (க)

ஊர்தொ றும்பெருங் கம்பலை 2யோங்குகீர் பரந்து
பார மீனுடு மீன்விழப் பாய்தரப் போதா
வாரம் வேங்கைகோங் கலிவெடித் தினமணி கொழித்து
வாரி யெற்றிமுன் 3மதிட்படை பொருவது வைகை. (உ)

வேறு.

புகறற் கரிய வேதத்தின் பொருள்கட் கெல்லாம் பயனுய
4பகர்தற் கினிய வெங்தைபிரான் பஞ்சாக் கரம்போற் றனையொவ்வா
மகரத் தமரப் பெருங்கடல்சூழ் வையத் தைத்து நிலத்தோங்கு
நகர்கட் கெல்லாம் பயனுய நகர்பஞ் சவன்றன் மதுரைநகர். (ங)

நீள வளர்பொற் கோபுரம்வா னிலவும் வெள்ளி யொளிமன்ற
நாளு மமரர் வாழுமுயர் மேரு வரையை நலக்தோங் குங்
காள நிலவு 5மணிகண்டன் கயிலை மலையை நிகர்ப்பதலால்
வாள நிரையைப் புறக்கடலை நிகர்க்கு மெறிவீர் வினவிடங்கும். (ச)

க. நாட்டு - நாட்டில். இயல்வாணர் - புலவர். வாடாது-குறையாமல்; "வாடாதவென்றி" (சிவக. பு.இ.) நிறுக்கதை, "கைத்தல நான்கு" (திருவிளை. தலவி. உ) என்பதனுல் முன்னர், "உலக மொருநிலையாத் தானேர்நிலையாப், புலவர் புலக்கோலாற் றூக்க-உலகோத்துக், தான்வாட வாடாத் தகைமைத்தே தென்னவ, னுன்மாடக் கூடல்" (பரி. பக். 174) என்பதா பொருளை இச் செய்யுள் தழுவியுள்ளது.

உ. பரந்து - பரக்கும் படியாக. உடுநீர் - நக்ஷத்திரம். பாரமீன்பாய்தர, போதா - போய். படை - சுவரும் மதிலும் சமைக்கப்படும் போழுது அடியிலிருந்துமுறையாக இயற்றப்படும் ஒவ்வொருபகுதியின்பெயர்; "பல்படைப் புரிசை" (புறநா. 224); "படையார் புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே" (தே.), "வையைதன் னீர்முற்றி மதிற்பொருஉம் பகையல்லா னேராதார், போர்முற்றுறூன் றறியாத புரிசைசூழ் புனலூரன்" (கலி. உள) என்பதனுலும் மதுரைமதில் வையையாற் பொரப்படுதல் உணரற்பாலது.

ங. ஒவ்வா - ஒத்து. ஐந்துநிலம் - குறிஞ்சிமுதலியன. ஐந்துநிலத்தையு முடைய நாட்டிற்குத் தலைவனென்றும் பொருளதாகிய 'பஞ்சவன்' என்பதை இக்கேகூறியது ஆராய்தற்பாலது.

ச. வெள்ளி ஒளி மன்றம்-வெள்ளியம்பலம்; "கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில் வெள்ளியம்பலம்" (சீலப். பதி. சரி - சக.)

(பி - ம்.) 1 'உலகனைத்திறுநிறுப்ப' 2 'ஓங்குநீர்' 3 'மதிற்படை' 4 'பகர்தற்கரிய' 5 'மணிக்கண்டன்'

சேமப் படுபொன் னகரென்னத் தெருவின் மடவார் விளையாடு
மேமச் சுண்ண நுண்கிளர்வா லிலங்கு நலங்கொ ணிலமெங்குந்
தாமப் புயலே மாறுபடத் [1]தருமச் சுருதிப் பெருவேள்வி
யோமப் புகையு மதிற்புகையு மொழியா[2]வகல்வா னுழையெங்கும்.(சு)

சுருதி யோசை முழவோசை சுகங்கள் பூவைக் கரும்பொருள்க
ளுரைசெ யோசை யியலிசைகீ டோசை யுழவ ருழவோசை
பொருவி லாலே பாயோசை பொழில்வா யலர்பாய் ஞிமிறோசை
வரிசை மாதர் சிலம்போசை வளைகீ ரோசை தனின்மிகுமால். (சூ)

வேறு.

தோரணவா யில்கள்விளங்குந் தொழுமன்ன ரிடுதிறைக
டோரணிவீ திகள்விளங்குந் திருமலிபல் விழாவளங்கள்
பூரணமா லிகைவிளங்கும் பொலன்கொடிதோய் மணிக்குடங்க
டாரணியோ தவைவிளங்குந் தருமகெறி தருமகெறி. (எ)

ஊர்மடக்கு. கடம்பவனம்.

வாவிமருப் பங்கயமா மறுகுமருப் பங்கய மாந்
[3]தாவிவருங் கொண்டலேயுந் தண்டலேயுங் கொண்டலேயும்
பூவையர்பொற் படமலேயும் புணரிளஞர் படமலேயும்
பாவறிமாக் கடம்பவனம் படிபுகழ்மாக் கடம்பவனம். (அ)

கூடல், வேறு.

வயங்கொள்வார் சாலிச் சூடும் வளர்ந்துபோய் வானைச் சூடு
மியைந்த[4]மீ னுகத் தென்று மிலங்குமீ னுகத் தென்றும்

நு. ஏமச்சுண்ணம் - பொற்பொடி. சுண்ணமாகியதுகள். தாமம்-ஒழுங்கு. சூ. பொற்பொடியால், நிலமெங்கும் பொன்னகரென்ன இலங்கும்; வானிடமெங்கும் புகைகள் ஒழியா.

சூ. அரும்பொருள்கள் - அரியநூற்பொருள்கள். வரிசை மாதர் - விறலியர் (பதிற். கஅ-உரை.) வளைநீர் - கடல்.

எ. பொலன்கொடி - திருமகள்; பொற்கொடியுமாம். தருமகெறியானது தரும அக்நெறியை; உலகினுக்கென ஒருசொல் வருவிக்க.

அ. வாவி மரு பங்கயம் ஆம்-தடாகங்களில் மணத்தையுடைய தாமரைகள் உளவாகாநிற்கும்; மறுகு மருப்பு அம்கயம் ஆம் - வீதிகளில் தந்தங்களையுடைய அழகிய யானைகள் உலாவாநிற்கும். கொண்டலே - மேகத்தை. தண்டலே - சோலே. கொண்டு அலேயும். பொற்படத்தையுடைய மலே - கொங்கை; எழுவாய். பட மலேயும் - படம்படி பொராநிற்கும். பா அறி மாக்கள் தம் பவனம் - பாக்களே அறிகின்றபுலவர்களுடைய வீடாகவுள்ளது. உம்மைகள்: அசை நிலேப்பொருளன; வரும் செய்யுட்களிலுள்ளவற்றையும் இப்படியேகொள்க.

கூ. சாலிச்சூடு - செல்லரி; "சூடுகோடாகப் பிறக்கி" (பொருந. உசகூ); "பீலிகழனியுழவர் சூட்டொடு தொகுக்கும்" (புறநா. கஉ.) வான் - மேகம். மீனாகத்து என்றும் - மேலிடமாகிய ஆகாயத்திலுள்ள சூரியனும்; மீன் ஆக (பி - ம்.) 1 'தகுமச்சுருதி' 2 'அகல்வானுலகெங்கும்' 3 'தாவிலருங்' 'மீனுகத்தென்றும்'

பயங்கொளா காயச் செல்லும் பரந்துகா வேறச் செல்லும்
வியக்தநான் மேகக் கூடல் விளங்குநான் மாடக் கூடல். (கூ)

மதுரை. வேறு.

தும்பைமலர்த் தொடைமுடிக்குஞ் சூரன்[1]வினைப் பகைமுடிக்கும்
வம்பலர்மட் டளையவிழும் [2]வண்டுறவுட் டளையவிழு
மம்புனற்கே கயமாடி மணிபொழிற்கே கயமாடி
[3]மெம்பெருமக் கடமதுரை யிலங்குமலர்க் கடமதுரை. (கo)

ஆலவாய். வேறு.

பாக மங்கய னேக்கியார் [4]பரிவு மங்கய னேக்கியார்
மோக நக்துற வன்பினன் முனிவர் நக்துற வன்பினன்
மாக மொன்றிய வாய்மையால் வக்தி லங்கிய வாய்மையா
லாக மம்பக ராலவா யமுத மன்றிரு வாலவாய். (கக)

த்து என்னும் இலங்கும் - ககூத்திரங்களினுடைய உருவத்தைப்போலவே எக்காலத்திலும் தோன்று நிற்கும்; இக்நகரத்தின் ஒளிமிகுதிகூறியபடி. செல்- மேகம்; எழுவாய். காரற செல்லும் - சோலையில் ஏறுதற்குப் போகாநிற்கும். நான்குமேகங்களின் கூடுதல் விளங்கப்பெற்ற நான்கு மாடங்களையுடைய கூட னகரத்தில்; "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" (மதுரை. சஉகூ.)

கo. சூரன்: சாதியொருமை; வினை பகை முடிக்கும்-போரையுடைய பகை யைத் தொலைப்பான். வம்பு - புதுமை; மணமுமாம். மட்டு - தேன். தளை - கட்டு; மட்டை அளைதற்கு விழும்வண்டுகள் உள்ளேயுற மலர்கள் தளையவிழும். புனற்கு கயம் ஆடும் - நீரிற் கண் யானைகள் முழுகி விளையாடாநிற்கும். கேக யம் - மயில். எம் பெருமக்கள் தமது - எம்முடைய பெரிபோர்களது; உரை இலங்கும் மலர் கடம் மதுரை - உரைகள் விளங்குதற்கு இடமாகிய பூக்களை யுடைய சோலைகள் சூழ்ந்தமதுரையில். பெருமக்கள் - சங்கப்புலவர்கள்; ககூ: அ, கூ. உரை - செய்யுட்களுமாம்; ஆகுபெயர்.

கக. அயல் நோக்கி ஆர் மோகம் நக்துற - புறத்தேயுள்ள விடயங்களை நோக்குதலால் நிறைந்துள்ள ஆசையானதுகெட, அன்பின் நால் முனிவர் நக் துற - அன்பினையுடைய நான்கு முனிவர்கள் பெருக்கமுற, வன்பினன் - வன்பி னனே, மாகம் ஒன்றிய ஆய்மையால்-பெருமைபொருந்திய நுண்ணிய பொருள் களாலும், வாய்மையால்- உண்மைப்பொருள்களாலும், இலங்கிய—, ஆகமம்- ஆகம நூற்பொருள்களே, வந்து பகர் - வந்து உபதேசித்த, ஆலம் வாய் அமு தம் மன்- வடவாலமரதநின்மேலே எழுந்தருளிய சிவபெருமானது, திரு - செல் வம், ஆலவாய் - ஆலவாயென்னும் திருப்படைவீட்டே; பாகம் அம் கயல் நோக்கி யார்- அவருடைய பாகத்திலுள்ள அங்கயற்கண்ணம்மையினது, பரிவும் அங்கு- விருப்பமும் அத்தலத்தேதான். நான்முனிவர்-சனகர்முதலியோர். அமுதமன் - அமிர்தேசர்; மதுசேசர்; அமுதம் - முத்தி, அமிர்தம்; 'ஆலவாயமுதவாக்கன்', 'ஆலவாயமுதவாயான்' (ககo:க; உள:க.) பரிவும்: உம்மைஇறக்கது தொகுவியது. 'கயனேக்கியார் பரிவும்அங்கு' என்றது, இத்தலம் சத்திபீடமென்பதைப்புலப் படுத்தியது.

அ - கக: கிடவுள். கo-கஉ.

(பி - ம்.) 1'வினைப்பயமுடிக்கும்' 2'வண்டுறவிட்டளையவிழும்' 3'எம்பெரு மாக்கடமதுரை' 4'பரிவினக்கயனேக்கியார்'

கன்னி. வேறு.

சசஞர் மகிழ்ந்த தான மென[1]வினை யிருள்வா ராம
லாசினந் தாவி ளக்கிட் டடந்தகன் றிசைகின் றேத்தித்
தேசுடைக் கருங்கண் முத்த வெண்ணகைச் செவ்வாய்ப் பச்சைக்
காய்சின மயிடற் காய்ந்த கன்னிமுன் காக்கு மூதூர். (கஉ)

கரியமால்.

நினையவெம் [2]பாவ நீக்கும் பதியென நிலத்தி ழிந்தாங்
கினமலி யரக்கற் காய்ந்து குடதிசை யேத்தி நின்று
மனமுடை [3]வியாழத் தோடி மறைவழக் கன்று வென்ற
கனகவெண் சங்கச் செங்கைக் கரியமால் காக்கு மூதூர். (கங)

காளி.

காரிய வுலகுக் கெல்லாங் காரண ரகரென் றெண்ணிப்
பேரியல் வடபா லெல்லைப் பிறங்கவந் திருந்து போற்றித்
தாருகற் காய்ந்த சீர்த்தித் தலம்புகழ் வெற்றிக் கொற்றச்
சீருடைக் காளி நாமச் செல்விமுன் காக்கு மூதூர். (கச)

ஆலவாய்.

தொன்னில மாம டந்தை தோன்றுமு னெவர்க்கு முன்னாக்
தன்னுறு திசைக்கட் டோன்று மாலவாய்த் தரும மூர்த்தி
யெங்கிலத் தினுமு யர்ந்த திங்கில மென்று மீதான்ற
மன்னுமைக் குரைத்து மற்றை [4]மாதிரங் காக்கு மூதூர். (கரு)

கஉ. அத்தகன் திசை - தென்திசை. மயிடன் - மகிஷாசுரன்.

கங. குடதிசை-மேற்றிசை. கரியமால் - கரியமாணிக்கப் பெருமாள்.

கஉ - கங. "கன்னிசெங் கோட்டம் கரியோன் திருவுறை,.....சூழ் வொளி விருந்தகூடலெம் பெருமான்" (கலி. கூக.)

கச. செல்வியென்னுஞ்பெயர் இக்காலத்துச் செல்லி, செல்லத்தம்மை யென்று வழங்கும்.

கரு. க-உ: "மேதினி தோன்று முன்னரு, செவ்வியின் முளைத்தெழுத்த திட்பிய விலிங்கம்" (க:கள்); "மூலைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" (தே. திருநா.) தருமமூர்த்தி: "தருமதாயகன்" (அ: ரு.) தன்னுறுதிசை-ஈசான திசை. மற்றைமாதிரம் - ஏழக்குத்திசை.

கஉ-ரு. கன்னிமூதலியோர் இக்ககரங்களைக்காக்குந்தெய்வமென்பர்; "கன்னிமால் காளியீசன் காக்குமா ரகரி" (ரெங:கசு); "கன்னி திரு மால்காளி யீசன் காக்கும் கடிமதில்சூழ் மாமதுரை" (பயன் முதலியன, ரு.) 'நான்மாடங்களாவன: கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம்' (கலி. கூஉ, நி. உரை.)

* 'ஆலவாய்' என்றது சிவபெருமானை.

(பி - ம்.) 1 'வினையிருள்' 2'பாவநீங்கும்பதியென வினைத்திழிந்தாங்கு' 3 'வியாளத்தோடுமரைவளக்கன்று' 4 'மந்திரம்'

வேறு.

பூழி யகழ்ந்த குழி[1]நிரப்புப் புலவ ரமல னெடிமலிலேவோ
ராழி யேழு மொருதடத்தி லமரு மதுவோ [2]வுலகேழுஞ்
சூழ மூன்று முலையிருமை யொருபெண் பிறந்து சோதியுடன்
வாழு மதுரை வளங்கூற யாமார் மறந்து மாநிலத்தே. (ககூ)

வேறு.

முன்னெயெண் டிசைக்க யங்க டாங்கிடி முதுபே ரண்ட
மன்னுமிந் திரனார் சாத்தும் வானிழி விமான மாகுந்
தென்னவன் சிவனே யாகுஞ் சிவலோக மதுரை யாகு
முன்னரு [3]மனிதர் முற்றுங் கணங்களா [4]மோரு காலே. (கஎ)

வேறு.

ஈனமிலா விக்ககரி தன்னு ளெங்தை யிலங்குபுக ழுறுபத்து நான்
குண் டோதின், மீனவர்கோன் [5]குலஞ்செய்த தவத்தி ஞனு மேதினி
மான் முயன்றவருந் தவத்தி ஞனு, ஞானமுனி வர்கள்கேண்மி னுக
மொன் றிற்கு நாஞன்கு நாஞன்கா நான்கு கத்து, மானவலை தமை
யுரைப்ப லகாதி மும்மை யகலாத வல்[6]வினைக ளகல வென்றே.(கஅ)

ஆகத்திருவிருத்தம் - அ2.

நூற்பயன்.

இனிமைசேர் பயன்வி ளம்பி னிவ்வவ னிக்கண் மிக்க
புனிதபங் கயமி ரண்டிற் புரிவுள மார்ந்த ருள்ளப்
பனிகொள்பங் கயத்தை மற்றைப் பங்கய மலர்த்து கின்ற
தினகரன் போல வர்த்துந் திருவிளை யாட்டம் பாணு. (க)

ககூ. பூழி - புழுதி; திருநீறு; ஒருதடம் - சிவதீர்த்தம். சிவதீர்த்தத்தில் மூழ்கடலடங்கிய மை, "இத்தீர்த்த மாதடத்தி லிறையருளா னெழுகடலு மியைத்த" (கடம்பவன. சா: முப) என்பதனுலுமுணர்க. அதுவோ - அம்மட் டோ. இருமை - பெருமை; "இருமைமும்முலையினொன்று" (சா: கஉ.) யாம் ஆர் - யாம் எத்தன்மையையுடையேம்; கூறுதற்கு வல்லமையில்லேமென்றபடி.

கஎ. இச்செய்யுளின் முதலிரண்டடியின்கருத்து, "மணிகொண்ட" (மீனு ட்சி.காப்பு,க) என்பதனுலும் விளக்கும். "திகழ்பூவுலகிற் சிவலோக மென்னப், பகர்கூட லாலவாய்" (பூவண வுலா, உகஅ) எனப்பர்.

கஅ. புகழ் - திருவிளையாடல். 'மேதினி.....தவத்தினுலும்': "என்ன புண்ணியஞ்செய்ததிம்மண்" (க: ககூ.) அகலாத மும்மையினை - சஞ்சிதம், பிரா ரத்துவம் ஆகாமியம். ஆன: முற்று.

நூற்பயன்.

க. திருவிளையாடற் பாணு - திருவிளையாடலாகிய சூரியன்.

(பி - ம்.) 1 'நிரம்பப்புலவர்' 2 'உலகெங்குஞ்' 3'மனிதர்தாமும்' 4'ஓருக் குங்காலே' 5'குலமுன்செய் தவத்தினுலும்' 6'வினைகளகலுமாதோ'

வேறு.

தருமம் வாய்மை தவங்குலங் கல்விசேர்
பெருமை செல்வர் திறம்பிற வாகெறி
யரிய புத்தி யருள்சிவ பத்திமற்
றுரிய யாவையு மெய்துவ ருண்மையால். (உ)

கருது காதல ரெய்துவர் கன்னியர்
சுருதி மைந்தர்ப் பெறுவர்கள் சூலியர்
வருபி றப்பி [1]னமங்கல மங்கைய
ரருள்ப டைத்த சுமங்கலி யாவர்கள். (ஙு)

காரி ருட்டிடி துங்கிமித் தங்கடல்
வாரி வெய்ய கனலுமிழ் [2]மாமருத்
தோரை நாட்டிதி வார [3]முடற்குறை
[4]சோரர் வஞ்சனை நஞ்சல கைச்சுழல். (ச)

உழுவை வேழ மரியுர காதிகள்
வழியின் வெவ்விடை யூறுமற் றென்செயுஞ்
செழியர் நாதர் திருவிளை யாடலை
யெழுதக் கேட்க நினைக்க வியம்பவே. (ஞ)

வாத பித்தங் கவமுதல் வல்வினை
வேத னைக்குள் விழார்நம ளூர்புகார்
தீத கற்றுந் திருவிளை யாடலை
யோதி யத்த முணர்ந்த பெருந்தவர். (சு)

ஊட்டு நாளிற் றொடங்கி யொழிவற
வீட்டும் வெய்ய வினைகளி யாவையுஞ்
சேட்ட நாதன் றிருவிளை யாடலைக்
கேட்ட காலையி னீங்குங் கிளரவே. (எ)

[5]தாங்க ருஞ்சம ரத்திர சத்திர
நீங்கு நீங்கருஞ் செல்வ நிரந்தர
மோங்கு மோங்கலின் வந்துல கீன்றவள்
பாங்க ணர்விளை யாடல் பகரவே. (அ)

உ. புத்தி - அருள், போகம். ங. சூலியர் - கருப்பமுடையோர்.

ச. உடற்குறை - குட்டநோய்; கவந்தமுமாம். அலகைச்சுழல் - பேய்க் காற்றின் சுழற்சியில் அகப்படல்.

சு. அத்தம் - பொருள்.

எ. ஊட்டுகாள் - அனுபவிப்பிக்கும் நாள். சேட்டநாதன் - மகாதேவர்.

அ. சமர் அத்திரம் சத்திரம்.

(பி - ம்.) 1'அமங்கலீமங்கையர்' 2'மாமிருத்தி' 3'உடற்குறி' 4'சோரவஞ் சனை' 5'தாங்கருஞ் சமுசார சமுத்திர, நீங்கும்'

பாத கங்க ளொழியும் [1]பகையுகு
மேத நீங்கு மிலரிமை தரும்புகழ்
மாது சேருமற் றேதினி வேண்டுமென்
ரோதி மாமுனி தோன்ற [2]வுரைசெய்வான். (கூ)

ஆகத்திருவிருத்தம் - கூக.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

*பொருந்திய வொழுக்கத் தானும் பொய்யிலா வாய்மை யானுந்
திருந்திய கல்வி யானுந் தீதறு புகழி னானும்
பெருந்திறல் வலியி னானும் பேரரு ளானு மிக்க
வருந்தவ முனிவர் கேட்ப வகத்திய னருளிச் செய்வான். (க)

ஆதிகான் மருப்பி யானை யமரர்கோன் முன்னோர் கால
மேதகு வீர மிக்க விருத்திரா சுரனைக் கொன்ற
வோதரும் பழியா லஞ்சி யொழிக்குமா றெங்ங னென்றென்
றேதமின் முனிவர் வானோர் [3]குருவர னிடத்து ரைத்தான். (உ)

மெய்ப்படத் தேர்ந்தி யாரும் விளம்பிய வாறு கேட்டு
வைப்புறு நான்கு கூரு வரைந்தெகமக் களிபி னென்ற
வொப்பரு நீரின் மண்ணின் மரத்தினி லுவமை யில்லாச்
செப்பிளங் கொங்கை மாதர் திறத்தினி னீக்க வாங்கு. (கூ)

நீரிடை நுரைய தாயு நிலத்திடை யுவர தாயும்
[4]பாரிய மரங்க டம்முட் பாய்தரு பிசின தாயும்
வாரணி முலையார் தேத்து மலரெனுங் குருதி யாயும்
பேர்பட [5]நீங்கக் கண்டு பெருகுல மலருக் கீந்தார். (ச)

நூற்பயன்.

கூ. ஏதம் - துன்பம். இனிமை - இன்பம்.

(க)

உ. யானை - ஐராவதம். பழி - வீரகத்தி ; "விருத்திராசுரனைக்கொன்ற வெம்பழி", "வீர மிக்க விருத்திரா சுரனை யன்று கொன்றவெம் பாவம்" என்பர் பின்னும்; க: உச. உள.

ச. மலர் - பூப்பு.

இச்செய்யுள் கையெழுத்துப் பிரதிகளிலெல்லாம் ஒவ்வொரு திருவிளையாடலின் முதலிலும் எழுதப்பெற்றுள்ளது.

(பி - ம்.) [1]'பகையுறுத' [2]'உரைசெய்தான்' [3]'குருவவரிடத்தி' [4]'பாரிடை மரங்கள்' [5]'நீக்க'

மருவவீர் ததுதூ நீர்க்குக் கழுவிய மலஞ்சா ராமை
விரிதரு நிலத்திற் கங்க மேவிய [1]வடுவுமெத்த
லுரனமர் மரத்திற் கென்றுங் குறைத்திடக் கிளைத்த லோங்குங்
[2]கருவினு மடமா தர்க்குத் தணிவிலாக் காம வேட்கை. (நு)

சமையமா முனிவர் போற்றத் தானவர் வழுத்த மாத
ரிமையவர் [3]சுரவி சிந்தா மணிதொழ விரும ருங்குங்
கமலமுஞ் சங்கும் வாழ்த்தக் கற்பகச் சோலை சூழ
லமரர்கோ னிருந்தான் வந்தாங் கரிகொளா சனத்தி லங்க. (சு)

கூறரும் பேர வைக்க [4]ணரியபல் கோலங் கொண்டு
தேறுத லுடன யன்று தேவகன் னியர்கள் பாடிப்
[5]பேறுடை நிருத்தஞ் செய்யச் சிலரதைப் பெரிதும் போற்றி
வேறிலை [6]கூத்துப் போல மெய்யுளங் கவர்வ தென்னூர். (எ)

மன்றுறு மவையின் மற்று நின்றவர் வணங்கி வாழ்த்தி
யின்றிது போலொன் றில்லை யென்றுமுன் னவில்வ தென்னை
யொன்றிய மனமுங் கண்ணுங் களிதர வுவமை யில்லா
வெள்றிகொ ணலம்ப யப்ப நிலங்குமா வேட்டை யென்னூர். (அ)

ஆங்கது கேட்டு வேட்ட வமரர்கோன் சிரைவி னந்தப்
[7] பாங்குடை வேட்டைக் கான காட்டினைப் பகரு மென்ன
வோங்கிய வவையின் றிக்க வுத்தமர் சற்ப கப்பூங்
தேங்கமழ் தொடையாய் மண்ணிற் சிறந்தபல் வனங்க டம்முள். (கூ)

நீண்ட [8]நன் னலங்க ணல்கு நீக்கரும் பாவ நீக்கு
[9] மேண்டரு மவனிக் கெல்லா முயர்புள தியானை கேழல்
காண்டகு மடங்க லெண்கு கலையுழை யுழுவை மற்று
மீண்டிய வனங்க டம்ப வனமலா லில்லை யென்னூர். (கo)

வே று.

ஆன செய்தி சொல்லு முன்ன நிர்ந்தெ ழுந்து [10]வாசவ
னீன மின்றி வில்லெ டுத்தி லங்கு கச்ச ணிந்துவெஞ்
சேனை சூழ வாழி சூழ்ந்து றைத்த மண்ணி ழிந்துகா
வானெ ருங்கு நீள்க டம்ப மாவ னத்து வந்தனன். (கக)

நு. மெத்தல் - நிரம்பல்.

சு. சுரவி - காமதேனு. கமலம் - பதுமநிதி, சங்கு - சங்கநிதி.

அ. மன்று - பொதுமை. மாவேட்டை - மிருகவேட்டை.

கo. ஏண் - வலிமை. 'கடம்பவனம்' என்றது, இத்தலத்தை.

கக. காவால் நெருங்கும்.

(பி - ம்.) 1'வடிமிதத்த, லுறனெழு' 2 'கருவிலுண்' 3 'சுரபி' 4 'ணணி யபல்' 5 'பேறுற்' 6 'கூத்துப்போலும்' 7 'பாங்குறும்' 8 'நன்னயங்கள்' 9 'ஞண்டருமவனி' 10 'வானவன்'

காடுகாவல் செய்துவாரொ ழுக்கியெங்க ணுங்கலந்
தோடுகாய்வி டுத்தடிச்சு வட்டிவெற்றி யொல்லையெண்
மாடுகண்வ லைத்தொடக்கி னுல்வளைத்தொ லிப்பமுன்
கூடி[1]வேறு வேறுநேர்ரு தித்தெழுந்த கோடிமா. (கஉ)

ஏனமெய்தி யானையெய்தி ரும்புலிக்கு ழாமெய்தொண்
கானமேதி யெய்துவெங்க லைக்கணங்க [2]ளெய்துமற்
ரூனமாம டங்கலெய்த டர்ந்துமேலெ ழுந்துபாய்
மானினங்க ளெய்துவாச வன்மனங்க ளித்தனன். (கங)

வேறு.

நெறிவசத் தாணு முன்னே நிறைதவத் தாணும் வென்றிக்
கறைகெழு குலிச மன்னுங் கையிலா கவத்தி னேடுங்
திறமொடு வடபால் விட்டுத் தென்றிசை நோக்கிச் செல்ல
மறுவறு பரம ஞான மனத்தகத் துதித்த தன்றே. (கச)

இன்றிதற் கேது வேதோ [3]விவ்வனத் தணையா முன்னங்
கொன்றிடக் கூடா துள்ளங் [4]கொடியபல் விலங்குகிற்ப
வென்றிகொள் வேட்டைக் காட்டில் விசேடமுன் டறிதல் வேண்டு
மொன்றிய செயல்வே ரூன துரைசெயு [5]மும்ப ரென்ரூன். (கரு)

அவ்வுரை கேட்ட தேவ ரறிகுவ மென்னப் போற்று
வெவ்வன மெங்குந் தேடி மேதினி தோன்று முன்னஞ்
[6]செவ்வியின் முளைத்தெ ழுந்த திப்பிய விலிங்கங் கண்டு
மெய்விதிர்ப் போடுஞ் சென்று விளம்புவார் துளங்க வாங்கு. (கசு)

கண்டனம் பெரிதா [7]யாழ்ந்து தெளிபுன லுடைத்தாய்க் [8]கான
வண்டணை பொழில்சூழ் வாவி [9]யதன்வட குடதீ ரத்து
முண்டக வயன்மால் காணு முளைத்தெழு சிவலிங் கத்தைப்
பண்டைமா தவத்தா லென்று பரிவொடும் பணிந்து சொன்னார்.(களை)

கஉ. ஒற்றி - உணர்ந்து. எண்மாடு - எட்டுத்திசைப்பக்கம். கண்வலை - கண்களையுடையவலை; "விரலாழிக்கண், பல்லிதக்கண்கள்" (உஉ: கஙு.)

கச. கறை - இரத்தம். இலாகவம் - இலகுத்தன்மை; "மிகலாகவம்புரிந்து" (திருமயிலே. சுசு.) ஞானம் உதித்தது.

கரு. நிற்பவும், கொன்றிட உள்ளம் கூடாது-கொல்லுதற்கு மனம் துணியவில்லே. வேரூன இடம் வேரூகிலேயென்று இக்காலத்து வழங்கும் (திருவிளை. இந்திரன். எக.) உம்பர்: அண்மைவிளி.

கசு. "மேதினி....இலிங்கம்": "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" (தேவா. திருநா.) விதிர்ப்பு - நடுக்கம்.

களை. கானம் - இசை. வடகுட திசை - வடமேற்குக்கரை. காணச்சிவலிங் கத்தைத் தவத்தாற் கண்டனம்.

(பி - ம்.) [1]'வேறுகொண்டுடன்குறித்து' [2]'எய்துமா, ரூனமா' [3]'இவ்வனத் தலையாமுன்னம்' [4]'கோடிபல்' [5]'அமரர்' [6]'செவ்வயின்' [7]'ஆழ்ந்ததெளி' [8]'கன்னவண்டணி' [9]'மற்றதன்வடதீரத்து'

இந்திரன் கேளா முன்ன ரினிமைகூர்ந் தவர்முன் ஞால
வந்தசந் நாகம் வாங்கி வாலிகண் டதிச யித்துச்
சந்தமார் கன்னீ ராடிச் சடங்குகண் மூடித் துப் பாங்க
ளந்தரா யகனைக் கண்டா ளலித்தான் மாலுற் றடி. (கஅ)

அடைந்தவர் பாவ நீக்கு மையனே காணப் பெற்றேன்
மடங்கலெண் குழலை கேழன் மாமக மாக்கண் மற்று
மிடைந்திடுங் 1கொடிய காட்டின் மெல்லிய லொடுங்க னித்திவ்
விடந்தனி லிருந்தா யென்ன புண்ணியஞ் செய்த திம்மண். (ககூ)

அன்புற விறைஞ்சி நின்னை யருச்சிப்பான் விரும்பா நின்றே
னன்புனற் கியைந்த செவ்வி 2கமுமலர் காட்டு கென்றுய்ந்
தின்பமே தருங்கா னத்தி லெங்கணு நேடிக் காணுன்
றுன்பமுற் றரசே யானென் செய்குவ லெனச்3சோ கித்தான். (உ0)

ஆசிலான் கண்டி நீண்ட வாவியெங் கணுமி லங்கப்
பேசரும் வேட்டை யாட்டிற் பெருவிருப் பொழிந்து நம்மைப்
பூசைசெய் வதற்கே நொந்தா னென்றருள் புரிந்து சீத
வாசமா ரீழக் கஞ்சம் வருவித்தா னலர்வித் தாங்கு. (உக)

காவலன் வியந்து பல்காற் கண்டுகண் டதிச யித்துப்
பூவினே யடைவிற் கொய்து புளகித்த் தோடுங் கண்ணீர்
மேவமெய் கம்பித் தன்பின் வெள்ளத்து மூழ்கி மிக்க
தேவதே வனைப்பூ சித்தான் விதிப்படி 4சிறந்த நல்கி. (உஉ)

தேசுடை மடவாள் கொங்கை தீண்டிடச் சிவக்கு மேனி
வீசிய காற்றுல் வெய்ய வெயிலினு ளேவ தேயென்
றாசிலா வுயர்ந்தி மானஞ் சாத்துவா னுசை 5கூர்ந்து
மாசிலான் வருத்தக் கண்டு வணங்கிய தெய்வத் தச்சன். (உங)

கஅ. இனிமை - மகிழ்ச்சி. சந்நாகம் வாங்கி - கவசத்தைக்கழற்றி. அந்த நாயகன் - சுந்தரேசர்; அந்தம் - அழகு. சடங்குகள் - நித்தியகன்மங்கள்; "பொற்கமல வாவியினீராடி இனியதஞ் சடங்கு செய்தே" (சி:உ.)ஆலித்தான்- முழக்கினான்.

ககூ. எண்ணு உழுவை. "என்னபுண்ணியஞ்செய்தனே நெஞ்சமே" (தே.)

உ0. அருச்சிப்பான் - அருச்சிக்க. காட்டுக என்று. என்செய்குவல் - யாதுசெய்வேன்.

உக. ஆலி - தடாகம். ஈழக்கஞ்சம் - பொற்றுமரை. இலங்க அலர்வித்து வருவித்தான்; ஈழம் - பொன்.

உஉ. தேவதேவன் - மகாதேவர். உங. நோவதே - நோகின்றதே.

(பி - ம்.) 1 'கடிய' 2 'கமுமலசொங்குண்டென்றுய்ந்து' 3 'சோதித்தான்' 4 'சிறந்து' 5 'கூர்ந்த, மாசிலான்வருத்தங்'

விருத்திரா சுரனைக் கொன்ற வெம்பழி தவிர்ப்பா னெண்ணித்
திருத்துபல் விமானந் தம்முட் டெளிதரு சிற்ப நன்னூற்
பொருத்தமுற் றளவி றெய்வப் பொலிவொடுங் கூடி நீடி
யிருப்பதோர் விமான முண்டாண் டிறைவனென் றிலங்கச் சொன்னன்.

மெய்ப்படு சிற்பம் வல்ல வுத்தம விரைக்த நீபோ
யொப்பில்காஞ் சனவி மான[1]மும்பலிற் கொணர்தி யென்ன
வப்பொழு தவன்போ யாசை [2]யானையிற் கொணர்ந்து காட்டத்
தப்பிலா விதியி னேங்கச் [3]சாத்திஞன் குளிர்வி மானம். (௨ ங)

சிந்தைவாழ்ந் திறைஞ்சி யேத்திச் சிறந்தசெய் தியாரும் போற்ற
[4]வந்தநீ டால யத்துக் கணியுற வியைந்தி ருந்த
சுந்தர வடிவங் கண்டே சொக்கெனு நாம மிக்க
வெந்தையே நினக்கல் லாதோர் தேவர்க்கு மியையா தென்றான். (௨சு)

என்றுமென் பதிக்கோர் குற்ற மெய்திடா வண்ணங் [5]காத்தி
வென்றிகொள் வீர மிக்க விருத்திரா சுரனே யன்று
கொன்றவெம் பாவ நான்கு கூறுசெய் தொழித்தேன் சேட
நின்றன வுண்டே னீக்கி [6]யருளுதி நிமல வென்ன. (௨எ)

இறையவன் முறுவல் [7]கூரா வறிவுடை யிமையோர் கோவே
செறிதரு புவியின் மாந்தர் செய்ததீ வினைகள் காணு
[8] ரறியினுஞ் சிறிதே யாக [9]வறைகுவ ரதுப கர்த்தாய்
நிறவுடை யவனைக் கொன்ற பாவமார் தீர்க்க வல்லார். (௨அ)

உரு. உம்பல - யானை. ஆசை யானை - திக்கஜம். குளிர்விமானம்: "சேதாவிமானமீதால்" (நி : ச.)

உசு. சிந்தைவாழ்ந்து- மனமகிழ்ந்து; "சேணெயுந்தானும் வாழ்ந்து" (கூ0.) அணியுற - அழகுமிக. சொக்கு- அழகையுடையவர். 'சுந்தரேசர்' என்பது வட மொழியாதலின், 'சொக்கன்' என்னும் இத்திருநாமத்தையே பண்டைக்காலத் தொட்டிச்சான்றோர் பாராட்டிவந்தனர்; இத்திருநாமம், தேவாரங்களிலும், ஸ்ரீ குமாரகுருபரமுனிவர் பிரபந்தங்களிலும், கடம்பவனபுராண முதலியவற்றிலும் பரக்கக் காணப்படும்; "திருவாலவாய்ச், சொக்கன்", "தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச், சொக்கனே" (தே. திருஞா.)"ஐந்தருநாட் டண்ண லரும்பழிக் கா வன்றுதனக், கிவுதிரவி மான மினிதமைத்து - வந்தித், தழகிய சொக்கரென வானதிருநாமங், குழைவுதரு சேசமுட்ன் கொண்டோன்" (சோகீகநாதநுலா.)

உருசு. "வேதியன் படைக்க மாலவன் காக்கப, பெருததோர் திருவுருத் தான்பெரிது நீறுத்தி, யமுதையில் வாழ்க்கைத் தேவர்கோ னிழிச்சிய,மதமலி யிரு நான்கு பிடர்சுமந் தோங்கிச், செம்பொன்மணி குயிற்றிய சிகரக் கோயிலு,ளமை யாத் தண்ணளி யுமையுட னிறைந்த, வாலவா யுறைதரு மூல காரணன்" (கல். கூஉ.)

உஅ. திறலுடையவனைக்கொன்ற பாவம் - வீரகத்தி; "மேதகு வீரமிக்க விருத்திரா சுரனைக்கொன்ற,லோதரும் பழியால்"(உ.) காணர்-விளங்க அறியார்.

(பி - ம்.) 1'ஒல்லையிற்' 2'யானையாற்' 3'சார்த்திஞன்' 4'அந்தவாலயத் துக்கேற்கவணி', 'அந்தரவாலயத்தக்கணி' 5 'காத்து' 6 'ஆளுதி' 7 'கூர' 8 'அறையினுஞ்' 9 'அறிகுவர்'

ஆயினும் வேட்டை யாட்டி [1]லினோத்தலி ஞனு மாரா
[2]கேயமுற் றஞ்சி ரம்மை [3]நெறிப்படி வழுத்த லானுங்
காய்வெயிற் குயர்வி மானங் கற்பித்த லானுங் தீராத்
தீயவெம் பாவந் தீர்ந்த தூர்க்குமோர் தீங்கு மின்றே. (உக)

என்றருள் செய்யக் [4]கேட்ட விந்திரன் வீழ்ந்தி றைஞ்சி
கின்றடி பல்காற் போற்றி நீக்கரும் பழியை நீக்கி
யொன்றிய தூய்மை பெற்றே [5]னுய்ந்தன னென்றென் றூர்த்துச்
சென்றனன் றன்றே யத்துச் சேனையுந் தானும் வாழ்ந்து. (உ0)

வே று.

ஆழ்ந்த[6]செழுந் தடம்பொற்ரு மரைமலர வவனிமிசை
வாய்ந்தவுயர் பெயர்பொற்ரு மரையென்ன மருவியதாற்
சேர்ந்ததொரு வாரத்துச் [7]சென்றெவரா யினுமின்றுக்
தோய்ந்து [8]நினைத் தாடுபவர் பலஞ்சொல்லிற் ரெலைவின்றே. (உக)

வே று.

கடம்பமா வனத்தி லங்குங் கனகமோ கனக வாவி
யடைந்தவர் யாவ ரேனு மாதரத் தகாத ரத்துத்
தடம்படி கங்கை நீரிற் புனிதமாக் தட்ப நீருக்
தொடுங்கையோர் பவந்தீ யென்னச் சுடுமெனச் சுருதிசொல்லும். ()

வே று.

இப்பொழுது மமரேச [9]னினிமையின்வக் தமரரொடுஞ்
செப்பருந்தன் மாதரொடுஞ் சித்திரைச்சித் திரைத்தினத்துத்
தப்பறவேண் டியவரங்க டருந்தடத்துக் குடைந்தாடி
யொப்பிலழ கனைப்பணிவ னெனவுரைப்ப ருயர்ந்தோர்கள். (உஉ)

உக. ஆரா - தணியாத. கற்பித்தல - செய்தல.

உசு-உ0. "காருடற் பிறையெயிற் றரக்கனைக் கொன்று,வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமத்த, பழவுடற் காட்டுக் தீராப் பெரும்பழி, பனிமலே பயந்த மாது டன் நீர்த்தருள், பெம்மான்" (கல். கூ.)

உக. வாரம் - நிழமை.

உஉ. திருவிளை. தீர்த்த. உசு. கனகதோகைகலாவி - பொற்றமரைவாவி. கனகம் - பொன்; தோகனகம் - தாமரை. இது மடக்கணி.

உஉ. சித்திரைச் சித்திரைத்தினத்து-சித்திரைமாதத்தில் சித்திரைநட்சத் திரத்தில்; "சித்திரைச் சித்திரைத்திங்கள்" (சிலப். நி: சுச.) ஒப்பிலழகன் - சாதரேசர்.

(பி - ம்.) 1 'இனோத்தலுமன்றி' 2 'கேயமுற்றிறைஞ்சி' 3 'நெறிப்பட' 4 'கண்ட' 5 'உயர்ந்தனனென்று' 6 'செழும்புனல்' 7 'சென்றவராயினுமின்னுக்' 8 'நினைத்தாடுமவர்' 9 'னிம்மையின்'

வே று.

காவமர் கற்ப கஞ்சேர் கடிமலர் மழைபொ ழிந்து
தாவி[1]றுந் துபிக ளார்த்துத் தத்தமங் கையர்க ளோடு
[2] மூவரும் விசும்பி லுள்ள மூப்பத்து மூன்று கோடி
தேவரும் துதித்தா ரீசன் திருவிளை யாடல் கண்டு. (உ)

வே று.

ஓதரிய [3]வுத்தரமா புராணந் தன்னு ணுண்மைதரு சார[4]ச முச்
சயத்து முன்ன, மேதகுநன் கதை[5]விரிவிற கண்டெ னக்கு வியாத
வான் மீகியெச்சன் சொன்ன வெண்ணெண், ணூதில்விளை யாடல்க
ளிற் பிறங்கு மிந்தத் திருவிளையா டலின்பரப்பைச் சுருக்கி யின்று,
போதமுற நுமக்குரைத்தேன் யானுஞ் சொக்கன் புகழினையார் கரை
கண்டி புகலு வாரே. (ஙு)

வே று.

கெறியுளீ ரென்னக் [6]கேட்ட முனிவர்க ணிறைவு கூர்ந்திங்
குறுமதி சயமுடைத்தா முயர்கதை விளங்கக் கேட்டே
மறுவிலா வறிவான் மிக்க மலயமா முனிவ நீதி
யிறைவிளை யாட நம்மு ளின்னுமொன் றுரைத்தி பென்றார். (ஙூ)

ஆகத்திருவிருத்தம் - கஉள.

உ.—†வெள்ளானைக்குச்சாபந்தீர்த்த திருவிளையாடல.



முன்[7]னொருகா லழகனையிக் திரன்றன் பாவமுழுதும்விட வருச்
சித்த விசேடஞ் சொல்ல, மன்னயிரா [8]வதங்கேட்டுக் காண்பான்
வேட்டு மலர்க்கடம்ப வனத்தருளால் வந்துபுக்குப், [9]பொன்[10]னிதழ்ச்

ஙூ. தாஇல் துந்துபிகள்.

ஙு. சாசரமுச்சயம் - உத்தரமாபுராணத்துள் ஒருபகுதி.

ஙூ. நிறைவு - மகிழ்ச்சி (உ : உ.)

(உ)

க. அழகன்-சோமசுந்தரக்கடவுள்; "அழகன் புயங்களீ" "முப்புரஞ்செற் றவழக", "அழகனே யாலவாயி லப்பனே" (தேவ.) இனைகள் - யானைகள்.

கையெழுத்துப்பிரதிகளிலெல்லாம், இந்த, "காவமர்" என்னும் செய்யுள் முதலியமூன்றும் ஒவ்வொருதிருவிளையாடலின் இறுதியிலும் எழுதப் பெற்றுள்ளன.

† "அத்திக்கருளி" (திருவா. திருத்தெள்ளேணம், கஉ).

(பி - ம்.) 1'துந்துமிகளார்ப்பத்' 2'மூவர்கண முதலாவுள்ளமுப்' 3'உத் தமமாபுராணம்' 4 'சாமுச்' 5 'விரைவிற்' 6 'கேட்டே' 7 'ஒருகாலிந்திரன்றன் பாவமெல்லாம்'. 8'பதங்' 9'பொன்னிகர்' 10'இதட்செங்கமலம்'

செங் கமலமலர்த் தடத்தை யுந்தன் பொருவிலருங் கிளைகளிஞற் பரிக்கப் பட்ட, மின் னுயர்பே ராலயத்து விரும்பி வாழு மெய்யனையும் பொய்யறக்கண் டிறைஞ்சிற் றன்றே. (க)

குறுகுமுனக் தானவிசே டத்தா னெஞ்சிற் கொளுவுமுயர் ஞா னங்கண் டதிச யித்து, நிறைவினெடி தன்[1]சாப நீங்கு சொல்லு நீடியவெண் டிசையுறுமென் கிளையி லுள்ளோ, ருறவுதர வருமுன் னைத் தவத்தி னுலே யுயர்புடைசின் திருக்கோயி றன்னை நீங்கா, நிறை யவனே பரித்தருகு நிற்கப் பெற்றூர் யான்பெறுமா றெவ்வாறென் றியம்பக் கேட்டி. (உ)

கொந்தவிழுக் தும்பையிபக் கடவு ளேகின் கோச்சீலம் போன் றிருந்த தன்றன் சீல, மிந்திரனே நமக்குரிய பத்தன் [2]புத்தி யினி மையுட னவன்றன்னை நீங்கா தென்றுங், [3]கந்தமுறப் பரிப்பதே நன் மை [4]யெம்பாற் காமுறவேண் டியவரங்கள் வாங்கிக் கொள்ளென், றெந்தைபிரா னுரைப்பகனி விருப்பமெய்தி யெள்ளலற வெள்ளை [5]யிப மியம்பு மன்றே. (ஊ)

கேட்டருளாய் பசுபதியே தேவர் தேவே கிளரொளியே வளர் கருணைக் குன்றே யென்றன்,மாட்டகலா திருப்பதொரு கதையியம்ப வானவர்கோன் மனமகிழ்ந்து முன்ன மேமா, வேட்டையினு லவனி மிசை யிழிந்து [6]மீண்டு மேலுலகிற் செலுங்காலை மிக்க வான, நாட்டவரு முனிவர்களும் போற்றிசெய்து நயந்தினிய [7]வுபகார நல்கி னார்கள். (சு)

வேறு.

மூந்துற வவற்றை யுற்ற முறைமையின் வாங்கி யாங்கு
நிந்தியா தடைவிற் சூடக் கண்டிளை நேசங் கூர்ந்து
சுந்தர [8]வடிவ மிக்க துருவாச [9]முனிவ னுளுஞ்
சிந்தைசெய் திறைஞ்சுந் தெய்வஞ் சூடிய சேடமென்று. (டு)

உயர்பேராலயம்: "உயராலயத்துளீண்டு" என்பர்பின்; சு0: டு. 'மெய்யனையும் பொய்யறக் கண்டு': இது முரண். 'அழகார்மெய்யன்', 'மெய்யர்க்கு மெய்யன்' (கஉ: க; சடு : கசு.)

உ. கொளுவுதல் - பொருத்துதல்.

ஊ. தும்பை இபக் கடவுளே - தும்பைமலர்போன்ற · வெண்மைநிறம் பொருந்திய தெய்வயானையே. கோ - அரசன்; இக்திரன். புத்தியினிமை - மன மகிழ்ச்சி. கக்தம் - சமூத்து.

சு. இயம்பக் கேட்டருளாய். உபகாரம் - கையுறை; காணிக்கை; "முனிவர் வானோர்க்திடு முபகாரம்" என்பர்பின்; அ.

டு. சுந்தரவடிவ: விளி; 'சுந்தரா' (டு: கூ.)

(பி - ம்.) 1'பாபம்' 2'பத்தி' 3'கக்தாரத்துத்தரிட்பதே' 4'என்பாற்' 5'இப மெண்ணியம்பும்' 6'காண' 7'உபசாரம்' 8'வடிவான்மிக்காய்' 9'முனிவனுருஞ்'

பங்கய நறும்பூ வொன்றும் பசுந்துளை வக்கா ரொன்றுஞ்
செங்கையி னல்க வாங்கிச் செழும்பொழிற் கற்ப கப்பூந்
தொங்கல்சேர் முடியிற் சூடா திகழ்ந்நறுஞ் சோமன் மேன்றி கின்ற
மங்கலம் பொலியு மென்றன் மத்தக மீதெ திர்ந்தான். (சு)

யாஞ்முன் செய்த பொல்லா விருங்கொடி [1]வினையி ஞனு
மானவெம் [2]மதத்தி னனு மடியினிற் றுகைத்தேன் வாங்கிப்
பான்மைசேர் முனிவன் கண்டு பயத்தொடுங் கோபத் தோடிக்
தானவை கடிதெ டுத்துத் தன்றனி முடியிற் சூடி. (எ)

இன்றுமா முனிவர் வாழ்நீ ரீர்ந்டு முபகா ரத்தை
கன்றென விரும்பி யான்மு னல்கிய வுபகா ரத்தை
யொன்றிய முடியிற் சூடா தொள்ளிய வல்ல வென்று
வென்றியி னெவருங் காண விலக்கிய வாற [3]தென்னை. (அ)

ஆவியிற் சிறந்த வற்றை யவமதி செய்த தாலிப்
பூவல யத்துட் டோன்றும் பூழியன் றடக்கை தன்னின்
மேவிய வளையி ஞலே மேன்முடி பிளக்க மிக்க
தேவர்கோ னெற்று ணென்று செப்பின னவற்குச் சாபம். (கூ)

பொன்னகர் மன்னி வாழும் புரந்தரன் றன்னைத் தாங்கு
கின்னுயர் பெருமை விட்டு கிலத்திழிந் தழல்வா யாக
துன்னிய வனங்க டோறுஞ் சுழன்று [4]காட் டியானை யாகி
யுன்னவ மதியி ஞலென் றுரைத்தன னெனக்குச் சாபம். (கo)

இப்படிச் சபிக்கக் கண்ட விருடிக ளிமையோர் கொந்தாங்
கொப்பிலா முனியைப் போற்றி யுயர்தரு தேவர் கோமான்
செப்பருந் தெய்வ யானை செய்பிழை பொறுத்தின் றிட்ட
தப்பறு பெருஞ்சா பத்தைத் தணியெனத் தணிந்து சீற்றம். (கக)

மண்டனிற் சுந்த ரேசன் பத்தஞ மாற ஞலே
யொண்டொடை மவுலி பேத மொருகாலத் துண்டாய் மீண்டு
விண்டலத் துயர்வு பெற்று மேலர சாடி யென்று
கொண்டல்வா கனஞுக் கன்பிற் கொடுத்தனன் [5]பிறிது சாபம். (கஉ)

கூ. தோன்றி கின்ற மத்தகம்.

எ. வாங்கித் துகைத்தேன்.

கூ. பூழியன்- பாண்டியன். வளை - ஒருவகை ஆயுதம். தேவர் கோன்: விளி. எற்றுண் - அடிக்கப்படுவாய் (கடம்ப. இலீலா. உ.)

கo. அவமதியினுற் காட்டியானையாகி உழல்வாயாக.

கஉ. பிறிது சாபம் - சாபத்தின்பரிகாரம்; கூ; இது, மறுசாபம்எனவும் வழங்கும்; "மறுபெருஞ்சாபமுவ கொடுத்தான்" (இ:அ:)

(பி - ம்.) 1'வினையினனே' 2 'மதத்தினனே' 3'தென்னே' 4 'காட்டானை யாதி' 5 'பிரதி'

பொருந்தவோர் காலத் தோர்பாற் புலியிற்காட் டியானை யாகி
வரந்தரும் பெருங்க டம்ப வனத்துறை யிறையைக் கண்டவ்
வருந்தவ னருளி னுலே [1]யிலவற நீயு முன்றன்
தரம்பெறக் கடவை யென்று தந்தனன் [2]பிறிது சாபம். (கஙு)

வே று.

பேறுறவிக் கெறிசபித்துப் போய பின்னர்ப் பிழையாம லன்
றிட்ட சாபந் தள்ள, வூறுமத விகாரத்தான் மயங்கி யானு மும்பர்கோ
னையுமூயர்ந்த துறக்கத் தோங்குங், கூறருகற் பகப்பொழில்க டமை
யும்விட்டுக் குவலயத்தி [3]லிழிந்ததர நெருப்பா னெந்து, தூறுபடி
காகளரு நாடுங் குன்றுஞ் சுழன்று முன்று திரிந்தனன்வெக் துயரங்
கூர்ந்தே. (கச)

வே று.

வந்தனை வணங்கப் பெற்றேன் மண்மிசை யிழிந்த தாலென்
வெந்துயர்ச் சாபந் தன்னை விலிவித்து விடாது காளு
மிந்திர விமானந் தாங்கு மியானைகண் மீது வைத்த
சிந்தைகூர் தருபே ரன்பை [4]கல்குக சிறியேற் கென்ன. (கரு)

ஒன்றிய சாப நீக்கி யுயர்புதந் தோழு னக்கே
யின்றுநன் குண்டா நம்மை யினிமையிற் பூசை செய்து
சென்றுவா னகத்தெ மக்குச் சிறப்புடை விமானந் தந்த
வென்றிகொ ளமரர் கோவை விடாதுவா ழெனாக வின்றான். (கசு)

அங்கருள் புரியக் கண்டே யகமகிழ்ந் தடியே னுய்ந்தேன்
சங்கர வென்று வாழ்த்தித் தடத்துநீ ராட்டிச் செம்பொற்
பங்கயப் போது சூட்டிப் பூசித்துப் பழுது நீங்கி
யெங்களும் பரவச் சென்ற திந்திர வுலகத் தியானை. (கஎ)

ஆகத்திருவிருத்தம் - கசச.

கஙு. அருந்தவன் - சிவபெருமான் (ருக: உக; சுஐ: சு); "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே" (புறநா. கட.) தரம் - தகுதி.

கச. கூறுஅரு - சொல்லுதற்கு அரிய. உதரநெருப்பு - வயிற்றுத்தீ; ஜாடராக்கினி.

கஎ. பழுது - சாபம்.

(பி - ம்.) 1'அலவறவெனக்கும்' 2'பிரதி' 3'இழிந்தாகம்' 4'கல்கிடு'

கூ.—[1]தடாதகையாரவதரித்த திருவிளையாடல்

மாசின் மதுரைப் பெருமாறியின் மலயத் துவச னெனுமாற ன்
றேச முழுது மறவென்னச் செங்கோல் செலுக்குங் காலத்தங்
காசின் மணிதர் முன்புலகா ளரசர் தொகுதி மறக்க றஞ்சேர்
தேச முடைய [2]பாரசி னிழலே நிழலென் றினிதிருந்தார். (க)

மாலைக் குமா வேளென்ன வடங்கு மிளமைப் பாகுவத்தா
லேலத் திமிரக் குழற்காவி லிலங்கு மடவார் கணைவைத்துக்
கோலக் களபத் தனதடத்துட் குளிக்குந் செவ்வா யமுதுண்டு
சாலப் பரிந்தா னருட்சொக்கன் றனேய சாலுக் தகைமையினுன். ()

ஏத மகல [3]வித்தகவி னிருக்கு நாளி னங்குலத்தோர்
நீடு மாதைக் கொள்வலென நினைந்தீ ரைந்து பொருத்தமுற
வாடு மாபின் வரும்பெரிய வாசர் குலத்தி லவதரித்த
சோதி [4]வடிவ மங்கைதனைச் சுருதி வி தியின் மணம்புணர்ந்தான். ()

மற்ற மடவார் தமைவிட்டு மன்னர் குடியிற் பிறந்தாண்மே
[5]லுற்ற வவர்பா லன்பெல்லா மொருங்கே வைத்து நனிவாழ்வோன்
சுறறும் பெரிய விதிவசத்தாற றுணைசேர் புதல்வ னிலாமையினுன்
முற்றுஞ் சடையான் றனைநினைக்கு முயன்றான் றவங்க ணடுங்காலம்.

ஆன்ற வரிய பேரறங்க ளாரிவை யுடம்பி னெயக்கண்டாண்
டேன்ற விளையா டலிலிருட்டி [6]யெழிலார் சொக்க னருள்கூர்ந்து
மூன்று முலையா லொருமகவை யளிப்ப முதிரு மதியென்னத்
தோன்றி யுலகு பதினலுக் குதிப்ப வளர்ந்து [8]துலங்கியதால். (கூ)

க. மலயத்துவசன - பொதியின்மலையின் கண் மெழுதிய கொடியை யுடையவன்; ச: க. இப்பாண்டியன் அகத்தியமுனிவர் அருளாற்பிறந்தவனுதலின், அவருக்கு இருப்பிடமாகவுள்ளதும் துவசம்போலே உயர்ந்து தோன்றுவதுமாகிய பொதியின்மலையின் சம்பந்தமான பெயரை இவனுக்கு இட்டனரென்று அபடமிப் பிரதட்டிணமாஸ் டயம் தரிவிக்கின்றது; ச: க-இ ன் குறிப் புரையையும் பார்க்க.

உ. ஏலம் - மயிர்ச்சாமரம். சூழற்கா - கூந்தலாகியசோலை. பரிந்தான் - அன்புற்றான்.

கூ. ஆதிமரபு: இம்மரபு சூரிய வம்சமென்பது கருதவதற்கும் இடமுண்டு. வடிவமங்கையம்மை பத்தாவது பெண்ணினப்பெயர்; இப்பெயரைக் காரணமாகிய தென்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பெனினுமாம்; ஈக: கூ.

ச. அல்லெல்லா மொருங்கேயைந்து மனிவாழ்தல், "ஒன்று சாதலன்", "காதல்கூர்ந்தகணவன்" (கூ: ச, ஃ) என்பவற்றாலும் விளங்கும். முற்றுதல்-வினைதல்.

டு. ஆல்: ஒடி.

(பி - ம்.) 1'மும்முலைத்த டாதகையார் பிறந்த' 2'பேரரச 3'இத்தகவன்' 4 'வடிவின்' 5 'உற்றவங்கவர்பா லின்பமெலாம்' 6 'எழிலசேர்' 7'மகவே' 8'துளங் கியதால்'

வேறு.

[1]சிதைவிலா விருப்ப மிக்க தேவியோ டினிய தென்ன
னதிசய மூற்று மற்றை யதிகமா மூலியி னேக்கண்
டிதுதகு வதுவோ விந்த வடிவினுக் கெந்தா யந்தி
மதிபொதி சடையா யென்று மலரணைத் துயிலுங் காலை. (சு)

இணையிலான் கனவிற் சென்றோர் மாதிவ ளெனக்கொள் ளாது
[2]தணிதிநீ யேத மந்தத் தனமுமோர் வழியி னீங்கித்
துணையுல காளுமென்னத் துயிலுணர்ந் ததிச யித்து
மணிமுடி யரசன் செய்தி மந்திரி கட்குச் சொன்னான். (எ)

ஐயமில் கணிதம் வல்லா னவரிலோ ரமைச்சன் போற்றிப்
பொய்யல வுதித்த கால பலத்தினுற் புவியை யாளுந்
தையலுக் [3]கியைந்த நாமந் தடாதகை மற்றொப் பில்லா
மெய்யுறு [4]கணவற் கண்டான் மிகைமூலை மறையு மென்றான். (அ)

இந்தநல் லுரைபொய் யாதென் றியைந்தவ ரியம்ப மன்னன்
[5]செந்தமிழ் முக்கட் சொக்கன் செயலெனத் தெளிந்து தொல்லைத்
தந்திரு நெறியி னுமந் தடாதகை யென்று [6]சாத்திச்
சிந்தையா குலங்க ளார்ந்து செலுத்தினான் செங்கோ லோங்க. (கூ)

மையமர் விழிவா ளென்ன மதிமுகம் வனச மென்ன
வையநுண் ணிடைபொய் யென்ன வணிமூலை மலய மென்னச்
செய்யவாய்க் கரிய கூந்தற் சிற்றடிப் பெரிய வல்குற்
றையலாள் வளர்ந்தாள் வாரித் தலமெலாம் வளர வாங்கு. (கo)

பரிவினெண் ணிறந்த கோடிப் பாங்கியர் சூழச் செம்பொ
னரியகந் துகங்க ழுங்கோ டம்மனை யூசன் மற்று
முரியன பயின்று கன்னி யோங்குமா டத்தி னுந்து
கரிபரி யேறி முற்றக் கற்றனள் [7]கலைகண் முற்றும். (கக)

எ. இணையிலான் - சிவபெருமான். ஏதம்-துன்பம். ஆளும்-ஆளுவாள்.

அ. மிகை - அதிகம்.

கூ. அவர் இயைந்து. 'செந்தமிழ்முக்கட்சொக்கன : 'செந்தமிழ்க்கினிய சொக்கன்' என்பர்பின்னும்; நெடு: உ. தொல்லைத்தந்திரம்- பழமையாகிய நூல்; வேதாகமங்கள்.

கo. வாரித்தலம் - பூமி. இச்செய்யுள், "செய்யவாய்ப் பசும்பொன் னேலே" (தாளா. சீய. கoக) என்பதிலுள்ள சொற்றொடர்களைப் பெற்று வந்துள்ளது.

(பி - ம்.) 1 'அதிபய' 2'தணியுநீரோதம் வந்ததனமும்' 3'இயைய' 4'கணவர்' 5'செந்தமிழ்க்குரவன்' 6'சாற்றிச்' 7'கல்வி'

ஒன்றிய வடிவி னுனு முதித்தனன் [1]முகுத்தத் தானும்
வன்றிறல் வலியி னுனு மகவுவே றிலாமை யானு
மன்றினர் சிங்கஞ் சிங்கா தனத்திடை யிருத்தி யன்னு
டன்றனி மூடியிற் செம்பொற் றனிமணி முடிக வித்தான். (கஉ)

[2]பொருந்துபே ரறங்கள் செய்து போற்றரு மரசர் போற்ற
விருந்தர சரிமை யெல்லா [3]மிவள்வயிற் கொடித்திங் கென்ன
வருந்தவஞ் செய்தே னிந்த வணங்கினைப் பெற்றத் கென்று
பரிந்துயர் வான நாடி சேர்ந்தனன் பத்த [4]நீங்கி. (கங)

ஆகத்திருவிருத்தம் - கருள.

ச.— மணஞ்செய்த திருவிளையாடல்.

மன்னு மாதவம் பெருகிய மலைக்கொடி மன்னன்
[5]பொன்னி னுட்டிடைப் போயினி தமர்ந்துவீற் றிருப்பப்
பின்னர் வேறொரு புத்திர னிலாமையிற் பிறங்கக்
கன்னி தானுயர் பிதாவினுக் [6]குறுகடன் கழித்தாள். (க)

தந்தை யில்லதுஞ் சாற்றரும் தனதெழி லுருவ
[7]மூந்தை மும்மூலை யாயதுங் கொண்டிவண் முடியச்
சிந்தை யாகுலக் தீர்விலா திருந்தர சாண்டாள்
வந்த தெவ்வர்கள் யாரையும் வாளினுன் மாற்றி. (உ)

கஉ. முகுத்தம் - முகூர்த்தம். அன்றினர் - விரோதித்தவர்கள்; அன்றினர் சிங்கம் - மலயத்துவசன். முடி - தலை, கிரீடம்.

(ச)

க. மலைக்கொடிமன்னன் - மலயத்துவச பாண்டியன்; "எருதோடு கலையோடு சிலையோடு மலையோட விபமோட கேர், விருதோடு பொருதேறு புலி கேமி கிரிசூழ விளையாடவே" என்னும் நக்கீயாகப்பாயிரமும், 'பருவதத்தைக் கொடிக்கணெழுதும் பாண்டியன் குலபதி இலாஞ்சனையும்' என்னும் அதன் உரைப்பகுதியும் இங்கே அறியற்பாலன. பொன்னின் காடி - சுவர்க்கம். வீற் றிருப்ப - கவலையின்றியிருக்க.

*"தென்னுடைய சிவனேபோற்றி" (திருவா. போற்றி. கசுச), "தண்ணுர் தமிழ்லிக்குத் தண்பாண்டி நாட்டானே" (ஷெ. திருவ ச. க0), "மருவித்திகழ் தென்னன்" (ஷெ. திருஞ. கரு) "என்னையாண்டுகொண்ட பாண்டிப்பிரான்" (ஷெ. திருப்பூவலலி. உ), "வானகதொழுகதென்னன்" (ஷெ. தோணேக்கம், அ), "பாண்டிகன் னுடரா லன்னே யனும்" (ஷெ. அன்னே. கரு), என்பவற்றிற் சிவபெருமான் சுகதரபாண்டியராக வீற்றிருந்தமைகூறப்பட்டிருத்தல்காண்க; திருவாசகத்துள்ள பாண்டிப்பதிகமுதலியன இங்கே ஆராய்தற்பாலன.

(பி - ம்.) 1 'முகிழ்த்தத்' 2 'பொருந்தவேதவங்கள்', 'பொருந்துபோதவ்கள்' 3'இவ்வயிற்' 4'நீக்கி' 5'பொன்னினுயர் நாட்டிடைப்போயினி திருப்பப்', 'பொன்னினுமுயர்' 6'அருங்கடன்' 7'மூந்து'

மன்னு முத்தமத் [1]தணைவனே வரத்தொடு பெறுதற்
[2]கங்கி லத்திடை யிலாதது [3]கண்டடல் வேண்டார்
வெங்கி டத்திசை விசயகாஞ் செய்குவ மென்றே
யெங்கி லத்தினு முலாவின லெல்லையில் படையாள். (க)

வே று.

திசைவிச யஞ்செய் காலைத் திசைகளி லுருவ மிக்க
நசையுறு [4]மன்னர்க் கண்டா னனிகபக் தெதிர்சென் றங்க
ணசைவற [5]நிற்பாண் மற்றோர் பகங்கவிவள் விகாரங் காணுள்
வசையறு [6]மூரையி லேறு போகுவாண் மதியா ளாகி. (ங)

இருங்குண திசைமூன் றுக வெங்குணு முலாவி யுள்ளம்
வருத்துவா டன்னைக் [7]கொள்வா ரிசையாய் மதுரை மன்னன்
றிருத்துபே ராருளிற் போந்து சீயமா தங்க மற்றும்
பொருந்திய கயிலே யந்தண [8]டாள்வளைப் புறத்தி ருந்தான். (ஙி)

வெம்முனை யரசர்க் காய்ந்து வெல்லரு நிலங்கள் கொண்டி
கொம்மைவெம் முலையார் சூழக் கோடிமா மன்னர் போற்றச்
செம்மலே [9]றென்னத் தோன்றித் திறையிடான் யாவ னென்று
மம்மர்தீர்த் தாளும் வள்ளல் வாழ்பெருங் கயிலே சேர்ந்தாள். (ச)

கண்டிபா ரிடங்கள் சித்தர் சாரணர் கணப்பி சாசர்
மண்டிய வியக்கர் வாழ்நர் தானவர் [10]மற்றுக் துற்று
மிண்டிகள் பேசிச் செல்ல விசயமா மகுட வல்லி
சண்டவெங் கோபத் தோடுந் தழல்விழித் தெதிர்க்க டந்தாள். (எ)

வெந்திறன் [11]ஞாட்பி லேன்ற வீரர்க ளாற்ற ராகி
முந்திய திறங்கள் விட்டு முற்று [12]மாயுதங்கள் விட்டுப்
பந்திவா கனங்கள் விட்டுப் படியவ பட்டுப் போந்து
சுந்தரன் கழலில் வீழ்ந்து துதித்துநீ யியிர்த்துச் சொல்வார். (அ)

க. வெங்கிட - புறங்கொடுக்க; வெறிக்: விகாரம். ச. திசைவிசயம்-திக்கு விசயம்.

ஙி. மதுரைமன்னன் - சோமசுந்தரக்கடவுள்; ச: எ. தாள் வளை - மலையின் அடி; 'பாதசயிலம்' என்பர் வடநூலார். மதுரைமன்னன் இருந்தான்.

சு. கொம்மை - வட்டம்.

எ. துற்று - நெருங்கி. மிண்டிகள் - தருக்காற் சொல்லும் சொற்கள். சண்டவெங்கோபம் - மிக்க கோபம்.

அ. ஞாட்பு - போர்க்களம்.

(பி - ம்.) 1'தலைவனே' 2'இங்கிலத்திடை' 3'கொண்டல்' 4'மன்னர்கண்டா' 5 'நிற்பார்' 6 'முதையி' 7 'கொள்ளவாஞ்சையாய்' 8'தாழ்வரை' 9 'செம்மலே யென்ன' 10'மற்றமுற்று' 11'ஞாட்பினிலற' 12'ஆயுதங்கழற்றி'

வேறு.

தீரமிக்கமும் முலேசி றக்குமோர் தெய்வ மாதரான் சீறி[1]வந் தெதிர்த் தார்நிலத்தில்வே றெதிரெ னக்கெனு வரியவத்திரங் கலே[2]வி டுத்ததும், போர்மு கத்துமென் முறுவல் கூருமுன் பொலிவ ழிக்குநம் படைமு ரிக்கவா, ரோரி டத்துளுங் கண்ட தில்லரா வுலகின் மண் ணில்வான் மிசையி லென்றனர். (கூ)

அன்றி ரைப்புரங் குன்ற வென்றவில் லரிய சேவகன் முறுவல் செய்திடா, நன்று நன்றுசொல் கின்ற தின்றுபோய் நாடு காண[3]வந் நாரி யாரையாம், வென்று மேவுவ மஞ்ச லஞ்சனீர் வெய்து ரைதிரு மென்று [4]துன்றிமுன், னரின்ற சேனையைத் தள்ளி [5]யெய்தினு னீடு மன்மதன் சேனை பின்வர. (கo)

வேறு.

அரிவையைக் கைப்பி டிப்பா லுசையி னீறு சாத்தி
வரைவிலார் கரத்து வேரேர் [6]வண்ணவெஞ் சிலையும் வாங்கிப்
பொருபடை நடுவு செல்லப் புரிகுழ லொருவ னம்மேல்
வருவதென் மதியா தென்று வந்தனள் பூசல் வேட்டு. (கக)

இறைவனைக் காணு முன்ன ரிருமையும் முலேயி லொன்று
மறைதல்கண் டதிச யித்து மானம்வந் தொல்கி நிற்பத்
துறைபட முன்னஞ் சொன்ன மந்திரி யிவனே தோலா
மறமலி மாதே யுன்றன் மாமண வாள னென்றுன். (கஉ)

அப்பொழு திகல்செய் யாத வகங்கவே [7]ளிகலக் கண்டே
யொப்பிலாள் வருத்தங் கூர முறுவல்செய் துவமை யில்லீர்
கைப்பிடிப் பதற்கே வந்தீ தன் கருத்தறி கில்லே [8]னின்று
தப்பில்வேள் பொல்லான் வெற்போ தனகடி விலேயே [9]வன்றே. (ங)

கொங்கவி முலங்கற் கூந்தற் கொடியிடை யீரு மக்குப்
பங்கய [10]முகுளக் தன்னைக் கொங்கையாப் படைத்த [11]வேதா
வங்கது கண்டு கண்டீ தலருமென் றச்சங் கூர்ந்தோ
திங்களே வதன மாகப் படைத்தனன் செப்பீ ரென்றுன். (கச)

கூ. கண்டது இல் - பார்த்ததில்லே.

கo. அன்றிஞர் - பகைவர். அஞ்சல் - அஞ்சற்க.

கக. வரை வில் - மலேயாகிய வில். புரிகுழல்: எழுவாய்.

கஉ. இருமை - பெருமை, (திருஙக. கசு.) மந்திரி: எழுவாய்; அவன் சொல்லியதை, கூ: அ - ஐம் செய்யுளாலுணர்க.

கங. முறுவல் செய்தவர், சிவபெருமான்.

கச. முகுளம் - அரும்பு.

(பி - ம்.) 1 'வந்தெதிர்ந' 2 'விடுத்திடும்' 3 'வன்றரீரானே' 4 'துன்றியே' 5 'ஏகினன்' 6 'வண்ண' 7 'இகல் செயக்கண் டொப்பிலா வருத்தங்கூர்ந்து' 8 'னென்று' 9 'மின்றே' 10 'முகிளந்' 11 'வேதன்'

பொருவருந் திறங்கள் வல்லாள் புகழினு னிறைந்தாள் போதிற்
றிருவினு முருவ மிக்காள் சிறிதுமென் முறுவல் கூர்ந்து
[1] மருமலி யிதழி யந்தார் வள்ளன்மேற் கடைக்கண் வைத்தாங்
கிருநில நோக்கி மெல்ல வியம்புவா ணயங்கள் கூர. (கடு)

வே று.

மன்னியதென் புலத்திலங்கும் பாண்டிநாட்டி வளமைதரு மாம
துரை நகரென் பேரூர், நன்னிலைசேர் தந்தையர சுரிமை தந்து நணு
கினனுன் [2]வாளுட்டென் னல்ல யாயுங், கன்னிதனக் கானமண வாளன்
றன்னைக் [3]காணுமா றென்றென்று கலங்கு கின்ரு, ளின்னல்கெட
மீனமதி யுத்த ரத்தங் கெழுந்தருளி மணந்தருளு மென்ரூள் போற்றி.

வென்றிதரு புகழுடையா யகங்க வாழ்வே விளம்பியதே செய்
வலினி மெலியே லுள்ள, மென்றுவரங் கொடுத்தருளி யிறைவன்
போக வின்பமுறு தடாதகைதன் பெரிய நாட்டுச், சென்றுவளந் தரு
மதுரை நகருட் புக்குச் செய்திபயந் தவட்குநயம் பயக்கச் செப்பி,
யொன்றியநன் னலங்கடரும் பெருங்கல் யாணமுறச் செய்வாளெருப்
பட்டா ணலப்பட் டாங்கு. (கஎ)

வே று.

காசில்வா னகல முட்டக் கனகக்காற் பந்த ரிட்டுத்
தூசுபட் டாடை யான்மேல் விதானித்துத் தூபந் தீபந்
தேசொளி விளங்கு பாளை செறிஞிறை கரகம் வைத்து
மாசில்வெண் டரள மாலை மாணிக்க மாலை நாற்றி. (கஅ)

நிறைபனி நீரை டுத்து நிலந்தொறுந் தெளித்து வாச
நறுமலர் சுண்ணம் பொற்பூ நவமணி கலந்து சிந்தி
மறுவறு சமிதை நெய்பால் பாலிகை பரப்பி மாசி
லறுகொடி தருப்பை சூட்டி யட்டமங் கலங்கள் வைத்தார். (ககூ)

தோரண நாட்டி யெட்டுத் திசைகளுந் தொழில்சேர் செம்பொற்
பூரண குடநி ரைத்துப் பூகநீள் [4]கதலி நாட்டி
வாரண நெருங்கும் வீதி மதுரையிற் சிறக்க மிக்க
காரண முதல்வன் காணக் காவண மலங்க ரித்தார். (உ0)

கஎ. பயந்தவட்கு - தாய்க்கு.

கஅ. சுபகாலங்களிற் பூரணகும்பத்தின்மீது கமுகம்பாளைகளைச் செருகி வைத்தல் மரபு; "கீழ்பாற் றிசையின் மிசைவைத்த, வெள்ளிக் கும்பத் தினங் கமுகின் பாளை போன்று விரிந்துளதால்" (கம்ப. மிதிலை. எஉ.)

ககூ. அறுகு - மங்கலதிரவியங்களில் ஒன்று.

உ0. காரணமுதல்வன் - பரமசிவன்; "காரணவானை யேத்தி" என்ரூர் முன்னும்; திருநாட்டு. கு.

(பி - ம்.) [1] 'மருமலிதழி' [2] 'வானாட்டென்னல்யாயுங்' [3] 'காணுமா றென்று' [4] 'கதலிநட்டு'

பல்லியங் கறங்க வெண்ணில் பார்த்திபர் வழுத்த முத்தச்
சொல்லரு மால வட்டக் தோகையர் வீசச் செம்பொ
னல்லசா மரையி ரட்ட நாயகன் வரவு பார்த்து
வல்லிநல் லணியாற் பொங்கி மாசிலா சனத்தி ருந்தாள். (உக)

நந்திமா முனிவன் குண்டோ தரனெனு நாமம் [1]பூண்டோர்
வெந்திறற் பூத மாகி வெண்மதிக் குடைநி ழற்ற
வந்தணர் குணலை கொள்ள வரிவையர் வளைகள் சிந்தச்
சுந்தரன் வந்தான் முன்னஞ் சொன்னகா டன்னி லாங்கு. (உஉ)

வே று.

நயந்தரு[2]தாண் மிசைவீரக் கழல்பு னைந்து நன்கரத்துக் கடககங் கணஞ்செ றித்து, வியந்ததிரு [3]மார்பில்விடு நாண்முத் தாரம் வெண் புரிநூ லணிந்தணிகுங் குமந்தோய் தோளிற், றயங்கியசண் பகமாலை கழுநீர் மாலை சாத்திமருங் கார்த்தகுகி றழைவார் காதிற், புயங்க வொளி மாணிக்கக் குழையிலங்கப் புதுமலர்வா சிகைமுடியிற் பொ லிய வந்தான். (உங)

வே று.

மதிநெறி மாதை வேட்பான் மாமணக் கோலங் கொண்டு
கதிதர வந்தோன் மிக்க கடிமனங் காண்பா னெண்ணி
யிதமுறு தேவர் மூன்ஞ விருங்கண நாதர் மூற்றும்
புதுமையின் வந்தார் சூழ்ந்து சயசய வென்று போற்றி. (உச)

ஆதிகான் முகன்மா லேத்த வரம்பையர் வாழ்த்தெ டுப்பச்
சோதிசேர் கானம் பாடத் தும்புரு நார தாதி
தீதறு சடங்கு மைந்தன் [4]செலுத்தநன் முருத்தத் தேற்ப
மேதகு மாதை வேத விதிப்படி மன்றல் செய்தான். (உடு)

உக. ஆலவட்டம் - விசிறி; இது தாலவிர்த்தமென்னும் வடமொழிச் சிதைவு. இரட்ட - மாறியசைய.

உஉ. குணலை - ஒருவகைக்கூத்து; அது பல்வரிக் கூத்தைச்சார்ந்தது: சொன்னகாள், பங்குனி உத்தரம்.

உங. தகிலும் குழையும் இலங்க. வாசிகை - கோத்தமாலை.

உச. மதிநெறி - சந்திரகுலம். சயசய-சயமுண்டாகுக, சயமுண்டாகுக.

உடு. நாரதாதிகள் கானத்தைப்பாட. நமைந்தன் - முருகக்கடவுள்; இவர் திருமணச்சடங்கு நடத்தியதை, "மருளாரும் பவத்தொடரை மாற்றியதென் னன்மகளாய் மவுலிசூடிப், பொருளாரும் புவிவிசயஞ் செய்தரசு செலுத்திய மும் முலைப்பூர் தேனைத், தெருளாரும் தமிழ்மதுரை நாதன்மணஞ் செயலிதி நூற் சடங்கு செய்தே, யருளாருங் கடம்பவனத் தரைகுமர குருபரனே யகத் துள் வைப்பாம்" (கடம்ப. பாயிரம், டு) என்னும் திருவிருத்தத்தாலு

(பி - ம்.) [1]'பூண்டோன்' [2]'கான்மிசை' [3]'மார்பிலிடும்' [4]'செலுத்தினன் முகூர்த்தத்தொப்ப'

சேர்ந்தவொண் பாண்டி நாடு செய்தமா தவத்தி னுனும்
[1] வாய்ந்தமா மாதைப் பெற்ற மாதுறு தவத்தி னுனு
[2] மார்ந்தொன் முறைமை யிற்பெண் ணுயக மாகா தென்று
[3] வேய்ந்தபொன் முடிக வித்தான் விசயமண் டபத்தி ருந்து. (உசு)

பெருமை[4]யே தருங்கோ வென்னும் பெயர்தன தாத லாலே
குரைகட லுலகின் மிக்க [5]கோமாற வரும ளுனுன்
சுருதிமூ வுலகுங் காக்குஞ் சுந்தர மாற னென்றே
மருவிய வெழுத்து மிட்டான் வாய்மனத் துக்கு மெட்டான். (உஎ)

அருட்புனை நீதி யோங்க வருச்சனை புரிதல் வென்றி
[6]யுருத்தகு மரசர்க் கென்று முரித்தென வுவமை யில்லா
[7] விருக்கறை சிவலிங் கத்தை யிம்மையே தருவா னென்றே
புரைத்தவா கமத்திற் பூசித் தருளின னுலகங் காண. (உஅ)

ஆகத்திருவிருத்தம் - டகஅரு.

முணர்க. இதுபற்றியே, 'சடங்குக்கத்தன்' என்பர்பின்னும்; எ: கு. "நான் கெயிற் றெருத்தத் பிடர்ப்பொலி வரைப்பகை, யறுகால் குளிக்கு மதுத்தொ டை யேத்த, முட்டாட் செம்மலர் நான்முகத் தொருவ, னெண்ணிகெய் யிறை த்து மணவழ லோம்பப், புலியளக் துண்ட திருகெடி மாலோ, னிருகர மடுக் இப் பெருநீர் வார்ப்ப, வொத்தை யாழியன் முயலுடற் றண்சுட,ரண்டம் விள ர்ப்பப் பெருவிளக் கெடுப்ப, வளவாப் புலன்கொள் விஞ்சைய ரெண்மரும், வள்ளோயிற் கருவியிற் பெரும்புகழ் வினைப்ப, முனிவர் செங்கரஞ் சென்னியாக, வுருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப, மும்மூலை யொருத்தியை மணக் துல காண்ட, கூடற் கிறைவன்" (கல். கச.)

உசு. "பெருநீர் வையை வளநீர்க் கூட, லுடனுயி ரென்ன வுறைதரு நாயகன், கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி, யையாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து, விரிசடை மறைத்து மணிமுடி கவித்து, விடைக்கொடி கிறுத்திக் கயற்கொடி யெடுத்து, வழுதி யாகி முழுதுல களிக்கும், பேரரு ளாளன்", "மதுரை மாநகர்ப் பூழியனுகிக், கதிர்முடி கவித்த விறைவன்" (கல். உ,உடு.)

உஎ. முடிமன்னர்களின் பெயர்களில் 'கோ' என்பதைச் சார்த்திக் கோச் சோன், கோச்சோழன், கோப்பாண்டி யனென வழங்குதல் மரபு. எழுத்து - கையொப்பம். சோமசுந்தரக்கடவுள், பாண்டி யராசாவாக வீற்றிருந்தபொ ழுது, 'சுந்தரமாறன்' என்று கைச்சாத்திட்டருளினர்.

உஅ. இருக்கு - வேதம். "மதிக்குலம் வாய்த்த மன்னவ னுகி, மேதினி புரக்கும் விதியுடை நன்னு, ணடுவூர் நகர்செய் தபுவன் துடைக்கு, மருட்குறி நிறுவி யருச்சனை செய்த, தேவர் நாயகன் கூடல் வாழிறை" (கல். கசு.)

(பி-ம்.) 1'வாழ்ந்த' 2'ஆய்ந்த' 3வேந்தர்' 4'ஏர்தருங்' 5'கோமாறன்மருக னுனன்' 6'உருத்தரு' 7'இருக்கினற்சிவ'

நி.—பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்.

பாதிமா துடையான் வேந்தர் பாவையை மணந்த [1]பின்றை
யாதர வயன்மா லாகண் டலன்முத னிறைவு செய்து
நீதியின் விடித்து மற்று நின்றவர் தம்மை நோக்கிச்
சோதிசேர் நன்னீ ராடி மென்றலுக் தொழுதெ ழுந்தார். (க)

முனிவர்[2]கக் தருவர் நாகர் சாரணர் சித்தர் முன்னுக்
கனலெழு பசியாற் [3]போய்ப்பொற் கமலவா வியினீ ராடி
யினியதஞ் சடங்கு செய்தே யேத்தரு நீறு சாத்தி
யனைவரும் வாமுன் வந்த வகத்தமா முனிவன் சொல்வான். (உ)

வந்துமா மறைகள் பாட மகிழ்வுட னூடிக் தில்லை
யெந்தைபொன் னம்ப லத்தி னேத்தருங் கூத்தை யேத்திப்
புந்தியா லிறைஞ்சி னல்லாற் [4]புகிப்பதோர் நாளு மில்லை
சுந்தரா போவ லங்க ணென்றடி துதிப்பக் கண்டு. (ஊ)

நீங்கரும் வெயிலா னெருக்து நீபமா வனத்தில் வாவிப்
பாங்கர்யா னளவில் கால [5]முண்டிருந் ததுப ணிக்தீங்
கோங்கிய மகவான் வேட்டை யாடிவா னெருகால் வக்து
தீங்கற வளித்த செம்பொற் சீதள விமான மீதால். (சு)

க. ஆகண்டலன் - இக்திரன். நிறைவு - மகிழ்ச்சி.

உ. சடங்கு - நித்தியகன்மம். அகத்தமாமுனிவன் - பதஞ்சலிமுனிவர்.

ஊ. ஏத்தரும் - மேன்மையைத்தரும்; துதித்தற்கரியவென்றுமாம்.

சு. நீபமாவனம் - கடம்பவனம். இருந்தது, அளவில்கால முண்டு. பணிக்து அளித்த.

* "கொட்டிசைத்த வாடலாய்", "புன்சடை, பின்றயங்க வாடுவாய்" (தி.ருஞா. தே.திருவாலவாய்), "குழகனே கோலவில்லீ கூத்தனே" (தே.திநாநா. "பதஞ்சலிக்கருளிய பரமநாடக", (திருவா. கீர்த்தி: கஉ), "காடிருமுனி வர்க் காடியபெருமான்", "ஒருபாற் பசுங்கொடி.....கூடன் மாநக ராடியவமு தை", "முனிவ ரேமுற வெள்ளியம் பொதுவின், மனமுங் கண்ணுங் கனி யக் குனிக்கும், புதிய நாயகன்" "எங்குள வுபிரு மின்ப நிறைக்தாட, நாடக விதியோ டாடிய பெருமான்", "கூடல், வெள்ளியம் பொதுவிற் கள்ளவிழ் குழலொடு, மின்பகடம், புரியுக் தேவ நாயகன்", "வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான்", "இருக்தமிழ்க் கூடற் பெருக்தவர் காண, வெள்ளியம் பலத் துட் டுள்ளிய ஞான்று" (கலி. கச, உ0, உஉ, உரு, கூ0, கசு, எகூ.)

(பி - மி.) 1'பின்னர்' 2'கந்திருவர்' 3'பொங்கி', 'போகிக்' 4'பொசிப்பது' 5 'உண்டிருப்பது'

திக்குமுங் தலங்க டம்முட் சிந்தையித் தலத்தே செல்லு
மைக்குழன் மடவா ளோடும் [1]வளம்பட விதன்கண் டென்பான்
மிக்கநீ காண்டி யென்று வெள்ளியம் பலத்துக் காணத்
தக்க[2]நற் சொக்கன் சொக்கத் தாண்டவம் புரிந்தா னன்றே. (டு)

பர[3]முனி வரருண் மிக்க பதஞ்சலி முனிகண் ணுர
வரமுறக் கண்டா னந்த மகிழ்ச்சிமாக் கடலுண் மூழ்கி
யுரைகெழு துதியா லேத்தி யுண்டுநல் விடையிற் போகப்
புரையற யாரு மூண்டி போயினு ரருளா வாழ்த்தி. (சு)

வே று.

மதஞ்சொரிகொல் குஞ்சரவி ருஞ்சரும [4]கஞ்சுகவ ரன்சயில வஞ்சி கொழுநன், விதஞ்செறிபு ரஞ்சுடரெ டுஞ்சரம்வி டுஞ்சதுரன் விஞ்சையர்வி ரிஞ்சரிறைவ, னிதஞ்செய்கொடி நஞ்சவுர கஞ்[5]சசிமி லெஞ்சசடை யெஞ்சலில சஞ்ச லனுளம், [6]பதஞ்சலிநி றைஞ்சடியி றைஞ்சிடர டஞ்செய்தப ரஞ்சுடர்த ருஞ்சொ ருபமே. (எ)

தலம்புகழ் தரும்.....கடம்பவனமே.

ஆகத்திருவிருத்தம் - ககூ.

டு. வெள்ளியம்பலம்: "கொன்றையஞ் சடைமுடி மன்றப்பொதியிலில், வெள்ளியம் பலத்து" (சிலப். பதி. சஉ-சக.) சொக்கன்: "ஆலவாய்ச் சொக்கன்", "ஆலவாய்ச் சொக்கனே" (தே. திருஞா.) சொக்கத் தாண்டவ மென்பது, சாந்திக்கூத்தின் வகையினுள் ஒன்றான சுத்தநிருத்தம்; சுந்தராதாண்டவமென்றும் கூறப்படும். இது, நூற்றெட்டுக் காரணமுடைத்தென்பர்: (சிலப். பக். அ0.)

சு. பதஞ்சலி முனிவர் செய்ததுதி, சுலோகரூபமாக வழங்குவதுடன் அன்பர்களாற் பாராயணஞ் செய்யப்பெற்றும் வருகிறது.

எ. கஞ்சுகம் - சட்டை. இதஞ்செய் அசஞ்சலன். உளம் நிறைஞ்ச - மனமகிழ்ந்த.

* இச்செய்யுளின் முழுப்பாகத்தை இப்புத்தகத்தில் ச - ஆம் பக்கத்திற் பார்த்துக்கொள்க.

(பி - ம்.) 1'வளன்' 2 'நஞ்சொக்கன்' 3 'முனிவரிணுமிக்க' 4 'கஞ்சுகன் வருஞ்சயில' 5 'சசிமலிசடை' 6 'பதஞ்சலனிறைஞ்சடி'

கூ.—பூதமுண்ட திருவிளையாடல்.

பொலிவின் வந்தவர் யாவரு நிறைவுறப் [1]புசித்தே
யலகி னன்கொடி [2]போயின ரரும்பெரு விழாவின்
ரெலவில் பல்வளத் தொகுதிகண் டிறத்தனை மதித்துத்
தலைமை சேரெழின் மடவர றலவனுக் குரைப்பாள். (க)

பொருவி லாதவெஞ் சோற்றுயர் பொருப்பினைக் காட்டி
யிரவி தீமதி யுடுகுல மிராசிக டிதிக
ளரிய தேவர்கண் முனிவர்க ளிராக்கத ரசுரர்
பெரிய மானிட ரியக்கர்விச் சாதரர் பிசாசர். (உ)

உரக நாயக ராதியர் யாவரு முண்டுஞ்
சொரியு மிவ்வரை யின்னமுங் தொலைந்ததோ வில்லை
யருளி னலிது தொலைந்திட வயில்பவ ரொருவர்
வரவு காண்கிலே னுண்பவர் [3]யாரினி மண்ணில். (ஙூ)

[4]தேசி லங்குகின் ஞெடுபெருந் திரள்வரு மென்றே
யாசை கூரயான் [5]மடி ஞ் நூல்வழி யமைத்த
மாசி லோதனந் தெய்வவான் வழுதிகேள் கிடப்பி
னூசு மேலினி யென்செய்வ துரைத்தரு ளென்ன. (ச)

வேறு.

மங்கையங் கயற்கண் ணிக்கு வாய்த்தவன் முறுவல் கூரா
விங்கியா வரும முருந்தி யேகின ருயர்வான் முட்டப்
பொங்கிய [7]செங்கெ லன்னப் பொருப்பையார் தொலைப்பார் துங்கச்
செங்கயற் கருங்கட் பச்சைத் தேவிசொல் லென்ஞ முன்னம். (ஞ)

க. கன்கு - இன்பம். உறத்தலே மதித்தென்று இங்கே கூறியதுபோல, "தன்னிக ரில்லை யென்னுந் தடாதகைவலி" என்பர் பின்னும்; எ.

உ. உடு : நட்சத்திரம்.

ஙூ. இவ்வரையென்றது, சோற்று மலையை.

ச. முதுமடைநூல்-முதிய பாகசாஸ்திரம். தெய்வவான் வழுதி: விளி. 'தெய்வப்பாண்டியன்' (கட. கூ.)

ஞ. தேவி: விளி.

(பி - ம்.) 1 'பொசித்தே' 2 'போயபின்' 3 'யாவரிம்' 4 'தேசிலங்க' 5 'மடைமுதனூல்','மறைமுதனூல்' 6 'யாவருந்திரண்டே' 7 'செல்வச்சொன்றிப் பொருப்பை'

சார்ந்தவெம் பசியுந் தண்ணீர்த் தாகமு மலைப்ப கொந்து
காய்ந்தபே ருதரக் குண்டோ தரனெனுங் கடிய பூதம்
வாய்ந்தநீள் கவிகை கொண்டு வருதலா லிளைத்தே [1]னிந்த
வார்ந்தவெண் சொன்றிக் குன்றை யருளென வணைந்த தாங்கு. (சு)

இன்னல்கூர் பசியி னெனைந் திடருறு [2]மெண்ணை யும்பின்
[3]றன்னிக ரில்லை யென்னுந் தடாதகை வலியும் போக்கத்
தென்னவன் மதுரை மன்னன் சிறிதுளே [4]முறுவல் கூரா
வுன்னுடைப் பசிதான் றீர வுண்ணென வருள்சு ரந்தான். (எ)

வெள்ளிமால் [5]வரையே போலும் [6]வெண்மையு மிமவான் போலுந்
தெள்ளிய வுயர்வு முள்ள சோற்றினைச் சிறிது போழ்ந்து
வுள்ளதே னெய்பால் வாவி யுடைத்துவிட் டிருகை யாலு
மள்ளியுண் டதும டந்தை யதிசயித் [7]தச்சங் கூர. (அ)

விண்ணுயர் பூத முண்ணு [8]மிதலையு மிகவு மாழ்ந்த
தண்ணிய வயிறுங் கண்டு சங்கர னேவ லாலிம்
மண்ணிலோர் பூத முண்டல் கண்டன மற்று மொன்று
கண்ணுமே ஞமும் போதே முணவென நயந்தார் யாரும். (ஈ)

ஆகத்திருவிருத்தம் - உ0க.

எ.—ஆறழைத்த திருவிளையாடல்.

சொன்றிமலை [9]துய்த்துமுத ரத்தெழுசு டுந்தீ
யன்றைவட வைக்கனலெ னப்பெரித லேப்பக்
[10]குன்றினெரி கர்த்திடு[11]கு றட்டனுவ ருத்தா
நின்றுசிவ னேப்பரவி நேர்படவு ரைக்கும். (க)

தேவர்தொழு தேவவருள் சேரிறைவ மூன்று
லோவிறிரை[12]வாரி திய டுக்கலையு வந்தா
யாவியுறு சிற்றுணவி னுலறவி னீத்தேன்
மேவுபசி யின்னுமெனை விட்டதிலை யின்றே. (உ)

சு. சொன்றி - சோறு. பூதம் அனைந்தது.
எ. எண்மை - எளிமை. கூ. மிதலை - சோறு.

(எ)

க. துய்த்தும் - உண்டும். குறள் - பூதம்; தனு - உடம்பு.

உ. அடுக்களை-மடைப்பள்ளி. இறைவனுக்கு உணவாக விடத்தைக்கொடுத் தமையாற் கடல் அவருடைய அடுக்களையெனப்பட்டது. ஆலி-புகை. அதை-மிக.

(பி - ம்.) 1 'முற்றவார்ந்தனன்' 2 'மென்மை' 3 'தன்னிகரிலாதவந்தத்' 4'முறுவல்கூர்ந்தான் குன்னிடைத்தாகங்' 5'மலையே' 6'வெள்ளையும்' 7'அகமுட் கூர' 8'முணவையு' 9'துற்றும்' 10'குன்றினம்' 11குறட்டனும்' 12'வாரிதிகடுத் தனை'

என்றுமுறை யிட்டலற வீறுளள வுந்தாழ்
சொன்றிதிகழ் நான்குகுழி தோன்றியிட [1]முன்னஞ்
சென்றுகயி லேக்குவடெ னத்தனிதி ரட்டா
வென்றியின்வி ழுங்கியது மேதினிவி யப்ப. (கூ)

ஆங்கதுவி ழுங்கியபி ளவியெழு தண்ணீர்த்
தாங்கரிய தாகமுற லாலுட[2]ற ளர்ந்தூர்ப்
பாங்குள[3]ம டுக்கிணறு வாவிகள்ப ரந்தே
தேங்குபுன லுள்ளனகு டித்ததுதி கைப்ப. (ச)

இப்படிகு டிப்பவுமெ ழுந்தபரி தாப
வெப்பமம ராமலிறை வாவினோயி னேனுக்
கப்பினேய ளித்தருள கத்தடிமை யென்றே
செப்புமுன மைழத்தனர்செ ழும்புனலி யாறு. (ஞ)

கோகனக வாவிகள்[4]கு லத்தணுமு றித்தே
யோகையுற வீசுதிரை யோடுதுரை [5]சிந்தி
மாகமுற நீரிரும ருங்கினுகெ ருங்கா
வேகமொடு வந்ததெழ வேகவதி யாறு. (சு)

வே று.

கண்டனன் காட்டக் குண்டோ தரன் [6]கடி தியாற்றுட் புக்குத்
திண்டிறற் பேழ்வா யங்காற் துறிஞ்சினன் சென்ற நீரு
[7]மண்டுறு நீருஞ் சென்று மணலெழக் கண்ட மண்ணேர்
பண்டையின் வியந்தார் பாவை பழிச்சினள் பொறுத்தி யென்று.(எ)

கூ. ஈறு - பூமியின்கீழெல்லை. அன்னக் குழிமண்டபமென்று ஒருமண்ட பம் மதுரையில் மேலச் சித்திர வீதியிலுள்ளது; பூதமுண்டதிருவிளையாடல் விழாவடைபெறுதற்கு இடமாகவுள்ளது; இதிற்பலதெய்வவடிவங்கள் உண்டு; இதிலிருந்த குண்டோதரவடிவம் இக்காலத்தில், திருக்கல்யாண மண்டபத் தில் வைக்கப்பெற்றுள்ளது.

ச. மடு - மாசிடாராக்காத நீர்நிலை.

ஞ. பரிதாப வெப்பம் - மிக்கவெப்பம். அமராமல் - அடங்காமல். இறை வனைப் பூசிப்போர் முதலியவர் அகத்தடிமை யெனப்படுவர்; "அகத்தடிமை செய்யு மந்தணன்று னரிசித் புனல்கொண்டுவக் தாட்டுகின்றன்" (தே.சுந்தர. அரிசிற்கரைப்புத்தூர்.) அடியேன் அகத்தடிமையென ஒருசொல் வருவிக்க.

சு. எழ - மிக; "கருணைகூர்ந் தெழமுழங்கி" (சசா: ஞஞ.) வேகவதி யாறு - வையைநதி.

எ. சென்றநீர் - கிழக்கேசென்ற வெள்ளம். மண்டுறு நீர் - மிக்குவரும் வெள்ளம்; மண்துறுநீர், மண்ணிலே ஊறுகின்ற நீருமாம்.

(பி - ம்.) 1'ன்கு' 2'தளர்ந்தெம்' 3'மடுக்கள்கிணறுவிகள்' 4'குலத்தலே', 'குலத்தணி' 5'சிந்த' 6'கடியாற்றுட்' 7'மண்டுநீருஞ் சென்றகண்'

ஆரவுந் தொலையா வாழ்ந்த குழியுழை யயினி முற்றும்
வாரிதி யுருவா யாற்றின் வரும்பெருஞ் சலில முற்றுஞ்
சேரவுண் டிறுஞ்சி யொல்லைத் தேக்கிடி மவன்ப ணிந்தான்
[1] சாரரு மன்றல் செய்து சகமெறி யாள்வோன் முளில். (அ)

கைத்தொழிற் பூதங் கண்ட குளமெனக் [2]கண்டெய் தென்று
வித்தகன் பணிப்ப வெங்குங் [3]கண்டது வியப்பப் பூதம்
பத்திசேர் மண்ற ப்பும் பந்தர்நீ ராவி வாவித்
தத்துதெண் டிரைக்க ரைக்க ணிருந்தனன் சடங்குக் கந்தன். (கூ)

வாவியின் பெருமைக் கேற்ப வளமலி [4]கழனி கண்டு
தாவில்பல் [5]பதியுங் கண்டு தலைத்தொறு நாட தாக்கி
யோவற [6]விளக்க விப்பா லுயர்ந்ததோர் பதியை யங்கட்
காவண வாவிப் பேராற் காவண நல்லூ ரென்றார். (கo)

நாலிருங் குழியி லன்ன நாற்பெருந் திரளா யாக
மேலெழ விழுங்கித் தண்ணீர்த் தாகத்தான் மெலிந்து பூத
மோலிடக் கண்டு வேக வதியினை யொல்லை யங்கட்
சாலமுன் னழைத்தா னியாவ னவனடி சரண மன்றே. (கக)

ஆகத்திருவிருத்தம் - உகஉ.

அ. ஆரவும் - உண்ணவும். அயினி - சோறு. வாரிதியுருவாய்: "தெண்டிவருதி" என்பர்; ஈஅ: நிஈ.

கூ. பூதங்கண்டகுளம்: இது திருப்பரங்குன்றத்துக்கு வடக்கேயுள்ள தோரோரி; 'தென்காற்கம்வாய்' எனவழங்கும். குண்டோதரனுகிய பூதத்தால் வெட்டப்பட்டது; 'இதன்கரை பூதங்கண்டகரை' என இக்காலத்து வழங்கும். இதன் சமீபத்தில் 'கூடைதட்டிப்பதம்பு' எனச் சிறியமலையொன்றுண்டு. வெட்டிய மண்ணை யெடுத்துக் கரையிற் கொட்டியகூடையைக் குண்டோதரனுகிய பூதம் இதில் தட்டியதென்பர். கண்டது - செய்தது. பந்தரையும் நீராவியையுமுடைய வாவி. சடங்குக் கந்தன் - திருமணச்சடங்கை நடத்திய முருகக் கடவுள்; ச: உரி - ஆம் செய்யுளின் சூறிப்பைப்பார்க்க.

கo. காவணம் - பந்தர்.

கக. ஓலிட - முழங்க. "பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத், திருப்பெரு வதுவை பொருந்திய வக்காட், சொன்றிப் பெருமலே தின்றகனி தொலைத்த, காருடற் சிறுகைக் குறுந்தாட் பாரிட, மாற்ற தலைத்த நீர்கையடக்க, மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய, கூடலம் பதியுறை குணப் பெருங் கடவுள்" (சூல். கச.)

(பி - ம்.) 1 'சார்வரு', 'சார்வுறு' 2 'கண்டிடென்று' 3 'கண்டுநீண்டது வெம்பூதம்' 4 'கழனிநாடுங்' 5 'பதிகண்டிடப்பால்' 6 'விளக்குவித்தான்'

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

வயமுறு மன்னவ னுகும் வள்ளல்பின்
னையனெடென் செய்தன னெனக வின்றனீர்
பயனுறு முனிவிர்காள் பரவ சத்தைவிட்
டெயாதி சயமுள 1துரைப்பல் கேண்மினே. (க)

கனவரை வில்லினன் கதம்பக் 2கானினன்
றனதுயர் மனத்தினே காளிற் முழ்குழல்
புனைவழி பாட்டினுற் புவியில் வேறொரு
நினைவறத் தன்னுடை நினைவி னுக்கினள். (உ)

சதமுறை துதித்தொரு நாட்ட னித்துநின்
3னதர்பகி மடியனேன் முய மங்கலி
யுதயியின் மூழ்குவா னுவகை கூர்ந்தன
ளிதுதிரு வுளத்தடைத் திரங்கி டென்றனள். (ஊ)

4நயந்தவை யாவையு நல்க வல்லவன்
பயந்தரு காரியம் பகரக் கேட்டுள
மியைந்துகே ளாதுபோ லிருப்ப நாயகி
வயங்கொளி 5மதிமுகஞ் சால வாடினுள். (எ)

மற்றவண் மதிமுக வாட்டங் காண்டலுஞ்
சற்றுளே நகைசெய்து தரும நாயகன்
முற்றுநா மிருந்தது 6மோன மாகவுன்
சொற்றருந் திருமுகச் சோகங் காணவே. (ஏ)

க. பூதத்திற்கு அன்னக்குழியும் வையையும் அழைத்தளித்ததுபற்றியும், மாமிக்கு எழுகடலழைப்பது பற்றியும் இறைவனே வள்ளலென்றார். பரவசத்தைவிட்டுக் கேண்மின்.

உ. கதம்ப்க்கான் - கடம்பவனம். நாளில் - காலக்கிரமத்தில்; கஉ: கக. மனத்தினைத் தன்னுடை நினைவின் ஆக்கினள்.

ங. சதமுறை - பலமுறை; ஙஏ: ஙக. அதர்டும்-வழிப்படுகின்ற. தாய் அமங்கலி. உததி-கடல். திருவுளத்தடைத்து - அங்கீகரித்து; திருவுளம்பற்றி.

ச. பயம் - பிரயோசனம்.

ஏ. மோனமாக இருந்தது. முகச்சோகம் - முகவாட்டம்.

(பி - ம்.) 1'உரைப்பக்' 2'கானவன்', 'காவினன்' 3'அதர்வுறு' 4'நயந்தன', 'நயந்தரு' 5 'தருமுகஞ்' 6 'மோனமாகியுன்'

மாதர்க டிலகமே மாசில் கற்புடைக்
கோதையே யெனதுளங் கொண்ட தெய்வமே
யேதமீ யொழி1யொழி யேழு வாரியு
மாதரத் தழைப்பல்கா ணெனவ ழைத்தனன். (சு)

தகநுரை சிதறிவெஞ் சண்ட வெண்டிரை
யிகலிவா ளெடுபொரக் கலித்தி லங்குசெந்
தொகுமணி யொளியினுற் சிவந்து துண்ணென
மகர2மீ னெழவெழ வந்த வாழ்கடல். (எ)

பாங்குடை மதுரையம் பதியு ளோரெலா
3மாங்கவை வருதல்கண் டதிச யத்தொடுந்
தாங்கரும் பயத்தொடுஞ் சார்ந்து தாணுவே
யாங்களென் 4செய்குவ மெனத்து திக்தனர். (அ)

5உற்றெருங் குறவரு மூததி யாவையு
மற்புத ஞாணையா லங்கி மூலையில்
விற்பொலி கடலென விளங்கி மூற்றிகழ்
பொற்புறு தடத்திடைப் புகுந்த மர்ந்தவால். (கூ)

ஓதரு 6மனேகர முடைத்த டாதகை
யாதரத் தடிபணிந் தருளா வாழ்த்தின
ரூதிலேழ் கடல்களுஞ் சேர்த லாற்றடம்
பூதலத் 7தெழுகட லெனப்பொ லிந்ததே. (கo)

ஆகத்திருவிருத்தம் - உஉஉ.

சு. ஏதய - துன்பம்.

எ. சண்டம் - வேகம்.

கூ. அங்கிமூலை - அக்கினிமூலை. தடம் - சிவதீர்த்தம். "மாமி யாடப் புணரி யழைத்த, காமர் கூடற் கிறைவன்" (கல். உகூ.)

கo. மனேகரம் - மகிழ்ச்சி. காஞ்சனமாலைக்காகவருவித்த ஏழுகடல் களும் தன்பால்வந்து அடங்கப் பெற்றமையின், சிவதீர்த்தம் இப்பெயர் பெற்றது; இதன் கிருதிமூலையில் மிகப்பழையதாகக் காஞ்சனமாலை கோயி லொன்று உள்ளது.

(பி - மீ.) 1'பொழிலேழு' 2'நீரொழ' 3'ஆங்கதுகண்டுகண்டு' 4'செய்குவே மென' 5'உற்றெழுங்குற' 6'மனேரதம்' 7'எண்கட'

கூ.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

மாண்டகு கடல்கள் கண்டு வழுத்திமுன் முதிக்கு மாதை
யீண்டுநீ போயுன் மாதா வியைந்தபே ராசை தீரப்
பூண்டகல் வரங்க ணல்கும் புணரியின் மூழ்கு வித்து
மீண்டுவா வென்றான் மீளா வழிதர வல்லான்மெல்ல. (க)

ஆங்கது கேளா முன்ன ரக[1]மகிழ்ந் தியாயின் பாற்சார்ந்
தீங்கொரு கடலா டற்கென் றெண்ணினே யீதோ ழிந்தின்
றேங்குமேழ் கடலும் வந்த வொருகணத் தெனது கேள்வன்
பாங்குறும் பெருமை யாலிப் பரவையு ளாடி கென்ன. (உ)

பரிவுகூர்ந் தருட்பெம் மானைக் கணவனு வுடைய பாவாய்
பொருவில்கா தலனே டாதல் புதல்வனே டாத லீரும்
வரிசையான் கன்றே டாத லாதித லன்றி வங்க
நரலையுட் டனிபுக் காடார் மடந்தைய ரென்ப ரென்றாள். (ங)

என்றியாய் மொழிந்த மாற்ற மிறைக்குவந் துரைத்தா டற்கு
[2]மன்றன்மா கணவ னில்லை மகவில்லை யென்ற மூங்க
வொன்றுகா தலனே டாடி முத்தம தீர்த்த மாக
வென்றியுன் றங்தை தன்னை யழைக்கின்றே மெலியே ளுள்ளம். (ச)

அவையுறு துறக்க நீங்கி யவனிமீ திழிந்த வாறே
தவமுறு நம்ம மாமி [3]தணிவிலா [4]தரங்கெ டாமற்
புவிபுகழ் பெருங்கல் லோலப் புணரியின் மூழ்கச் சொல்லென்
றுவகைமா மடிக டம்மை யழைத்தன னுலகங் காண. (ஞ)

க. வழுத்தி - சொல்லி; "வழுத்தீர் மதிச் செங்கண்மால்" (அழகர்கல. எஎ). மாதா - தாய். புணரி - கடல்.

உ. பெருமையால் வந்த.

ங. காதலன் - கணவன். நரலை - கடல். மடந்தையர் ஆடாரென்பர்.

ச. யாய் - தாய். மன்றல் - கலியாணம்.

ஞ. அவை - சபை. நம்ம - நம்முடைய; தனித்தன்மைப்பன்மை. கல் லோலம் - அலை. மாமடிகளென்பது மாமனுரென்னும் பொருளைத் தருவதொரு சொல்; "நின்பால் வந்தனன் மாமடி" (உஉ: கஉ); "ஊத்தைத் தலைநீத் துய்ந் தொழிந்த வொருமா மடிக ளொருமுருட்டு, மோத்தைத் தலைபெற் றமைபாட மூரிக் கபாடத் திறமினே" (நக்கீக. சசு); "மாமடிகளிடு சாபமும்" (மீனுட்சி. அம்புலி. சு.)

(பி - ம்.) [1]'மகிழ்ந்தாயின்' [2]'மன்றமர்' [3]'தனிவிரதங்' [4]'அகங்கோடாமற்'

வேறு.

மண்டு செல்வ மலயத் துவசனைக்
கண்ட மானிட ரன்றிக் கணங்களுங்
கொண்டல் வண்ணனுங் கோகன கத்தனு
மண்டர் கோனு மதிசய முற்றனர். (சு)

வந்து போற்றுதல் கண்டு மகிழ்ந்துபோற்
[1]றந்த மாம்கட் கன்புறக் காட்டியே
யுந்தை யோடுமுன் ருயை [2]யுவப்புற
மூந்தை யாழ்கடன் மூழ்குவி யென்றனன். (எ)

ஏத மீங்கு தடாதகை யின்றுமீ
காதல் கூர்ந்த [3]கணவனெ டாடென
வாத ரித்த கணவனே டாங்கவ
ளோத வேழ்கட லாடி யுவந்தனள். (அ)

மன்று ணுயக வாழ்ந்தனம் வாழ்ந்தன
மென்று [4]வாழ்த்தி யிறைஞ்சல்கண் டித்தம
னன்று தன்னுல கீந்திட வாங்கவர்
சென்ற டைந்தனர் தெய்வத் தனுக்கொடி. (கூ)

ஆகத்திருவிருத்தம் - உகக.

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

மன்னர்க் கரசன் மலயத் துவசன்
றன்னற் புதமண் முழுதுந் தனியே
பொன்னிற் [5]றிகழும் புரமீ தெனவே
[6]யன்னப் பெடையோ டரசாண் டனனே. (க)

எ. உந்தை = உன்தந்தை.

அ. தடாதகை: எழுவாய்.

கூ. தன்னுலகு - சிவலோகம். தெய்வத்தனு = திவ்யசரீரம்.

(கo)

க. "நாடோர் நகரென" என்பர் பின்; கக:டு; "பூமியு மயோத்திமா நகரம் போலுமே" (கம்ப. அரியேற். எ.)

(பி - ம்.) 1 'அந்தையாய்மகட்கு' 2 'உறப்புற' 3 'கடலிடையாடென' 4 'பாதத்தினைஞ்சல்' 5 'திகழோர்' 6 'அன்னப்புடையோன்'

அணியார் தமிழும் மருநான் மறையும்
பணிவே தியரும் பசவுங் திசையாள்
குணமே வியதென் னவர்தங் குலமுங்
தணியா வறமுங் [1]தழைவெய் திடவே. (உ)

தாரார் குழன்மங் கைதடா தகைபா
லாரா வமுதா னவனின் னருளாற்
போர்வே லெனவே பொருவில் புதல்வன்
[2]பேரார் சடையோ டிபிறந் தனனே. (ங)

மெய்யார் சுரரும் விதமா ஈரரு
முய்வான் முழவெங் குமொலித் திணிதா
லெய்யா டல்புரிந் துலங் கடொறும்
பொய்யா மலர்மா ரிபொழிந் தனரே. (ச)

[3]உறவுக் கிரமா னதுகொண் [4]டிருவ
மிறைபொற் பமர்கை யிலெடுத் தணையா
மறையுற் ற[5]நெறிக் கண்வரும் பெயர்பே
ரறிவுக் கிரனென் னவறைந் தனனே. (ஞ)

உளமா ரையுரா ஞமுருக் கியுவங்
தளவார் கூலையா வுமுணர்ந் தழகா
லிளமா தர்மயங் கவிருந் துலவா
வளர்மீ திவிளங் கவளர்ந் தனனே. (சு)

அறிவால் விறலா லருளா லுயர்பா
னிறைவா லிவனுக் கிவனே நிகரென்
றுறநீ டிவிழா வினிதெய் துலகாண்
முறைசேர் மணிமா [6]முடிசூட் டினனே. (எ)

க. உக்கிரப்பெருவழுதியார் சடையோடு பிறந்தனரென்பதை, "ப.ஃறலை ப்பாந்தட் சுமைதிருத் தோளிற், றரித்துல களிக்குந் திருத்தகு தாளி,னெடுமாட் டிருவயிற் றருஞ— னிருத்த, நெடுஞ்சடை யுக்கிரற் பயந்தரு ணிமலன்" (கல். எஅ) என்பதனாலும், "வேலோன் விமலதடா தகைவயினுக் கிரனு ரென்றோர், கன்மகவாய்ச் சடையொடுமுற் பலிக்க" (கடம்ப. இலீலா. கo) என்பதனாலும் உணர்க.

ச. ஒலித்து = ஒலிப்பித்து. செய்யாடல் - செய்விழவு.

ஞ. உருவம் உக்கிரமானதுகொண்டு எடுத்தபொழுது திண்ணென்றிருந்தது பற்றிக்கண்ணப்பருக்குத் திண்ணனெனப் பிள்ளைத் திருநாமமிடப்பட்டதென்பது இக்கே அறியற்பாலது.

எ. முடிசூட்டியவர் சுக்தரமாதர்.

(பி - ம்.) [1]'தழைசெய்திட' [2]'பேரோர்சடை' [3]'அறவுக்கிரம்' [4]'உருவை, யிறை' [5]'நெறிக்கணவற்பெயர்' [6]'முடிமுன்னின்னே','முடிசூடினனே'

வேறு.

எண்பயிலு நெடுஞ்சடிலம் பிறங்குதலா லிலங்கிவனுக்
கொண்புவியோர் கொண்டாடி மூபகயனத் திருநாம
மண்பரவு கோச்சடில வருமனென லியையுமென
விண்பரவ விளங்குவித்தான் [1]விதுகுடுமிப் பெருவழுதி. (அ)

ஆகத்திருவிருத்தம் - உருக.

கக.—வளைவேல் செண்டுகொடித்த திருவிளையாடல்.

மூன்ன [2]மிந்திரன் கடல்வட மேரு முந்துதம் வல்வினை வசத் தான், மன்னு கம்முய ராணையைக் [3]கடப்பர் மதித்தொவ்வொர் கால த்தி லென்று, பின்னர் யாவையு முணர்பவ னதனைப் பேரருட் டிரு வுளத் துணர்ந்து, சொன்ன மூவர்தம் பெருவலி தொலைப்பான் சோர் வறச் சிறிதுளே முனிந்து. (க)

வேறு.

அறமலி தனது புதல்வனுக் கிரனுக் கருள்சுரந் தரும்புக ழோங்க, மறுவிலோர் வளையை யிந்திரன் பெரிய மவுலியி லறையென வளித் துச், செறிகடல் வலியை யறவெறி யென்று சிறந்ததோர் வேலினை நல்கி, யறிவட கிரியைப் [4]பந்துபோற் சுழல வடியெனச் செண்டை யுங் கொடித்தான். (உ)

ஆதிமா மரபின் வருவடி வணங்கை யறவெறி மணம்புணர் வித் துக், காதல்கூர்ந் தறத்தின் றகுதிசேர் புவனக் கனமெலா மவன்றலை வைத்து, நீதிமூ வுலகு மதிசயித் திரங்க நிறைமலி தடாதகை யோடு, மாதர முறுங்க ணுதிப ரோடி மறைந்தனன் பிறங்கவா லயத்து. (ங)

அ. சடிலம் - சடை. கோச்சடிலவருமனென்னும்பெயர் சிலாசாசனத்திற் பரக்கக்காணப்படுகின்றது. விதுகுடுமிப் பெருவழுதி - சுந்தரமாறர்.

(கக)

க. காலத்திற் கடப்பர். மூவர் - இந்திரன், கடல், மேரு. இச்செய்யுள் கருத்துடை யடைகொளணி.

உ. வளை, செண்டு என்பன ஆயுத விசேடங்கள். அறிவடகிரி - எல்லா ராலும் அறியப்படும் மேரு.

ங. 'வடிவணங்கு' என்பது பெயர்; கணநிபர் - கணங்களின் தலைவர்.

(பி - ம்.) [1]'விதுக்குடுமி' [2]'முன்னு மிந்திரன்' [3]'கடப்பர்கண்' [4]'கற்தகம் போலவடியென'

வேறு.

ஆண்டகை தெய்வ வீரெட் டாண்டணி மவுலி சூடித்
தூண்டுமா வரசர் போகத் துய்த்துல காள லாலே
பூண்[1]டபி டேகச் சொக்கன் புழுகுகெய்ச் சொக்க னென்னு
மீண்டியர் நன்னு மங்க ளெங்களுஞும் [2]பிறங்கு மாலோ. (ச)

மன்னவர் முடிக வித்து மருவிய கணங்க ளோடு
நன்னெறி யோங்க நாடோர் நகரென ஞாலங் காண
வின்னர சாள லாலே யமன்றிசை யாய வெய்ய
தென்னவன் பாண்டி நாடு சிவலோக மான தன்றே. (நு)

ஆகத்திருவிருத்தம் - உசச.

கஉ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.



சீலமார் வருண ராசன் றிறத்தினுன் முன்னோர் கால
மாலவா [3]யழகார் மெய்யன் பெருமையை யறிவா னெண்ணி
ஞாலமீ கைக்கொ ளென்று நளிபுனற் பெருக்த ரங்க
[4]வேலையை யேவ வேலை வேலைகல் வேலை யென்று. (க)

உரனெடுங் [5]கணத்துப் போதி னெலித்துல கனைத்துங் கொள்ள
வரனுறு தேவர் சித்தர் மானிடர் நாகர் முற்றும்
வெருவரு மூள்ளத் தோடு மாலவாய் மெய்யன் செய்ய
திருவடி சரண மென்ரு லுய்யலா மென்று சேர்ந்தார். (உ)

காலமல் லாத காலத் துதிதிவா னுறக்க லித்து
மேலெழு வாரா நின்ற தென்செய்கோம் விண்ணோர் கோவே

ச. அபிடேகச்சொக்கன் - இரீடத்தையணிந்த சொக்கநாயகர்; அபிடேகம் - இரீடம்; வைஷ்ணவஸம்பிரதாயத்திலும் இப்பெயர் இப்பொருளில் வழங்குகின்றது. 'அபிடேகச் சொக்கர்' (மதுரைக்கல. சச, நிங); 'புழுகு கெய்ச் சொக்கர்' (மதுரைக்கல. நிஉ, நிங; மீனுட்சி. பின்னை. ஊசல், க - கo).

நி. இச்செய்யுள், "அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த, வப்பார் சடையப்பன்" (திருவா. திருவம்மானை, கக) என்னும் திருவாக்கின் பொருளைத் தழுவியது.

(கஉ)

க. 'வேலையையேவ...வேலை' மடக்கணி; வேலை-கடல், காலம், தொழில்.

உ. கொள்ள - கடல்கொள்ள.

*"உம்பரு நாக முலகுந் தானு மொலிகடல் சூழ்ந்த வுலகத் தோருமம்புத நால்களா னீடுங் கூட லாலவா யின்க ணமர்ந்த வாறே" (தே).

(பி - மீ.) 1'அவிடேக' 2'பிதங்கிற்றன்றே' 3'அழகார்சொக்கன்' 4'வேலையையேவவேலை' 5'கணத்தினுலித்துலகனைத்தினையுங்கொள்ள'

யேலவே யருள்செய் யாயே லிறப்பமிங் கெவரு ஞாலஞ்
[1]சாலமூற் றுங்கா லத்து நீயலா லுண்டோ தம்பம். (ஈ)

என்றடி தொழுது வீழ்ந்து முறையிட விரங்கி யென்று
* "அலைகடன் மீமிசை நடந்தாய்போற்றி" (திருவா. போற்றி. உ0அ); "ஆராவமுதா யலைகடல்வாய்...வாரியனை" (திருவா. திருவம். உ); "மணிவலை கொண்டு...பிரானுவாரே" (திருவா. திருவார்த்தை. ங); "ஏதில் பெரும்புக... பிரானுவாரே" (திருவா. திருவார்த்தை. அ); "மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடலே" (திருவா. திருப்படையாட்சி, க.)

(பி-ம்.) 1'பொருப்பரசன்' 2'தனிகேட்ட' 3'விளம்பினன்' 4'மறவலியிழி 5'தாழ்திக்கையின்றி', 'அநாழிதிக்கையின்றி' 6'அழகிதிக்கென்ன'

மறைப்பொருள் கொளுங்கா லியார்க்கு மனமயக் குண்டா மீது
பொறுப்பதல் லாலி யாயைச் சபித்தனே யெனப்பொ ருளுய்ச்
செறுத்துயர் திருக்கை மேவுந் தெய்வவா கமத்தை வந்து
[1] பறித்ததை யன்றிக் காணக் கிழித்தனன் பலகைக் கந்தன். (கூ)

ஆங்கது கண்டு நீயு னறிவினே மதித்து வந்து
[2] காங்கெயா புத்த கத்தைக் கிழித்தனே கையில் வாங்கி
யோங்குநம் மதுரை மன்னு முயர்குல வணிக னுக்கோர்
மூங்கையம் புதல்வ னெகப் பிறத்திபோ வெனமு னிந்தான். (எ)

வேறு.

இத்தகைமை யிற்றிகழு மெல்லியினி லுட்புகவி லங்குகண நாத
னெருவன், முத்தனது கண்டுகடை விட்டதிரு நந்தியையு னிந்[3]தி
னிய சாப மிடுவா, னத்தியுழை பிற்சுறவு ருக்கொடிபு குந்துலவி டாக
மமை டுத்தெ னுமுனம், புத்தியுடை நந்தியுமு தித்துலவி னன்பெரிய
புத்தக[4]மெ டுத்து முடியில். (அ)

வேறு.

எழிலுமை கலங்கி யிறைஞ்சல்கண் டிரங்கி யிலங்கதி யரைய
னம் மன்ப, னுழையிடை யினிய புதல்வியா யுதித்தா னுலகுளோர்
காணவந் தனையா, மழகுற மணந்து காவனந் தியையு மாட்கொள்வ
மஞ்சனீ யென்று, செழுமையின் விடுப்பத் தொழுதருள் பெற்றே
செட்டியுஞ் செட்டியா யுதித்தான். (கூ)

தடமலி செல்வத் தோங்கதி யரையன் றவப்பெரும் [5]பயத்தி
னுற் போந்து, [6]புடையுமை யணங்கு தோன்றுமுன் பெரிய [7]போற்
றரு மலயவ நிரம்ப, நடமலி தந்தை தாயறி சயித்து நரர்[8]வடி வன்
றியே தெய்வ, வடிவொடும் விளங்கு [9]மிவடனக் கியைந்த மாமண
வாளனு ரெனுங்கால். (கo)

சு. பல கை - பன்னிருகைகள்.

எ. மூங்கையம்புதல்வன் - ஊமைப்பிள்ளை.

அ. கணநாதனெருவன் உட்புக. அத்தி - கடல். ஆகமமெடுத்து உலவிடி. புத்தி - ஞானம்.

கூ. அதியரையன் - வலிவலச்சாதிக்கு அரசன்; 'அதிபத்தர்' என்பதனது மூணர்க; கo, கஅ. இவ்வரசனுடைய ஊரின் பெயர் விக்கிரமமென்று திருவுத் தரகோசமங்கைப்புராணம் தெரிவிக்கின்றது. காவல்கந்தி. செட்டி-முருகக் கடவுள்; "செட்டியப்பனே" தே.

(பி-ம்.) 1 'பறித்தலுமன்றி' 2 'காங்கையா' 3 'இனேயசாபம்' 4 'முடித்து' 5 'பலத்தினுற்' 6 'புடையுழை' 7 'போற்றரும் வைபவம்' 8 'வடிவின்றியே' 9 'இவடனுக்கியைத்த'

பிறிவிலா வரனும் பிறிவிலா மயிலைப் பிரிந்தினி திருக்கமாட் டாம, லெறிவலை வாணர் தம்முருக் [1]கொண்டாண் டெய்திவாழ் பர தனே ரண்ணி, நெறியுடை யவனே யெனக்குநின் மகளை யளிப்பையே னினக்குரன் றென்ன, வறிவுளோன் விரும்பி வடிவனு யிருந்தா யார் கொனீ யறியவோ தென்ருன். (கக)

துன்றெயின் மதுரை நகர்வரும் பெரிய தொல்லைமீன் வாணி கப் பிள்ளை, வன்றிறற் றெழிலா [2]லுயர்ந்தவ னின்பால் வந்தனன் மாமடி யென்ன, நின்றவ னேயுற் றுரையினு லாகா நின்றெழில் காண மீன் வீசு, முன்றிகழ் வலையை முடியென மறைநூன் முறைதரு கயி றுகைக் கொண்டான். (கஉ)

வே று.

வெல்லவுட் கயிறு [3]வாங்கு கயிறிட்டு விரலா ழிக்கண் பல்விதக் கண்கள் சேர்த்துப் பாரமீன் வலைக்க வல்ல வெல்லைவிட் டிருப்புப் பார வினமணி விளிம்பு றக்கோத் தொல்லைமீன் வலைமு டிந்தா னுற்றவ ரதிச யிப்ப. (கங)

ஏர்படப் பிடித்தற் காமீ னெங்குள தென்ன மாம னூர்வரு மரக்க லங்க ளுலாவிடா வகையு டைத்துச் சீர்மைமீ னனைத்துந் தின்று திசைதொறு நடிக்கஞ் செய்திவ் வாரியுள் [4]வரைபோ லோங்கித் திரிவதோர் மகரமுண்டால். (கச)

[5]உற்றவ வதனுற் சால [6]டிடித்தன முளமஞ் சாமன் மற்றது தனைப்பி டிக்க வல்லையேல் வலைஞர்க் கெல்லாங் கொற்றவ னீயே மற்றென் குலக்கொடி தனையு மின்றே வெற்றியி னினக்க [6]ளிப்பன் வேண்டுவ சிறக்கச் செய்தே. (கரு)

என்றது சொலவி யைந்தார் கலியினுள் வங்கத் தேறிச் சென்றணி வலைதோ ளேற்றிச் சிலைத்துமேல் வளைத்து வீசி

கக. பிறிவு - பிரிவு. வலைவாணர் - வலைஞர். பரதன் - வலைஞன்.

கஉ. மாமடி - மாமஞர்; விளி; கங: நு-ஆம் செய்யுட்குறிப்பைப் பார்க்க. மறைநூல் முறைதரு கயிறு - வேதமாகிய நூலால் முறையே உண்டாக்கப்பெற்ற கயிறு; வேதக்கயிறு.

கங. வாங்கு கயிறு - சூறக்கோலித்து வாங்கும் கயிறு. கண்கள் - வலையின் இடைவெளி. மணி - உருண்டைகள். "ஓரு சிறுகுடிப் பரதவனுகிப், பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி, நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த, நிறையரு ணுயகன்" (கல். கக.)

கரு. மிடிதனம் - வறுமையுற்றோம்; "இடைமிடித் தார்தமைத்தேடி" (திருவேங்கைக்கோவை, கக.)

(பி - ம்.) 1 'கொண்டேயெய்தி' 2 'உயர்ந்தவன்கேட்டு' 3 'வாங்கிக்கயி றிட்டு விரலாளிக்கண்' 4 'மலைபோல்' 5 'உற்றதுவதனுல்', 'உற்றதாங்கதனுல்' 6 'அளிப்பல்வேண்டுப'

வென்றிகொண் மகரந் தன்னைப் பிடித்துமெய்ப் புத்த கங்க
[1] ளொன்றுமே காமற் கைக்கொண் [2]டேறிஞ ணும்பர் போற்ற. (கசு)

நந்திதன் னுருவம் பெற்று நயந்தடி வணங்கி நிற்ப
வந்தடி தொழுதார் போற்றி வலிஞர்க ளதிச யித்துச்
செந்துவர் வாய்க்க ருங்கட் சிற்றிடைப் பெரிய வல்குற
பைந்தொடி யணங்கைச் சாதிப் பண்பினின் மன்றல் செய்தான். ()

வே று.

காதலியோ டதியரையன் கனகமழை பொழிந்திறைஞசி
யாதிகொளற் கென்னதவஞ் செய்தேனம் மணங்கையென
மாதிஞெடி நந்தியொடும் வந்துடனு கமமெடுத்துப்
போதுகண [3]நாதரொடும் போயினன்வான் மிசைகாண. (கஅ)

ஆங்கணைந்த பெருங்கிளைஞ ரருங்கனவோ மாயையோ
வீங்கிதுதா னறியகிலோ மிறைபணியே யெனத்துதித்து
நீங்கரிய கல்குரவு நீங்கியிருந் தனர் வருணன்
வாங்கருமன் பொடுதுதித்தா னனிபொழிந்து மலர்மாரி. (கரு)

சோதியுருப் பெற்றவுமை தொழுதியலா கமங்கடமை
யாதரவிற் கேட்பவினி யருட்கடலே குணக்குன்றே
யோதியருள் செயல்வேண்டு முத்தமனே முத்திதரு
மாதிமூனி வித்தகனே யெனவேத்த வருண்மூர்த்தி. (உ0)

வே று.

உன்னரும் விசேட மிக்க வுத்தர கோச மங்கை
யென்னுமப் பெருந்தா னத்து ளெய்திபாங் கிறைவி யைப்பார்த்
தன்னமே விளம்பக் கேளென் முகிலை முத்தி கல்குர்
தொன்னெறி யாக மங்கள் சுரிகுழற் கருளிச்செய்தான். (உக)

அருந்தவம் புரியா முன்ன மறுபத்து காலவ ரங்கட்
பொருந்தல்கண் டெமக்கு ஞானம் புகன்றருக் காட்டென் றேத்தத்
திருந்துப தேச நோக்காற் செய்துமா முனிவ ருய்யப்
பெரும்பொரு ளுரைத்தான் மன்றற் பேதையோ டிருவங் காட்டி. ()

கஅ. "அதியரைய மங்கை யமர்ந்தாள் தன்னை" (திருநா. தே. திருவதிகை) என்ற திருவாக்கு, சிவபெருமான அதியரையன் திருமகளை விரும்பி மணஞ்செய்தருளிய இவ்வருமைத் திருவிளையாடலையும் புலப்படுத்தி விளங்குதல் காண்க. ஆதி: "ஆலவாயி லுறையுமெம் மாதியே" (திருஞா. தே. க-கo.)

கசு. இறைபணியே - சிவபெருமான் திருவிளையாடலே.

உ0. ஆதிமூனி: விளி.

உஉ. புரியா - புரிந்து. "எண்ணெணுத்தமப்பத்தர்" என்பர் பின்னும்; உசு. பெரும்பொருள் - மகாவாக்கியப்பொருள். மன்றற்பேதை - மங்களேசுவரி. திருவுத்தரகோசமங்கைப்புராணம், அத்தலத்தில் தவஞ்செய்த முனி

(பி - ம்.) 1 'ஒன்றுபோகாமற்' 2 'ஏகினுணும்பர்வாழ்த்த' 3 'காதனெடும்'

வித்தக வேடங் காட்டும் விமலனீள் புணரி சூழ்ந்த
வெத்தலத் தினுஞ்சி றந்த தித்தல மே[1]யென் றெண்ணெ
ணுத்தமப் பத்தர் தங்க ணுத்தரா கமகோ சங்கள்
வைத்துமா மதுரை நோக்கிப் போயினன் மாதி லேடிம். (உங)

அன்றுமைக் கருளிச் செய்த வரியவத் தரகோ சங்கண்
மன்றுற வைத்த லாலே வாகவூ ராளிபோற்று
மொன்றிய நகர்க்கு நாம முத்தர கோச மங்கை
[2]யென்றுமை மங்கை பேரால் வழங்கிய [3]திலங்க வெங்கும். (உச)

ஆகத்திருவிருத்தம் - சசஅ.

உங.—வளையல்விற்ற திருவிளையாடல்.

முக்கண னுல வாயன் முன்னமோர் காலஞ் சென்று
தக்கமா முனிவர் வாழுந் தருமவாச் சிரமந் தன்னுட்
புக்குநற் பிச்சை கொள்ளுங் காலையிற் [4]புனித மாதர்
மிக்கபே ரெழில்கண் டியாரும் விரும்பியொள் வளையி ழுந்தார். (க)

விரும்பிய மடவார் நெஞ்ச வேறுபா டறிந்து கேள்வர்
பொருந்தலின் றெமக்கிங் காகீர் பொழிறிகழ் மதுரை மன்னுந்
திருந்திய வணிகர் தூய்மை சேர்குலத துதித்தங் கெல்லாந்
தரும்பரன் றன்னைச் சாரு மென்றவர் தமைச்ச பித்தார். (உ)

ஆங்கவர் முன்னர்ச் செய்த வருந்[5]தவப் பயத்தாற் போந்து
வாங்கருஞ் செல்வத் தோங்கும் வணிகர்தங் குலத்துட் டோன்றி
யோங்கிய வடிவத் தோடு மூலகுளோ ரதிச யிப்ப
நீங்கரு மொழுக்கத் தோடு நிரம்பினர் [6]பிறங்க வங்கண். (ங)

முன்னவ னியாவும் வல்ல முதியவன் சமாதி யாலே
பின்னரொண் புதல்வ ரின்றி யினைவரும் பெண்ணே யாக
மன்னிய வினிமை கூர்ந்த வணிகர்கண் டியார்க்க ளிப்பே
மன்னிய ரல்லா ரில்லை யென்றுளத் தழுங்கிப் புக்கார். (ச)

வர்கள் ஆயிரவரென்றும் அவர்களுக்குக் காட்சி காடுத்தருளியவருடைய திரு நாமம் காட்சிகொடுத்த நாயகரென்றும் கூறுகின்றது; அப்புராணத்துள்ள பார்ப்பதி தவம்புரிந்த அத்தியாயம் பார்க்க.

உங. பத்தர் தங்கண் - பத்தரிடத்து. உத்தர ஆகம கோசங்கள் - விடையாகிய ஆகம புத்தகங்கள்.

(உங)

சு. சமாதி - சங்கற்பம். [வாய்.)

* "வளைவிலியரு மெல்லார்க்கு மருள்செய்தானே" (தே. திருநா. திருவால

(பி - ம்.) [1]'என்றெண்ணி' [2]'என்றெழின்மங்கை' [3] 'இலங்கயாங்கும்' [4]'புனிதர்மாதர்' [5]'தவப்பலத்தாற்' [6]'பிறங்கவன்றே'

துப்பமர் மெய்யன் வையந் தொழுபவன் வணிக ஞகி
யொப்பருங் கங்கை மாதை யுமைமாதை யொளித்துப் போந்தே
யப்பெருங் கன்னி மாரைப் [1]பரிசிப்பா ஞசை கூர்ந்து
செப்பரு மதுரை தன்னுட் சேர்ந்தனன் வ்ணிகர் வீதி. (நி)

கழையதண் டேன்றி மூன்று விரல்படக் கடிநீ றிட்டுத்
தழையவொண் கலிங்கஞ் சுற்றித் தனிமுடிச் சாத்துஞ் சாத்திப்
பழையதோர் குடைக ளித்துப் பசும்பைதோ ளேற்றிச் செங்கை
யழகெழ மோதி ரங்கா ணிகொள்கண் டிகைக டாழ. (சு)

வேறு.

இளமை மெய்வி டாதி லங்க விருமி யுள்வ ளேந்துசொற்
றளர வெள்ளே ரைர[2]பு னேந்து சால வீழ்வி ருத்தஞ
யளவில் வண்ண வளைகள் கொண்ட ரும்பெ ருந்தெ ருத்தொறும்
[3]வளையல் கொள்ளும் வளையல் கொள்ஞ மென்று கூறி வந்தனன். ()

வந்துகூறும் வணிக னல்ல [4]வடிவி ஞல நங்களே
யிந்த மாய ரைப ரந்த தின்ன தென்ற றிந்திலோஞ்
சுந்த ரேசன் மாயை யோதெ ரிந்தி டாதெ னச்சொலிப்
[5]பந்த மாற யாவ ரும்ப ழிச்ச நின்று லாவினன். (அ)

இணையில் வண்ண வளையல் கண்டெ னக்கெ னக்கெ னப்பகர்ந்
தணிக லன்கள் பொலிய வும்ம நங்க ளன்ம னங்குலக்
குணர்வு மின்றி மடனு மின்றி யொல்லை வந்த மூல்லைசேர்
வணிகர் தங்கண் மங்கை மாரை வளையி ஞல்வ ளைத்தனன். (கூ)

கருதி நின்று தொழுது செய்ய கைத்த லங்க ளேப்பிடித்
[6]துருவ மிஞ்சு மாதரீரு [7]மக்கு மிக்கி லங்கயாம்
வரிசி றந்த நல்ல நல்ல வளைக ளுண்டு பரிவொ'ந்
தருது நில்லு நில்லு மென்று சாற்றி மாலை யேற்றினன். (கo)

வேறு.

மின்வளை தன்னையெ டுத்துவி ரித்துவி ரைந்திடு வார்போல
மன்னிய [8]கைகள்பி டித்துவி டாதுவ ணக்கிம யக்குதல்கண்

(பி-ம்.) 1'பரிசிப்பின்' 2'புணர்ந்து','பரந்து' 3'வளைகள்கொள்ளுமென்று கூறிவளையாகவந்தனன்' 4'வடிவினைவஞ்சனே, பித்தமாயை' 5'பத்தமற்றி யாவரும்' 6'உருவுமிஞ்சு' 7'உமக்குமக்கு' 8'கைகண்மடித்துவிடாதுவணங்கி'

கு. துப்பு - பவழம்; தூய்மையுமாம்.

சு. கழைய்தண்டு - மூங்கிற்றண்டு. கலிங்கம் - ஆடை. முடிச்சாத்து-தலேப்பாகை. காதணிகளும் கண்டிகைகளும் தாழ.

எ. 'வளையல்கொள்ளும் வளையல்கொள்ளும்': அடுக்கு.

கூ. மூல்லை - கற்பு. வளைத்தனன் - அகப்படுத்திக்கொண்டார். வளையி ஞல் வளைத்தனன்: மடக்கு.

கo. 'நல்ல நல்ல', 'நில்லும் நில்லும்': அடுக்கு. மாலை - மயக்கத்தை.

டன்னைய ருக்கறி விப்பமெ மக்கித டாதென [ரும்.
[1]வச்சமுறுத் தென்னேவி டென்னேவி டென்பரு ளத்தெழு மின்பம றைத்தெவ

இப்படி சொல்லிய தேது[2]ப ழுத்துக ரைத்தவி ருத்தனியா
லெப்பமர் கைகள்பி டித்தத னுமம தற்றவர் தாமிகழார்
செப்பிணை யோமுலை மைப்புய லோகுழல் செங்கய லோவிழிவாய்
துப்புரு வோதுதல் விற்பிறை யோவிது வல்லியர் சொல்லுமென. ()

வேறு.

நன்குறு மொழியிற் பட்டி நாய்களைக் காண்பான் வேட்டின்
றென்கையில் வளைகெ ரிந்த தென்கையில் [3]வளைகெ ரிந்த
தன்புடை யவனே நல்ல வணிவளை யெமக்கி டென்று
முன்பிடும் வளைகெ ரித்துச் சொல்லுவார் முடிக வாங்கு. (கஉ)

[4]இனக்கன வளையி டாதிங் கேகுவா யாயி னெங்கண்
மனத்தமர் சொக்க ஞர்த மாணையால் வளைப்பே மென்னத்
தனக்குநல் லவர்க்கு நல்லோன் றயாவொடு முறுவ லோடிங்
கனத்தபல் வளைக ணீட்டிங் கைத்தலத் திலங்க விட்டான். (கச)

பூனையுமா யிரம்பொன் னிற்குப் புரிவளை யொன்றே யென்றென்
றானவரும் விரும்பக் கூறி யரும்பெருக் தனத்தை வேட்டாண்
டினவளை விற்பான் வந்தோ னிலங்கிய தனங்கொ டுத்துக்
கனவளை கொள்வான் வந்த கன்னியர் வளையுங் கொண்டான். (கடு)

இந்திர னையன்மா தெதி யாவருந் தீண்டொ ணுத
சுந்தர வுருவந் [5]தீண்டத் தோன்றுபே ரின்பந் தன்னைச்
சிந்தையா லனுப விப்போர் செட்டியார் நாளு மிங்கே
வந்துபோம் வந்து போமென் [6]றவாவற வழுத்தக் கண்டு. (கஎ)

[7]பழுதிலா மாத வேளைப் பாலலோ சனத்தாற் காய்ந்தோ
னழகிய மடந்தை மீர்கா ளப்படிச் செய்வ லின்றிவ்
விழுமிய வொளிவ ளைக்கு விலைதர வேண்டா நாளை
யுழைதொறும் வந்தாற் றருகு [8]மென்றன னுவகை கூட. (கஅ)

கச. வளைப்பேம் - தடுப்போம்; "வள்ளமீங்கப்பெறுய்வளைத்தேனென" (சீவக. அஅ0.)

கடு. தனம் - கொங்கை, பொன். "இதழியுக் தும்பையு மதியமுங் கரக்க, வளைவிலை மாக்கள் வடிவெடுத் தருளி, முத்தமிழ் நான்மறை முனிவர்த்தருள் வாக் கால், வீதிகூறி விரித்தமுன் வரத்தாற், கருமுகில் விளர்ப்ப வறனீர் குளிப்பக், கண்புதை யாப்புத் தினியிருள் விடிய, வுடலெறும் பிணித்த பாவமும் புலர்க், கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்தக், குருகணி செறித்த தனிமுத லுய கன்" (கல். சசு.)

கசு. செட்டியார்: விளி.

கஎ. பாலலோசனம் - கெற்றிக்கண். உழைதொறும் - வீடுகள் தோறும்.

(பி - ம்.) 1'அச்சமுறுது' 2'பழுத்த' 3'வளையகன்றது' 4'இனக்கினவளை' 5 'தீண்டித்' 6'அவரவர்' 7'பழுதிலான்' 8'என்பனீத்துவகைகீட'

இன்னன பகர்ந்து காவ லிலங்குபே ரிடங்க டோறு
மூன்னுற நடப்ப மேனி விதத்தையு மூதிரா மென்மைப்
புன்மூறு வலியுங் கண்டு புதுமையீ தறிவ மென்றே
நன்னெறி [1]வணிக வூரே தார்கொனீ ரவிறி யென்றார். (கஅ)

அழகிய சொக்க ரமை மறுமுகச் செட்டி மைந்தன்
பழவுற வளகைக் கோனு லறிகுவர் பதியு மீது
மழவுறக் கங்கை யாடி வந்தனன் குமரி யாடக்
கிழவனியான் பிறந்தே னல்ல கிளையிலே யெனம றைந்தான். (கக)

ஆங்கவன் மறையா மூன்ன ரரன்பரி சனத்தா லாங்க
ணேங்குகன் னியர்சூல் கொண்டு வீங்கிய வுதரங் கண்டே
யேங்கிநங் குலமு டிந்த தின்றென வெருவி யாருந்
தாங்குதல் கொடாது தீயிற் [2]சார்வதற் கொருப்பட் டார்கள். (உ0)

அருளுடைச் சொக்க னஞ்சி யவ்வயின் விடையிற் ரோன்றிப்
பொருவரு மிருடி மாதர் சாபத்தாற் [3]போந்தார் நும்பாற்
பரிவொடும் வளைய லிட்டுப் பரிசித்தோ நாமே சாத
லொருவரும் வேண்டா மற்றெக் குலத்தினு முயர்ந்தீ ரென்ன. (உக)

நடமொடு துதித்தார் யாரு நானிலத் [4]துயர்ந்தோ நாமே
யுடையவ [5]னறிந்து டாத சரக்கிலை யுரைக்கு மெட்டான்
[6]கடையரேம் பயந்த புன்மைக் கன்னிமங் கையரை வந்து
படிமிசை விரும்பற் கென்ன பாக்கியஞ் செய்தோ மென்றே. (உஉ)

ஆர்ந்தமங் கையர்கண் முற்று மரன்பரி சனத்தாற் பண்பு
சேர்ந்தநன் புதல்வர்ப் பெற்றுத் திருந்திய வொழுக்கத் தானும்
வாய்ந்தநல் வடிவி ஞனு மறுவற விளங்கி நாளுஞ்
சூழ்ந்ததஞ் சுற்றம் போற்றத் துயர்கெட விருந்தார் வாழ்ந்து. (உங)

அறமலி மதுரை மன்னும் வணிகர்க ளன்று மூன்னு
வெறிகமழ் செச்சைக் கண்ணி வேளென விளங்கி னூர்க

கக. 'அழகிய சொக்கன்': மதுரைக்கல. சா. நுங, கூச; மீனுட்சி. காப்பு. ச. அளகைக்கோன் - குபேரன்; கோனென்னும்பெயர் வணிகருள்வழங் கும். மழவுற - இளமையுற. மழவுறுதற்குக் குமரியாடவந்தனன்; குமரி, சிலே டை. இனை - நல்லகுலம், மூங்கில். இச்செய்யுள், "வந்தவரெவன்னே" (சீவக. உ0உ0) என்னும் செய்யுளின் கருத்தைத் தழுவிவந்தது. அச்செய்யுளின் ஓற் றுமைப்பகுதியைப் பார்க்க.

உ0. பரிசனம் - ஸ்பரிசம். தாங்குதல் கொடாது - பொறுமல்; கள: நு.

உக. 'அஞ்சி' என்றார், பழியஞ்சியாதலின்.

உஉ. 'உடையவனறிந்திடாத சரக்கிலை' என்பது ஒருபழமொழி.

உச. செச்சைக்கண்ணி - வெட்சிமாலை.

பி - ம்.) 1'வணிகருரேது' 2'சாவதற்கு' 3'போர்தாரும்போற்', 'போந்தா ரீங்கே' 4'உயர்ந்தோர்நாமே' 5'அழித்திடாத' 6'கடையரேம்பயந்தோர்தம்மைக் காணகுலம்போல்வந்து'

ணெறிதரு தூய்மை வாய்மை நீதிநூல் லறிவு செல்வங்
குறைவற நிறைந்து மற்றெக் குலத்தினு நனிசி றந்தே. (உசு)

கொள்ளவோர் [1]புதல்வ ரின்றிக் குலங்கெடு மென்று கண்டு
மெள்ளலுங் கிளையா னென்று [2]மெய்ப்பூணுந் தெய்தி யொப்பித்
தொள்ளிய பிட்ட தன்றி யுமையொடும் [3]விடையிற் றோன்றித்
தெள்ளியீர் மணந்தே நாமென் றிறையருள் செயப்பெற் றார்கள். ()

ஆகத்திருவிருத்தம் - சசஈ.

உச.—இலச்சினையிட்ட திருவிளையாடல்.

பாங்கடியார் பரவுக ழாலவாயான் பதம்பணிவான் முன்னெரு காற் பத்தி மிக்கோ, நேங்குபுகழ்க் காடுவெட்டி யென்றோர் மிக்க வுயர்தலைவன் வைகை[4]வட தடத்தி னெய்த, வீங்கதனை யறிந்தணுகா வாறு கோயி லெயிற் கடைதன் னிலச்சினையிட் டழைத்து மாறன், றுங்கரிய படையெடுப்பான் முயன்றுன் யாறுந் தனிப்பரவை யெனப் பெருகப் புகுந்த தன்றே. (க)

மண்முழுதும் பலதீர்த்தங் கண்டி றைஞ்சி மனமகிழ்ந்தேன் மற்றவற்றுள் வளமை கூர்ந்த, கண்ணிறைந்த பதியையுமப் பதியி லோங்குங் காரணமா நின்னையுநீ கருதி வாழு, மெண்ணிப[5]மெண் ணெண்ணமரர் மடங்க லெண்ணுன் கேந்துயரா லயத்தினையு மிகுமை மிக்க, தண்ணமர்பொற் றுமரைவா வியையுங் காண்பான் றணிவிலா விருப்பெய்திச் சார்ந்தே னிங்கே. (உ)

இன்னருள்சேர் தயாநிதியே யமர ரேறே யெந்தையே யென் செய்கேன் பகைவனையு, தென்னனெடு டோராறும் வாராவாறு [6]தீங்கு செயக் கண்டனமற் றியாவும் வல்ல, நின்னையலான் மனக்கருத்து முடிப்பா ருண்டோ நிகியிடையின் றென்கருத்து முடித்தி டாயேன், மன்னுயிரை முடிப்பதலால் வாழே னென்று மதுரைவளம் பதி நோக்கி வருந்த லுற்றான். (ஈ)

உரு. இச்செய்யுள் கவிக்கூற்று.

(உசு) [முத்திரை.

க. காடுவெட்டியென்பது, இவ்வரசன்பெயர். தன் இலச்சினை - மீன

உ. ஆலயம் - இந்திரவிமானம்; அஃது அ - யானை, சுசு - கணகாதர், ஈஉ - சிங்கங்களால் தாங்கப்பெறுவது; "கரியெட்டுஞ் சினமடங்க ஞெலைட்டு மெட்டெட்டுக் கணமுந் தாங்க" (திருவிளை. இந்திரன். அஈ.)

ஈ. 'தென்னனெடு' என்பது முதலியவற்றை, "வழுதி யன்றியும் வையை யும்பகை யான தென்று வருந்தினன்" (திருவிளை. விடை. கக) என்பது தழுவிவந்திருத்தல்காண்க.

(பி - ம்.) [1]'புதல்வனில்லே' [2]'மெய்யுணுந்தெய்தி' [3]'விடைமேற்' [4]'வட நீரத்து' [5]'எண்ணுண்கமரர்' [6]'தீங்குசெய்தல்'

மருவுபுக ழரனருள்சேர் பத்தர் பத்தன் மற்றவன்றன் மனக்
கருத்தை முடிப்பா னெண்ணிப், பொருவருந்தன் கோயிலெயில் வாயி
ஞன்கும் பூவியன்மீன் முத்திரைகண் டிடமுண் டாகப், பரவு[1]மதி
லொடுவடவா யிலைமுரித்துப் பாதி[2]யிர விற்சென்றே ரியந்திரத்தாற்,
[3] கரிபரியோன் றனைநாதித்தென் கரையி லேற்றிக் கண்டவெயின்
முரிவாயாற் கொண்டு புக்கான். (ச)

ஓங்கிருளை [4]யவனளவில் வெளிய தாக்கி யோதரிய சோதிவிமா
னத்தை யும்பொற், பூங்கமல வாவியையுந் தனது நீங்காப் பொருவி
லுரு வையுங்காட்டக் கண்டு போற்றி, [5]யாங்கவனுட் கசிந்துதொழு
தாடிப் பாடி யணைவதற்கிங் கென்னதவஞ் செய்தே னென்று, நீங்க
ரிய மயிர்ப்புளகம் [6]பொடிப்பக் கண்க ணீர்ததும்ப மேல்[7]விதும்ப
நிறைந்து நின்ருன். (ரு)

அரியயர்கட் கரியபிரான் காடு வெட்டி யன்புகயங் கண்டாரா
வன்பு கூர்ந்து, பொருவருகல் வரங்கள் கொடுத் [8]தழைத்தாற் போலப்
பொருபுனல்சேர் தடினிவட தடத்தி னேற்றிப், பரிவுடைய நம்பத்த
செழிய னெடி படைபொருவான் படையில்லை விடியு முன்னம்,
விரைவொடும்போ வென்றுகிசி யாக்கிப் போக்க விரைந்தருள்கண்
டதிசயித்து நயந்து போனன். (சு)

வேறு.

ஆங்கவன் போய [9]பின்ன ரல்லிடை மெல்ல மேவி
யோங்குபே ராணை யாலே யுயரெயின் முரிவாய் தன்னைத்
தீங்கறத் தீர்த்தோர் வாயில் சிறக்கவிட் டடைத்து முன்ன
ரீங்கி[10]யா வருங்கா ணத்த னேற்றிலச் சினையு மிட்டான். (எ)

சுரிகுழ லுமை மயிற்குச் சொல்லியா லயத்தி ருப்ப
விரிகடை காப்போ ரஞ்சி விடியுமு னரசற் கூடிப்
பொருவிலோர் வாயில் வேறுய்ப் பொறித்தமுத் திரையும் வேறுய்
மருவிய மதிலும் வேறு யிருந்தது வடபால் வாயில். (அ)

ச. 'பத்தர் பத்தன்': கஅ: ஈ, ஙசு: சக. முரித்து - இடித்து. இயந்திரத்தால் ஏற்றி. எயில் முரிவாய் - மதிலே இடித்த வேறொரு வாயில்; "உயரெயின் முரிவாய்", என்பர் பின்னும்; எ; "ஈங்கொரு வாசல்விட் டேதொழு வித்திட" (பயகர. உச.)

ரு. மேல் விதும்ப - உடல்நடுங்க; "பொதும்பருள் விதும்பினரே" (சீவக. உஎகஅ.)

சு. ஆராஅன்பு - தெவிட்டாத அன்பு. தடினி - ஆறு; "கஞ்சத்தடினி வெம்மையையுக்கண்டு" (ஙசு: கரு); "உணர்வுடைத்தடினி" (ஙஅ: ருச.)

எ. ஏற்று இலச்சினை - இடபமுத்திரை.

(பி - ம்.) [1]'மதிலொரு' [2]'நிசியிற்' [3]'கரியபெரியோன்றனைத்' [4]'அவ்வள வில்' [5]'ஆங்கவனுமகிழ்ந்து' [6]'பொதிப்ப' [7]'வெதும்ப' [8]'அணைத்தாற்' [9]'பின்னு லவ்விடைமேவியெங்கும்' [10]'யாவருங்காணத்தனேற்றிலச்சினை

என்றது சொல்லச் சீறி யெய்திய வமைச்சர் தம்மைச்
சென்றறி மின்க ளென்னச் சென்றவர் வந்து சொல்வார்
வன்றிறன் மன்ன கேண்மோ மாயையோ புகுந்த வாறின்
ரென்றுமிங் கறிந்தோ மில்லை யுரைத்தவா ரெருக்கு மென்றார். (கூ)

இருந்திறல் வழுதி மற்றிங் கியார்செய வல்லா ரீது
பொருந்திய தறிவான் யாவும் வல்லவ னென்று போத
வருந்தியு ணெழிந்து செய்ய மலரணைத் துயிலுங் காலைத்
திருந்திய கனவின் மாயை வல்லவன் சென்று சொல்வான். (கo)

ஞாயில்வாய் மதின்மு ரித்து நள்ளிரு ளெல்ல தாக்கி
நேயமுள் ளவரீ யிங்கே வரவிட்டு நீங்க விட்டுச்
சேயதோர் வாயில் விட்டுச் சேவது குறியு மிட்டே
மேயவின் றியாங்கா ணென்ன வதிசயித் தெழுந்தான் போற்றி. (கக)

வந்தெயி லிடப மிட்ட வாயில்கண் டதிச யித்துச்
சுந்தர னல்லா லுண்டோ தொழுபவர்க் கெளியா னென்று
மந்தையி னன்பு செய்தான் மன்னவன் முறைமை வாயி
லிந்தமா நிலத்து நின்ற திலச்சினை வாயி லென்றே. (கஉ)

ஆகத்திருவிருத்தம் - சருரு.

உரு.—மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.*

முன்னமோர் தென்னர் கோமான் முறைமையி னவனி காத்து
மின்னெயின் மதுரை தன்னு ளிருக்குநாள் விதிவ சத்தான்
மன் னுநன் குலமா தர்க்கோர் ம ழவின்றிக் [1]காதன் மாதர்க்
கின்னெறி யில்லா மைந்த ரெண்ணில ராஞ ரன்றே. (க)

மற்றது கண்டு சால [2]வாடிய மன்ன னேர்ந்தா
ளற்புத சொக்க மூர்த்திக் கறைகுவ மென்று சென்றே
முற்றுமிங் களிக்க வல்ல முதல்வனே புதல்வ னில்லை
யிற்றது குலமென் றேத்த வீந்தன மென்னப் போந்தான். (உ)

கo. போத - மிக.

கக. வாய்மதில்: விளைத்தொகை. சேவுறுகுறி - இடபமுத்திரை.

கஉ. முறைமை வாயில் - இந்த வரலாற்றை யுடையவாயில்; இலச்சினை வாயிலென்று ஒருவாயில் பண்டைக்காலத்து இருந்தது போலும்.

(உரு)

க. இன்னெறி - இனியநெறி; நல்லநடை.

*"கதிர்நிரை பரப்பு மணிமுடித் தேவர்கள், கனவிலுங் காணுப் புனைவருந் திருவடி, மாநிலந் தோய்ந்தோர் வணிக ரூடி,.....இவையெனக கூறிய நிறை ருட் கடவுள்" (கல். சஅ.)

(பி - ம்.) 1 'காவன்' 2 'மயங்கியே'

1 இறையவ னருளா னல்ல விலக்கணத் துடனோர் மைந்தன்
மறுவறு குலமா மங்கை வயிற்றகத் துதித்தை 2யாண்டு
குறைவற 3வளர்நா ளந்தக் கொற்றவன் வேட்டை போகித்
திறமுறு முழுவை கையிற் சேர்ந்துயர் துறக்கம் புக்கான். (கூ)

சே று.

அவமுறு புதல்வ ரிகல்செய்து 4காவ லறையழித் தரும்பொருள்
கவர்ந்தே, புவிமிசைத் தூரத் தங்குறை யறிந்து போயினர் யாரையு
மறைத்துக், கவினுறு குலக்கோ மைந்தனைக் காத்த வமைச்சர்கள்
கரிபரி முதலா, நவையற பண்டையை வெருவுறு குடியை 5யடைவுற
நயமொடு கூட்டி. (ச)

வரந்தரு 6மரசன் குமாரனுக் கடைவின் மணிமுடி சூட்டுவா
னெண்ணி, யிரும்பொரு மீடடிக் கண்டிடா தறையி னியைந்தசாம்
பூனத மான, வருஞ்செழுங் கனகந் தேடினஞ் சிறந்த வணிமுடிக்
காகவ மணிக, டெரிந்தன வெங்ஙன் றேடுவஞ் சொக்கன் றிருவுள
மறியகி லேமால். (ரு)

விதுமர பிலங்க விவற்7கபி டேகம் விரைவுடன் செய்திடா
தொழியி, னதிர்வுறு மூலக மென்செய்கே மென்றென் றழுங்குதல்
கண்டருள் சுரந்து, திதமுறு சொக்கன் பலசிறப் போடுஞ் செட்டி
யாய் மணிவிலை கூறிப், பதியுயர் பெரிய 8பட்டின நீங்கள் பார்ப்பதிங்
கென்னென வடைந்தான். (சு)

9 வருந்துபே ரமைச்சர் நயந்துசென் றுளத்து மருவுகா ரிய
முரைத் துன்னைப், பொருந்துமுன் றுன்பம் போனது சொக்கப்
புனிதனே வறிகிலே மென்ன, வரும்புரை யிரேகை களங்கம்விர்
துக்க ளற்றவை குற்றமொன் றிலலே, யொருங்கமுன் பார்த்துக்
கொள்ளுமின் முடிக்கா மொன்பது மணியுமுன் டென்றான். (எ)

போதுகாய் வெயிலின் வாடிய பயிர்க்குப் பொழிபுன லுதவிய
புயல்போற், நீதிலா வடிவின் வந்தமா ணிக்கச் செட்டிகேள் யாங்க
ளீங் கறியக், கோதிலா மவுலிக் கானவை தெரிந்து குணங்குறை

சு. காவலறை - காக்கப்படுதலையுடையபொன்னறை. யாரையுமறைத்து மைத்தனைக்காத்த அமைச்சர்களென்க; "முடிசூடுவான் மறைத்துக்காத்தவமைச்சர்" (கடம்ப. இலீலா. உரு.)

ரு. சூட்டுவான் - சூட்ட.

சு. உலகம் அதிர்வுறும் - உலகம் நடுங்கும். பட்டினம் - காவிரிப்பூம் பட்டினம்.

எ. புரை - காகபாதம். இச்செய்யுளால், இரத்தினத்தின் குற்றங்கள் இன்னவையென விளக்கும்.

(பி - ம்.) 1'இறைவனதருளால்' 2'ஐந்தியாண்டு' 3'வளரவாழ்ந்த' 4'காவலரை' 5'அறிவுற' 6'அரசகுமாரனுக்கு' 7'அவிடேகம்விரைவொடு' 8'பட்டணம்' 9 'வருந்துமேரமைச்சர்'

பிறங்கிலக் கணங்க, ளோரியா தரத்திற் ருவெனக் கேட்ப வுத்திம னத்திற முரைப்பான். (அ)

வாசவன் வேள்விக் கிரங்கியோர் பசுவாய் வந்திடிம் வலவனைச் சிரத்தா, லாசற வரிந்த வுறுப்பினே வாஞை ரருந்தமண் விழுந்தன தப்பிக், காசறு வித்தாய் மலையினுஞ் சிறந்த [1]கடலினுந் தீவினும் புது மை, பேசரும் பெரிய [2]நாட்டினும் பிறந்து விளைந்தன பிறங்கிட வன்றே. (கூ)

பரியவா ளென்பு வயிரநீ டிறைச்சி பவழமென் கருவிழி நீலம், பொருவரு மொளிசேர் கவம்புரு டராகம் பொருந்துசெங் குருதிமா ணிக்க, மருவிய மயிர்வை டூரிய நிணங்கோ மேதகம் வாணகை முத் தங், குருவளர் பித்து மரகத மென்று கூறுவர் குலமணிப் பிறப்பே.

சுடர்கொண்மா ணிக்கத் திறம்வகுப் பவரார் சொல்லுவல் சுருங் கநான் கிடமும், படருநால் [3]வருணத் திலகிய பெயரும் பன்னிரு குணமுமீ ரெட்டு, நெடியபுன் குறையுந் தகுமெழு நான்கு நிறங்க ளும் பிறங்கிய வியலு, [4]மிடமுறு பத்தி பாயதலு மென்ன வெழுவ கை யிலக்கண முடைத்தால. (ஙு)

கருதிடின் [5]வலவை மாவலி கங்கை கம்பனை கல்லணை யென் னுங், தருசம னெளிசூழ் நதிகணன் கிடமாஞ் சாதிநான் கந்தணன் வெள்ளை, பரிவுறு மரசன் சிவப்புவாழ் வணிகன் பச்சைசூத் திரன் கறுப் பவைதா, மருவிய பெயர்கோ மளங்[6]குரு விந்தம் பதுமரா கம் பணி மணியே. (கஉ)

கூ. வலவன் - வலாசுரன். தப்பி மண்விழுந்தவைகள்.

கo. வலனுடைய என்பு வயிரம், இறைச்சி பவழம், கருவிழி நீலம், கவம் புருடராகம், இரத்தம் மாணிக்கம், மயிர் வயிரியம், நிணம் கோமேதகம், பல் முத்தம், பித்து மரகதமென்க.

கங. மாணிக்கம் எழுவகை இலக்கணமுடைத்து; இவற்றை "மாணிக் கத் தியல் வகுகுல காலெச், சமனெளி சூழ்ந்த வொருநான் கிடமு, நால்வகை வரு ணமு நவின்றவிப் பெயரும், பன்னிரு குணமும் பதினறு குற்றமு, மிருபத் தெண்வகை யிலங்கிய நிறமு, மருவிய வியலும் பத்தி பாய்தலு, மிவையெல மாராய்ப வியல்புணர்ந் தோரே" (சிலப். கசு: கஅசு - எ, உரை) என்னுமேற் கோளாலும் அதனிக.

கஉ. சமனெளி - இலங்கைத்தீவிலுள்ள ஒருமலை; இதனை, "இலங்காதீ வத்துச் சமனெளி யெனலுஞ், சிலமபலை" (மணி. உஅ: கoஎ - அ) என்ப தனாலும், அம்மலையை நான்குதிசைகள் சூழ்ந்துள்ளனவென்பதை, "குடுமிச் செ ங்காச் சமனெளி சூழ்ந்த, நிரைநதி நான்கி னிகழ்ந்தன குறியும்" (கல். சஎ) எனபதனாலுமுணர்க. வலவை, மாவலிகங்கை, கம்பனை கலலணை என்னும் நதி கள் நான்கும இலங்கைத்தீவில சமனெளியிலிருந்துண்டாவன.

(பி - மி.) [1]'கடலினுந்தீயினும்', 'கடலினுநதியினும்' [2]'நாட்டினும்பாந்து வளர்ந்தன' [3] 'வருணத்தியற்கையும் பெயரும்' [4] 'இடமுறுவத்திப்பாய்தலு மென்னும்' [5]'வலகைமாவனகங்கை' [6]'குருவந்தம்', 'குருபத்தம்'

மின்னிய நெருப்பிற் சேரினுந் தகட்டின் மேவினும் [1]வெயிலி னுங் கரத்து, மன்னினு மோரந் தன்னினுந் தூக்க மருவினுந் தேய்ப் பினும் பிறங்கிக், கொன்னுறச் [2]சிவந்து பார்க்கவந் தோங்கிக் [3]குச்சி முன் பரந்துசேர்த் திடின்முன், பன்னிய வொளித்தாய் [4]மத்தக சுத்தி யுடையது பன்னிரு குணமால். (கஉ)

[5] மிகவுறு தராச மத்தகங் குழிதல் [6]வெச்சமிலேச்சுமி வெகுளி, [7] புகையொடு திருவன் மூரணெடி செம்ம ணிறுகுதல் கருகுதல் பொரிவே, யிகலுறு புடாய நெய்ப்பிலி [8]சந்தக் கேடிகீள் வெய்யகீற் றென்ன, வகைபடி குற்ற மெண்ணிரண் டாக வகுத்தனர் மாசறு புலவோர். (கச)

வேறு.

பங்கயஞ்செங் கழுநீர்சா தகக்கண் சூத பல்லவமின் மினிகோ பம் [9]பரிதிதீப, மங்கிவிழு [10]தழற்குன்றி யுலோத்தி ரஞ்செவ் வரத்த முய லிரத்தமா தளீவீ வித்தச், செங்கலில விதழ்குரவு பாட லப் பூத் திலகமுருக் கிதழ்மஞ்சட் [11]டேறு கோவை, தங்கொளிச்சிங் துர ங்குக்கிற் கண்ண சோகின் தளிர்நிறங்க [12]ளாவணேயோ டெழுநான் கென்பர். (கந)

எண்டருதே சிடையளவே [13]லிலேகோ டன்க ணியைந்த வற்றி ஞெளிபரத்தல் [14]பத்தி பாய்த, றண்டரளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பிற் சங்கினின்மீ னின்றலியிற் றழைநெற் றுளி, [15]லொண்டொ

கூ. இதிற்கூறிய மாணிக்கத்தின் பண்ணிருகுணங்களே, "தேய்க்கி னெருப்பிற் சேர்க்கி னங்கையிற், றூக்கிற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற், குச்சையின் மத்தகக் குறியிலே ரத்தி, னெய்த்துப் பார்வையி னேர்க்கு சிவக்தாங், கொத்த நற்குண முடையபன் னிரண்டும்" (கலி. சள) என்பதனாலும் தெளிக.

கச. மாணிக்கத்தின்குற்றம் பதினெனபதை, "கருகினாய் தாதல் கீற்று வெகுளி, திருகன் மூரணே செம்ம னிறுகன், மத்தகக் குழிவு தராச மிலேச்சுமி, வெச்சம் பொரிவு புகைதல் புடாயஞ், சந்தைகெய்ப் பிலியெனத் தருபதி னைந்தும்" (கலி. சள) என்பதனாலும் தெளிக.

கடு. அங்கியும் அதில்விழுதழலும். சாதாரங்களுதலியவை மாணிக்கத்தின்வகை; இங்கே மாணிக்கத்திற்குப் பொதுவாகக்கூறிய இருபத்தெட்டு நிறங்களே நால்வகைப்படுத்தி, சாதாரங்கத்திற்குப் பத்துநிறங்களும் குருவிந்தத்திற்கு எட்டும் சௌகந்திக்கு ஆறும் கோவாங்கத்திற்கு நான்குமாகக் கூறுவது முண்டு; "தாமரைகழுநீர்" (சிலப். பக். கூஎஅ) என்னும் மேற்கோள் முதலியவற்றையும், "கதிர்நிசைபரப்பும்" (கலி. சள) என்பதையும், "சாதாரங்க நிறம்" (திருவிளை. மாணிக்கம். கூக) என்னும் செய்யுள் முதலியவற்றையும் பார்க்க. மேற்கூறியவற்றில் ஒத்தும் ஒவ்வாதும் இருப்பனவுள.

(பி - ம்.) 1 'வெயிலிலுங்காற்று' 2 'சிவந்துபராகம்வர்தோங்குங்குச்சி' 3'குச்சை' 4 'மரதகசுத்தி' 5'மிகவுறுகாசம்' 6 'வெச்சமிலச்சுமியெகுழி' 7'பகையொடு' 8'சந்தைக்' 9'பருதி' 10'தனற்குன்றியிலோத்திரஞ்செவ்வாத்தி' 11'சேறு' 12'ஐவணேயோடு' 13'வலிகோடின்களியைத்த'14'வத்தி' 15'ஒண்டிதன்'

டிமங் கையர்களத்தி லிபரனைக் கோட்டி லுயர்கழையிற் காகவா கனர்திண் டோளிற், கொண்டலிலிப் பியிலேனைக் கொம்பி லிக்கிற் கொக்கிலெனப் பகர்வர்வியப் [1]பிப்பி மூக்தால். (கசு)

தங்கியமுள் ளேறுமுகங் கறுத்தல் செங்கீர் சார்வனமண் ணேநிடப்புத் [2]திருகல் கோணை, மங்குறுமீப் பிப்பற்றுக் [4]காக வன்னி மருண்டிருத்தல் குறைபத்தே குணமே தட்பம், பொங்குதித்தே சுருட்சிகனம் வயிரம் வைரா கரமோகூப் பொருப்பிமவா னேம கூடன், [5]துங்கசவா லக்கமவன் திகமா தங்கத் தொகுமருண மெனுமெட்டா கரமே தோற்றம். (கஎ)

கீற்றுமலஞ் சப்படியே பிளத்தல் கோடி [6]கெடுதல்கரி தூளி விந்து காகபாத, மாற்றருஞ்சீர் தருகோடி மூரித முரை மழுங்கலிருத் தெனப்பகர்வார் குறையே ராமும், போற்றிநிகற் குணங்காரைச் சுத்தி [7]கோன்மை புரந்தரசா பம்பலகை யெட்டு மிக்க, வேற்றமுடைக் கோணமா தெளவைக் காமற் றிலங்கியகீலத்தினிய லியம்ப லுற்றேன்.

அணிபொழில்வாழ் குயிற்கழுத்தே [8]குவளை வண்டே யாகுலக் கண் செழுமேக மயிரிச் சாதே, யிணைபிலுயர் [9]பூவைப்பூ நெய்தற் போதென் றிலங்கு மொளி யெட்டென்பர் குறையெட் டெண்ணிற், றணிவில்[10]சர சரப்பிரசத் தோடு பொல்லாச் சாரசமஞ் சணிவளிமண் சார்ந்த கிட்டம், [11]பிணிகொளிலைச் சுமியாகுங் குணகெய்த் துச்சி பிறங்கலொளி வளர்பவளம் பேசக் கேண்மின். (கஙு)

கசு. தேனிடையளலே விலிகோள், ஒளிபரர்த்தலே பத்திபாய்தல். முத்துக்கள் தலசம் சலசமெனு இருவகைப்படும்; அது பதின்மூன்றிடத்துப் பிறக்குமென்பர், பாண்டிகோநிபுனிவர்; தீருவிளை. மாணிக்கம். நிகு - ச. இங்கே 'காகவாகனர்திண்டோள்' என்றவிடத்து, அதில், 'ஐவாய்மான்கை' என்பது கூறப்பட்டுள்ளது.

கஎ. "உடுத்திர ளனைய காட்சி யுருட்சிமா சின்மை கையா, லெடுத்திடற் றிண்மை பார்வைக் கின்புதல் படிக மென்ன, வடித்திடி குணமாறு" (திருவிளை. மாணிக்கம். நிஅ) என முத்தின்குணம் ஆறென்பர். வயிரம் பிறக்குமிடம் எட்டு.

கஅ. வயிரத்தின் குற்றம், கஉ; குணம், நி; "சரைமலக் கற்றுச் சப்படி பிளத்த, றுகிகரி விந்து காகபாத, மிருத்துக் கோடிக ளிலாதன மூரித, முரை மழுங்க லன்னே, டீராறும் வயிரத் திழிபென மொழிப", "பலகை யெட்டுங் கோண மாறு, மிலகிய தாரையுஞ் சுத்தியுக் தராசமு, மைக்குங் குணமென் றறைந்தனர் புலவ, ரிக்கிர சாபத் திகலொளி பெறினே" (சிலப். கசு: கஅ - அகு, விசேடவுரை) என்னுமேற்கோள்களாலுமுணர்க.

கக. ஆகுலக்கண் - கசுவின்கண். பூவைப்பூ - காயாம்பூ. நீலத்தின் ஒளி வகையை, "கோகுலக் கழுத்துக் குவளை சுரும்பு, ராகுலக் கண்க ளவிரிச்

(பி - ம்.) 1'இப்பர்முத்தால்' 2'திருகல்கோணம்' 3'சிப்பியிற்பற்றுக்காக வர்ணி' 4'காகவர்ணமேண்டிருத்தல்' 5'துங்கவாலக்கமவன்திதம்' 6'கேடுறுதலே', 'கேடுறுதல்கரை', 'கெடுதல்சரி' 7'கொய்ம்மை' 8'தவளைவண்டேயாகுலிக்கண்' 9 'பூனைப்பூ' 10'கரகரப்' 11'பிணிகொளிபச்சுமி' 'பிணிகொளிவச்சுமி'

துன்னியசிக் துரமீ[1]ச்சஞ் செங்காய் செம்மண் டீதுவளீ முசு முசுக்கை துளங்கு வீரைப், பன்னியசெங் கனியென்பர் நிறந்தி ருக்குப் பைங்[2]க ருப்பத் துளீகல்லேய் முடங்கல் பொல்லா, மன்னும் வெளி றென்பர்[3]குறை பச்சை கிள்ளீ மயிற்கழுத்து நெல்லினிளம் பயிர்பொன் வண்டின், மின்னுதரம் பொன்மையொடி பசுத்த னெய்த்தன் மேற் [4]பத்தி பாய்தனிறங் குணங்க ளென்பர். (உ0)

கருகல்வெளி ரெருடுபெரிரிவே கல்லே மண்ணே [5]காற்றிறுக றராசமொடி குற்ற மெட்டா, மாகதம்விட் டியர்புருட ராகஞ் செம் பொன் வண்டகட்டிற் றேஞெழுகு நிறமே யென்ப, ருரியவயி டீரிய ம்பொன் மேன்மு லேப்பா லொழுகுமொளி யென்பர்கோ மேத கத்தை, மருவுவயி டீரியத்தின் மீது தூய மதுத்துளிமே வியதென்பர் வண்ணந் தானே. (உக)

முறைமைகெடா [6]விவைதமக்கு நீதி யொன்றே மும்மணியா வனசொன்ன புருடராக, முறுவயிடி ரியங்கோமே தகமே யென்றுங் கோதுவர்மற் றிவற்றின்க ணுதித்த வெண்ணின், [7]மறுவறுதோ ராவல்லி கனக தோரா வல்லிமுத லாயினவுண் டென்பர் மற்று, நெறியுரைப்பி னுளபலவிங் கரசர் மாட்டு நேசமுடை யாருமைப்போற் கண்டி லேமால். (உஉ)

சாறு,.....காயா நெய்தல் கனத்தல் பத்தி, பாய்த லெனக்குணம் பதினொன்றுமே'' (சிலப். கச: ககo, விசேடவுரை) என்னுமேற்கோளாலும் உணர்க.

உ0. வீரை - ஒருவகைமரம். பவழத்தின் குற்றம் இன்னவென்பதை, ''கருப்பத் துளீயவுங் கல்லிடை முடங்கலுங், திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்'' (சிலப். கச: ககஎ - அ) என்பதனாலும், பச்சையின் குணங்களை, ''நெய்த்தன் மயிற்கழுத் தொத்தல்பைம் பயிரிற், பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல், வத்தி பாய்தல் பொன்வண் டின்வயி, றொத்துத் தெளிதலொடெட்டுங் குணமே'' (சிலப். கச: கஎச - ரு, விசேடவுரை) என்பதனாலு முணர்க.

உக. பச்சையின்குற்றம் எட்டும், ''கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப், பொரிவு தராச மிறகுதன் மாகத்த், தெண்ணிய குற்ற மிவையென மொழிப'' (சிலப். கச: கஎச - ரு, விசேடவுரை) என்பதனால் ஆராய்தற் குரியன.

உஉ. தமிழ்ப்பிரபந்தங்களுள் ஒன்றுகிய மும்மணிக்கோவையென்னும் பெயரிலுள்ள மும்மணியென்பன இவையென்பது, இதிலுள்ள மும்மணியாவன என்னும் வாக்கியத்தால் நன்குவிளக்குகின்றது. தோராவல்லி, தோரமல்லி யெனவும், கனகதோராவல்லி, கனகபுட்பராகமெனவும் வழங்கும்.

(பி - ம்.) 1 'ஈச்சங்காயே' 2 'கருப்புத்துளீ' 3 'குறைமற்றுக்கிள்ளீ' 4 'வத்தி' 5'காற்றிறுக்கல்' 6'அவைதமக்கு' 7'மறுவறு தோராவல்லி கனகதோரா வல்லி'

வேறு.

மறுவறு [1]சிறப்பிற் பெருவிலை மணிகள் [2]வாய்த்தன விலையெனக் காட்டி, யுறவுறப் பேசி விற்றிடக் கொண்ட வுத்தம நிலக்கணங் கண்டே, நிறைவுறு மகிழ்ச்சிக் கடலிடை மூழ்கி நெறிப்பட நவநவ மணிகண், [3]மறைபறை யுலகிற் கண்டிலோ மென்று மவுலியும் விதிப்படி யமைத்தார். (உக)

அரசிளங் குமரர்க் குயர்விழா நடத்தி யணிமுடி மறைநெறி சூட்டிப், பெருமைசேர் வணிகன் றனைநயப் பிப்பான் பெரும்பொருள் கொண்டுமுன் செல்லக், கருதிய பொருள்கள் வேண்டுவ வளிக்கும் கடவுள்கண் டெழுந்துளே நகைத்தாங், குரியவா லயத்தை நோக்கிநேர் போகி யொளித்தனன் றுதித்ததி சயிப்ப. (உச)

[4] ஆங்கணை மறையோ ரமைச்சரன் புடைய வழகிய சொக்கெனத் தேறி, யீங்கிவ னளித்த மணிமுடி சூடற் கெத்தனை தவஞ் செய்தா னிதனுற், பாங்குடை யுலகந் தனிமுழு தாண்டு பகைகடிந் [5]தூழிவாழ்ந் தறத்தி, னோங்குவ னென்று போற்றியா லயத்தி லுத்தம னடிபணி விதித்தார். (உடு)

[6] அதர்படத் துதித்து மன்னவன் மகிழ்ந்தே யவனியோர் நாளும்வாழ்க் திலங்க, நதிபொதி சடையா னருளினுல் [7]விளங்கி நாற்பெரும் படைநனி படைத்து, நிதிகவர் ஞாதிப் பகைகடிந் தெடித்த நீணிதி கவர்க்குய ரதத்தின், மதிமர போங்க விருந்தர சாண்டான் வரமனு வெனநெடுங் காலம். (உசு)

ஆகத்திருவிருத்தம் - [8]அக.

உசு.—ஆனையெய்த திருவிளையாடல்.

தவமுறு பத்தித் [8]தென்னவ னொருவன் சைவதால் சிவபுராணங்கள், சிவனையு மொளிவெண் ணீற்றையு நாளுந் தெய்வவஞ் செழுத்தையும் போற்றிப், புவியொடு தானும் பொருளெனக் கொண்டு பூண்டியர் மதுரையம் பதியிற், பவநிசி யகல வருளினுல் விளங்கிப் பகையற வாழுநா டன்னில். (க)

உக. கவம் - புதுமை, ஒன்பது. மறை பறை - வேதம் சொல்லுகின்ற.

(உசு)

க. பவ நிசி - பாவமாகிய இருள்.

(பி - ம்.) [1]பிறப்பிற்' [2]'வாய்த்தன' [3]'மறையறையுலகிற்' [4]'ஆங்கனமறையோர்' [5]'ஊழிவாழ்த்ததனின்' [6]'அதிர்படத்' [7]'விளங்கு' [8]'தென்னவன்றோர்த்து'

தந்திர மிக்க மூர்த்தியோர் சோழன் ரூனையால் வெல்லமாட்
டாமன், மந்திர வாதஞ் செய்துகை தவனே மதுரையம் பதியொடுங்
கூட,மூர்த்துற வெல்லக் கடவமென் றெண்ணி முடிவில்[1]பல் பொருள்
களுங் கொடித்து, வெந்திற லமணர் தங்கள்பாற் செல்ல விட்டனன்
[2] கட்டிநெட் டோலை. (உ)

வேறு!

நம்பெரு மடிகள்[3]காண்க நலந்தரும் வளவ னோலை
யெம்பெரும் பொன்னி நன்னாட் டிலங்குயர் பதிகண் டிக்க
[4] செம்பொனே டளிப்ப லின்று செழியனே மதுரை யோடும்
வம்புறக் கோறல் வேண்டி மந்திர வாதத் தென்றே. (ஊ)

முட்டவெண் கிரிக்கண் வாழு முதல்வரெண் ணுயி ரத்தோர்
கட்டவிழ்த் தடைவி னோலை வாசகங் கண்டு வாழ்ந்து
சட்டெனக் கூடி யின்றோர் தந்தியைத் தோற்று வித்து
விட்டிமைப் பொழுதிற் சேர விழுங்குவிப் பேமென் றெண்ணி. (எ)

[5]மன்றுநீ டசோக நீழன் மந்திர வாதஞ் செய்ய
வொன்றிய [6]தூமத் தீயி னுமமார் சத்தி யாலே
வென்றியி [7]னடக்கு மேரு வென்னவோர் வேழந் தோன்றி
நன்றிகொள் புவன மூன்று நடுங்கிட வதிர்ந்த தன்றே. (ஏ)

உ. "மதமலி யமண ரெல்லா மந்திரவாதஞ்செய்து" என்பர்பின்; ஊசு:உ எண்ணி நெட்டோலையைக்கட்டி விட்டனன்.

ஊ. பதிகள் - ஊர்கள். என்று நெட்டோலையைக் கட்டிவிட்டனனென முன்னேகூட்டுக.

எ. எண்கிரி - எட்டுமலை; அவை பலவாறு வழங்கும்; அவற்றின்பெயர் களே, சைனர்களுள் வழங்குவதாகிய, "பரங்குன் றெருவகம் பப்பாரம் பள்ளி, யருங்குன்றம் பேராச்சை யாலை - யிருங்குன்ற, மென்றெட்டு வெற்பு மெடுத் தியம்ப வல்லார்க்குச், சென்றெட்டு மோபிறவித் தீங்கு" என்னும் பழைய வெண்பாவாலும், "அஞ்சனங் கெளஞ்சங் கோவத் தனகதிரி கூடன் காஞ்சி, குஞ்சர சைய மேம கூடமே விந்த மென்னு, மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகு மமணர்" (திருவிளை. யாலை. எ) என்பதனாலு முணர்க; மதுரையைச் சூழ்ந்த எட்டு மலைக ளென்பாருமுளர். வாழ்ந்து - மகிழ்ந்து. சட்டென - விரைவாக.

ஏ. மன்று - பொதுவான இடம்; அசோகமரம் அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்களென்னு மிவர்கள் தங்கிய ஐந்திடங்கள் கூடிய மன்றின்கண் நிற்பதாகச்சொல்லப்படுமாதலின், 'மன்றுநீடசோகநீழல்' என்றார்; "சக்தி யைத்தம் தம்முடன் கூடி, வத்ததலே மயங்கிய வான்பெரு மன்றத்துப், பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்" (சிலப். கக: கசு - உக) என் பதனாலுணர்க.

(பி - ம்.) 1'ஒண்பொருள்களுங்' 2'கட்டிநீட்டோலே', 'கட்டியேயோலே' 3 'காண' 4'செம்பொனுடனீப்பன்' 5'மன்றனீடசோக' 6'ஓமத்தீயில்' 7'அடர்க்குமேரு'

மொஞ்ச[1]கக் கைய ரந்த மும்மத வருவி பாயும்
வெஞ்சினத் [2]தறுகட் செங்கட் குஞ்சர வெற்பை நோக்கிப்
பஞ்சவன் றன்னை யந்தண் பதியொடு மெடுத்துச் சேர
விஞ்சவோர் கவள மாக விழுங்கென வறைந்து விட்டார். (சு)

ஆலகா லங்க டிப்ப வடர்ந்தகிம் புரிவெண் கோட்டாற்
கோலமா முகிலைப் பீறிக் குத்திவான் முகடு சாடி
மேலுடி வுதிர்த்து ஙாகம் வெருக்கொள [3]பிதித்துக் கூடச்
[4] சாலும்வெஞ் சமண ரோடி நடந்தது தரணி யேங்க. (எ)

[5] மதுரை[6]நீட் டைந்து கூப்பி டெனவட கீழைக் கோணத்
ததிர்வொடு தோன்றக் கண்ட வச்சமி லாத வென்றி
முதுவலிச் செழிய னஞ்சி முடிமணி [7]யெனக்க னித்த
விதமுடி யரற்கு ரைப்ப லென்னவா லயத்து மேவி. (அ)

[8] பெருமகின் னருளி னுலே பிறிதொரு வருக்கு மஞ்சே
னருகர்மந் திரித்துச் சேர விழுங்கென வறைந்து விட்ட
பரியகைக் கூற்ற மென்னும் பகட்டினுற் கலங்கி னேனிங்
கொருவரு மிலைநீ யஸ்லாற் காத்தரு ளொல்லை யென்ரூன். (கூ)

அரசகேள் கிழ்பா லிஞ்சி யணையவட் டாலை கட்டின்
[9] றுரஞெடும் வில்லா ளாகி யொல்லைவந் தெவருங் காணக்
கரிகரி யாக வெய்வல் கலங்கிடே லென்ரோர் வாக்குத்
தெரிவுற வாகா யத்திற் சிறந்திடக் கண்டா னன்றே. (கo)

[10]தொழுதிறை திருவாக் கென்று சோகம்விட் டகம கிழ்ந்து
பழுதிலா வமைச்ச ரோடும் பன்முறை பழிச்சிப் போந்து
முழுவதும் வல்ல தெய்வக் கம்மியர் தம்மான் முன்ன
ருழைமதி தவழெ யிற்பா லுரைத்தவா ரேங்கச் செய்தான். (கக)

சு. மொஞ்சகம் - மயிலிறகின்தொகுதி; மந்திரித்தற்குச் சைனர் கையிற் கொள்வது; "தழையுலாங்கையர்" (திருவிளை. விருத்த. க.)

அ. நீட்டு - தூரம். கூப்பிடு - கூப்பிடுதூரம். அதிர்வு - முழக்கம். 'முடி மணியெனக்களித்த' என்றதனுல், இவன்காலத்து இரண்டுதிருவிளையாடல்கள் நடந்தன வென்பது அறியப்படுகின்றது.

கo. அட்டாலை - மதின்மேன் மண்டபம்; அது ஞாயிலென்றுங் கூறப் படும். கரி கரியாக - யானைகரிக்கட்டையாக; கரியாகச் சாட்சியாக வென்று மாம்; "கரியாய் மொழியுங் கரியாய் விடாமல், எரியார் தழல் வீழ்ந் தெழுத்து" என்ரூர்; நால்வர் நான்மணி. உடு. கண்டான் - கேட்டறிந்தான்.

கக. முன்னர் உழைமதி தவழ் எயில்-கிழக்குமதில்; "கீழ்பாலிஞ்சி" (கo) என்ரூர். முன்னர் - முதலிலென்றுமாம்; உழை - மான்.

(பி-ம்.) 1'கைக்கையர்' 2'துங்கச்' 3'மதித்து' 4'சாலவெஞ்' 5'மதுரையூர் கூப்பீடென்ன வடகீழ மூலைக்கோணத்து' 6 'நீடைத்துகூப்பீடென' 7 'எமக் கணித்த' 8பெருகுகின்' 9'உரவொடும்' 10'தொழுதனன்'

தெற்றிசேர் தலத்துட் டோன்றிச் சிலையுட னம்பொன் றேந்திக்
குற்றுடை வாளுங் கட்டிக் குலவு[1]தொப் பாரங் கட்டி
முற்றுமெய் யணிவி ளங்க முகங்குறு வியர்ப னிப்ப
வெற்றிகொள் புரங்கள் செற்ற மேருவில் லாளி நின்றான். (கஉ)

கண்ணரு முருவங் கண்டு நயந்துபூ மழைபொ ழிந்து
விண்ணவ ரயன்மா லாகண் டலன்வியன் முழவ மார்த்தார்
மண்ணவர் துதித்தார் வேந்தன் வாழ்தெழ வியந்தான் சூழ்ந்த
வெண்ணரும் கன்னி மாத ரினவளை சிந்தி னாரால். (கஙு)

ஊறிடு மருவி யோங்க [2]லூரனுடை முழக்கங் காட்டத்
தேறிநின் றநிச யித்துச் சிரித்துவா னுறச்[3]சி லேத்து
மாறனுழ் துயரந் தீர மதுரையம் பதியோ ருய்யக்
கூறரு மிலக்கை நாடிக் [4]குறித்துநீள் கணைவி டுத்தான். (கச)

மாணமில் சமண [5]ரெண்ணின் மந்திர வாதஞ் செய்து
[6] தேனலர் தொடையன் மார்பச் செழியனே மதுரை யோடும்
போனக மாகக் கொள்ளென் றேவின புழைக்கை மத்த
யானையை யெய்தான் முன்னம் யானையை யுரித்த வீரன். (கஞ)

யானையாழ் துயரந் தீர்த்தோன் யானைதாங் கண்டங் கண்டோன்
யானைவா கனத்தோன் போற்ற யானையா லயத்தி ருந்தோன்
யானையா னனனைத் தந்தோன் யானைவந் தினையு வந்தோன்
யானையை யுரித்த தன்றி யானையை யெய்தா னன்றே. (கசு)

செல்லம ரெயிலட் டாலைச் சேவகன் விட்ட கொற்ற
[7] வில்லரி முகமால் வாளி வேழத்தை நாடிச் சென்று
மல்லலங் குளத்து மூழ்கி வயிற்றுறு நிணம ருந்தி
[8] யொல்லையி னிலத்தி வாயா லோடிய துதப்பி யோட. (கஎ)

கஉ. தொப்பாரம் - வீரர்கள் தலையிலணியும் முடிவிசேடம்; இஃது இக் காலத்தில் இப்பெயருடன் விஷ்ணுவாலயங்களிற் பெரும்பாலும் காணப்படும்.

கங. எழ - மிக.

கச. அருவியோங்கல் - யானை. சிலைத்து - முழங்கி. இலக்கு - லக்ஷ்யம்.

கஞ. யானையை - தாருகாவனத்து முனிவர் அனுப்பிய யானையை.

கசு. திருமாலும் பிரமனும் இந்திரனும் போற்ற. யானை ஆலயம் - எட்டு யானைகளாற் சுமக்கப்படும் இந்திரவிமானம். யானை ஆனனன் - விநாயகர். யானை வந்தனை - ஐராவதஞ்செய்த வணக்கத்தை.

கஎ. செல் - மேகம். அட்டாலம் - மதில் மேல்மண்டபம். அட்டாலைச் சேவகன்: உஅ. அரிமுகமால் வாளி - நரசிங்காஸ்திரம். குளம்,

(பி - ம்.) 1 'தோற்பாரக்' 2'உரனிடி' 3'கலித்து' 4'குறித்த' 5'எண்ணி மந்திர' 6'தேனலர்' 7 'வில்லரிக்கணைவான்முட்டும்', 'வில்லுறுகணை' 8'ஒல்லைமா சிலத்திவாயால்'

வேறு.

வீரன் விட்ட கணைபட விண்பயங்
கூர விட்ட குருதிப் பெரும்புனல்
வாரியொப்ப விளங்க வரையெனச்
சோரு மத்தி யிலத்தி சொரிந்ததால். (கஅ)

[1]கடிகி மோதிக் கதறி விழாமுனம்
படியின் [2]மாமகண் முன்னம் பரவினள்
கொடிது காத்தரு ளென்றுபொற் கோயில்வாழ்
கடிய வெட்டிக் களிறுங் களித்தவே. (ககூ)

பிடிக ளோடும் பெரும்பயம் போய்த்திசை
முடிவில் யானைக ளெட்டு முழங்கின
வடைய மானிட ரச்சந் [3]தவிர்ந்தனர்
நடுங வின்றனர் தொந்திவி நாயகர். (உ0)

உரன ழிந்து விழுந்த வுவாவினை
யிருமை மிக்க விலத்தியை நாட்டவர்
தரும மிக்க தனிவிளை யாடலின்
வரிசை காண வரையுரு வாக்கினன். (உக)

வேறு.

முடிசிகையினர் விடுசடையினர் முண்டித்தவர் கொன்றைக்
கடிகமழ்சடை யரனடியவர் கடிவிசையுட னணுகிப்
[4]படிதருதலை பறியமணர்கள் பயமொடுணி குழறத்
தடிகொடுதலை சிதறினர்சய சயவெனநட நவிலா. (உஉ)

தெற்றி, வாலி; சிலேட்டை. இலத்திவாய் - அபானம். உதப்பி - வயிற்றிற் சீரணியாமலிருக்கு முணவு.

கஅ. அத்தி இலத்தி சொரிந்தது - யானையானது இலத்தியைச் சொரிந்தது; "இலத்தியுள் விளை பாண்டமென்னுது" அறங்கூத்தநாதர், சகூ.

ககூ. பொற்கோயில் - சோமசுந்தரக்கடவுளின் ஆலயம்; "செம்பொனுலயத்துப் புக்கு", "பைம்பொனுலயத்துப் புக்கு" "பொருவருங்கோயின் முற்றும் பொன்னினுல் வேய்ந்து" என்பர் பின்; உள: உள, எள; ஈ0: நிஈ.

உ0. மானிடர் அடைய - மனிதர் எல்லாரும்.

உஉ. முண்டித்தவர் - தலையை மழித்துக்கொண்டவர். தலைபறி - தலை மயிரைப்பறித்துக் கொள்கின்ற.

(பி - ம்.) 1'கடிகை' 2'மாமகளும்முன்' 3'தணிந்தனர்' 'படர்தருதலை யுறியமணர்கள்'

வேறு.

கன்றிய சமணர் மாளக் கவுரிய னணுகி யானே
பொன்றிய தல்லாற் கல்லாம் புதுமையைப் பாரீ ரெய்த
வென்றியைப் பாரீ ரந்தோ வெல்லலயார் வல்லார் நக்தக்
தென்றமிழ்ச் சொக்க னல்லாற் றெய்வம்வே றுண்டோ வென்றான். (உ)

வடிவுடைக் கடவு [1]ளங்கண் மறைகுவா ஞெருப்ப டுங்கால்
விடுவிசைப் புரவி மேன்முன் [2]விரைசந்திறை யேவப் போனேன்
படிபுக முமைச்ச ரோடும் பன்முறை [3]பணிந்தெ தழுந்து
கடிகமழ் கமலப் பொற்றாள் பிடித்தனன் கருத்துட் கொண்டு. (உச)

இவ்விடத் தென்று நின்றே யிக்திருக் கோலந் தன்னை
மெய்வரப் [4]பழிச்சு வோர்க்கு வேண்டிய வரங்க ணல்கிச்
செவ்வையிற் காத்தல் வேண்டுந் தீர்த்தனே பத்தர் வாழ்வே
கொவ்வையங் கனிவாய் மங்கை கொழுநனே யெனத்து திக்தான். ()

இச்சையி னடியார் தங்கட் கெளியம்மா மாத வாலே
நிச்சய மாக விங்கு நிற்கின்றே நின்போ லெம்பாற்
கச்சமி லாத வன்பற் கண்டில மடிவி டென்று
நச்செயிற் றரவக் கச்சை நாயக னருளிச் செய்தான். (உசு)

அருளினை நிறைந்த தென்ன னடிக்கம லங்கள் விட்டுப்
பொருவில்பல் சிறப்புஞ் செய்து போற்றினன் புவியோர் போற்றப்
பரிவொடு நின்ற னங்கண் பணிவுடைப் பத்தர்க் கென்றும்
பெருகவேண் டுவகொ டுப்பான் காரணம் பிறங்க வென்றே (உஎ)

ஊனெழு குன்றை யானை மலையென வொழிந்த குன்றை
மீனமி லாவி லத்தி மலையென வெய்த கோவைத்
தேனலர்த் தொடையட் டாலைச் சேவக னென்ன நாம
மாநிலத் தன்று மூன்று மன்னிட [5]வழங்கு மன்றே. (உஅ)

உசு. கல் - மலை.

உச. வடிவுடைக்கடவுள் - சுந்தரேசர்.

உரு. இச்செய்யுளால், பண்டைக் காலத்தில் அட்டாலைச் சேவகருடைய திருவுருவமிருந்ததென்றும் அது வழிபடப்பெற்றுவந்ததென்றும் தெரிகின்றது.

உசு. 'அடியார் தங்கட் கெளியம்மா': 'அடியவர்க்கெளிய சுந்தரன்', 'அடியவர்க்கெளிய சொக்கன்', 'அடியவர்க்கெளியவர்'. 'அடியவர்க்கெளிய வெம்பெருமான்' என்று இந்நூலில் பலவிடங்களில் வந்திருத்தல் காண்க. கச்சம் - அளவு.

உஎ. பிறங்க நின்றான்.

(பி-ம்.) 1'ளங்னன்' 2'விரைத்தருள்புரியப்போனேன்' 3'பணிந்துபோற்றி' 4 'பழிச்சினோர்க்கு' 5'வழங்கிற்றன்றே'

[1]பாவியர் விட்ட கொற்றப் பருப்பத விபத்தை வீழ
மூவர்க டலைவன் சிங்க முகக்கணை விடுத்த லாலே
காலல [2]னவதா னத்தைக் காசினி சுமண நண்ணி
மேவரு நரசிங் கத்தை யிருத்தினன் வேழக் குன்றில். (உசு)

ஆகத்திருவிருத்தம் - நிகo.

உஎ.—[3]ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடல்.

அழகினுக் கழகார் மேனி [4]யாலவா யமுத வாயான்
பழுதில்சாத் தவர்கள் சூழப் பல்பெருஞ் சிறப்பிற் றோன்றிப்
பொழிலுல கனைத்துங் காணப் புரவினூற் கியைய மிக்க
செழியன்மூன் குதிரை யிட்ட திருவிளை யாடல் கேண்மின். (க)

சந்திர குலத்தி னீடோர் தானைவேல் வாகை மாற
னந்தமின் முன்னோர் போல வவனியை யடைவிற் காத்துச்
சுந்தரற் கன்பு பூண்டு [5]துலங்குமா மதுரை தன்னுண்
மந்திரத் தலைவர் சூழ வளம்பட வாழு நாளில். (உ)

உசு. பருப்பத இபத்தை - மலைபோன்ற யானையை. காவலன் இருத்தினன்.

(உஎ)

க. இச்செய்யுள் கவிக்கூற்று. 'அழகினுக்கழகார் மேனி': "அழகெனு மதவு மோரழகு பெற்றதே' (கம்ப. மிதிலை. சுச); "அழகினுக் கழகு செய்தார்" (வெ. கோலங்காண். சு.) 'ஆலவாயமுதவாயான்': 'ஆலவாயமுதமன்' (திருநகர. கக), 'ஆலவாயமுதவாக்கன்' (கசு: க.) சாத்தவர்கள் - சென்றுசென்று வியாபாரம் செய்யும் வாணிகர்திரள்; இது, ஸார்த்தமென்னும் வடமொழியடியாகப் பிறந்ததென்பர். புரவினூல் - அசுவசாஸ்திரம். குதிரையிட்ட - குதிரைகளை அளித்த; "இனப்பரியிட்டதன்றி" என்பர் பின்னும்; நo: நிo. திருவாதவூரர்புராணத்துள்ள குதிரையிட்டசருக்கமென்னும் பெயரும் இக்கே அறியற்பாலது.

உ. வளம்பட - பலவகைச் செல்வமும் உண்டாக; "வளம்பட வேண்டாதார் யார்யாருமில்லை" நாலடி. கoசு.

* "சுராமலரோ டாகமதியஞ் சடைமேற் கொண்டார் குடமுழநீர் நீள வானகனுங் கொண்டாங்" (திருநா. தனித்திருத்தாண்டகம், கக); "உனக்குக், கலந்தவள் பாகிக் கசிந்துள் ளுருகு, கலந்தா னிலாத சிறியேற்கு கல்லி, நிலத்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி, காயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத், தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" (திருவா. சிவபுராணம், நிசு - சுக); " அந்தண ஞகி யாண்டுகொண் டருளி, யிந்திர ஞாலங் காட்டிய வியல்பும்", "திருவார் பெருந்துறைச் செல்வனுகிக், கருவார் சோதியிற் கரந்த

(பி - ம்.) 1'பாவிகள்' 2 'அவதானங்கள்' 3 'குதிரையீடு ஞானஉபதேசஞ் செய்த' 4'ஆலவாயான்மகிழ்ந்து' 5'தனக்கு'

நீதிமா மதூக நீழ னெட்டிலை யிருப்பை யென்றோர்
காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனூர் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும்
வேதநா யகனூர் வாழும் வியன்றிரு வாத வூரால். (கூ)

கள்ளமும்" (திரு. சீர்த்தி. சஉ - கூ; நிச - நு); "பரமா நந்தப் பழங்கட லதுவே,.....அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்த" (திரு. திருவண்டப் பகுதி, சுசு - கூடு); "என்னே ரனையோர் கேட்கவக் கியம்பி, யறைகூவி யாட்கொண் டருளி, மறையோர் கோலங் காட்டி யருளலும்" (திரு. திரு. கசஎ - கூ); "அருபரத் தொருவ னவனியில் வந்து, குருபர னுகி யருளிய பெருமையை", "மெய்தரு வேதிய னுகி வீணைகடக், கைதர வல்ல கடவுள்போற்றி", "என்னையு மொருவனுக்கி யிருங்கழல், சென்னியில் வைத்த சேவக போற்றி" (திரு. போற்றி. எடு - சு, அஅ - கூ, கஉகூ - கஉo); "ஈறி லாதநீ யெளியை யாகிவந் தொளிசெய் மானிட மாககோக்கியும்" (திரு. திருச்சதகம், கூக); "செங்க ணெடுமாலும்.....வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானுய்" (திரு. திருவம். க - கச); "காட்கொண்ட காண்மலர்ப் பாதங் காட்டி நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை, யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி, யாடப்பொற் சுண்ண மிடித்து நாமே" (திரு திருப்பொற். அ); "வன்னெஞ்சக் கள்வன் மனவலிய வென்னுந்த, கன்னெஞ் சுருகுகிக் கருணையினு லாண்டு கொண்ட,.....பொன்னங்கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ","அருவாய் மறையபி லத்தனு யாண்டுகொண்ட, திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ" (திரு.திருக்கோ. கக, கச); "உருகா மறியவோ ரந்தணனு யாண்டு கொண்டான்", "வாவாவென் றென்னையும் பூதலத் தேவலித் தாண்டுகொண்டான்" (திரு. திருத்தெள்ளேணம், க, எ); "பெருந்துறையான், சீரார் திருவடி யென் றலேமேல் வைத்தபிரான்" (திரு. திருப்பூவல்லி, கo); "கருணையினுற் றேவர்குழா, நாணுமே யுய்யவாட் கொண்டருளி" (திரு. திருப்பொன்னூசல், நு); "அந்தண னுகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி.....ஆட்கொண்டருளும்,.....தேவர்பிரான்" (திருவிற்பத்து, கo); "அந்தண னுவதுங் காட்டி வந் தாண்டா யாரமு தேபள்ளி யெழுத்தரு ளாயே" (திரு. திருப்பள்ளி. அ); "நாயேன் றனையாண்ட பேதாய்", "முன்னே யெனையாண்ட, பார்ப்பானே" (திரு. புணர்ச்சிப்பத்து, கூ - கo); "ஆண்டுநீ யளித்த வருளினை மருளினுன் மறந்த, வஞ்சனேன்" (திரு. வாழாப்பத்து, சு); "திருவடி யென்றலே னனட்டமையால்" (திரு. குலாப். அ); [திரு. அருட்பத்து, அற்புதப்பத்து சென்னிப்பத்து ஆகிய இவைமுதலியவற்றைப் பார்க்க.] "பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப், பேதங் கெடுத்தருள்செய் பெருமை யதியவல்லார்" (திரு. திருவார்த்தை, எ).

கூ. மதூகம் - இருப்பைமரம்; 'நெட்டிலை யிருப்பை' என்னும் அகவல், "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைத்தலைப், பரதர் மனைதொறு முணங்குஞ், செத்தலை யிதவின் சேரேய்க் கும்மே" (கபிலர்வாக்கு) என்பது. இது தமிழ்நாவலர் சரிதையிற் கண்டது. இருப்பையும் மகிழும் அத்தலத்திற்குரிய விருக்ஷங்களென்று தெரிகின்றன: "கமழ்மதுக மகிழ்வாத புரத்து" (கடம்ப. இலீலா. உள.) அத்தலத்தில், ஸ்ரீமாணிக்க வாசகர்க்குச் சிவபெருமன் திருச்சிலம்பொலியைக் காட்டியருளினர்; "வாதையம் புரத்துறண்ணி மணிச்சிலம் போ

ஆதியா தித்தன் [1]சோம னக்கினி தமது பேரால்
வேதியர் தமைவந் தேத்தி விளம்புமுன் னுகங்கண் மூன்றுங்
காதலின் வணங்கக் கண்டு கடையுகம் வாத ராச
னீதியின் வணங்க வாத புரமென நிகழு மூதூர். (சு)

தெரிவையர் விழியை யேய்க்குஞ் சேல்வளை களத்தை யேய்க்கும்
பரிபுரப் பதத்தை யேய்க்கும் [2]பங்கயம் பழனந் தோறுந்
தருமுகிற் றூளை போர்த்துத் தாரகை முத்தம் பூணக்
கருதிநீள் கமுகை யேய்க்குங் கன்னலைச் செங்கெ லேய்க்கும். (ரு)

மன்னுமிக் நகரி தன்னுண் மானமங் கலத்தா ராகுங்
தொன்னெறி [3]முனிவ ராமா மாத்தியர் தொழுகு லத்து
நன்னெறி விடையிற் போக்தோர் நன்கணத் தலைவர் நாம
மின்னெறி வாத வூர ரென்னவந் துதயஞ் செய்தார். (சூ)

மன்னுமுற் நெடர்பி னுலே மாசற வீரெட் டாண்டுண்
முன்னை நூ னீதி நூன்மற் நியாவையு முற்றக் கற்றுக்
கொன்னுற வளரக் கேட்ட [4]கொற்றவ னயக்த ழைத்துத்
தன்னுடை [5]நன்னு மத்தாற் நலைமைசேர் நாமஞ் சாத்தி. (எ)

சைகாட்ட" (உ. அ: கச); "வாத வூரினில் வக்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" (கிருவா. கீர்த்தி. நிஉ - ரு) என்பதனாலு முணர்க. வேத நாதரென்பது, அத்தலத்துச் சிவபெருமானுடைய திருநாமமாதலின் 'வேதாரா யகனார்' என்றார்; 'வேதியர்' என்பர்மேலும்; ச. திருமால் வக்து பூசித்தபொ முது "வேதாஹம்" என்ற சுருதி, சிவலிங்கப் பெருமானிடமிருக்து தோன்றி னமையின், இத்திருநாமம் அமைக்ததென்று அத்தலத்து வடமொழிப்புரா ணம் தெரிவிக்கின்றது.

ச. ஆதியாகிய ஆதித்தன். சோமன்-சக்திரன். வாதராசன்-வாயுதேவன்.

ரு. வளை - சங்கு. "கரும்பல்ல கெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன" (பெரிய. நாடு. கரு) என்பதை இச்செய்யுளின் ச - ஆம்அடி ஒத்துள்ளது.

சு. மானமங்கலமென்பது திருவாத வூருடைய முன்னையோரிருந்த ஊரி ன் பெயரென்று தெரிகின்றது; மானபுரமெனவும் வழங்கும். இந்நூல், உ அ: அ. ஆம்செய்யுளிலுள்ள, "இருநி லிருநின் மானபுரமென்னுங் கொடுமை பொறு க்க இலேன்" என்பது ஆராயத்தக்கது. ஒருகணநாதர், சிவபெருமான் கட்டளைப் படியே வக்து திருவாதவூராக அவதரித்தனரென்பதை, "கணநாதர் தமிலொ ருவன் விடையிற் போக்து கமழ்மதுக மிழ்வாத புரத்து வாழ்ந், தணராமாத் தியர்குலத்துட் டோன்றி" (கடம்ப. இலீலா. உஎ) என்பதனாலும் உணர்க. இந்நூலிலுள்ள "இத்தகைமை யிற்றிகழு மெல்லியினி லுட்புக விலங்குகண நாத னெருவன்" (உஉ: அ) என்றது இக்கேஅறியத்பாலது. இச்சரிதவிரிவை, திருவுத்தரகோசமங்கைப்புராணம், பார்ப்பதி தவம்புரிந்த அத்தியாயத் தாலுமுணர்க.

எ. முன்னை நூல் - வேதமுதலியன. தன்னுடை நன்னுமத்தால் தலைமை சேர்நாமம் - தென்னவன் பிரமராயரென்பது; ஆல்: ஒடு; "தென்னவன்பிரம

(பி - ம்.) [1]'சோமனசனிகள்', 'சோமனசுவினி' [2]'பங்கயப்பழனங்' [3]'முனி வராயமாத்தியர்' [4]'கொற்றவன்வந்தழைத்து' [5]'மன்னுமத்தாற்'

மல்லலஞ் சிறப்பி னோங்கும் வரிசைகள் பலவு கல்கி
யெல்லையில் [1]சேனைக் கேற்ற தாழ்வுகேட் டிருத்தி யென்னக்
கல்வியின் மிகுதி யானுங் கருத்துணர் கூர்மை யானுஞ்
சொல்லரு மமைச்சர்க் கெல்லாந் [2]துளங்குமுற் றலைவ ராளர். (அ)

கரிபரி திண்டேர் வென்றிக் காய்சின வீர ராற்றுந்
தரைபுகழ் செய்திக் கெல்லாந் தலைவரா யவனி வேந்தர்
வரவிடு திறையுங் கண்டு மற்றவர்க் கினிய செய்து
[3] பரிவுடைத் தென்னன் பாரந் தம்வயிற் பரித்துப் போந்தார். (ஈ)

துளங்கிய பத்தி பூண்டு சொக்கநா யகன்வி ரும்ப
விளங்கிய நலங்கள் செய்து மேதகு தொண்டர் மாட்டுங்
குளிர்ந்ததங் கிளைஞர் மாட்டுங் கொடுத்தரும் பொருண்மற் றெங்கும்
வளர்ந்தபே ரறங்கள் செய்தார் மனத்திலோ ராசை யில்லார். (கo)

மன்னவ ரிவரே யென்ன வாழுநா டனிலுஞ் சாதி
மெய்க்கெறித் தருமந் தீங்கா வேதிய ரமைச்சி னுலே
முன்னையிற் றனது செல்வ முடிவிலா தோங்கக் கண்டு
தென்னவன் மகிழ்ச்சி [4]யெய்திச் சிறக்குநா டம்மி லோர்நாள். (கக)

வேறு.

கோதி லாத குதிரைத் துறையவர்
தீதின் மாறன் திரு[5]மு னிணைந்தவன்
பாத மீது பணிந்தாங் [6]கொடுங்கிசின்
ரோது வார்க ளுமுபெருஞ் செய்திகள். (கஉ)

நீதி மன்னவ ரேறே நினைவறச்
[7] சீத வெம்மையிற் றேய்க்தன சில்பரி
வாத கோயிடை மாய்ந்தன சில்பரி
யாதி வெப்பி லழிந்தன சில்பரி. (கங)

கண்ட மாலை கவுசி மகோதர
மண்ட சாலம்வெஞ் [8]சூலை யலகுநோய்

ராயனே காண்க" என்பர், பின்னும்; சுக. பிரமராயனென்பது, பிரமாதிராய னெனவும் சிலாசாதனங்களிற் காணப்படுகின்றது.

அ. ஏற்ற தாழ்வு கேட்டிருத்தல் - புகுந்துள்ள குறைகளை விசாரித்துப் பரிகரித்திருத்தல்; அமைச்சர்க்கெல்லாம் வாதவூரர் தலைவரானமை, "அமைச்சர் கடம்முட் கற்றறிவுள்ள தலைவனே" (கஎ) என்பதனாலும் அறியப்படும்.

கூ. செய்தி - காற்படைச்செய்தி.

கங. இதில் குதிரைகளின் நோய்கள் கூறப்படுகின்றன.

கச. கோடகம் - குதிரை.

(பி - ம்.) 1'சேனைக்குற்றத்தாழ்வு' 2'துலங்குமுற' 3'பரிவொடுத்தென் னன்' 4'செய்யச்' 5 'முனடைத்து' 6'ஒதுங்கி' 7 'தீதைவெம்மை' 8 'சூல்மலகை நோய்'

தண்டை கோய்[1]பிர மேகந் தலைக்கனங்
கொண்டி மாண்டன சில்பெருங் கோடகம். (கச)

குற்ற மற்றை வரிசைத் துரகமும்
வற்றி யுய்யுமுய் யாவென மன்னின
பொற்பி லங்கு புதுப்பரி யிங்குகங்
கொற்ற மோங்க விரைவிற் கொளப்படும். (கடு)

மண்ணி னீண்மறு மண்டலங் கொள்பவர்க்
கெண்ணி லங்கொ ரிலக்க மிவுளிகள்
கண்ணு பந்தியிற் கட்டத் தகுமென
வுண்ணி றைந்த விருப்பி னுரைசெய்தார். (கசு)

வே று.

மற்றவ ரியம்பக் கொற்றவன் கற்ற வாதவூர் முனிவரை யழைத்திங், குற்றுயர் புறுகங் காரிய மனைத்து நின்னுணர் வாலுணர் கின்றே, நற்பிர மாணி நீயலா லுண்டோ நானிலத் தமைச்சர்க டம்மூட்,கற்றறி வுள்ள தலைவனே நினக்கோர் காரிய [2]முணர்த்துவங் கேண்மோ.(கஎ)

பகர்ந்தனர் வந்து பரித்துறை யாளர் பரிவுறு நம்பரி யனைத்து, மகந்தரு நோயால் வீந்தன வென்றே [3]யறைப்படுங் காசணி தூசு, தகும்பெருங் கனகம்வேண்டுப வெடித்துத் தாவுமாவிறங்குபட் டினத்துப், புகுந்துயர் பரிகொண் டணைந்திட வேண்டும் புரவிநூ லிலக்கணத் தியைய. (கஅ)

வே று.

என்றது [4]சொல்ல வாழ்த்தி யான்சொன்மி னெனவே சொன்னர்
நன்றருள் செய்த மாற்ற நாதனே விரைவிற் [5]செய்வ
வின்றுநீ விடைதா வென்ன வியம்பிநல் விடையிற் போந்து
துன்றுபொன் னறைமாட் டெய்தக் காவல ரெதிர்து தித்தார். (ககூ)

கடு. துற்ற - நெருங்கின. கொளப்படும் - கொள்ளல்வேண்டும்; தேற்ற விரை.

கசு. மறமண்டலம் - வேற்றரசர் தேயங்கள். பங்தி - குதிரைச்சாலே. கடத்தகும்: தேற்றவிரை.

கஅ. அகம் - பாவம். வீண்தனவென்று பகர்ந்தனவெனக்கூட்டுக. அறைபொன்னறை. புரவிநூல் - அசுவசாஸ்திரங்கள்; சூரியனுலும் சாலிகோத்திராலும் அந்நூல்கள் செய்யப்பட்டுள்ளனவென்பர்.

ககூ. மாற்றம் நன்றென்க. விடை - உத்தரவு, காளே; சிலேடை.

(பி - ம்.) 1'பிரமேகந்தலைக்கணங்' 2'உணர்த்துவல்' 3'அறைபடுங் காசமைதூசு' 4'சொல்லா முன்னு ரிறைஞ்சியான் சொல்வதானேன்', 'சொல்ல வாழ்த்த சொல்லினனெனவே' 5'செல்வல்'

வேறு.

பொன்னி னீடிய புஞ்சமா ரறையினுட் புக்குத்
தன்னு பல்பொருள் சூழ்ந்தகண் காணியி னெடுத்துப்
வஞ்சனே செய்வா னெண்ணி மறைந்துநின் றுதவி செய்யுங்
குஞ்சரந் தாங்கு கோயிற் கூத்தன்வாழ் தேத்தி ஞகா
தெஞ்சழல் [1]வடகீழ்க் கோணத் திடுமென வேவல் செய்வோர்
[2] மிஞ்சிட நெருப்பிட் டார்கள் விண்குடி வாங்க வாங்கு. (கரு)

மானமி லாதோர் தம்மை மதித்துமு னடைந்த தேத்து
ஞானமா முனிவர் தாமு நணுகிடக் கண்ட வீச
னீனமில் புனிற்றி ளம்பாற் கன்றின்பி னிரங்கிச் செல்லுங்
தேனுவே யெனக்க ரந்து சென்றன னிரங்கி யாங்கு. (கசு)

நீதிசேர் செழியர் கோமா னேசமார் தேவி யோடு
மாதர வமைச்ச ரோடு மளவில்சான் றவர்க ளோடுந்
தீதில்பல் லியங்க றங்கச் சிறப்பொடு விளங்கி மிக்க
வாதினைக் காண்பா ஞசை யுடையஞ் யடைந்தான் வந்து. (கஎ)

சுற்றநற் றவர்க ணெஞ்சந் துயருழந் தென்ஞ மென்ன
வெற்றியே நமக்கென் றெண்ணி விரைந்தியந் திரங்கண் மற்றும்
கற்றமந் திரங்க ளெல்லாங் தனித்தனி கனத்த வேட்டி
லெற்றருந் தலைவ ரெண்ஞ யிரவரு மெழுதி யிட்டார். (கஅ)

சிரபுரப் பால ரெந்தை திருவுள்ள மறிவே மென்றே
கருதிநின் [3]ரெழுங்கி முன்னர்த் திருமுறை வகுந்த காலைப்
பொருவரும் போக மார்த்த பூண்முலை யென்ஞ மிக்க
வரர்புகழ் பதிகந் தோன்ற வாங்கிஞர் மலர்க்க ரத்து. (ககூ)

கழறுமா மறை[4]வி ளங்கக் கையுறு துய்ய வேட்டைத்
தழைவுறு பதிக மோங்கத் தளிரிள வளரொன் ரேதி
யழலிடை யிடவே வாம லாதிமெய் யாத லாலே
பழுதற விளங்கிற் றியாரும் பரிவுறப் பச்சை யாகி. (உ0)

கரு. "குஞ்சரந்தாங்குங் கோயிற் குழகன்" ருசு: கசு. "கூத்தனே" (திரு நா. தே.) எஞ்சு அழல் - குறையச்செய்கின்ற நெருப்பை.

கசு. தம்மைமதித்து மானமிலாதோர் அடைந்த.

கஅ. என்னும் - யாதாகுமோ. எற்றுஅரு - பிறரால் வெல்லுவதற்கரிய.

ககூ. ஒழுங்கி - ஒழுங்குபடுத்தி. வகுந்த - வகிர்ந்த; பிரித்த. "போகமார்த்த பூண்முலை" என்பது, திருகள்ளாற்றுத் திருப்பதிகத்தின் முதற்குறிப்பு.

உ0. 'தளிரிளவளர்' என்பது, திருகள்ளாற்றுக்குரிய வேறொருதிருப்பதிகத்தின் முதற்குறிப்பு. 'ஆதிமெய்' என்றது, தேவாரத்தை; வேதம் சிவபெருமானது திருவுருவமென்பர்.

(பி-ம்.) [1]'வாழ்கீழ்க்' [2]'விஞ்சையர்' [3]'ஒழுகின்முன்னர்திருமுறை' [4]'முழக்க'

தருக்கமார் சமணர் தேர்ந்தெண் [1]ணுயிரர் தகுதி யாக
வரிப்பட வெழுதி யிட்ட மந்திர வேட. னேத்து
நெருப்பிடை நணுகா முன்னர் நின்றவர் நகைப்ப வற்றற்
கருப்பிலே போலெ ரிந்து கணத்துளீ றெழுந்த தாலோ. (உக)

யாவையும் வேவ வேவா திலங்கிய வேடெ டித்துப்
பாவமை முறையிற் கோப்பப் பத்தர்க ணெள்ளி யார்த்தார்
காவலன் முதலா வுள்ளோர் களித்தனர் காண்பான் வந்த
தேவரு மதிச யித்தார் செழுமலர் மாரி பெய்து. (உஉ)

தெளிவுறக் கண்டுந் தீயிற் றெளித்துளீ ரரித்துப் பார்ப்போர்
விளிவிலா துரைப்பா ரங்ஙித் தம்பனே கொண்டு வென்ரு
யொளியுறக் காணுங் காலே மும்முறை யுண்டு வாது
களியுற வேண்டா வின்னுங் காண்பமுன் கல்வி யென்ரூர். (உங)

பெருகிமுன் விரைவி னேடும் பெரும்புனல் வையை யாற்றுட்
பரிவுற [2]வெதிர்போ யேறும் பத்திரம் வென்ற தாக
நரபதி சான்ற தாக நானிலத் தெவருங் காண
விருவர்மந் திரத்தை யுஞ்சேர்த் தெழுதியிங் கிடவா [3]காண்பேம். ()

சிறுவனின் னேடெ திர்ந்து சென்றதே லின்று னக்கே
யறிவுடை யாங்க ளெல்லா மடிமையாக் கடவே மற்றும்
பறைதலிங் கொன்றும் வேண்டா பாடைக்குத் தப்பே மென்னப்
புறவமா நகர்வாழ் ஞான பூண ரருளிச் செய்வார். (உரு)

அடிமையி லாசை யில்லே யின்றுளீ ரவையிற் சொன்ன
படிபுகழ் வாதுஞ் சொக்கன் பரிவிலுல் வென்றே மாயிற்
கடிமையி னும்மை முற்றுங் கழுதுதி யேற்று தற்கு
முடியவே யாசை யெய்ரு ரியைந்தனர் வினேயான் மூடர். (உசு)

உக. வற்றற்கருப்பிலே - காய்ந்த கருப்பந்தோகை.

உஉ. அதிசயித்துச் செழுமலர்மாரி பெய்தார்.

உங. நீர்தெளித்து. அங்ஙித்தம்பனே-அக்கினித்தம்பனவித்தை. வாதுமும் முறை உண்டு.

உச. 'விரைவினேடும் பெரும்புனல்வையை'என்பது, வேகவதியென்னும் பெயர்ப்பொருளோப் புலப்படுத்தியது; "தாங்கருந் திறலொடும் வரும்வெம்மை" என்பர்பின்னும்; ருசு. பத்திரம் - ஏடு.

உரு. பறைதல் - சொல்லுதல்; பாடை - பாவை, சபதம்; 'பாடைக்குத் தப்புவராதவன்' என்று உலகில் வழங்கும்.

உசு. கடிமைஇல் - விளக்கத் தன்மையில்லாத. முடிய - முற்ற. 'ஆசை' என்றது, அவரை அஞ்சுவித்தற்பொருட்டு; இவர்கருத்து இன்னதென்பதை, சங-ஆம் செய்யுளாலுணர்க.

(பி - ம்.) 1'ஆயிரத்தகுதி' 2'எதிரேயேறும்' 3'தோற்பேம்'

உளப்படி மைமச்ச ஞரை [1]யுயிர்க்கழு வினவா மூன்ன
ரளப்பருந் தயாவு கூர்ந்திங் கையரே கையர் தம்மைக்
களத்துள வேற்றற் கென்றே கருதியான் முன்னஞ் [2]செத்திக்
[3]குளத்துற விட்டு வைத்தே னருளினு லெனக்கொ ணர்ந்தார். (உஎ)

ஆங்கது கண்டு சால வநிசய முற்று மற்றைப்
பாங்கிறீ வினையான் மூண்டும் பாதகர்க் கருள்சு ரந்தே
யோங்குநன் னலங்கள் கண்டு முணர்விலா மூர்க்கர் நீங்க
ளீங்கிதற் கியைந்த தென்ன காரிய மெடித்தற் கின்றே. (உஅ)

வேறு.

பவங்க ணீக்கும்வெம் பாதக மாற்றுநற்
றவங்க ணல்குந் தலைமை தருந்தொழுஞ்
சிவந்த தாணிழல் சேர்த்துதுங் காத்திரத்
துவந்து பூணி னுருத்திர சாதனம். (உகூ)

வேறு.

நினைவினை முடிக்குந் தூய்மை யாக்கும்வெம் பாவ நீக்கு
மனவிடர் விடம்பேய் தெவ்வு மறலிவா ராமற் காக்கும்
புனையற மின்பம் வீடு பொருண்முத லெவையு நல்கும்
வினைஉடி [4]நால்வே தத்து மிக்கமக் திரவெண் ணீறு. (ஈ0)

குலந்தரு நீதி மிக்க குணந்தரும் வேதஞ் சொல்லும்
பலந்தரு மூயர்ந்த சாயுச் சியந்தரும் பழுதிலாத
தலந்தரு மெல்லாம் வல்ல சயந்தரு நிறைந்த செல்வ
நலந்தரும் பெருமை குன்று நயந்தரு நமச்சி வாய. (ஈக)

[5] நாணிலீர் மன்னன் முன்னு நல்லசொல் கின்றேன் கண்டி
பூணும்வெண் ணீறு பூசும் போற்றியஞ் செழுத்தை யோதுங்
காணுணு முத்தி யின்பங் காணலா மென்னைக் கேட்ட
கோணுறு சமண ரெண்ணு யிரவருங் கொதித்தெ ழுந்தார். (ஈஉ)

உஎ. உயிர்க்கழு - ஒருவகைக்கழு. களம் - கழுத்து. செத்தி - சீலி.

உகூ. காத்திரம் - உடம்பு. உருத்திரசாதனம் - உருத்திராக்கம்.

ஈ0. தெவ்வு - பகை.

ஈக. "குலந்தரும் செல்வந் தந்திடும்.....நாராயண வென்னு நாமம்" (பெரியதிருமொழி, க. பத்து. க.)

உகூ - ஈக. இவற்றுல் முறையே உருத்திராக்கம், திருநீறு, பஞ்சாக்கர மென்னும் இவற்றின் பெருமைகள் கூறப்பட்டன.

ஈஉ. கண்டி - உருத்திராக்கமாலே.

(பி - ம்.) [1]'உயர்கழு' [2]'சேர்த்திக்' [3]'குளத்தளவு' [4]'வேதநான்கின்', 'கங்கைநீரின்' [5] 'காணுவீர்'

முற்றிய சிற்றம் பொங்கி மொழிவன கேட்டுக் கெட்டேன்
வற்றிய தவத்தார் தும்போற் கண்டிலம் வைய கத்திங்
கிற்றைகாட் டோற்பின் யாமே யேறுவ மெனவியைந்தீர்
பொற்புடைக் கழுக்க டம்மை வாங்குமி னெனைப்பு கன்றார். (நகந)

வேறு.

எண்டோ ளஞ்சொன்மு குந்த னிறைஞ்சொளி
வண்டோ துங்கழல் வாழ்த்தவர் பாத்தொகை
கீண்டோ துந்தொலைக் காளத்தர் ஞான்றுமேற்
கொண்டோ தம்மெனக் காளங் கொடித்தனர். (நகச)

வேறு.

மெய்யுறக் கேட்டு னக்கிம் மிகையெலா மென்கொல் வேண்டா
கையறத் தோற்பி னன்றே கழுதுதி யீணவோ மென்று
தையவை யங்கை வாங்கித் தோளில்வைத் தங்கை வீசி
வையைமா நதியின் பாங்கர் நணுகினர் மன்னன் காண. (நகடு)

மேவிய திறங்க ளோடி மவரவர் வீரம் பேசித்
தீவினைப் பயத்தி னாலே வரும்வினை தெளியா ராகிக்
காவல்சேர் மந்தி ரங்கள் கற்றயர்ந் திரங்கண் மற்றும்
யாவையுங் காண வேட்டில் யாற்றிடைத் தீட்டி யிட்டார். (நகசு)

வேறு.

காழி நாயகர் கருணைசே ரழகனே நினைந்து
வாழ்க வந்தண ரென்றுயர் வண்டமிழ்ப் பதிகந்
தாழ வோதியே தடமலி யேட்டிடைத் தீட்டி
யாழ மாற்றிடை யிட்டன ரகிலமுந் தழைப்ப. (நகஎ)

கொடிய நெஞ்சுடைக் கூற்றினை யனையவர் வரைவுற்
றடைவின் முந்துற விட்டவெண் ணுயிர வேடு
மிடையி னின்றவர் கிளர நீ ணகையுற விமைப்பிற்
கடுகி நீர்வழி யோடிமுன் புகுந்தன கடலுள். (நகஅ)

நகந. கழுவேறுவோர் அதனைவாங்கித் தோளில்வைத்தல செல்லுதல் மரபு.

நகச. தூது - பஞ்சபாண்டவர்க்குச் சென்றதூது; உம்மை: அசைநிலை. இறைஞ்சுகழல். மேற்கொண்டுஞான்று ஊதுங்கள்; ஊதுதல் - உடம்புபுடைத்தல். காளம் - ஒருவகை வாத்தியம், கழு. இச்செய்யுள் திரிபு.

நகடு. மிகை - அளவுகடந்தசெய்கை. கை - செயல். தையவை-சூர்மையையுடையவை.

நகசு. ஏட்டில் தீட்டி.

நகஎ. "வாழ்க வந்தணர்" என்பது திருப்பாசுரத்தின் முதற்குறிப்பு.

(பி - ம்.) 1'இயைத்திப்' 2'வாழ்த்தலர்' 3'தனிக்காளத்தர் வாதமேற்' 4 'இயைந்த' 5 'வறங்க' 6 'பயத்தலாலே' 7'நீட்டி' 8'ஐயுற்று' 9'வின்னகை' 10'கடியநீர்வழி'

மாறி லாமறை ஞானசம் பந்தர்தம் மனத்துட்
டேறி யிட்டவொண் செந்தமிழ் மந்திர வேடு
கூறும் வெம்மொழிச் சமணர்கள் கூரிய கழுக்க
ளேற வேறிய தெழவரு மாற்றிடை யெதிர்த்தே. (ஙகூ)

வே று.

இயல்பட வெங்குரு வரசர்[1]ப தம்பெற வெழுதிவ ரைத்திடுமே
கியர்தரு தண்புன னிவுகி ழிந்திட வரவெடை திர்த்திடவே
ஙயமலி யன்பர்கண் மறைமொழி யந்தணர் [2]ஙடமிடு தொண்டருளோர்
செயசெய வென்றன ரரகர வென்றனர் சிவசிவ வென்றனரே. (சஂ)

வே று.

பொங்கு மங்கைய ரமைச்சரு[3]ர் பூழியன் முதலாத்
துங்க வைதிகஞ் சைவமோங் கியவெனத் துதிப்ப
விங்கெ ஞகுமென் றிரங்கிய முனிவர்க ளமரர்
சிங்க [3]நாதங்கள் செய்த[4]லர்ச் செழுமழை பொழிந்தார். (சஅ)

வே று.

நிறங்கள்வே றுய்வி யர்த்து நெஞ்சுலர்ந் தாங்கா ரங்கள்
குறைந்துகை தவமோ வில்லை கைதவ வென்று கூறி
யறம்புரி பால ஞர்த மணிமலர்ப் [5]பாதம் போற்றி
மறம்புரி யமண ரெண்ணு யிரவரும் வணங்கி ஞரால். (சஆ)

நேசமார் ஞான வேந்தர் நெடுங்கழுத் தரித்த போதே
யாசற விருந்தீ ரின்னு மறைகுவ மடிதல் வேண்டா
பூசுமி னினிய நீற்றைப் போற்றுமி னீசன் ரூளே
மாசற நீரு நாமும் வாழலாங் கூடி யென்றூர். (சஇ)

முன்னையூழ் [6]வினையால் வென்ற முனிவகேண் மடிவ தல்லாற்
சொன்னவெஞ் சாம்பல் சீசீ தொடுவமோ வென்று கொண்டு
நன்மைகள் சொல்லா நின்ற ஞானசம் பந்தர் தம்மைப்
புன்மைகள் சொல்லக் கண்டு பொறுத்திலர் பூதித் தொண்டர். (சஈ)

வே று.

கையர் தங்களைக் கொலையுமின் கொலையுமி னெனவே
துய்ய மன்னவன் சொல்லுமுன் கறுவினர் தொண்டர்
பொய்செய் பாதகக் குழுவெலாந் தொலைந்திமைப் பொழுதில்
வெய்ய நீள்கழு வேறினர் மெலிந்துயிர் பதைப்ப. (சஉ)

ஙகூ. எதிர்த்து ஏறியது. சஂ. பதம் - இன்பம்.
சஆ. "கைதவமோவில்லை கைதவ": மடக்கணி. சஇ. இருக்கீராயினீர்.
சஉ. கறுவினர் - கோபித்து. தொலைந்து - தோற்று.
(பி - ம்.) [1]'பதந்தொறும்' [2]'கடனவில்' [3]'நாதமுஞ்' [4]'அலர்த்திரு' [5]'பா தப்போதில்' [6]'வினையாலேடா'

புகல்வ தேதெதி ரிருந்திடுங் குதவழிப் புகுந்து
பகைகொண் முட்டுடைப் பட்டினி [1]வயிற்றிடைக் குளித்துத்
தகவில் வஞ்சக நெஞ்சகந் தனினிண மருந்தி
யிகழும் வாய்முகங் காட்டிட [2]வேறினர் கழுக்கள். (சசு)

வேறு.

பவமுறு கையர் வெய்ய பாறுசெங் குடர்பி டுங்கச்
சிவையவை சூழக் காக நிழலிடத் திரண்டோர் தாளிற்
றவமுய லலகை யென்னச் சாலீவ வாயங் காத்து
கவடிவெண் பற்கள் காட்டி யிருந்தனர் கழுக்க டோறும். (சஎ)

சாணகம் பூசி யேடா சுட்டிடத் தரியே மென்பார்
கோணில்கன் றெடித்து நீறு தருந்திருக் கோயி லென்பார்
காணீ றின்றி வெள்ளை கண்டன வணிவா ராகி
வீணழிந் தொழிந்த கையர் விலாவொடி யாக்கி ஞரால். (சஅ)

தளம்புநெஞ் சுடைய வெண்ணூ பிரஞ்சமண் டலேவ ராயோ
ருளம்பரி வொடுக முக்கண் யோசனை யகல மேற
வளம்பட வாது செய்த வாரண மென்னு நாமம்
விளங்கிய தன்று முன்னு மேதகு தராத லத்தே. (சகூ)

வேறு.

பாசமற நீறணிவான் பாக்கியமில் சாக்கியர்க
ணேசமுற விருந்தகழு நிரைமுடிந்த விடமின்றும்
பூசுரர்கள் பணிந்தேத்தும் பூவணநன் னகர்மருங்கிற்
காசினிமேல் விளங்கியது கழுவர்படை வீடெனவே. (நிஎ)

வேறு.

உறைத்த மன்னவன் முன்ன ருயர்ந்திடக்
குறித்த சாமரம் பெற்றது குற்றமோ
பொறுத்த தோணி புரத்தவர் தம்மொடுங்
கறுத்த செங்கழுக் காணிச் சமணரே. (நிக)

சசு. எதிர் புகல்வதேது. முட்டுடைப் பட்டினி வயிறு - கண்டுமுட்டு, கேட்டுமுட்டுக்களால் பட்டினியிருக்கும் வயிறு. முகம் - கழுவின்முகம்.

சள. பாறு - கழுகு. சிவை - நரி. கவடி - பலகறை.

சஅ. சாணகம் - சாணம். கன்று - பசுக்கன்று. விலாவொடி - விலாப் பக்கம் ஒடியும்படி சிரிக்கும் சிரிப்பு; "விலாவிறகக்கு" (மணி. கச: ஈசு.)

சகூ. தளம்புநெஞ்சு - தளரும்புகின்ற மனம்.

நிஎ. சமணர்களுக்குச் சாக்கியரென்றும் ஒருபெயருண்டு; கழுவர் படை வீடென்பது இக்காலத்துக் கழுவேறுமடை, கழுவேறு கடையெனவழங்கும்.

நிக. சாமரம் - சாமரை, கழுமரம். இக்கவி, வஞ்சப்பழிப்பணி.

(பி - ம்.) 1 'வயிற்றினைக்கிழித்து' 2 'ஏறின'

வே று.

நன்னெறி யேடு காண்பா ஞசையாய் நலங்கள் செய்து
மன்னவன் றுதிப்ப நாலு கவிப்[1]பெரு மாண்ம கிழ்ந்து
முன்னுறக் காட்டு கின்றேம் போகென மூடுகிச் சென்றூர்
கன்னல்சூழ் புனலி யாற்றங் கரைவழிக் குடபா ஞைக்கி. (நுஉ)

வே று.

[2]ஆர்ந்து செல்கதி கண்டுகண் டன்புறு நெஞ்சம்
வாழ்ந்து செல்வுழி மந்திரச் செந்தமி ழேடு
சூழ்ந்த தெண்டிரைக் கடலென வருகதித் துறைக்கட்
சேர்ந்து மூழ்கிய தோசனை யொன்றரை சென்று. (நுக)

ஆங்குக் காணுமு னீழிந்தன ராதர மூதிர்வா
லோங்கு நாயக ஞணையா லுணர்வுடைத் தடினி
தாங்க ருந்திற லொடிவரும் வெம்மையைத் தணிந்தே
பாங்க றிந்துதாள் படிந்தது பாரதி சயிப்ப. (நுச)

வே று.

வடகரை யேறி யேறு மேடுகா ணுமல் வாடிப்
புடைவரும் புதல்வர்க் கண்டு புதுமைவே றுண்டோ வென்னப்
படிபுகழ் நிரையான் மேய்ப்போம் யாங்கள்கேள் பழைய தாய்நன்
குடையதோர் சிவலிங் கந்தா [3]னுண்டுகா ணென்றூர் காட்டி. (நுடு)

ஞானசம் பந்தர் கண்டு நணுகியா லயத்தி றைஞ்சித்
[4]தேனுறை வன்னி யென்று செந்தமிழ்ப் பதிக மோதப்
பானரை பிறங்க மூத்துப் பழுத்தவோர் விருத்த ஞடிக்
கூனிவந் துயர்காப் பிட்டான் சேடனூர் கீடு கோமான். (நுசு)

மிக்கபா லககே ளிந்த வேடெதிர் மேவி யாற்றுட்
புக்கியான் மூழ்குங் காலென் காலிடைப் பொருந்தல் கண்டு
திக்கறிந் தெடுத்தேன் மூத்தே னைதலாற் றெரிந்த தில்லை
மக்களுண் டவர்க்கு நல்க வாசித்துத் தருதி யென்றான். (நுஎ)

நுஉ. ஆசையாய்த் துதிப்ப.

நுக. "வாரிதி யுருவா யாத்தின் வருபெருஞ் சலில முற்றும்" என்றூர் முன்னும்; எ: அ. ஓசனை - யோசனை.

நுச. தடினி - ஆறு.

நுசு. "தேனுறைவன்னி" என்பது திருவேடகப் பதிகத்தின் முதற்குறிப்பு. காப்பு - திருநீறு. சேடனூர் - திருவேடகம்; ஆதிசேடன் பூசித்த தலமாதலின் இஃது இப்பெயர்பெற்றது; சுசு-ஆம் பாடலைப்பார்க்க.

நுஎ. புக்கு - புகுந்து. நல்க - நான் கொடுத்தற்கு.

(பி - ம்.) 1 'பெருமான்' 2 'ஆழ்ந்து' 3 'உண்டுபோ' 4 'தேனுறை'

சித்திர மதற்க ணிட்ட தெய்வநீ றிலங்க வுச்சி
வைத்தவொண் சிகைவி ளங்கப் பிணங்குநூன் மார்பின் மின்ன
வித்தக வடிவின் வந்த விருத்தவே தியரே நும்மை
யுத்தமச் சிவனே யென்ன வுதிக்கின்ற துளத்தெ னக்கே. (நிஅ)

சிறியனேன் பனுவல் கல்வி சிறந்தநின் றிருமைத் தர்க்கு
முறுவலே தருவ தல்லால் வேறிலே முடிகிக் காண்பான்
மறுவறு தென்னன் வந்தான்[1] வருந்தியோர் கார ணத்தா
லிறையவ காட்டல் வேண்டு மென்றுமெய் யொடுங்கிச் சொன்னார்.(நிக)

அவ்வுரை கேளா முன்ன ருருமறைக் கிழவ னக்கென்
செவ்விய மைந்தர் கட்குத் தேடிவே றளிப்ப ரேன்ற
மெய்வரு தென்னன் கையின் மேதினி முழுது மெச்ச
விவ்வுரை தீட்டி மேட்டை யீயென வீந்தா னன்றே. (நிஎ)

வேறு.

சிறுபா லகனீ சிவபத் தறுமா
யறிவால் விறலா லருளா லுயர்வா
னிறைவா கியிருந் தனைநீள் பகைவென்
றுறவா ழுநிகான் மறைதீ யாகாள். (நிஏ)

எனவாழ்த் தியொளிக் குமுனின் பமுமுங்
தனியா னைவியக் குயர்தா னையொடு
மனவா தரவால் வரு[2]மன் கரமீ
தனைவோ ரும்வியப் பவளித் திடவே. (நிஐ)

வேறு.

மன்னவ னதிச யித்து வந்தவா றெங்கு னென்னத்
தன்னிக ரில்லா விந்தத் தலத்திடை நயந்தி ருக்கு
முன்னிகழ் சிவன்[3]மெய் மூத்தோர் முனிவனில் வந்த வித்தா
னென்னுமுன் பணிந்தான் [4]பல்கா லேத்தினன் கூத்து மாடி. (நிஒ)

இகலமண் பரிச னத்தா லேறிய பாவ நீங்கச்
சிகரநீள் கோயில் கண்டு சிவனைநா டொறும்வ ழுத்தித்
தகுதித் தென்பா [5]னன்கு தரும்படை வீடு செய்து
பகையற விருந்தா னங்கண் பாண்டியன் சிறிது காலம். (நிசி)

நிக. பனுவல் முறுவல் தருவதல்லால்.
நிஎ. மெய் - உண்மை வழி.
நிஐ. தனி யாளன் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்; எழுவாய்.
நிசி. பரிசனம் - ஸ்பரிசம்.

(பி - ம்.) 1'ரணங்கி' 2'மன்னர்கரத்து' 3'மேன்மூத்து' 4'அன்பால்' 5 'நான்குதரும்படைவீட்டைச்'

வே று.

விரைவோ டிகலா விடுமே டெதிர்போய்க்
கரைசேர் தலினு றுறைகா ரணனைப்
பரவே [1]டகனென் றிடவே பதியுந்
திருவே டகமென் றுசிறந் ததுவே. (சுரு)

வே று.

உன்னி மாலு [2]மூவணனுஞ் சேடனு
மன்னு சாத்தனு நான்முகம் வாழ்த்தகந்
தின்னு பல்பொரு டோன்றி யொடுங்கக
மென்னே யாளுடை யானுறை யேடகம். (சுசு)

வே று.

அறநெறிக் காழி வேந்த ராதரத் தேடெ திர்ந்த
துறைவயிற் சமண ரோடும் பாடித்த தோடந் தீர
வுறவுறத் தமது பேரா லுயாவுடைச் சிவலிங் கத்தைச்
சிறுமையிற் றெள்ளி யாரென் றருச்சித்தார் செழியன் காண. (சுள)

வே று.

பொழிலார் மதுரா புரிமே விவியங்
தழகா யதனு ரணகா யகனைத்
தொழுதாய் தமிழ்பா டியபின் னுதியா
லெழிலா லயமற் றுமிறைஞ் சினரால். (சுஅ)

புகழ்நீ டியபூ ழியன்மண் டலமும்
மிகநா னுமுளத் துவிளக் கமுறத்
தகவார் தருமமுந் தருமீ சனையும்
மகிழ்வா லணிநீ றுமமறந் திலதே. (சுக)

நயமெய் தியதென் னவனு டடைவே
வியனீ றுபரப் பியவித் தகனு
ரியலோ யெர்தென் னனிலங் கவிருந்
துயர்கா விரிநா டுறமே வினரால். (ஏ0)

சுரு. இகலா - (சைனரோடு) மாறுகொண்டு.

சுசு. சாத்தன் - ஐயனர்.

சுள. பாடித்த - பாவித்த, பேசிய.

சுக. மண்டலமும்: உம்மை, சோழமண்டலத்தையன்றியென இறந்தது தழுவியது; ஈஎ: ச-ஆம் பாடல்பார்க்க.

(பி - ம்.) [1]'அழகன்னெனவே' [2]'அயனுமூவணமும்

வேறு.

1 தூண்டிரும் பாக்கி யின்றோர் துரும்புதூ ணுக்கி யேமூன்
முண்டிலோர் புதல்வ ரெலெண் ணுயிரஞ் சமணர் தம்மைக்
காண்டகு கழுவி லேற்றல் 2கண்டிநீ றணியா தக்தோ
மாண்டகு கடவுள் வேறுண் டென்பரே மதியி லாரே. (எக)

கொல்சர நீக்கி மன்னன் கூனிமிர்த் தழலி னீரின்
வெல்லவே டெழுகி யிட்டு வெல்லருஞ் சமணர் தம்மைச்
சொல்லிநீள் கழுவில் வைத்த தொல்கதை கற்போர் கேட்போர்க்
கெல்லையில் செல்வ மொல்லை யெய்துதற் கைய மின்றே. (எஉ)

ஆகத்திருவிருத்தம் - கஎஎசு.

கூகூ.—மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.*

பூமகட்கு மணிமுடியா மதுரையந்தண் புரத்தின்கண் முன்னெ
ருகான் மன்னர்க் கென்றுஞ், சேமமுறு படைத்தலைவ ருகும் வென்
றித் தேசுடைய வுயர்கொங்கக் குலத்துட் டோன்றித், தூய்மைதரு
சுந்தரனுக் கன்பு பூண்டு சுந்தாசா மந்தனெனு நாமம் பெற்றுக், காமு
றுபே ராண்மையினோர் தோலா வீரன் கசிந்தன்பர்க் கன்புசெய்து
போது நாளில். (க)

ஆங்குலக மனுநெறிகோ டாமற் காக்கு மடல்வீர மாறனெனு
மரசன் றன்மேற், றேங்குபுகழ் வன்னியர்க டலைவ ருய சேதிபர்கோ
னென்பானோர் கிராதர் கோமா, னோங்குபெரும் பலபடையி னோடுங்
கூடி. யொருப்படுவா னெண்ணியவா றொற்றர் கேட்டுத், தாங்கரிய
விரைவினெடும் போந்து வாயந்த தருமகெறிக் கவுரியனைச் சார்ந்து
சொன்னர். (உ)

முன்னமது கேட்டலுமே விரைவிற் கூடி 3முரணபெல் படை
4யாள்வே மெனக்க ணித்துக், கொன்னுனைவேற் சுந்தரசா மந்தனெ
ன்னுங் கொடுந்திறற்சே ணுபதியை யழைத்துச் சொல்வான், செந்
நெறிசேர் வடதிசையாள் கிராதர் கோமான் சேதிபர்கோ னென்பா
னோர் பெரியோ னம்மேன், மின்னுபடை யொடும்பொருவான் வரு
கின் றனும் விளம்புங்கா ரியமொன்று விளங்கக் கேண்மோ. (கூ)

(கூக)

ச. கொத்தக்குலம் - கொத்தகக்குலம்; இக்குலத்திற் பிறந்தோர் சேனபதி களாதற்குரியவர். [கவுரியன் - பாண்டியன்.

உ. சேதிபர்கோன் - பெயர்; கூ-ஆம்செய்யுள் பார்க்க. கிராதர் - வேடர்.

கூ. படை ஆள்வேம் - சேனைகளை வருவித்துப் பாதுகாப்போம்.

*"மெய்க்காட் டிட்டு வேண்டு நக் கொண்டு, தக்கா னெருவ னுகிய தன்மையும்" (திருவா. திர்த்தி. சுசு-எ.) [மனத்தனித்துக்'

(பி - ம்.) 1'தூண்டுரும்பாக' 2'கண்டீர்' 3' முரண்டரு' 4 'ஆள்வே

பல்படையைப் பல்படையாற் றள்ளல் வேண்டும் பார்புகழ்வீ
ராபடையோ மாண்ட தில்லை, யொல்லையினஞ் சரக்கறையிற் புக்கு
வேண்டு மொண்கனக மெடுத்திட்டுப் படையா ளென்று, புல்லியரு
ளொடுக்கிருக்கைச் சிறப்பு மிட்டுப் போவென்று விடைகொடுப்ப
விரைவு கண்டு, சொல்லிலிவன் றனக்கொப்பிங் கிவனே யென்று
சுடர்மணிமா முடிச்செழியன் முதுத்தான் சால. (ச)

அரியபெருஞ் சரக்கறையிற் காவ லோடு மடைக்தலைவிற் பெ
ரும்படைக ளாளத் தக்க, பொருள்பலவும் வகைவகைகைக் கொண்டி
கல்ல போர்வீரர் தமைத்[1]தேடி வாரு மென்று, பரிவிஞ்சுகிக் தன்ன
[2] டைக்தோர்ப் போக்கி நோக்கிப் பரிப்பவரா ற் கொடுபோந்து தனதில்
லத்து, விரைவிஞ்சுமிப் புகுந்தான்செங் [3]கனகங் கண்டான் விதிர்
விதிர்த்தான் சிவனடியார்க் கிடுவா ளெண்ணி. (ரு)

ஏ வறு.

மிஞ்சிட வடைந்த கைப்பொருள் கொண்டே மெய்ப்பொரு
டேடுவான் விரும்பிச், செஞ்சுடர் மகுடக் கோயிலுள் வேந்தன்
செழும்பொரு டன்ஞெகிழ்ந் சென்று, பஞ்சின்மெல் லடியா ஞங்கயற்
கண்ணி பங்கனே யங்கையாற் றொழுது, மிஞ்சுமிப் பொருளுன் னடி
யவர்க் கிடுவான் விருப்புறு முளக்கருத் தெனக்கே. (சு)

நம்பனே யும்பர் தம்பதி பரவு நாதனே காத்தரு ளெனக்குன்,
றும்பமே யல்லாற் பிறிதிலே யென்று சாற்றிமுன் போந்தடி யவரைக்,
கம்பமா ருடலு மம்புலீசார் விழியுங் கசிதரு நெஞ்சுமா யிறைஞ்சிச்,
[4] சம்புவே யென்ன வழுதுசெய் விததான் றனங்கள்வேண்ட பெ
வெடித் தளித்தே. (எ)

நட்பொடு மெல்ல[5]மன்னன்பொன் முழுது நாடொறு நாடொறு
மெடுத்தாங், குட்பய மின்றி மாதொடுங் கூடி யுவகைகூர்ந் தரனடி
யவர்தங், கட்பய மெய்து யாவரா யினுமுட் கருத்தறிந் தமுதுசெய்
வித்துத், தட்பமார் மனத்தன் மூவிரு திங்க டம்முளத் தனமெலா
மழித்தான். (அ)

ச. மாண்டதில்லை - மாட்சிமையுற்றதில்லை. சரக்கறை - பொன்னறை. படையாள் - சேனைகளை ஆள்வாய். திருகைச்சிறப்பு-ஏனுதிமோதிரம். விரைவு கண்டு - (சௌக்தரசாமகதன்) விரைவது செல்லுதலைக்கண்டு.

ரு. விதிர்விதிர்த்தான்-விரைந்தான்; "மெய்தா னரும்பி விதிர்விதிர்த்து" (திருவா. திருச்சதகம், க.)

எ. உம்பர்தம்பதி - இந்திரன். தம்பம் - ஆதாரம். கம்பம் - நடுக்கம். "கம்பமாருடல்.....இறைஞ்சி": "சிந்தை யிடையறா வன்புந் திருமேனி தன்னி லசைவும்.....வந்திழி கண்ணீர்மழையும்" (பெரிய. திருஞா. உள0.)

அ. அடியவர்தங்கண் - அடியவரிடத்து.

(பி - ம்.) [1]'நேடி' [2]'அடைக்தோர்போக' [3]'கனகத்தேமும்' [4]'சம்புசீரெ
ன்ன' [5]'மன்னர்பொன்னெனுது'

அரசனுக் கிங்க ளாறுசே றலுமே யடற்படைத் தலைவனை யழைத்துப், பரிகர மெவள வாண்டனை யென்னப் பழுதுரை யாதவ னுரைப்பான், திருவரு ளதனற் சொக்கநா யகனைச் சிந்தைசெய் துள்ளதை யன்றிப், பொருபடை மன்ன வொருபடை யாண்ட தில்லையிது பொய்யல வின்றே. (கூ)

வந்தனை யடியேன் கருத்தினை முடிப்பான் வழிபடு மடியவர்க் கெளிய, சுந்தர னுண்டி வேண்டிய பொழுது படையுமுண் டெனத் துணிந் துரைப்ப, வந்தமன் னவனு மென்கொலா மீதென் றதிசயித் துன்னினை வின்க, ணெங்கைதா யகனும் வருவனேற் காண்பே மின்று போய் காளைவா வென்றான். (கo)

கருத்துடைச் சேனைத் தலைவகே ளுனைக் காலையி னின்படை மெய்க்காட், டிருப்படக் காண்பேம் போவெனப் போந்த வுத்தமன் புத்தியுட் சால, வருத்தமுற் றென்ன மெனத்தனக் கினிய வள்ளலுக் குரைசெய்வா னெண்ணிப், பொருத்தவா லயத்துச் சேர்ந்துபொற் கமலப் பொய்கையு ணண்ணிநீ ராடி. (கக)

நீறணிந் தருள்சேர் கடவுளை யடைந்து நியதியெண் ணுன்கறஞ் செய்வாள், கூறனை யடியே னென்செய்கே னுரையாய் [1]கொற்றவன் [2]றனமெலா மெடித்துன், வீறுடை யடியார் தங்கள்பா னிறைத்தே னுனைமெய்க் காட்டெனப் போந்தே, னுறுபூ மவுலி மாறனுர் திருமு னுன்படை காட்டுமா றென்கொல். (கஉ)

வே று.

பன்னிய பொருளு மில்லை படையுமோ வாண்ட தில்லை
தென்னன்மு னீயுண் டென்று செப்பினே னுரைப்பி லானே
மன்னவர் தண்ட மாரே யாற்றுவார் வழிசெய் யாயே
யின்னுயிர் செகுப்ப தல்லால் வேறிலை யெனப்ப னிந்தான். (கங)

வே று.

நெறியிலை சாத லலாதெனக் கேட்ட நிருமலனிரங்கிநீள் விசும்பி, லறிவுற வுரைப்பா னுறுபடைத் தலைவ வசைவிலா மனத்தொடு [3]சென்னீ, குறைவற வேண்டும் படைகொடு காளைக் கொற்றவன் காணயாம் வருவேம், திறமுறு படையின் றகுதிகண் டிவ்வு சேலையுந் தருவனு னமக்கே. (கச)

கூ. பரிகரம் - சேனை. [ளியவெம்மை பருமான்' கஎ: சு.

கo. வந்தனை அடியேன் - பணிதலையுடைய அடியேனது. 'அடியவர்க்கெ

கஉ. நியதி - நியமம். இச்செய்யுள் கருத்துடையடையணி.

கங. தண்டம்-தண்டனை. ஆரே ஆற்றுவார்-ஆர்பொறுப்பார். வழி-வகை.

கச. சாதலலாது தெறியிலை; பின், "இன்றுயிரளித்த கோவே"(கo) என்பது இதனை வலியுறுத்தும். அசைவு - மெலிவு. தமக்குச் சன்மானமாகச் சேலையும் அரசன் தருவன். [மெலாமளித்து' 3'அடைநீ'

(பி - ம்.) 1'கொற்றவர்' 2'தனமெனுதழித்து', 'தனமெலாமழித்து', 'தன

என்னுமத் திருவாக் கதிசய முறக்கேட் டினிமையி னெழுந்து கூத் தாடி, யுன்னருங் களிப்பிற் போந்ததன் னுழையி னுற்றதன் மனையவட் குரைப்பத், தன்னுடை யச்சந் தண்ணெனத் தள்ளித் தலைவகே ணிலைமையை விடாது,தின்னுடைத் தருமங் கைதரு நாளை யுதவுவ னேசவெம் பெருமான். (கஙி)

வெறிகமழ் குழலா ஞய்க்கன மென்றே மெய்ப்பட வித்திற முரைப்பக், கறைகெழு கெடிவேல் வீரனு மற்று மற்றைநாட் காலையி லெழுந்து, திறமுறு படைக்காம் பல்கலன் பூண்டு சிறிதுசே வக மொடுங் கூடிப், பிறையணி சடையான் றனையுளத் திருத்தி நடந்த னன் பெரியவாள் வாங்கி. (கசு)

தன்னுழை கடந்து மன்னவன் வாயிற் றலைப்படுங் காலிறை யருளாற், பொன்னக ரமரர் முன்னிரு மருங்கும் பூமழை பொழிந்து கின் றார்ப்பச், சின்னமுஞ் சங்குந் தாரையுங் கொம்புஞ் செம்பொ னின் காளமுங் குழலுந், துன்னுவங் கியமுங் [1]தம்முனெம் மருங்குந் தொகுபுவி செவிடுறக் கறங்க. (கள)

சீர்மணி தாளஞ் ரச்சரி கஞ்சஞ் சிலம்பலின் றண்ணுமை தடாரி, பேரிகை கரடி மத்தளஞ் சல்லி பெரும்பறை [2]துடிகடி முரசம், பார்புக ழிடக்கை யுடுக்கைகன் னியாளம் படகம்வண் டிமிலை [3]தெண் டிடுமை, வார்படு படகம் பெருந்தகு ணிச்ச மெங்கணும் [4]வானுற முழங்க. (கஅ)

வில்லொடி கணைவாள் கேடகங் கடகு வேன்மழுக் கடைத்தலைக் கழுக்கோ, ருல்கதை [5]பாரா வளவளை யெறிகோல் சுரிகைபத் திரங் கொடுங் கணிச்சி, பல்விதத் முயலப் குந்தமொண் பிண்டி பாலம்வெஞ் சூலநீள் கழைக்கோல், [6]கொல்லெழுத் தண்டு முதலிய வளவில் கோடி பல் படைக்கலம் பிறங்க. (கஙு)

பொருந்துபூங் கொடிக ளாடைக ளாடப் பொருவருஞ் சாமரை யிரட்டத், திருந்துபல் கவிகை நிழற்றவெம் மருங்குஞ் சேர்தரு தோரைகள் வீச,நெருங்கடை யாளக் துளங்கமட்பாம்பு நெளிய[7]துண் டீவான் முட்டப், பெருங்கட லென்னப் படர்க்தொலி மிக்கு நடந்தது பெரும்படைச் சாத்து. (உ0)

கருி. அச்சத்தைத் தள்ளியவள் மனைவி.

கசு. வீரன் நாம் அற்று.

கஅ. நியாளம் - ஓருவகைப்பறை.

கஙு. பாராவளை - வளைதடி.

உ0. பூங்கொடி - அழகியதுவரம். தோரைகள் - மயிலிறகாற்செய்த விசிறிகள். மட்பாம்பு - ஆதிசேடன். படைச்சாத்து - சேனைத்திரள்.

(பி - ம்.) 1 தம்மி ர் 2 'துடியடி' 3 'ஒண்டுடுமை' 4 'வானெழ' 5 'பாரு' 6 'கொல்லெழில்' 7 'வெண்வேலிவான்மூட'

வேறு.

இப்பெருங் கொற்றத் தானை யிரும்படைத் தலைவன் முன்னு
மெய்ப்படத் தோன்றக் கண்டு வேந்தனீ தென்கொ லென்று
செப்பரும் பயத்தி னெஞ்சுஞ் செல்லவாள் வல்ல வீர
னப்பொழு தடிவ ணங்கி நம்படை யஞ்சே லென்றான். (உக)

ஓடிவன் மீள்வ னிற்ப னுன்மத்தர் போலே நோக்கி
யாடிவ [1]னணிவன் முண்டி யரகர வென்று விப்ப
னேடவி ழலங்கற் றென்னு விடுபடை மெய்க்காட் டின்று
கூடிமுன் காண்பா யென்று கூறுவன் றேற வாங்கு. (உஉ)

ஓதரும் பரிவு கூர்ந்து காண்பதற் கொருப்பட் டந்த
மாதவச் செழியர் கோமான் மந்திரத் தலைவர் சூழத்
தீதறு பொலிவிற் போந்து சித்திர மண்ட பத்து
மீதுற விருந்தான் சால வியன்தலங் காரத் தோங்கி. (உங)

விசையவெம் படையைத் தோன்ற வீரரீ காட்டி டென்னத்
திசைவரும் பரி[2]க ரத்தைச் செல்லநில் வரநில் லென்று
வசையொடிஞ் செறுத்து சைத்து வகைவகை தொறுங் றுத்தி
நசையுறக் காட்டு வானங் ஙானில மன்னன் காண. (உச)

வேறு.

வங்கர் கலிங்கர் தெலுங்கர் நலங்கிளர் மாளவர் கேளர்வெங்
கொங்க ரிலாடர்கள் பாகதர் மாகதர் குச்சர் பப்பரர்[3]தின்
செங்கரு நாடர்கள் காடவர் வேடுவர் சிங்களர் கொங்கணர்மற்
றிங்கிவ ரிங்கிவ ரங்கவ ரங்கவ ருங்குவ ருங்குவரே. (உடு)

துன்னிய வெய்ய [4]துருக்க ரிரக்கமில் சோனகர் சீனர்கண்மா
மன்ன ரிரட்டிய தொட்டியர் தொட்டியர் வத்தவர் கத்திரியர்
செங்கெறி யாரியர் கோசலர் போசலர் சேதிபர் யாதவர்மற்
றிங்கிரை யிங்கிரை யங்கிரை யுங்கிரை யுங்கிரையே. (உசு)

வேறு.

[5] இன்னன வகையிற் கூறி யினப்படை முற்றுங் காட்ட
[6] மன்னனிவ் வீர னேப்போற் கண்டிலே மெனன கிழ்ந்து
கொன்னுற வழைத்து நாமங் கொந்தகப் பெருமா னென்றே
கன்னெறிப் பட்டங் கட்டி கல்கினன் பரிவட் டங்கள். (உஎ)

உறு-சு. பரி. சா:உங்-சா-ஆம்அடிகளின் குறிப்பைப்பார்க்க. "அ அவனும் இ இவனும் உ உவனும் கூடியக்கால், எ எவனே வெல்லாரிகல்" (யா. வி.)

(பி - ம்.) 1'நிதி வணண்டி' 2'கலததை' 3'மாச்' 4'துலுக்கரிலக்கம்' 5'இன்னணம்' 6'மன்னிய'

இறையவ னழகு பொங்க விரும்பெரும் பரிமேற் கொண்டு
விறலுடைக் குந்தம் வாங்கி வெண்மதிக் கவிகை நீழன்
மறையகின் றுலாவக் கண்ட மன்னனங் குலாவு கின்ற
வுறுபடைத் தலைவன் [1]யார்கொல் வீரநீ யுரைத்தி யென்ன. (உஅ)

இனிமைகூர் செழியர் கோவே யாவரிங் கறிவார் சூழ்ந்த
மனமுடை யமைச்ச ரோடுங் [2]கேட்டிநீ யுரைக்கு மாற்ற
[3] நினையினிங் கடிய னேற்கா கின்பெரும் பொரு[4]ட னக்குப்
பனிமதிச் சடையர் காணிப் [5]பரிகரங் கொணர்ந்தா ரென்றான். (உகூ)

[6] நன்றெழில் வீர நீசென் றழையென நயந்து சென்றே
யின்றுயி ரளித்த கோவே யெழுந்தரு டென்னன் காண்பா
னுன்றனை விரும்பா கின்று னென்றலு முவகை கூர்ந்து
வென்றிகொள் படையை நீக்கி வேந்தனை நணுகிச் சொல்வான். (உஎ)

மன்னகேள் புள்ளி சொல்லிற் களத்திடை மறுவொன் றுண்டு
முன்னிகழ் வடிவுஞ் சொல்லின் முடியிலவிற் றழும்பொன் றுண்டிங்
கென்னைமு னெழுது கல்ல சேவக னுனக்கெ னேப்போ
லுன்னரு முலகத் தெய்தா னென்றன னுவகை கூர. (உக)

[7] என்னவின் னுடலங் கம்பித் தெழுவதற் குன்னி கின்ற
துன்னரு மிருக ரங்க ளொருவழிக் கொள்ளா கின்ற
வன்னையே போலு கல்ல வருணுடைச் [8]சொக்கே யென்ன
கின்னையான் காணுந் தோறு நிகழ்கின்ற துளத்தெ னக்கே. (உஉ)

நின்னெழிற் புரவி யேற்ற நீதியைக் கண்டா லுன்னை
யென்னதேட் டெழுது கின்றே னெனைத்துகி [9]ளளிப்ப வாங்கித்
தன்னடி யானை வேண்டிச் சடைமிசைப் பூணைக் கொண்டு
தென்னவ காண்டி யென்று செழும்பரி யுகைப்பன் காண. (உஊ)

வே று.

அற்புறநி னேப்பவர கத்தினளி ருப்பவன னேத்தையும [10]டக்கு
பவனீள், கற்பனேக டப்பவ[11]ன டக்குபுபி டித்துறுக திப்படவு
கைப்ப வடபால், வெற்பின்முது கிற்றிசைமி சைக்கரிமு கத்தினின்மி
தித்தொழி யப்பி லமதார், சற்பமும்வெ ருக்கொளந டித்ததும
ருத்தைநிகர் தத்துகவ னத்து ரகமே. (உசு)

உகூ. சூழ்ந்த - ஆராய்ந்த.

நக. உடம்பில் தழும்புடைய வீரர்கள் சிறந்தவர்களாதலின், இங்ஙனம் கூறினர்.

கூஉ. கம்பித்து - நடுங்கி.

(பி - ம்.) 1 'யாவன்' 2 'கேளாதி' 3 'நினைவினுங்' 4 'தனக்குப்' 5 'பரிகலம்' 6 'நன்றெனவீரனைச்' 7 'என்னதின்' 8 'சொக்கன்' 9 'நல்' 10 'அடக்கு மவன்' 11 'நடத்துபு'

வேறு.

புரிவொடு கண்ட மன்னன் பன்முறை யதிச யித்துப்
பொருபரி யுகைக்க வல்லா ரிப்படிப் புவிமீ தில்லே
யரிதரி தெனவி யப்ப வைந்துதா ரையிவைந் தாண்டி
1 விரைவிலங் கொளித்தா னந்த வெங்கொடும் படையுட் புக்கு.

அவ்வயின் வருந்தித் தேடி மரசன்முன் விரைவின் வந்தோர்
பொய்வழி யுரையாத் தூகன் புகலுவா னரச ரேறே
தெவ்வுறு படையான் மிக்க சேதிப ரோமான் றன்னை
வெவ்வலிச் சிங்கங் கொன்ற தென்றனன் வேட்டைக் காட்டில். ()

அத்திறங் கேட்ட வேந்த னென்கொலென் றருளா வாழ்த்திச்
சித்தநன் பரிவு கூர்ந்து திகைத்தநி சயித்தி ருப்ப
வத்தலத் தமைச்ச ராலே ராகரத் தோடுங் கூடி
யுத்தர மற்றி ருந்தா ரும்பர்2கோ னருளா யேத்தி. (கூ.எ)

கொந்தகப் பெருமான் கேண்மோ கொடும்பகை போன திந்த
வெந்திறற் றந்தி ரத்தை வருத்தவேண் டிவதோ வில்லே
தந்தம திடத்துப் போகச் சாற்றுதி தாழா தின்று
சுந்தர னமக்குண் டாக வேண்டுமோ துணையிங் கென்றான். (கூ.அ)

கிறுத்துதல் 3கரும மென்று நிரம்பிய படையை 4வாழ்த்திச்
சிறப்பொடும் போக வேவ வாங்கது சிலேத்தெ ழுந்தே
யிறைப்பொழு தின்க ணங்கண் மறைந்திட வெழுந்து துள்ளி
யறப்பெருந் தவத்தி னனு மூழ்கினு னனந் தத்துள். (கூகூ)

பொய்யிலாத் தெய்வச் சேனை பொலிவொடு மறையக் கண்ட
வையகத் தோருஞ் சொக்க னருளினை யியந்தார் வாழ்த்தித்
துய்யபே ரன்பன் முன்னிற் சுந்தரற் கன்பு பூண்டு
மெய்யொடு மடைந்தான் முனிவில் விண்ணவர் வியக்க வாங்கு. (சஅ)

அரசனு லயத்துச் சென்றுங் கடியவர் நினைவு தன்னிற்
பரிவொடுஞ் செல்லும் பத்தர் பத்தினை யல்லாற் றெய்வங்
கருதின்வே றுண்டோ வென்று களித்தடி தொழுதா னேத்திப்
பெரியவா சிகைமா னிக்கக் 5கோலைகள் பிறவு கல்கி. (சக)

ஆகத்திருவிருத்தம் - ககஎ.

கூடு. தாரை - கதி.

கூஅ. தக்திரம் - சேனை. தாழாது - தாமதியாமல்.

கூகூ. சிலேத்து " - முழங்கி.

(பி - ம்.) 1 'விரைவினில்' 2 'கோன்செயலேவாழ்த்தி' 3 'தருமமென்ன' 4 'சாற்றிச்' 5 'கோளைகை'

சo.—உலவாக்கிழிகொடுத்த திருவிளையாடல்.

வளமை மீடிய மதுரையின் முன்னொரு தென்னன்
றளர்வில் செல்வமுஞ் சாற்றருஞ் சேனையு மோங்கி
யெளிய சொக்கனே யிறைஞ்சிமுச் சந்தியு மினிதா
வளவில் வெம்பகை கடிந்துல காளுநா டன்னில். (க)

தெரிய முத்தழ லுன்மறை வேதியர் தேத்துப்
பரிவு செய்திடா திகழ்ந்துயர் பரனையே வழுத்த
வுரிய வேள்விக ளொழுக்கநல் குரவினு லொழிக்கு
சுருதி யந்தணர் தாழ்ந்துபுன் றொழிலிடை யிழிந்தார். (உ)

வே று.

சனமா நெறிக டம்மி [1]லிழிந்தபி னினிய தேவர்
போனக வேள்வி போகப் போனது பொய்யா மாரி
பானலங் கழனி மேய நென்முதற் பல்வ ளங்க
ளானவை விளைவுபோன போயின [2]வறமுன் ஞன்கும். (ங)

வாரிதி யுலகின் மிக்க மதுரைமண் டலத்து வாழுஞ்
சீரிய மனிதர் குன்றித் திசைதிசை [3]போனர் மன்னன்
வாரணம் புரவி குன்ற மாதனங் கோதனங்க
ளோர்பொலி யாரா மங்கள் யாவையுங் [4]குறைந்த மன்னோ. (ச)

ஓங்கிய மன்னன் சால வுலைந்துல கேதங் கண்டே
யீங்கிதற் கேது வென்கொ லிலங்கவீ தறிவா னெங்கு
நீங்கருஞ் சொக்க னல்லா லிலையென நினைந்து நெஞ்சத்
தாங்குய ராச யத்து ளணைந்தடி பணிந்து சொல்வான். (ஞ)

அய்யனே செய்ய கோவே யடியனே னின்னை யென்றும்
பொய்யற வணங்கி [5]வாழ்த்தப் புவிதுய ருறுவ தென்னை [ந்து
மெய்யுற வுணர்த்தல் வேண்டும் விளங்கவென் றுரைத்துப் போ
துய்யபே ரமளியின்கட் டியரொடுந் துயிலுங் காலை. (சு)

உத்தம னெத்த லத்து முயிர்க்குயி ராகி நிற்கும்
பத்தர்கள் பத்தன் வந்து பகருவா னென்பா லன்பு
வைத்தவ ஞத லாலே மாறனே தேற வின்று
சத்திய மாவ னக்குச் [6]சாற்றுவன் புக்க வாறு. (எ)

க. எளிய - அடியார்க்கெளிய. முச்சந்தி - காலை, உச்சி, மாலை.
உ. பரிவு - அன்பு. கல்குரவினுல் வேள்விகளும் ஒழுக்கமும் ஒழிந்து.
ச. மாதனம் - மிக்கபொருள். கோதனம் - பசு. ஆராமம் - சோலை.
ஞ. உலகு சேதம் - உலகத்தின் துன்பம்.

(பி - ம்.) 1'இழிந்து' 2'அறங்கணுன்கும்' 3 'போக 4 'சுருங்கிற்றன்றே' 5 'போத' 6'சாற்றுவம்'

வேறு.

மேவறு நான்மறை நமக்கு மெய்யதற்
கியாவர்கல் லவரவர் தமக்கி யாகலோ
மார்வுறு மேகினிக் கமர ராகிய
சார்வுறு மறையவர் தமை[1]யி கழ்ந்தனே. (அ)

ஆதலா னல்குர [2]வெய்தி யாங்கவர்
சோதிசேர் மறைவழித் தொழின்ம றந்தனர்
சோதிசேர் மறைவழித் தொழின்ம றத்தலாற்
கூதிர்வான் பொழிமழை குன்றிற் றிம்பரே. (கூ)

நெறிதரு மறையவர் நெஞ்சம் வாழுமேன்
முறைதரு வையக முழுதும் வாழுமா
னெறிதரு மறையவர் நெஞ்சம் வாடுமேன்
முறைதரு வையக முழுதும் வாடுமால். (கo)

பாமறை யந்தணர் தம்மைப் பார்த்திப
நாமவ ராகலே நாளுங் கண்டிடி
நாமவ ராகவே நாளுங் காண்பையேற்
பூமட மாமகள் போவ தில்லையே. (கக)

[3]நன்புடை யறத்தவர் நமக்கு நல்லவர்
துன்பமெய் தாதவர் துன்ப மெய்தலா
லின்புறு மண்டல மினிமை குன்றிய
தன்புடை யாயுனக் கறியக் கூறினேம். (கஉ)

வேறு.

இன்புற வழைத்த வர்க்கா மினிமைசெய் விரைவிற் சால
[4]நன்புற நினக்கு மிக்க நலந்தரு செல்வ முண்டாங்
தென்புவி நயக்க நீங்காச் செல்லலே நீக்க [5]வற்றோர்
பொன்பொதி கிழியும் வாழத் தருகுவம் புதுமை கூர. (கங)

அக்கிழி யிற்பொன் கோடி யழிப்பினுங் [6]தொலையா தானம்
மிக்கபே ராணை யாலே வேண்டுப வெடுத்த ளித்துத்
தக்கவர் தமக்கு [7]மிட்டித் தருமமுஞ் செய்து நீயுன்
புக்கில் லியாரும் [8]வாழ வாழுதி புவிமீ தூழி. (கச)

கo. நெஞ்சம் வாழுமேல் - மனம் மகிழுமாயின்.

கங. நீக்கவற்று - நீக்கவல்லதாகிய. கிழி - கிழித்த துணியாற்செய்த முடிப்பு.

கச. "கோடிபொன் னெடுப்பினுங் குறைவிலாததோ, ராடக நீவி" என் பர்பின்னும்; உo. புக்கில் - வீடு.

(பி - ம்.) 1 'ழ்றத்தனே' 2 'ஆகி' 3 'நன்குடையறத்தினர்' 4 'நன்குகூர்', 'நன்குற' 5'மற்றோர்' 6'தொலையாதென்றன்' 7'மிக்குத்' 8'வாழத்தருகுவல்'

வேறு.

அஞ்ச லஞ்சலென் றன்புடைத் தென்னவ
னெஞ்சில் வேண்டிய நல்கிடு கீவியைப்
[1]பஞ்சின் மெல்லணைப் பான்முடிப் பான்மிசை
வஞ்ச [2]மாசற வைத்து மறைந்தனன். (கரு)

வேறு.

தனமுறுபொற் கிழிகண்டு துயிலுணர்ந்த தார்வேந்த
னெனையடிமை யுடையானே யல்லதுவே றிருநிலத்து
நினையினெரு தேவுண்டோ நேசமுளா ரெனவியந்து
கனவுநிலை யுரைசெய்யக் கேட்டபெருங் களியமைச்சர். (கசு)

வேறு.

கனவிடைக் கண்ட செம்பொன் கண்டதுன் கருத்துட் [3]டங்கு
நினைவதற் கரியவீச னல்கலா னீடு சிங்கா
தனமிசை வைத்துப் பூசித் தருளுதி தணிவ [4]தில்லை
யினியுனக் குயர்ந்த செல்வ மியைவதற் கையு மின்றே. (கள)

ஒப்பிலா னுரைத்தல் போல வொண்பெருந் தனமெ டுத்துச்
செப்பரு மறையோர் தம்மைச் சிறப்பொடும் பூசை செய்து
மெய்ப்பயிற் றலத்தி ருத்தி வேண்டிவ நல்கி டென்ன
வப்படிச் செய்வ லென்று செய்தன னரசர் கோமான். (கஅ)

நல்லவர் பரவுஞ் சொக்க நாயக னருளி னாலே
தொல்லையா குதிக ளோங்கிச் சுருதியும் [5]வழங்கி யெங்குஞ்
செல்லனல் சூரவு நீங்கித் திங்கண்மும் மாரி பெய்து
பல்விதி விளைவும் பொங்கி நிறைந்தது பாண்டி நாடு. (கக)

வேறு.

கோடிபொன் னெடுப்பினுங் குறைவி லாததோ
ராடக நீவிகண் டதிச யததொடு
நாடவர் துதித்தனர் நாடி நாடொறும்
பாடினர் செந்தமிழ்ப் பனுவல் சான்றவர். (உo)

வேறு.

செய்தவ முயற்சி யாலே சிவனடி யார்க ணன்பும்
வைதிக நெறிக்க ணன்புங் கண்டுமண் டலத்தோ ரெல்லாங்
கைதவன் றனையு மந்தக் கைதவற் கன்பு பூண்ட
மெய்திகழ் சொக்க நாதன் றன்னையும் வியந்தார் சால. (உக)

ஆகத்திருவிருத்தம் - ககஉ.

கரு. நீவி - நிதி. கள. தணிவதிலதே - குறையாது.
கக. செல்லல் - துன்பம். உo. ஆடகநீவி - பொன்முடி.
(பி - ம்.) 1'பஞ்சிமெல்' 2'மாறற' 3'தங்கி' 4'இலனாது' 5'விளங்கி'

சக.—மாமனுகவ நந்துவழக்குரைத்த திருவிளையாடல்.

—❀***❀—

தளர்வில் பல்புகழ் மதுரை யம்பதி தன்னின் முன்னொரு காலதீ
ளாவில் செல்வமு முற்ற சுற்றமு மமைவி னேடிவி ளங்கிமற்
றுளம்வி ரும்பிய வாணி கஞ்செய்தொ ழுக்கம் வாய்மை சிறக்குமோர்
வளமை சேர்தன பால னென்றொரு வணிகன் மாசற வாழ்ந்தனன்.

செல்வ முற்றிய வண்மை முற்றிகழ் நீதி லொண்குல மோங்குவா
[1]னல்வி னேத்தணி வால ளித்தவொர் மைந்த னந்தவி லாமையா
லொல்லை யிற்றனு டன்பி றந்தவண் மைந்த னேத்தனு வப்பொடு
மெல்லை யற்றசி றப்பொ டும்மக வாவெ டித்துவ ளர்த்தனன். (உ)

வளர்த்த நன்புதல் வன்வ யிற்றன்வ ளந்த ரும்பொருள் யாவையு
மளித்தி யைந்தத னத்தொ டும்புதல் வற்பெ றப்பெரு காசையா
லுளத்து நல்லன பேச றங்களு வந்து செய்தியர் கங்கைநீர்
குளித்தி யாம்வரு வேமெ னத்தனி கூறி மாதொடு மேகினன். (ரு)

வே று.

ஆங்கவன் போய பின்ன ரகிந்திறற் முயத் தார்க
டாங்கிளார்ந் திறந்தா னென்று மனையொடு தனமுங் கைக்கொண்
டீங்குநீ யேடி யார்கொல் போவென விகழ்ந்து கூறி
யோங்குமா தினையு மைந்தன் றன்னையு மொதுக்கி ஞரால். (ச)

ஆடைசோ ளவு மீயா தகற்றிட வகன்ரு ஞள்ளம்
வாடிமூன் றுவர்ப்பி டித்து மறிப்பவு நில்லா ராகி
யாடகம் பலர்க்கு நல்கி யளவில்வா ணிகங்கள் செய்து
காடரும் வலியைக் காட்டி யிருந்தனர் நடுக்க மினறி. (ஞ)

உ. வண்மைமுன் திகழ் - கொடை முதலியவைகள் விளங்கப்பெற்ற. சுத்த - பெருக.

ச. இதற்தானென்று இளர்க்க.

ஞ. துவர்பிடித்து - செம்மைநிறமூள்ள ஆடையைப்பிடித்து; கo-ஆம் பாடல் பார்க்க; துவர்: ஆகுபெயர்.

* "மூன்னொரு வணிகன் மகப்பே றின்மையின், மருமான்றன்னை மகனெ னச் சடங்குசெய், துள்ளமுங் காணமு மவனுழி யொருக்கி, முக்கவர்த் திரு தி தூணியுடன் மூழ்கி, யட்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின், மத்தவன் முயம் வவ்வுறு மாக்கள், காணிகைக் கொண்டமறலே மைத்தனை, நிரை த்துக் கொணர்கொ ணெடுவழக் குய்த்தலு, மைந்தனுக் கேளிரு மதிமுடிக் கட்டு ணின், புத்தியொன் றின்றிப் புகல்ல மென்றய, ரவ்வுழி யொருசா ரவன்மா லலனென, வற்வொழி நிறையே யோருருத் தரித்துவந், தருள்வழக் கேறி பவர்வழக் குடைத்த, கூட ஞயகன்" (கல். சடு.)

(பி - ம்.) [1]'கல்வினேக்கணிலாளளித்தவொர் நந்தனந்த விலாமையால்'

மங்கல நாணி ழந்த மடந்தையோர் மதிநி னைந்து
செங்கணீர் வார வாரச் சிறுவனே டிவ்வி டுக்க
ணங்கயற் கண்ணி பங்கன் றனையலா லாற்று வார்க
ளிங்கொரு கேளி ரில்லை யென்றிறை கோயில் புக்காள். (கூ)

மைத்திக ழுளகஞ் சோர மைந்தனை நிலத்துப் போகட்
டத்தநேர் குவித்து முன்னின் றறநெறி வளர்க்குங் கோவே
சத்தியக் குன்றே மிக்க தயாப்பெருங் கடலே போற்றும்
பத்தர்கள் பத்த னேயான் பகர்வதொன் றுண்டு கேண்மோ. (எ)

வையகத் தோர்கள் காண மருகனை [1]மகன்மை கொண்டு
செய்வன வடைவிற் செய்து செல்வமுள் ளனவு நல்கித்
தையவென் னுடன்பி றந்தான் போயினன் றூரத் தின்று
வெய்யதா யத்தார் தள்ளி மிகைகள்செய் கின்ற ரன்றே. (அ)

பற்றலர் சொல்லும் வெய்ய படிற்றுரை பொறுக்க கில்லேன்
மற்றெரு கேளி ரில்லை மன்னவ ஞாண யில்லை
பெற்றதாய் தந்தை நீயே யென்றுபே ரவசத் தோடு
மற்றவர்க் கற்ற செல்வன் சங்கிதி யரற்றி வீழ்ந்தாள். (கூ)

மற்றது கண்டி ரங்கி மாசிலா னணுகி மாதே
யுற்றகின் புதல்வ னெடு மெழுந்துசென் றுலகோர் காணப்
பற்றலர் தம்மை நாடிப் பயப்படே றுவர்ப்பி டித்துச்
சற்றுமோ ரடியி டாமற் றடித்துவா தரும [2]மன்றுள். (கo)

மன்றிடை முன்னென் றந்த மாசறு பொருள்க ளெல்லா
மொன்றிய வணிக னுகி யுற்றவர் முற்றுங் காண
வின்றியாம் வந்து தோலா தகல்படட வழக்குப் பேசி
யொன்றுமே காமல் வாங்கித தருகுவ முண்மை யீதால். (கக)

இன்னநீர்ந் துள்ளந் தேறி யேகென மறையக் கண்டு
தன்னுளே யதிச யித்துத் தாங்கரு மவச நீங்கிப்
பின்னரொன் றுரையா ளாகி யெழுந்துபே ருளே வாழ்த்திப்
பன்முறை வணங்கிப் போந்தாள் பழுதிலா வணிக மாது. (கஉ)

தெரிவுறச் சென்று மன்றிற் போதுமி னென்னச் சீறி
விரைவொடுந் தடிப்பக் [3]கண்டு மேவலர் சால வைது
மருவிய புதல்வ னெடு மண்மிசை மறியத் தள்ளித்
தரும[4]வா சனத்தி லேறச் சங்கரன் றரித்தா னில்லை. (கங)

எ. போகட்டு - விடத்தி. அத்தம் - கை.

அ. மகன்மைகொண்டு-மகனுகக் காண்டு. மிகை-ஊரம்புகடந்த செய்கை.

கூ. படிற்றுரை - பொய்யுரை. கo. தரும மன்று - நியாயசபை.

கங. தரும ஆசனம் - நியாயசபை.

(பி-ம்.) [1]'மகன்மைக்கொண்டு' [2]'என்றே' [3]'கண்ட [4]'மாமன்றில்'

குறைவற மாமன் கோலங் கொண்டுவெண் ணீறு சாத்தி
யுறுவையுந் தழையச் சுற்றி யணிமுடிச் சாத்துஞ் சாத்திச்
செறியமோ திரஞ்செ றித்த செழுமலர்க் கரங்கள் வீசி
முறைமையிற் [1]றகுஞ்சி முக்கன் பின்வர முன்ன டந்தான். (கச)

அன்புடை யவள்கண் டைய கோவென வயிற்ற றைந்து
தன்பெரும் புழுக்கந் தீரத் தமையனைத் தழுவிக் கொண்டே
யென்பெருந் துணைநீ போக யானுமென் மகவு முற்ற
துன்பமோ தொலையா தென்ன வாற்றிருள் கண்ணீர் சோர. (கரு)

கருணையன் முனு மேனி கம்பித்துக் கண்ணீர் வார
வொருமரு மகனை யென்ற னுடன்பிறந் தவளை மண்மேல்
வெருவுற வொருவன் [2]சொல்ல தேபெனை விம்மி விம்மிப்
பொருமிகின் றழுதான் யாருங் [3]கலுழமெய் பூண்டி கொண்டி. (ககூ)

வஞ்சகர் தள்ள வீழ்ந்த மைந்தனை யெடுத்து மோந்து
பஞ்சவ னகரி தன்னுட் பழுதுரை பகர்வா ரில்லை
நெஞ்சின்மே லஞ்ச வேண்டா நீங்களிங் கியாம்வந் தேமென்
றஞ்சினோர் தம்மைத் தேற்றி யாற்றினன் போற்றி யாங்கு. (கஎ)

வணிகரு ரியரே வாரீர் வாணிக நன்றே சொல்லீர்
பணிகெடி வில்லமா ணிக்கம் [4]விற்றதோ பயனென் போதுங்
குணமுடை யளகைக் கோனீர் [5]மருகனோர் குமர னுண்டே
வணியநீ ரறியீ ரோவென் றவரவர்த் தழுவிக் கொண்டான். (கஅ)

கடம்பரே யுயர்ந்த பொன்னுக் காளுண்டோ [6]காதல் வீதி
விடங்கரே யமரர் கோனுர் [7]பணையமீட் டிலரோ மெல்ல
நடந்தீர் வைத்த மூத்து விற்றதோ நான்முன் வைத்த
குடங்கள்போ யினவோ வென்று கூறியென் னென்றன் றேற. (ககூ)

ஆங்கவை யிருந்தோர் நல்ல வவதரத் தணைந்தான் மாம
னீங்குடன் பிறக்கிற் கெட்டே னிபபடி வேண்டு மென்று
தாங்கருந் தாயத் தாரை நிறுத்திநின் றனிவ ழக்கை
யோங்கிய [8]தனபா லாசொ லென்றன ருவகை கூர்ந்து. (உ0)

கச. அறுவை - ஆடை. முடிச்சாத்து - தலைப்பாகை. கைவீசல், வருந் தாக்குறிப்பு. சிறுக்கன் - சிறுவன்.

கஎ. பஞ்சவன் - பாண்டியன்.

கஅ, ககூ. இப்பாடல்கள், ஆங்கு வந்துள்ள வணிகர்களை நோக்கிச் சிவ பெருமான் மீனவல: 'வணிகருரியர்' என்பது முதலியன, வணிகர்களுடைய பெயர் விசேடங்கள். பயன் என் போதும் - இலாபம் யாதுவரும்? பக்ஷயம் - சூது. 'என்' என்றது, தம்முடைய பழைய ஞாபகத்தைப் புலப்படுத்தியபடி.

உ0. அவதாம்உஅவஸரம் - சமயம்.

(பி - ம்.) 1 'தூஞ்சிறுக்கன்', 'தருஞ்சிறுக்கன்' 2 'ஃசால்வதோவென', 'சொல்வதேயென்ன' 3 'இரகு' 4 'விற்றதென்பயனே' 5 'மருகனே' 6 'கானல்' 7 'பயணமீண்டிலரோ' 8 'தனபாலன்'

மனைகுடி யடிமை காணி மாடிமா ணிக்க முத்துக்
கனகவொண் கிழிநூ றாசு காசுசா தனங்கள் கஞ்ச
மினமுறு பணைய நாம மடையாள மெவையுந் தோன்றச்
சினமுறு தாயத் தாருஞ் சுற்றமுந் தெளியச் சொல்லி. (உக)

என்னுடன் பிறந்தாண் மைந்த னீங்கிவன் றனையெ டுத்து
முன்னமே பிள்ளை யாக வளர்த்தியான் முறைமை தன்னின்
மன்னிய செல்வ மெல்லாங் கொடுத்தனன் மகவி லாமற்
றென்னவன் பெரிய நீதி குன்றுமோ செப்பு மென்றான். (உஉ)

மன்றிடை யிருந்தோ ரெல்லா மாதுல னவின்ற வாறு
நன்றென [1]வியந்து கண்டு ஞாதிக டங்குற் றத்தா
லொன்றுமங் குரையா ராய்விட் டொளித்தனர் தரும மாறன்
றன்றிரு நீதி நாட்டுத் தண்டமுண் டாமென் றஞ்சி. (உங)

[2] மாற்றவ ரொளிக்கக் கண்டென் மருமகன் றன்னைக் கொல்வான்
கூற்றென வந்த தாயக் கொடுமைகண் டுக்க ணீங்க
ளேற்றலை செய்தோர் தம்மை யிறைநெறி முறைமை யோங்கச்
சாற்றரும் பெரிய தண்டங் கொள்ளுமின் சான்றோ ராயின், (உச)

தருமமோ வெனக்கம் பித்த சான்றவர் காணுந் தோறு
முருவநீ சொக்க னென்ன விளங்கிணை யுளங்க டோறு
மருவலர் விட்டார் விட்ட வகைதொறும் பொருள்கள் கைக்கொண்
டிரியநின் மருகனேடும் [3]போதிநின் னுழைக்க ணென்றார். (உரு)

மன்றுளே வழக்குச் சொல்ல வல்லவ னின்போ லில்லை
யென்றனர் வணிகன் போந்தாங் கிலங்குதன் மருகனேடு
நின்றதன் றங்கை யோடு நேசமார் கிளைஞ ரோடுங்
கன்றினர் விட்டுப் போன கனக[4]மா ளிகையுட் புக்கான். (உசு)

பாங்கொரு பொருள்சோ ராமற் காட்டிவெம் பயம கற்றி
யாங்கவர் தமையி ருத்தி யவ்வயி னெவருங் காண
வோங்கிய புகழ்க்கு நல்ல சொக்கனு மெனவு ரைத்துத்
தாங்கரு மூறுவ லோடி மறைந்தனன் றனிவி சும்பில். (உஎ)

உக. காணி - உரியகிலம். கஞ்சம் - வெண்கலம்.

உஉ. மகவிலாமையாற் கொடுத்தனன்.

உங. அஞ்சி ஒளித்தனர்.

உச. ஏற்று அலைசெய்தோர் தம்மை - எதிர்த்து வருத்தியவர்களை.

உரு. தருமமோவென - இவர்கள்செயல் தருமமாவென்றுசொல்ல. உளக்கடோறும் விளங்கினை. வகை - இடங்கள். உழை - வீடு.

உசு. கன்றினர் - பகைவர்.

உஎ. 'புகழ்க்குநல்ல சொக்கன்': சுஉ: கூக.

(பி - ம்.) [1]'உவப்பக்', 'வியப்பக்' [2]'மாற்றலர்' [3]'போக' [4]'மாமனை'

இக்ஷணக் கிப்ப டிக்கார் வெல்லுவா 1ரிரங்கி நக்கஞ்
சொக்கனே யல்லா லுண்டோ தொழுபவர்க் கெளியா னென்று
மிக்கநீ தியையு மாட்டாக் 2கைகத்லை விரைந்து நோக்குந்
தக்கபே ரன்பை யுங்கண் டதிசயித் தார்கள் சான்றோர். (உஅ)

மண்மிசை வழக்கு வெல்வான் மாமன்மெய் பூனைந்த தன்றி
யெண்மறை யுரைக்கும் வாயா லிகல்வழக் குரைப்ப தேயொண்
3 கண்ணினீர் சோர வாய்விட் டழுவதே கடவு ளென்றுங்
கெண்ணரும் வணிகர் முற்று மேத்தினு ரருளா வாழ்த்தி. (உக)

ஆகத்திருவிருத்தம் - ககசுஎ.

சஉ.—அட்டமாசித்திபகர்ந்த திருவிளையாடல்.*

மல்லலஞ் சிறப்பி னேங்கும் வான்றொடுங் கயிலை யங்கண்
பல்வித மணிபி றங்கு பளிக்குமண் டபத்தி ருந்து
சொல்லரும் பல்க ணங்க ளிதிசெய்து விதியிற் கேட்ப
நல்வினைக் கதைக ளின்ற ஞயகன் மூன்றோர் நாளில். (க)

முறைமையி னவிலுங் காலை மூனெடு வேற்ற டக்கை
யறுமுகக் கடவுட் கின்பா லன்பொடு 4நல்கிச் சற்று
மறுவிலா வியக்க மாத ரறுவரு மகிழ்ந்து வந்து
நெறியொடு சிறந்த நல்கி னின்றடி தொழுது போற்றி. (உ)

கருணைமே னியனே தேவர் தேவனே கயிலை வேந்தே
யரியவை யெவையு நல்கு மட்டமா சித்தி தம்மை
யுரையொடு முரைத்தல் வேண்டு முணர்வுற வெங்கட் கென்னப்
பரமனு முவகை கூர்ந்து பகர்ந்தனன் றிருந்த வாங்கு. (ங)

வே று.

இருந்தணி மாமுத லெட்டிச் சித்தியுங்
திருந்திய பொருளொடு செப்புங் காலையில்
விரும்பிய மடந்தையர் வினவ சத்தினுற்
பரம்பிய பொருள்களைப் பராமு கஞ்செய்தார். (ச)

உஅ. கணக்கு - வழக்கு. மாட்டாக்கைக்தலை - வன்மையில்லாதவிதவை. சான்றோர் - நியாயசபைத்தலைவர்.

(சஉ)

உ. இன்பால் - இனியபாலை. இயக்கமாதர் - யக்ஷமகளிர்.

ங. உரையொடு - பொருளொடு; ச.

*"பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்,கட்டமா சித்தி யருளிய வதவும்", "இத்தி தன்னின் மீழிரு மூவர்க், கத்திக் கருளிய வாசே போற்றி" (திருவா. போற்றி. சுஉ-ங; போற்றி. ககசுஉ-ங.)

(பி - ம்.) 1'இக்கு' 2'கையத்தலை' 3'கண்கணீர் சொரிய' 4'சிறக்கவே'

அப்பொழு திறைவெகுண் டவர்க டம்மையாஞ்
செப்பிய சித்தியைத் தெளியக் கேட்டிலீர்
மெய்ப்பயி ஞானமுங் குறைபு மேலுமக்
கொப்பொடி நவில்வ தொன் றுண்டு கேண்மினே. (நு)

சிட்டர்வாழ் தென்னவ ஞட்டிற் சீருடைப்
பட்டமங் கலமெலும் பதியொன் றுண்ட தில்
விட்டகோ டியோசனை [1]போக்து விண்மிசை
மூட்டுமோர் வடதரு வுண்டு முன்னரோ. (சு)

ஆங்கதி னீழலி லாறு மாதருக்
தூங்ககில் விசும்பிடைச் சுழன்றெ ழுந்துபோ
யோங்குரு வொழிந்துகல் வுருவ மாகியே
தாங்குத லறவிழு மெனச்ச பித்தனன். (எ)

குன்றிய மனத்தொடும் வணங்கிக் கோதையர்
மன்றுறை யிறைவனே மங்கை பங்கனே
[2] யின்றிரும் பிழைபொறுத் தருளி யெங்கண்மே
லொன்றிய சாபமு மொழித்தி யென்றனர். (அ)

ஒதிய [3]பகுதிகேட் டுவகை கூர்ந்தியற்
போதமின் மாதரீர் புகன்ற காட்டிடைச்
சோதிசே ரருளுடைச் சொக்க னென்றியா
மேதகு மதுரையி லிருப்ப மேம்பட. (கூ)

வேறு.

செறிவொடு மாங்கு நீங்கள் சேருமின் சேர்ந்த வாற்கீழ்
முறைமையின் வெளிப்பட் டுங்கள் சாபமு நீக்கி முன்னி
னெறிபட வறிய வெட்டுச் சித்தியு நிகழ்த்து வேமென்
றிறையருள் புரியப் போந்தா ரிளைபபொடி [4]மினிமை கூர்ந்து. (கஅ)

நு. மெய்: நிலேடை. மேல - இரி. ஒப்பு - பொருத்தம்.

சு. பட்டமங்கலம்: சிவகங்கையைச்சார்ந்தது ; பட்டமங்கையெனவும் வழங்கும். கோடியோசனை போக்து - கொஞ்சதூரம் யோசனையளவு நீண்டு.

எ. தாங்குதலற - தடையற. விழும்: ஏவல்.

கூ. பகுதி - பகுப்பு, இயல்பு. இயற்போதம் - இயற்கையறிவு.

கஅ. இறை: எழுவாய். சாபமுக்கிரகத்தால் முனிவையே இளைப்பும் இனிமையும் பெற்றனர்.

(பி - ம்.) 1'ஓடி' 2'இன்றரும்' 3'தகுதி' 4'ஏதன'

ஆங்கிறை யிறைவி யோடு மவ்வயி னெழுந்து வெற்பின்
பாங்குறு திருக்கோ யிற்கண் மேவினன் பாவை மாருந்
தூங்ககில் லாமல் வானிற் சுழன்றுசென் றிழிந்து வீழ்ந்து
நீங்கரு நிழலிற் கல்லாய் நின்றனர் நெடிது காலம். (கக)

வேறு.

மன்னிய குருவடி வாகி வள்ளலும்
பின்னெரு நாணினைந் தணுகப் பேதைய
ருன்னருஞ் சிலைவடி வொழிந்து காணுமூன்
பொன்னுயர் வடிவொடும் போதம் பெற்றனர். (கஉ)

மைப்படி கண்டனே மதுரை வள்ளலே
துப்பமர் மெய்யனே சொக்க நாதனே
யொப்பொடு கேட்பமென் றுள்ளம் பற்றியே
மெய்ப்படி சித்தியை விளம்பென் றேத்தினர். (கங)

[1]மஞ்சமை குழலுமை மங்கை பங்கனு
[2]மஞ்சலீ ரப்படிச் செய்வம் யாமென
வெஞ்சலில் சொல்லொடு மெட்டுச் சித்தியும்
விஞ்சிய பொருளொடும் விரித்து ரைத்தனன். (கச)

வேறு.

அணிமா மகிமா கிரிமா லகிமா
[3]ரணுகீ சத்துவம் வசித்துவ நன்குள
வீணைசேர் பிராத்திப் பிராகா மியமென்
குணமார் சித்திக ளெங்கக் கூறினன். (கஞ)

வேறு.

தெரிவைய ருளிச் செய்த சித்தியாற் சித்தி பெற்றுங்
குருவொடு மிடையூ றின்றி யுலாவினர் திசைக டோறும்
பொருவில்கல் லுயிர்த்தெ ழுந்து போனது கண்டு மண்ணோர்
பரவயான் சொக்க னென்றே பரமனு மதுரை புக்கான். (கசு)

ஆகத்திருவிருத்தம் - ககஅங.

கஉ. வடிவும் அறிவும். கங. ஒப்பு - மனப்பொருத்தம்.

கச. சொல்லொடும் பொருளொடும் விரித்து.

கசு. உருவொடும் உலாவினர்.

(பி - ம்.) 1 'ஞ்சமர்' 2 'அஞ்சனீர்' 3 'கணுகும் வசித்துவ மீசத்துவ நன்குள'

சங.—தண்ணீர்ப்பந்தர்வைத்த திருவிளையாடல்.

மருவு முன்னொரு காலமெய் யழகான் மன்மத னிவனெனச் சிற
ந்து, தருமம் வீரியர் தைரிய முளனுய்த் தனதுயர் மரபினுக் கொத்த,
திருவை வேட்டிடா தகிலமுந் தழைப்பத் தீதறு செய்யகோ லோச்சிப்,
பெருமை மிக்கதென் மதுரையில் வாழ்ந்தான் பிஞ்ஞகற் கன்புளோர்
செழியன். (க)

அன்னவ னுடனோர் [1]தொன்னெறி வளவ னருங்குல மரபின்
யான் பயந்த, கன்னியைக் கொடித்தே யுறவுகொள் வேமென் றெண்
ணி [2]யொண் காரியத் தோரை, முன்னுற வேண்டிம் பொருளொடு
விடுப்ப மொய்ம்புடை வழுதிகண் டுவந்து, மன்னிய வுலகத் தியாவரு
மதிப்ப மதுபொரு ளெதிர்செல விடுத்தான். (உ)

வேறு.

இனிமையுற வித்தகவி னடக்கு நாளி லெதிரிலா வுயர்வழுதிக்
கினியனுய, சினமலியு மொருவயவன் படையி னோடுஞ் சென்னிமக
டனைக்கொள்வா னெண்ணி னீங்கி, மனவலியி னுடன்செல்லக் கண்ட
சென்னி மற்றவன்ற னுடனெதிர்க்க மாட்டா னுகி,யனதடைசேர் மட
மகளைக் கொடுத்தான் மிக்க வறிவுடைய ஞயிருந்து மச்சங் கூர்ந்தே.

மன்னுபுகழ்க் கிள்ளிமரு மகனு மந்த மாறனுடன் கூடிமுனம்
வெல்லற் கொண்ணுத், தன்னுடைய பெரும்பகைவ ஞய மிக்க தானை
யுடை வடபுடவி யரசன் றன்மேற், றுன்னியவெங் கயமுதனுற் படை
யி னோடுந் தோலாது சென்றுவினை தொலைத்து மீண்ட, பின்னரள
வில்லாத சேனை கூட்டி யிருந்தனன்வெற் றிறங்கள்பல பிறங்கப் பேசி.

தருமநெறி கோடாத தமையன் றன்னைச் சமரிடைவென் றியா
மதுரை கொள்வ மென்றே, யிருநிலத்தோர் பரிவேத்தா வென்னும்
புன்சொற் கினியாதோ னடலபய னோடுங் கூடிக், கரிபுரவி தெருங்கு
பெரும் படையி னோடுங் கடிமதிலசூழ் மாமதுரை மண்ட லத்து,
விசைமருவும் வஞ்சிமிலைக் தணுகக் கண்ட விமலனடி மறவாத வீர
மாறன். (ரு)

சு. வினை - போர்.

இ. பரிவேத்தா - தமையனுக்கு விவாகமாகாமலிருக்கும்பொழுது விவா
கஞ்செய்துகொண்டவன்; கக, உ0. வஞ்சி - பகைமேற செல்லோர் அணியு
மாலை.

* "தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து, தன்னீர்ச் சேவக ஞகிய கண்மை
யும்" (திருவா. கோத்தி. திஅ - கூ.)

(பி - ம்.) 1'செந்நெறிவளவ' 2'போர் காரியத்தோன்'

செம்பியன்றன் ஞெடும்பெரிய சேனை யோடுங் திறம்பேசித் தான்வீர ஞவிருக்கு,மெம்பிவரு கின்ருன்யா மெதிர்க்க மாட்டே மென்செய்கே மெவ்விடத்து முள்ளான் வல்லான், றும்பிவரை யினம்பரிக்கும் பெரிய கோயிற் சொக்கனுக்கு விண்ணப்பஞ் செய்வே மென்று, கம்பமுறு மெய்யிஞெடும் புளகத் தோடுங் காரியமுள் ளனசொல்லிப் பணிந்தான் போற்றி. (கூ)

வேறு.

1 மற்றவன் கண்டஞ் சாது கன்னெறி மன்னு வொல்லை
யுற்றநின் படையி ஞெடு மோசனை யெதிர்சென் றேறி
வெற்றியி னணியாம் வென்றி தருகுவ மென்று விண்மேற்
கொற்றவன் றேற வங்கட் கிளர்ந்ததேர் குளிர்ந்த வாக்கு. (எ)

இடசொழிந் திறைவாக் கென்றே யினிமையிற் போக்து கொச்சித்
தொடைமிலை யாது பண்டைச் சூழ்ந்ததன் முனை யோடு
மடைவுறக் காஞ்சி சூடி கின்றன னஞ்சா ஞகித்
தடமலி மதுரை விட்டாங் கிமையாசனை யெதிரே சார்ந்து. (அ)

மாற்றலர் வெய்ய தானை மற்றது காணு முன்னங்
காற்றென விசையிற் பாயும் புரவியுங் களிறுந் தேருங்
கூற்றன வீரர் தாமுங் குலவுற வாரி யென்ன
வாற்றரு மொலியி ஞெடும் பரந்ததாங் கவனி யேங்க. (கூ)

சென்றவன் கண்டு தேறித் திறத்தெதிர் கடந்து சீறி
யொன்றிய சிங்க காதஞ் செய்துதன் னுடைத்தாம் வெய்ய
துன்றிய தானை யோடுஞ் சொக்கனை நினைந்து ளத்து
வென்றிகொண் ஞாட்புச் செய்யத் தொடங்கினன் றிலைந்து தும்பை. (கக)

அங்கது காணு முன்ன ரடற்பெருந் தானை மிக்க
வெங்கொடும் பரிவேத் தாவும் வெடிக்கவா னுறச்சி ரித்துத்
துங்கவேன் மாம ஞெடுங் தோன்றிவெம் பூசல் செய்தா
னிங்கெனே டெதிர்த்தற் கின்று வலியுனக் கேதோ வென்றே. (கஉ)

அணிபொலி தேருந் தேரு மலைந்தன வாளு மாளுந்
துணிவொடு நின்ற டர்ந்து பொருதனர் துரகத் தோடு
தணிவிலாத் துரகஞ் சென்று தாக்கின தந்தி யோடங்
கிணையிலாத் தந்தி வந்து மூண்டன வெங்கு மெங்கும். (கஉ)

கூ. தும்பி - யானை.

எ. ஓசனை - யோசனை. அணி - சேனையை வகுப்பாயாக; ஏவல்.

அ. கொச்சித் தொடை - கொச்சிமாலை; இது தன்மதிலைக் காத்தற்குரிய வீரன் அணிந்து கொள்வது. காஞ்சி - காஞ்சிபபூமாலை; இது பகைவர்க்கு எதிருன்றி நிற்போர்க்கு உரியது.

கூ. ஞாட்பு - போர். தும்பைமிலைக்து.

கஉ. ஆளும் ஆடரும் - வீரர்களும் வீரர்களும். கங. இனன் - சூரியன்.

(பி - ம்.) 1'கற்றவன்' 2'வீரருந்திக்கொடுங்கடல் கிளர்ந்ததென்ன' 3'சங்க'

இக்கெறி யாகுங் காலை யிறைதிரு வருளால் வெம்மை
மன்னிய கோடை முற்றி வாயுலர்ந் துகங் பின்றிச்
செக்கிற வினன்றீ யெவன்னக் திக்கதுர் விரிப்ப வாற்ரு
தொன்னலர் படையி னோத்து வீழ்ந்தல வுறுக ளத்து. (கஞ)

மேவருந் தலத்து மேவி வெகுளாமர் செப்த பத்திக்
காவலன் சேனை தானைக காலதீ நுயிலுல வாடி
யாவிசேர் 1தண்ணீர் வேட்டவ ரானிசோர்ந் தருங்க ளத்துப்
போர்வினை மாட்டா தாகி நின்றது பொலிவ ழிக்கு. (கசு)

கருணையன் கண்டி பங்கி 2நடிதுற மீளர்ந்த பத்தன்
பொருபடை நடுவு சென்று பொருவருஞ் சயமுண் டாகத்
திருவுருக் காந்து மற் ரூர சேவக வுருட்பு னைந்து
தருமதேர் விளங்க வைததான் முண்ணிரீர்ப் பந்த ரோங்க. (கடு)

தாதவிழ் கழுநீ ரேலுந் சந்தன மூசிரங் கோட்டங்
கேதகை யிலவங் கஞ்சண் டகமதி மதுரங் கேடில்
பாதிரி முதற்கற் பூர மனைய பரிம ளஞ்சீர்
சீதள வமுலுத லகத்த லிந்தளிர்த்தது குடிதத சேனை. (கசு)

தெளிந்தவ ருயிர்ம ருந்தாய்த் தெள்ளிதாய் மணந்து கொய்தாய்க்
குளிர்ந்தநீ ரிவ்வி டதுகார் 3கலகுக சென்னக் கானண் டாடிக்
கிளர்ந்தமர் செய்யக் கண்ட 4கொலவர் தார்ப் பின்னும்
4விளிந்தொரு சாம முனனிலர் மலிந்தது மிலிந்து துப்பை. (கஎ)

வெந்திறல் வீரர் நின்ரு மடிந்தனர் மேல டர்ந்த
சிந்துரப் பட்ட யானை பட்ட னதுசைப ரகது
வந்தவெங் துரக வெள்ளம் வறறினை மற்ற டர்ந்த
கொந்தவி முலங்கல வையங் குலைந்தன கலகு லைந்தே. (கஅ)

சேயவேற் றடக்கை வீரர் சங்குடர் பிரிந்து பேறிப்
பாய்பருந் திட்ட கெட்டைப பலனக்காற பத்தர் நீழ
லாயசெங் குருதி யாறறிர் நுளைத்தலி கயங்கள் காட்டிப்
பேயிருங் கணங்க டமபிற பினபுனின் னிணவ கிடின்று. (ககூ)

கச. ஆவி - குளம, உயிர். மாடாதாகி - வலிபிலலாததாகி.

கஞ. உசிரம் - விலாபிச்சவேர்.

கஎ. உயிர்மருந்து - உயிரைக்கொடுக்கு மருந்து; மிருதசஞ்சீவனி; "அரும் பெறற் பாவா யாருயிர் மருந்தே" (சிலப். உ: எரிி) என்பதனுரையைப்பாாக்க. விளிதது - வெட்கி. முலைனின் - முன்னம்போருததுபோல.

கஅ. வையம் - தேர்.

(பி - ம்.) 1'தணணீர்வேட்டாவ' 2'கடி துறச்' 3'கல்குவர்' 4'வினோர்தது சமர'

வன்புறு கவந்த மாட மடிந்தசெங் கொடுங்க ளத்து
முன்புறப் போனர் போனு மொழிந்தவர் [1]முளிந்து மாண்டார்
மின்பொலி வேற்ற டக்கை வீர னும்வீர மிக்க
தன்பரி வேத்தா வான தம்பியு நிற்பக் கண்டான். (20)

இருவரு முகமு கம்பார்த் திளைத்தமு னிற்ப வாகைத்
திருமலி தொடையன் மார்பன் சிரித்துயர் களிப்பி னெடுஞ்
சுரரடி பரவுஞ் சொக்கன் கருணையைத் தொழுது வாழ்த்தி
யுரனுடை யோர்க டம்மைப் பிடித்தன னுறுதி கூர. (28)

திருந்தல ரகப்ப டாமுன் றிண்டிறற் சேனை யுய்யப்
புரந்தர னயன்மா லாதி சயசய போற்றி யென்ன
வருந்திரு மேனி வேர்ப்ப வோடிமீண் டரிய தண்ணீர்
பரிந்தளித் தாஞெ லிப்பப் பந்தருங் கண்டா ரில்லை. (22)

எந்தைவல் லனயார் வல்லா ரெனமனத் ததிச யித்து
வெந்திறத் தவர்க டம்மை வெற்றிமா முரசத் தோடுங்
[2]தந்திரத் தலைவ ரோடுஞ் சாற்றரு மமைச்ச ரோடுஞ்
சுந்தரன் றிருமுன் சென்று காட்டினன் றொழுது வாழ்த்தி. (23)

வேறு.

துய்ய தண்ணீ ரளித்துச் சுவைபட
மைய றீர்த்தெனை வாழ்வித்த வள்ளலே
யைய னேயின் றிவரை யடியனேன்
செய்யு மாறுரை செய்யெனச் செப்பினன். (24)

சீல மன்ன சிறந்தகின் காரிய
மேல வின்று முடித்தே மிவர்தமை
மேலு னக்கினி வேண்டுப செய்யெனச்
சால நல்லவன் சாற்றினன் றேற்றிட. (25)

---

20. கவந்தம் - தலையில்லாத உடம்பு. போனர்போனர் - தப்பிப்போன வர்கள் பிழைத்தார்கள். முளிந்து - உலர்ந்து.

23. முகமுகம்பார்த்து - ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்து; "இனப்புலி முகமுகம்பார்த்து" (23: க.)

22. மனிதவுருவங்கொண்டதற்கேற்ப நடித்தருளினரென்பார், "அருந்தி ருமேனிவேர்ப்ப வோடிமீண்டு" என்றார்.

23. வெற்றிமாமுரசம் - சயபேரி.

24. 'வள்ளல்' ஈன்றான், உயிரையும் அரசுரிமையையும் கொடுத்ததுபற்றி.

(பி - ம்.) 1'முடிந்து' 2'தந்திரித்'

வேறு.

மெய்ப்பட வுயர்திரு வாக்கு விண்மிசைச்
செப்பிட வடியவர் திறத்து நல்லவன்
நின்றது சொல்லக் கண்டமர் திரிக ணிலைமைகண் டதிசயித் தேத்தத் தென்றல்வக் துலவுங் கோயிலட் டாலைச் சேவகன் சங்கிதி யடைந்து வென்றிசேர் வீர செம்பொன்மா மன்ற வெள்ளியம் பலவரீ புகலென் ருென்றிய வடியார் தந்துயர் [5]தீர்க்கு மொருவகே ளடிமைவிண் ணப்பம்.

பின்னமில் குணஞ்சே ரெந்தையு மடியேன் பேதையாம் யாண் டினி னினது, மன்னிய வுலகத் தடைந்தனன் கிடந்த வரைபுரை காஞ்சன மனைத்து, மன்னிய ஞாதி கொள்ளலா லினைத்தே னடைந் தனன் பெரும்படை யபய, னின்னுடைப் பதிக்கோர் தாழ்வுறி னினக்கே தாழ்வது நிச்சய மீதால். (கூ)

அற்றவர்க் [6]கற்ற சிவனென நின்னை யறைகுவ ரடைக்கல மூனக்கே மற்றொரு பற்று மில்லையென் பதனை யறிந்தனை மாசற நாடிக் கற்பனை யொழிப்பாய் நீயலா லுண்டோ காத்தருள் காத்தரு ளென்று கொற்றவ னிலைஞ்சி நின்றனன் சாலக் குறைந்துகண் [7] ணிறைந்தனீர் ததும்ப.

நிருபகே ளஞ்ச னிலைமையை விடாது நின்னுள படையொடு மெதிர்சென், றுரஞ்சி மமர்செய் விரைவுடன் யாம்வந் ததவுவ முதவுவ மென்றென், றிருநில மன்னன் செவிப்புல நிறைய யாவருந் தெளிவுற வங்கண், வரமலி விசும்பிற் பிறங்கிட வருளான் மலர்ந்தது பெருந்திருவாக்கு. (அ)

கூ. ஆன்நிரை - பசுக்கூட்டங்கள். அதர் மறித்தும் - வழிமறித்தும்; இச் செய்யுளின் பொருளை, பு - வே. வஞ்சிப்படலம், உக - ஆம் செய்யுளாலும் வி. பாரதம் நிரைமீட் சிச்சருக்கம், உடு - ஆம் செய்யுளாலும் உணர்க.

சு. அத்தி அன்று எய்த சேவகன் - அட்டாலைச் சேவகர்; அத்தி - யானை.

எ. அற்றவர்க்கற்ற சிவன் (சo; கூ); "அற்றவர்க்கற்ற சிவனுறைகின்ற வாலவாயாவது மிதுவே" என்பது தேவாரம். நீ யலாற் புகலுண்டோவென ஒருசொல் வருவிக்க.

(பி - ம்.) 1'தடங்கரை' 2'மறைத்தும்' 3 'வெந்திறன்' 4 'அத்தியேன்று' 5 'நீக்கும்' 6'உற்ற' 7'நிறைந்து'

அவ்வுரை [1]கேட்கு முனமகிழ்ந் திறைஞ்சி யதிசய மனத்தொடும் போந்து, மெய்யிலி கவசம் பூதியென் றிட்டு மேதகு நாமமுச் சரித்துச், செவ்விய [2]நெறிசேர் பல்சிறப் புறுந்தன் சிறுபடை தன்னொடும் விரைவிற், பௌவநேர் படைமுன் சென்றெதி ரணிந்தான் பத்திசேர் [3]பார்த்திபர் தலைவன். (கூ)

வறுவிய படையா னெதிர்வதே யென்று வருபெரு கோரியன் சீறித், திறமுடைச் செழியன் [4]வெருவுற வடர்த்துச் சிங்கநா தஞ்செ யச் செழியன், நிறைதரு கருணைப் பெருமைய வெங்கு நிறைந்தவ நிறைந்தவ வெனுமுன், றுறைபடி மிறைவ னுதவின னிரங்கித் தும் மினர் சிவாயபோற் றொடர்ந்து. (கo)

பொருவில்வில் லாளாய்த் தோன்றிமுன் னிலைத்த பூழியன் சரி படை நடவு, தெரிவுற நின்று விடையினைப் பொறித்தோர் திண்டிற லேவினே யேவக், கரிபரி யடர்ந்த படையுட றுணிந்து [5]கணத்திடைக் களத்திடை விழக்கண், டிரணுடை வளவ னறிஞரு தலிரு வுளத்ததி சயத்தொடு முரைப்பான். (கக)

துப்பமர் மெய்ய ரெப்பிலா வறஞ்சேர் சொக்கநா யகன்பெருஞ் செய்தி, செப்பிடிற் பத்த ரளவினிற் காம தேனுவென் றியாவரு மறைவர், மெய்ப்பட [6]விவனு மவனேமுன் னிட்டே வென்றனன் மற்றியார் வெல்வார், தப்பிலை யிவன்றன் றந்தையன் றனக்கு முதவி னன் முரணி வியப்ப. (கஉ)

விடைக்குறி யம்பொன் றளப்பருஞ் சேனை விழத்தனி தூளித் தது களத்துத், தொடைச்செயல் கண்டீர் மனிதரோ வல்லர் சொக்க னென் றுணருமின் றெளிய, வடர்த்தறி வின்றிப் பொருவமேல் யாமு மழிகுவம் விடைதரப் பெற்றேரும், படைத்தொழில் வேண்டா நமக் கெனப் பிழைத்த படைக்[7]குளாங் தெளிவுறப் பகர்ந்தான். (கங)

கேட்டவெஞ் சேனைத் தலைவர்தாழ்ந் திறைஞ்சிக் கிளர்ந்தவெங் கொடும்[8]பகைப் படைக, ளோட்டிய தானை வீரனே யாராய்ந் துரைத்தவா ரெருக்கு மென் றுவக்து, நாட்டியர் படையை மீட்டிட வங்க ணணுகிய [9]காரிய முணரா, வேட்டுவர் யவனர் கருநடர் முதலா வேற்றுருத் தானையர் வெகுண்டி. (கச)

ஒள்ளிய கிள்ளி தன்னுளம் விளிய வுறுபடைக் கஞ்சினே யென்று தள்ளிமுன் சொல்லிச் செல்லமுன் கண்டி தனக்குவந் துதவுபே ராண்

கூ. பூதி - விபூதி. கo. கோரியன் - சோழன்.

கஉ. தன்தையன் - தந்தை. கங. விடைதரப் பெற்றேரும்: சிலேடை.

கச. சேனைத்தலைவர் மீட்டிட.

கஞ. கிள்ளி - சோழன். விளிய - அவமானமுற

(பி - ம்.) 1'கேட்டு' 2'நிறை' 3 'பார்த்திபர்' 4'மெலிவுற' 5 'களத்திடைக் கணத்திடை' 6'வவனுமிவனே' 7'குலம்' 8'பெரும்' 9'காரணம்'

மைத், தெள்ளிய வில்லி யழகனட்டா லேச் சேவகன் றனையுளத் திருத் தித், துள்ளிமுன் சிங்க நாதமுஞ் செய்து தோன்றினன் வென்றுயர் செழியன். (கடு)

வேறு.

துன்றமர் தெரியா தென்று சுந்தரன் முன்போற் றேன்றி
வன்றிற லிடப மிட்ட வாளியை யேவ வாளி
யொன்றள விலாத தாகித் துணித்ததாங் குமுக ளத்து
வென்றிகள் பேசி வந்த வெங்திறற் ருனை வீழ. (கசு)

வேறு.

தரமுற்றெதிர் வரும்வெற்றிகொ டனிவீரர்கள் வலிகூர்
சிரமற்றன புயமற்றன வதுவோதிறன் முகமோ
ரெமற்றன குரமற்றன வுடலற்றன துரகங்
காமற்றன சரணற்றன களமற்றன விபமே. (கள)

வேறு.

நெற்றியிற் பாய்கோ னேக்கு வித்தைகாட் டிநரை நேரு
மூற்றவாய் தைத்த வாளி [1]யொற்றையூ துநரை யேய்க்கு
மூற்றுமெய் புகுந்த பாண [2]மூட்பன்றி நிகரு மூடிச்
சற்றிடை விடாது பெய்த சரமழை தன்னி லன்றே. (கஎ)

[3] திரைபடிங் குருதி வெள்ளச் செங்கொடிங் கடலு ளாடிப்
பெரியவான் முகடு தோயும் பிணப்பெருங் குன்றத் தேறிப்
பொருவருங் கணங்கள் கூளி பூதசா லங்கண் மற்றும்
வரிசையி னிடிப் பாடி யிருந்தன [4]மண்ட வுண்டி. (கஙு)

பெருமைசேர் சென்னி [5]பின்னும் பிணம்படக் கொன்று வீழ்த்த
சரமுகத் திடபங் கண்டி [6]தன்னுளத் ததிச யித்திங்
கரனையங் திருப்ப வெல்வா ரரென விரைவின் வாங்கி
முரணுறு பிழைத்த சேனை பின்வர முன்னர்ப் போனான். (உ0)

நலங்கொள்பே ராண்மை வில்லி நயந்துயர் கோயின் மேவ
வலந்தரு மன்னன் கண்டி மகிழ்ச்சிமாக் கடலின் மூழ்கிக்
கலந்துபோ காது நின்ற கருநடர் [7]முதலோர்க் கூட்டித்
தலம்புக ழால யத்துச் சார்ந்தனன் பரவ யாரும். (உக)

கடு. வாளி - அம்பு. கள. துரகம் - குதிரை. இபம் - யானை.

கஎ. நோக்குவித்தை உடையோர் தம்வித்தை காட்டுகையில் நெற்றியிலே ஒருகம்பை நிறுத்திக்காட்டுதலியல்பு. ஒற்றை - ஒருவகை வாத்தியம்.

கஙு. பூதசாலம் - பூதக் கூட்டம். உ0. வாங்கி - பின்வாங்கி.

உக. வில்லி - அர்ச்சுனனெச் சேவகர்.

(பி - ம்.) 1 'யொத்தை' 2 'எனினமாகிகர்க்கும்' 3 'திரள்' 4 'மன்ற' 5 'மன்னும்' 6 'தானுளத்து' 7 'முதலாக்'

வேறு.

இந்து மன்னர் குலத்துக் கினியவன்
சுந்த ரன்னல துண்டோ வெனச்சொலி
முந்த வேண்டுப நல்கி முறைமையிற்
பந்த நீங்க வணங்கினன் பன்முறை. (உஉ)

வேறு.

திருமதிற் புடையட் டாலைச் சேவகன் றன்னே யன்பிற்
பொருவரு [1]மமைச்ச செல்லாம் புகழ்ந்தது சயித்தார் போற்றி
வரகுணன் மைந்த [2]னென்று வந்தித்தா னன்று முன்னுப்
பரவுபாண் டியர்க ளெல்லாம் வந்தித்தார் பகைக ளுர. (உங)

செழுமைசேர் புரத்தி ருந்து சென்னிமண் டலமே யன்றி
யழகுறு நீலைமை மாற னளவின்மண் டலங்கள் கொண்டி
விழுமிய யானை முன்னு வெம்பெருந் தானை யாண்டு
தொழுபுவி யடைவிற் காதலுத் துயரொழிந் தூழி வாழ்ந்தான்.(உச)

ஆகத்திருவிருத்தம் - கசஂ0.

நி0 —உலவாக்கோட்டைவைத்த திருவிளையாடல்.

மூதுரை வாணர் போற்று மதுரையம் பதியின் முன்னந்
தூய்தகு குணத்தான் மிக்க சூத்திர குலத்தோர் பத்தன்
நீதிலா வழுவான் மல்குஞ் செல்வத்தான் மிகவு நீடிக்
காதல்கூர் நினைவின் மேவுங் காதலி யோடும் வாழ்ந்தான். (க)

பூதிசா தனங்கண் டாலங் கியாவரா யினும்பொ ருந்திப்
பாதநே நிறைஞ்சி யில்லுட் பரிவொடுங் கொண்டி புக்குத்
தீதிலா சனத்தி ருத்திச் சிறந்தசே வடிவி ளக்கிக்
கோதைதூ பாதி மற்றுங் கொடித்தருச் சனைகள் செய்து. (உ)

முருகெழ வமைத்த வன்ன முறைமையிற் படைத்து நான்கு
மருவிய விதத்தி னுறு சுவையினுண் மகிழ்ச்சி கூரக்
கருதிகின் றமுது செய்வித் தவரவர் கசிந்து வைத்த
பரிகல சேட முண்டி வாழுவன் பத்தி கூர்ந்து. (ங)

உங. என்று வந்தித்தான் - எந்த நாள்வந்தித்தானே.

(நி0)

க. தூய்தகு-தூய்மை பொருந்திய. ஒருமனமுடையார் என்பார் 'காதல் கூர் நினைவின் மேவுங் காதலி' என்றார்; "காதலிருவர் கருத்தொருமித் தாதரவு, பட்டதே யின்பம்" என்றார் ஔவையாரும்.

உ. பூதிசாதனம்-விபூதியும் உருத்திராக்கமும்; கோதை-மாலை. [பரிம்.

ங. உணவு; உண்பன தின்பன நக்குவன பருகுவன என நான்குவகைப்
(பி - ம்.) 1'அமைச்சர்முற்றும்' 2'னென்றும'

உருத்தகு மனைவி யோடு மொருவழிப் பட்ட நெஞ்ச
னிரைத் [1]தெழு தொண்டர் கொண்ட நினைவினிற் பூசை செய்யுஞ்
சரித்திரங் கண்டு நாளுஞ் சம்புவுங் கருணைகூர்ந்து
திருத்தகு மங்க யற்கட் டேமொழிக் கருளிச் [2]செய்வான். (ச)

இங்நெறி [3]யொழுகுவோனல் குரவினு மிகரிமை கூர்ந்து
மன்னுமிச் செய்தி செய்ய [4]வல்லனென் றறிவித் தற்கே
நன்னெறிச் செல்வ மெல்லா நாடொறு மாற்றி மற்றும்
பன்னெறி விளைவுங் குன்றப் பண்ணின னெல்லாம் வல்லான். (ஞ)

பல்பெருஞ் செல்வ மெல்லாஞ் சுருங்கவும் பத்தி மிக்கோன்
சொல்லரும் பெரிய நெஞ்சஞ் சுருங்கிடான் பெருங்க டன்கள்
செல்வர்பால் வருபோ கத்துத் தருகுவ லென்று சென்று
நல்லன சொல்லி வாங்கி நாடொறும் பூசை செய்தான். (சு)

வீறு[5]சான் மழைம றுத்து விளைதலில் லாமை யாலே
மாறரும் விருப்பத் தோடும் வாங்கிய பெருங்க டன்கள்
கூறிய நாட்க டம்மிற் கொடாததை கண்டி யாரும்
பேறிலை யென்றுங் கெண்ணிக் கொடுத்திலர் கடன்கள் பின்னர். (எ)

நளக்கமில் லாதோன் மண்ணிற் கடன்கொடா ததுகண் டாரூ
துளத்துறு தயரத் தோடுங் கடன்றரு வாரை யோங்கல்
வளைத்தவன் காட்டி னானேற் காண்கின்றே மென்று வாடி
யிளைத்தயர் மனைவியோடு மெண்ணியா லயத்த டைந்தான். (அ)

வேறு.

ஆத ரத்தொடு பேணி நின்னடி யாரை முன்னையில் வித்தபின்
கோதி லாதவர் வைத்த சேடம ருந்தி யோர்குறை வின்றியெப்
போது நின்னரு ளேக்கி நான்மூனி ருந்த னன்புகழ் குன்றவே
வாதை யேதரு [6]மாய மாமிடி வந்த டைந்தத நிந்திலேன். (கூ)

வேறு.

நினைப்பினிங் கிறுத்தற் கொண்ணு நீள்கடன் கொண்டு பின்னு
மனைக்கண ணாறு நிங்கண் மன்னநி ; னருளி னாலே
யனைத்துப சாரத் தோடு மழுது செய் வித்தேன் வையத்
தினிக்கடன் றருவா ரில்லை யிளைத்தனன் காட்டி டின்றே. (கo)

இ. செய்தி - செய்கை. ஈ. வருபோகத்து - பின்உண்டாகும் விளைவில்.

எ. வீறு - வேறென்றற்கில்லா அழகு. பேறு - இலாபம்.

அ. களக்கம் - களங்கம், குற்றம்; கலக்கமுமாம். ஓங்கல் - மேருமலை.

கூ. வாதை - துன்பம்.

கo. இறுத்தற்கு - கொடுத்தற்கு. இன்றுகாட்டிடு.

(பி - ம்.) 1'உறத்' 2'செய்தான்' 3'ஒழுகுவோர்' 4'வல்லரொன்று' 5'சார்' 6'மாயையாமிடி'

கடந்தரு வாரை யொல்லைக் காட்டிடா யாயி னிங்கே
மடிந்திட லல்லான் மற்றோர் கதியில்லை யென்று மண்ணிற்
படிந்துவீழ்ந் தழுது விம்மிப் பழிச்சுதல் கண்டி ரங்கி
யிடும்பை[1]கீக் கிடுவா னங்க ணிலங்கிய துயர்ந்த வாக்கு. (கச)

வே று.

தொல்லுலகி னம்மடியார்க் கன்பு செய்த சூத்திரசூ ளாமணிகே
ணின்னைப் போனின், மெல்லியலா டன்னைப்போற் கண்டே மில்லை
மெல்லியதா யதுசோறு பொலிய வற்றாய்க், கல்லிலதாய் வெள்ளிய
தாய்ப் புதிதாய் நல்ல கந்தமலி பந்தமுறு மரிசிக் கோட்டை, நல்ல
வர்க ளதிசயிப்ப நின்னிடத்து நணுகுவித்தே நல்குரவுநீங்க வென்றே.

அப்பெருமை தருமுலவாக் கோட்டை தன்னை யருச்சனைசெய்
தரிவையொடு நினக்கு வேண்டி, மொப்பருந்தண் டிலமெடித்தொண்
டொண்டர்க் கெல்லா மூட்டுவித்து நயந்தபொருள் விற்றுண் டாக்
கித், தப்பறமற் றுயர்ந்தபெருந் தருமஞ் செய்து தணியாத பெருங்க
டன்க டணித்து வாடா, திப்படியில் வேதஞ்சொ லியாண்டும்.வாழ்ந்
தாண் டிருந்துவா நம்முலகத் தெவரும் போற்ற. (கரு)

வே று.

அவ்வுரை கேளா முன்ன ராதரங் கூர்ந்து வாழ்ந்து
கொவ்வையங் கனிவாய் மாதுங் கும்பிடு மன்பன் முனு
மெய்விதிர்ப் போடு நின்று மிகவதி சயித்துச் செங்கை
நவ்விய னருளை வாழ்த்தி நடமொடு தொழுது போந்தார். (கச)

[2] வணங்கியே தொண்டர் துன்று மனைபுகா நேர்தாங் கண்டாங்
கணிந்தபே ரார்வத் தோடு மதிசயித் துள்ள ரங்கிற்
பணிந்துய ராசனத்துப் பற்றிவைத் தருச்சித் துள்ளத்
துணர்ந்துசெல் வத்தின் வாழ்த்தா ருரைத்தவா றடைவிற்செய்து. ()

கக. இடும்பை - துன்பம். உயர்ந்தவாகசு - அசரீரி.

கஉ. சூளாமணி - முடிமணி; 'சூத்திரர் தலைவன்' என்பர் பின்னும்; கள; சூத்திர சூளாமணி என்பதைப் பெயராகவே கொண்டனர், பயகராமாலை யுரையாசிரியர். வற்றாய் - வல்லமையுடையதாய். கந்தம் - மணம்.

கங. உலவாக்கோட்டை - எடுக்க எடுக்கக் குறையாத அரிசித் கோட்டை. தண்டுலம்-அரிசி. வித்துப் பொருளையுண்டாக்கி யென்க. வேதஞ்சொல் யாண்டும்-நூறுவருடமும்; "வேதநூற் பிராயநூறு" (தீவிய. திருமாலை, ங) என்ப தனாலுமுணர்க.

கச. மெய்விதிர்ப்பு - உடம்பு நடுக்கம். செங்கை நவ்வியன் - செவ்விய திருக்கரத்தில் மானையணிந்தவர்.

கரு. புகா - புகுந்து. உள் அரங்கில் - அரங்குள்ளில்; என்றது அறை யிலுள்ளே உள்ள மற்றோர் அறையை; "எழினிவாங்கிய வீரறைப் பள்ளி" (முல்லைப்பாட்டு, சுச.)

(பி - ம்.) [1]'நீக்கிடுவான்' [2]'மணக்கமழ்'

மன்னிய செய்தி கேட்ட மதுரையம் பதியோ ரெல்லாங்
துன்னிய செல்வ மீந்த தொலைவிலாக் கோட்டை கண்டு
முன்னுற வதிச யித்து வாழ்த்தினர் முற்றும் வல்ல
சென்கெறிச் சொக்க னல்லாற் றெய்வம்வே றுண்டோ வென்றே. ()

சூத்திரர் தலைவன் வேதஞ் சொல்லுங்கல் லியாண்டும் புக்குக்
கோத்திர மனைவி யோடுங் குவலயத் தெவருங் காணப்
பார்த்திப ரதிச யிப்பப் பல்பெருஞ் சிறப்பி னோங்கி
யேத்தருஞ் சிவலோ கத்தி லேறினு னிமையோ ரேத்த. (கஎ)

பத்தியான் மிக்க வேளாண் டலைவன்றன் பத்தி காண்பா
னத்துயர் மிடியை யேவி யம்மிடி யினும வன்றன்
சத்திய பத்தி கண்டு தண்டில வுலவாக் கோட்டை
வைத்தவ னெவன வன்றன் மலரடி வாழ்த்தல் செய்வாம். (கஅ)

ஆகத்திருவிருத்தம் - கசகஅ.

நிக.—மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்.*

வளமை மீடிய மதுரையின் முன்னொரு கால
மளவி லன்புடை மூர்த்தியென் றறையுமோர் வணிகர்
தளர்வில் சுத்தாற் கானது சந்தன மென்றே
யுளவி ருப்பொடு சாத்துவா ரொழிவற நாளும். (க)

துன்னு சேனையிற் றுளங்கிய வொருகரு நாட
மன்ன னன்னநாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கை விழுந்து
முன்ன மீடிய வைதிக முறையையு மொழித்தான். (உ)

கள. மனைவியோடும் சிவலோகத்தில் ஏறினனென்க.

(நிக)

உ. கருநாட மன்னன் - கருநாடக தேசத்தரசன்; சுரு: உ; "வடுகக்கரு நாடர்காவலன், மானப் படைமன்னன்" (பெரிய. மூர்த்தி. கக.) கையர் - கீழ் மக்கள்.

* "படைநான் குடன்று பஞ்சவற் றுரந்தி, மதுரை வவ்விய கருநட வேந்த, னருகர்ச சார்தலின் தருட்பணி யடைப்ப, மற்றவன் றன்னை வெடி தியில வருத்தி, யிறையவன் குலத்து முதைமையின் மையினுற், குருதி, தாரை கல்லொடு பிறங்க, மெய்யணி யளறுக் கைமுழங் தேய்த்த, பேரில் புருவப் பசுக்கா வலனை, யுலகினிற் றமது முக்குறி யாக, மணிமுடி வேணி முருத்திரக் கலனு, நிலவுமிழ் புண்ணியப் பானிறச் சார்தமு, மணிவித் தருள கொடுத் தாச ஞக்கி, யமோ லகத்தி லெடுகொள் புரக்க, வையக மளித்த மண பொளிக் கடவுள்" (கல். நிஎ.)

சாற்று மீசனே யல்லது சமணரை வணிகர்
போற்றி டாதது கண்டுதன் புண்ணிய முடிவால்
வேற்று ளோர்களுஞ் சந்தனம் விற்றிடா வாறு
மாற்றி மூன்னது வரும்பெருந் துறைகளு மடைத்தான். (கூ)

மிறைகள் செய்யவும் விடாதவ ராங்கது கண்டு
பறித லேச்சமண் பாதகன் மாண்டியர் வேத
நெறிவி ளங்குவ தென்றுகொ லென்றுணர்ந் தொருநாள்
வெறிகொள் சந்தனந் தேடினர் பகலெலா மெலிந்து. (ச)

ஏங்கி மூன்கிடை யாதது கண்டிருட் போதிற்
றூங்கு ரும்பயத் [1]தோடிறை கோயிலுட் சார்ந்து
தேங்கொள் சந்தன முட்டிய தாயினுந் தேய்க்கு
மோங்கு செங்கையு முட்டுமோ வென்றுறத் தேய்த்தார். (ஞ)

வட்டப் பாறையின் முழங்கையை மணங்கொள்சந் தனமா
மூட்டுப் பாடற மூளையுஞ் சோரியுஞ் சோர
விட்டுத் தோறசை தேய்வுறத் தேய்க்குமுன் [2]விரைவிற்
கிட்டிச் சார்வுறக் கிளர்ந்தது பரன்றிரு வாக்கு. (சு)

வேறு.

அரிப[3]சந் தனம ணிந்தே மையனே விடுவி டன்பின்
பெருமை[4]கண் டனஞ்ச லஞ்செய் பேரமண் குண்டர் மன்ன
னிரவிடை மாள்வன் வேந்தா [5]யிவ்வுல கடைவிற் காத்து
மருவிய பணியுஞ் செய்து வாமகிழ்ந் தென்று கொண்டே. (எ)

இன்னெறி யாகா யத்தி லெழுந்திடா முன்ன ரென்பு
மூன்னுறு நரம்பு மூனுஞ் [6]சொரிந்தபுண் ணூறி மேனி
மன்னெளி பெற்ரு ரேவு மண்மழை தன்னு லில்லுண்
[7]மினனுயக் கங்குற் போதே மாண்டனன் வடுக வேந்தன். (அ)

மற்றது கண்ட மைச்சர் வள்ளலே வியந்து பாண்டிக்
கொற்றவன் வழியோ நில்லை யென்செய்கேங் கோவி லாமை

சு. மிறை - கடுகுகம்; "அந்தமிலவா மிறை செய்யவும்' (பெரிய. மூர்த்தி. கடி.) பறிதலை-உரோமங்களைப்பறித்துக் கொளலும் தலை; ஷி புராணம், கஅ - ஆம் திருவிருத்தத்தைப்பார்க்க.

ஞ. "கட்டம் புரிவா ரணிகற்றிரு மெய்ப்பூச் சின்று,முட்டும் பரிசாயி னுந் தேய்க் குங்கை முட்டாது" என்பது ஷி புராணம், உ0.

சு. வட்டப்பாறை - சந்தனக்கல்; "வட்டகதிகழ்பா றையின்வைத்து முழங்கை தேய்த்தார்" என்பது ஷி புராணம், உ0.

எ. சலம் - துன்பம்; என்று கொண்டு கிளர்ந்தனென முன்னே கூட்டுக; ஷி புராணம், உஉ-ஆம் திருவிருத்தத்தைப் பார்க்க.

(பி - ம்.) [1]'தோடுகொற்' [2]'விசையிற்' [3]'சந்தனிர்தேமஞ்சேலியனே' [4]'கண் டஞ்சலஞ்சல்' [5]'இலகுலகு' [6]'சேர்த்து' [7]'மன்னும்'

யுற்றதொன் றல்ல வென்று புலருமுன் னேடைக் குன்றை
விற்றரு கண்ணேக் கட்டி விட்டனர் பூசித் தாங்கு. (கூ)

பாய்விடை யிறைவன் சொன்ன பகுதியை நினேந்து [1]கொண்டு
கோயிலின் பாங்கர் நின்ற குணப்பெருங் குன்றைத் தாழ்ந்து
போயுல கெங்குஞ் சூழ்ந்து புரவலற் றேடி [2]மீண்ட
காய்தழ லுமிழ்கட் குன்றங் கண்டிகைக் கொண்ட தன்றே. (கo)

பிடர்மிசை யெடுத்து வைத்துப் பிறங்கமுற் செல்லக் கண்ட
[3] நடமலி யமைச்சர் முன்ன நகர்வலங் கொண்டி ழிச்சி
முடிபுனே மண்ட பத்து முழவொடு புகுந்தி யாரு
மடிதொழு தார்க ளிங்க வரிகொளா சனத்து வைத்து. (கக)

தடமணிக் குடம்பூ ரித்துத் தந்திர விதியின் முற்றக்
கடவபி டேகஞ் செய்வா னணேவது கண்டு மூர்த்தி
முடிசடை முடிபூ [4]ணென்னின் முக்கணன் சாத னங்கள்
சுடரபி டேக நீற்றுத் தூளன மல்லா லுண்டோ. (கஉ)

வன்சம ணிருள்விட் டேக வைதிகத் தீப மேற்றி
யின்பர சாள்வ லென்ன வியைந்தியா வருமுன் சொன்ன
வன்புறு பகுதி மூன்றுஞ் செய்தருச் சித்தார் போற்றி
முன்பருள் சுரந்த சொக்க [5]மூர்த்தியின் மூர்த்தி வேந்தை. (கங)

சடைமுடி [6]முடியா வந்து தமக்கருள் சுரந்த செம்பொற்
சுடர்முடிச் சொக்க வேந்தைத் தொழு[7]தெழின் மதவே ழத்துத்
தடமுழ வொலிப்பக் கற்றைச் சாமரை யிரட்டக் கொற்றக்
குடை[8]நிழ னிழற்றப் போந்து குவலய நெறியிற் காத்தார். (கச)

மம்மர்சேர் சமணர்க் காய்ந்து வைதிக நெறிவி ளக்கி
வெம்மைசேர் தெவ்வை மாதர் விருப்பையெம் புலனே வென்று
செம்மையி னூழி வாழ்ந்து சிவனுல கத்த டைந்த
மும்மையா லுலகை யாண்ட மூர்த்தியை வாழ்த்தல் செய்வாம். (கரு)

ஆகத்திருவிருத்தம் - கசஉங.

கூ. ஓடைக்குன்று - யானை. வில் - ஒளி.

கo. குணப்பெருங்குன்றை - மூர்த்தி நாயனாரை.

கக. இழிச்சி - இறங்கி யருளச்செய்து; "வெங்கட் களிற்றின் மிசை நின்று மிழிச்சி" என்பது பெரிய. மூர்த்தி. கூஎ.

கஉ. தந்திரவிதியின் - தூல விதியால். முடிசடை முடி - கிரீடம் சடை முடியாக; ஷை புராணம் சக - ஆம் திருவிருத்தத்தைப் பார்க்க.

கங. யாவருமியம்ப. மூன்று - சடைமுடி, உருத்திராக்கம், திருநீறு.

கரு. "மும்மைசால் வுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்" என்பது தொண்டத் தொண்டத்தொகை ரு.

(பி-ம்.) 1'சென்று' 2'போந்து' 3'நடவியவமைச்சர்முன்னு' 4'எண்ணின்' 5'மூர்த்தியை வியத்தவேந்தை' 6'யாக' 7'எழு' 8'நனிநிழற்ற'

நெ.—காரியார் நாரியார்பாப்பகுந்த திருவிளையாடல்.

கற்பமார் மூன்றோர் நாளிற் காரியார் நாரி யாரென்
றற்புதப் புலவர் நீதி யரசனைக் கவிதை பாடி
யுற்றபல் சிறப்பி னோடு முயர்வட நாட்டினின்றும்
வெற்றியி னணைந்தார் கொற்ற வியன்றமிழ் மதுரை நோக்கி. (க)

வருபவர் நெறிம யங்கி வனத்திடைப் புகுந்து சாலத்
தெருமர லுறுங்காற் கண்டு செந்தமிழ்க் கினிய சொக்க
னிரைதரு காலி மேய்த்தோ ரிடையனாய் நேயங் கூர்ந்து
பொருவரும் புலவர் காணத் தோன்றினன் புகழை வேட்டு. (உ)

கனகவொண் குழைசேர் காதிற் களங்கனிக் கொத்த ணிந்து
பூனையும்வெண் பாசி பூண்டு பூந்மெய் பூசி யாவு
மனமுரு கிடவாய் வைத்து வரைநெடுங் குழலு மூதித்
தனிநெடுந் தண்டு மூன்றி னின்றனன் முனந் தெற்றி. (ங)

ஆங்கவர் காணு முன்ன ரதிசயித் தச்ச நீங்கி
யோங்கிய மதுரை யூர்க்குப் போம்வழி யுரைத்தி யென்னப்
பாங்குடைப் புலவீர் நீங்கள் பல்சிறப் பொடும டைந்தீ
ரீங்குரை யீர்து மக்குக் காரிய [1]மென்கொ லென்றான். (ச)

என்றுமன் னுடி சொல்ல வேடநீ யென்ன சொன்னை
யொன்றிய காரி யந்தா னுன்றனக் குரைக்க வற்றே
வன்முகாண் பெரிய வெங்கட் கதர்செவி லென்ன டரக் கண்டு
நின்றவ னுவ னோத்து நெறிசெலே னென்று நக்கான். (ஞ)

வே று.

மென்புலவ ரதுகண்டு வழிவிருப்பான் மீனவனே
யின்புறுநற் கவிபாடி வருகின்றே மெனக்கேட்டு
வன்புலவ ரிருக்கின்ற விடமஃதான் மதியாது
நன்கவிதை சொன்னேமென் றுரைத்தீரே நாணுது. (சு)

உ. காலி - பசுக்கள்.

ங. களங்கனிக் கொத்து - களாப்பழக்கொத்து. வெண்பாசி - ஒருவகை மணி. பூதி - விபூதி. யாவும் - எல்லாம்; 'ஆவும்' எனப்பிரிப்பினும் பொருந்தும்; ஆ - பசு. வரைநெடுங் குழல் - வெய்ய்குழல்; வரை - மூங்கில். தெற்றி-பின்னி.

ஞ. மன்னுடி யென்பது சிலேடை; சபையில் ஆடுபவனென்றும், எருமன் றத்தில ஆடுபவனென்றும் பொருளபடும்; பசுமந்தையை எருமன்றமென்றல் மரபு. அதர்சொல்-வழியைச் சொல். காவனோத்து-சீழ்க்கையொலியைச் செய்து; நின்றவன் ஆவனோத்தெனப்பிரிப்பினும் பொருந்தும்.

சு. வன்புலவர் - சங்கப்புலவர். மதியாது நாணது உரைத்தீரே.

(பி - ம்.) [1]'ஏதோ'

அளந்தபுல வீரான தாகவவற் றொருகவிதை
விளம்பிடுமி னெனவிடையன் கொச்சையல னதிவிடமன்
றுளங்கியங்ங கவிதைசொனு லொழியவழி சொல்லானென்
றுளம்படுமோர் [1]கவிபகர்ந்தா ருயர்புலவர் தாழாது. (எ)

அக்கவிதை கேட்டலுமே யழகியது நுமதென்று
சொக்கனுமங் கணரிட்டுத் துடைதட்டிச் சிரித்தருளி
யிக்கவிதை யோகவின்றீ ரேழையீர் யாரதியார்
மிக்கவிது தினைமாடி மேய்ப்பவர்வாய்க் [2]கேட்டிடுமின். (அ)

கேட்டிடுமி னெனவவடைவிற் கிளர்வுறவெங் கணுங்கிறைந்த
காட்டிடையன் பாட்டனேத்துங் கற்றுரைப்ப மற்றவரு
நாட்டிடைய னல்லனிவ ஞர்கொலென நனிநாணி
மீட்டுரையா ரொன்றையுமுள் வெருவுற்ரு ருடல்வியர்த்தார். (கூ)

நல்லவடி வனுமாகி யிருக்கின்ரூய் நான்மறைகள்
சொல்லரியான் சொல்லினல்லான் [3]மற்றொருவர் சொல்வாரில்
வல்லவுனக் கிதுவந்த வாறுரைப்பை யேன்மன்னன்
செல்வமுறத் தந்தவெலாந் தருகின்றே மெனச்செப்ப. (கo)

மட்டவிழ்பூம் பொழில்புடைசூழ் மாமதுரை யூர்ப்பொதுவன்
சிட்டர்புகழ் தருமண்டன் சிற்றிடைச்சி மணவாளன்
விட்டபசு முட்டாமன் மேய்த்தடக்கிப் பாசத்தாற்
கட்டிவிடு மன்ரூடி கான்மாறி யானுவேன். (கக)

பெரும்பொருளி னுசையிலே பெயர்பெரிய சொக்கக்கோன்
[4] பரிந்திடுநு கவிதைகளிற் பாதி[5]பகுந் தின்றென்மேற்
றிருந்தநவின் றிடுவீரேற் சேர்ந்தவழி யானுமக்குப்
பொருந்தவுரை செய்வலெனப் புலவர்களு மியைந்தனரால். (கஉ)

எ. கொச்சையலன் - இழிந்தவனல்லன்; "அறக்கிழவன் மனிதன்விர இல் லாக் கொச்சை" என்பது ஆனந்தலகரி, கஉ. விடமன் - விஷமன்.

கூ. ஒன்றையு மீட்டுரையார். கo. இல் - இல்லை.

கக. ஊர் பொதுவன் - ஊர்ப்பொதுவி லுள்ளவன்; பொது - சபை; பொதுவன்-இடையன். அண்டன்-தேவன், இடையன். சிற்றிடைச்சி - சிறிய இடையையுடைய உமாதேவியார், சிறிய இடைச்சாதிப் பெண். பசு-உயிர்கள், பசுக்கள். முட்டாமல் - குறையாமல், முட்டுதல் செய்யாமல். பாசம் - ஆணவ முதலிய மலங்கள், கயிறு. மன்றுடி - சடையில் ஆடுபவன், எருமன்றத்திலாடு பவன். கால்மாறி- கால்மாறி ஆடுபவர், கால்மாறிநிற்கும் இடையன். இச்செய் யுளும் "பாச நீக்கிமூ வகைப்ப சுக்கனே, மாசின் முத்தியாம் வனத்தின் மேய்த் நீடு, மீசன் மினனேகே ரிடைச்சி காதல, ஞசில் பால்வனத் தண்டர் நாதனே" (திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, எக) என்பதும் ஒருவாறு ஒத்திருத்தல் காண்க.

கஉ. கோன் - அரசன், இடையன். பகுந்து - பங்கிட்டு.

(பி - ம்.) 1'கவிதைசொல்வார்' 2'கேட்டருளீர்' 3'மற்றொருத்தர்' 4'பரிக் குள' 5'பகுத்தி'

ஆங்கவர்க ளியையாமு னதர்காட்டி யொளித்தருள
வீங்கிவனும் பாங்கருள்சே ரியற்சிவனே யெனத்தெளிந்து
தேங்குபுகழ் தருமதுரை சேர்ந்துயரா லயத்தணைந்து
தாங்கருமன் பொடுபகுந்து சாத்தினர் தமிழ்மாலை. (கஙூ)

சாத்திய[1]நற் றமிழ்கொண்டி தமிழ்ச்சொக்கன் புவிபோற்றும்
பார்த்திவரே யெனப்பாத்து விடைகொடுப்பப் பாவலர்கள்
சேர்த்ததமிழ்ப் பாதிகொடு தென்னனையுங் கண்டறிஞ
ரேத்துசிறப் பொடுங்களித்துப் போயினர்த மியனுட்டி. (கச)

ஆகத்திருவிருத்தம் - கசசஎ.

நெடு.—புலிமுகிலை புல்வாய்க்கருளின திருவிளையாடல்.*

தலமிலங்க முன்னொருகாற் றண்கடம்ப வனத்தின்கட்
புலிநெருங்கி வரும்புல்வாய் பொலிவின்றி [2]யுலவுங்காற்
பலமிலங்கோர் நிலைப்புல்வாய் பயந்தபுனிற் றிளமறியை
நிலைதுவன்று முதுதூற்றின் புடையொதுக்கி நீர்வேட்டி. (க)

போயெங்கும் புக்குழன்று புற்றீர்த்த கோடையின்கண்
வாயுலர்ந்தோர் வாவியின்கண் வந்துபுனல் பருகுங்கா
னேயமி[3]லா வொருவேட னீங்காம லொளிநிற்பான்
காய்பசியா லதுகண்டு களிகொண்டு படவெய்தான். (உ)

கணைபடுங்கான் மறியைநினைக் தழுதுகனி கசிந்துவிழுக்
திணையிலுயிர் நீக்கியபின் யாவுக்குந் தாயாகித்
தணிவறவெங் கணுநிற்பான் றரியாது பிரியாத
வணியதொரு புலியைமுலை யூட்டென்ன வருள்சுரக்தான். (ங)

கஙூ. இயற்சிவன் - சுந்தரேசர், இலக்கணத்தைபுடையசிவன்; இயல் - அழகு, இலக்கணம்.

(நெடு.)

க. புல்வாய் - ஒருவகைமான். ஓர்நிலை - ஓரிடத்தில். பயந்த - பெற்ற, புனிற்றிளமறியை - ஈன்ற அணிமையையுடைய கன்றை. [இறக்க.

உ. புல் தீர்த்த - புற்கள் கரிந்த. ஒளி நிற்பான் - ஒளித்துநிற்பவன். படை - ங. பிரியாத - பகைமையினின்றும் நீங்காத.

* "புலிமுகிலை புல்வாய்க் கருளினை போற்றி" (திருவா. போற்றி உஎ); "தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் முளிமுகிலை, பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட, வருணிறை பெருமான்" (கல். சஉ); "புல்வாய் புலியின் முகிலையுண் ணும்" (திருநாட்டு. ங); "பொன்னெயிற் கடம்ப வனத்தபுல் வாய்க்குப் புலி முகிலை யளித்த புண்ணியம் போல்" (திருகாளத்தி. பரத்து. நுகூ); "கொல் வாய்ப் புலிமுகிலை புல்வாய்க் குதவிய, தொல்வினை யேன்ன" (மதுரை மும் மணிக்கோவை, உஅ.)

(பி - ம்.) [1]'நற்கவிதை' [2]'புலர்ந்ததாற்', 'உலவியதாற்' [3]'இலாதொரு'

பாய்புலியு மிரங்கிமனஞ் சுரந்துமுலை பாலளிப்பா
னேயமொடு வரக்கண்டு வால்குழைத்து நேர்வந்து
தாய்வரவு காணுமற் றளர்ந்தமறி பயந்தணிந்து
தூயமுலைப் பாலுண்டு துள்ளிவிளை யாடியதால். (சு)

ஏ வது.

மலைய னுணி முன்னர் வரும்விதி மாற்றல் கண்டு
சிலைமலை வில்லா னல்ல தியார்வல்லா ரென்று சென்று
தலையினுல் வணங்கி வாழ்த்தச் சசிபதி யதிச யிப்பப்
புலிமுலை புல்வா யுண்டு பொலிவுற வளரு நாளில். (ரு)

பொருளினு மொழுக்கத் தானும் பொருவரும் போதத் தானு
மருளினுஞ் சிறந்து நீடோ ரருங்குல வணிகன் பொங்கர்
மருமலி மலர்த்த டஞ்சூழ் மாமண லூரி னின்றுங்
கருதிய பொருள்கண் மேலுங் தேகிவான் கருதிப் போனன். (சூ)

பச்சிம திசையை நோக்கிப் பரிவொடும் போகி நன்கு
நச்சின தேயம் புக்கு நன்பொரு டேடி மீண்டாங்
கிச்சையி னடந்து மெல்ல விலங்குதன் பதியை நோக்கி
[1]யச்சமற் றெல்லு மல்லு மதரிடை வருத லுற்றான். (எ)

ஏ வது.

வழிவசத்தினி ருங்கடம்[2]வ னத்துவந்துழி வணிகனும்
பொழுதுபுக் கது கண்டுவெம்பியு ளம்புலம்புறு காலையி [னே
லெழின்மிருத்ததொ ரொலியொலித்திட வேதம்விட்டதன் வழியி
லொழுகவற்புத மாவிருப்பதொ ருத்தமப்பதி கண்டனன். (அ)

கண்டவங்ஙகர் தன்னுளன்பொடு கண்டனன்களி றெட்டும்வாழ்
பண்டையாயத லத்தையும்பழு தொன்றிலான்படி மத்தையு
மண்டர்நாயக தொண்டர்நாதவெ னத்துதித்தரு ளாலருந்
தொண்டுசெய்துவ ணங்கியங்கொரி டத்தமர்ந்து துயின்றனன். (கூ)

இ. வ்திமாற்றல் - புலி மான்கன்றுக்குப் பாலளிக்கச் செய்தல். சிவபெரு மானுடைய ஆச்சரிய சக்தியைப் பிரமதேவர் வியந்ததாக இங்கே கூறியிருத் தல் போல, கூ: கரு - ஆம் செய்யுளிலும், கூஉ:கஅ - ஆம்செய்யுளிலும் கூறி யிருத்தல்காண்க. சிலைமலைவில்லான் - மலைகின்ற வில்லாக மேருவையுடைய வன்; சிலை - மலை. சசிபதி - இந்திரன்.

உ. சிறந்துநீடிய. மணலூர்: பாண்டியர்களின் பழைய இராசதானி; மணப்புரமெனவும்வழங்கும்; மதுரைக்குக்கிழக்கே யுள்ளது. மேலும் - பின் னும்; பொருள்களைப் பின்னுந்தேட.

எ. பச்சிமதிசை = மேற்றிசை. எல்லும் அல்லும் = பகலும் இரவும்.

கூ. படிமம் - திருவுருவம். தலத்தையும் படிமத்தையும் கண்டனன்.

(பி - ம்.) [1]'அச்சமுற்று' [2]'வனத்தின்வந்துறு'

துயில்கொளுந்தனி வணிகனுஞ்செறி தொலைவிலாவிரு டொலையவே
வெயில்விரிந்தபி னணுகரும்பெரு வனமதாகவெ ருண்டெழுந்
தெயிலிலங்கிய கோயில்கண்டிது கைத்திதென்கொலெ னத்தெருண்
டயிலிலங்கும ணற்புரத்தர சற்குவந்தறி வித்தனன். (கo)

வே று.

மன்னிய வமைச்ச ரோடும் வணிகன்முன் னவின்ற வெல்லா
முன்னுற நவின்று காண்பா ஞசையான் மூடுகி யாங்கட்
டென்னவ னடைந்தா னென்றுஞ் சித்திரைச் சித்தி ரைக்குப்
பொன்னகர் மகவான் வந்து போற்றுமா நகரி தன்னுள். (கக)

வே று.

[1]சுணமோ டடைந்திந் திரன்பரவுங் குளிர்ந்த கடம்ப வனத்தினையு
மணிசே ரந்த வனத்திலங்கு மழகா ருயரா லயத்தினையுந்
தணைசே ரந்த வாலயத்து ளிருக்குஞ் சொக்க நாதனையும்
[2]பணிகோ யிற்றென் கீழ்பாற்பொற் பதுமத்[3]தினையுங் கண்டிறைஞ்சி.

மற்றும் புதுமை [4]பலகண்டு வருவோன் சொக்கன் றிருவருளாற்
புற்றின் புல்வாய் புலிமுலைப்பா லுண்டு பொருந்தி விளையாடல்
கொற்றந் தருநெஞ் சுறக்கண்டு விசேட நிலமீ தெனக்[5]குறித்துச்
சற்றுந் தாழா தித்தலத்தி லிருப்ப லென்றுன் சயங்கூர. (கஉ)

இந்தத் தெய்வப் பதிக்கெல்லை யாதோ வென்று மயக்குற்றுச்
சிந்தைக் கினிமை தரும்பரம சிவனே யடைந்து துதிசெய்ய
முந்தைக் கியைந்த மயனூலின் முறையே சித்த ருருக்கொள்ளா
வந்திப் பிறையோ னெழுந்தருளி நடந்தா னெல்லை யடைவாக. (கச)

எல்லை நடவா [6]வொளித்தருள வேத்தி யருளே யதிசயித்துத்
தொல்லை மரபின் மணிமாடங் கூட மஞ்சு தோயிஞ்சி
மல்லல் வீதி [7]மடங்கழக மற்றுந் திருத்தி மாறின்றி
[8]நல்ல குடியும் பல்படையு நயப்ப வியப்ப வீற்றிருந்தான். (கந)

வே று.

செங்நெறித் தானை சூழத் திறைகொணர்க் தரச ரேத்த
மன்னம நேசன் சால வாழ்த்திட வேத்தி நாளுங்

கo. மணற்புரம் - மணலூர். அரசன் - பாண்டியன்.

கக. சித்திரைச்சித்திரைக்கு - சித்திரை மாதத்துள்ள சித்திரை நக்ஷத்திரத்தில் (திருவிளை. இந்திரன். கூச); "சித்திரைச் சித்திரைத்தினத்து" (கஉ: நகூ); "சித்திரைச் சித்திரைத்திங்கள்" (சிலப். நி : கூச.)

கச. மயன்நூல் - சிற்பநூல்களுள் ஒன்று. எல்லை யடைவாக நடந்தான்.

கந. கழகம் - கல்விச்சாலை. நயப்ப - விரும்ப.

(பி - ம்.) 1'கணமாவிழிந்திந்திரன்' 2'பணிசேர் கோயிற்றென்பாற்' 3'தட மும்' 4'கண்டருகு' 5'குறுகி' 6'ஒளித்தலுமே' 7'தடங்கழனி' 8'நல்லபடையும் பலகுடியும்'

கன்னிமால் காளி யீசன் காக்குமா நகரி தன்னு
ளின்னதீர்ந் திருந்து தென்ன னெண்டிசை விசயஞ் செய்தான்.(கசு)

ஆகத்திருவிருத்தம் - கசசுஙூ.

நிச.—சாதாரிபாடின திருவிளையாடல்.*

ஓங்கிய முன்னோர் கால முயர்வினு லறிவான் மிக்க
தேங்கமழ் நிம்ப மாலைத் தென்னவ னொருவன் றெண்ணீர்
வாங்கிருங் கடல்சூழ் வைய மதுரையி லிருந்து காப்பப்
பாங்குடன் சிறந்தா னங்கட் பத்திர னென்றோர் பாணன். (க)

கண்ணுத லழக னுக்குங் காவலன் றனக்கு மிக்க
பண்ணியல் பாடி யீசன் பத்தர்கட் கன்பு செய்தாங்
குண்ணெகிழ் நெஞ்சு நீற்றி னொளிதிகழ் மெய்யு மாகி
மண்ணவர் விருப்ப மெய்த வளம்பட வாழு நாளில். (உ)

பலர்புகழ் சென்னி மன்னும் பண்புடை நாட்டி னின்று
மிலகிய பரிசில் வேட்டங் நிசைவல்லா னென்றோர் பாணன்
றலமதி சயிப்ப வந்து தண்டமிழ் மதுரை புக்கு
வலியுடை மன்னற் கண்டு பாடினன் மதுர மாக. (ங)

வே று.

மின்னும் புகழ்க்கு நல்லோனே வீரா கரனே வியனுலகின்
மன்னர் பரவு மன்னவனே மலயா நிலஞ்சேர் நாட்டரசே
முன்னை நெறிநூ லியலிசைகண் முழுது முணர்ந்த பெருமானே
யென்னை யொழிய விசைவல்லா ரில்லை யுலகி லெனவுரைத்தான்.(ச)

பாணன் பகரு மதுகேட்டுப் பழுதில் வழுதி யுளம்பெருக
நாணி யதனைக் காட்டாம னல்ல சொல்லி யணியாடை
யூணின் பயனி னெல்லா மொருங்கே கொடுத்து நாளும்வர
வேணும் பாண போவென்று விடுத்தான் விடுத்தற் கிடங்கூறி. (ஞ)

கசு. கன்னிமால் காளி ஈசன்காக்கு மாநகரி - மதுரை; (தீருநகர. கஉ - கரு; பயன் முதலியன, நி.) ஏத்த வாழ்த்திட இருந்தென்க.

(ருசு)

க. நிம்ப மாலை - வேப்பமாலை. ச. மலயாநிலம் - தென்றல்.

ஞ. நாளும் வரவேணும் - தினந்தோறும் வரவேண்டும்; "வேணுமாகில் வேணும்" (பாரத. சூதுபோர். கசுஙி.) விடுத்ததற்கு - தங்குதற்கு.

* "முரன்றெழு கான முயன்றுவா நியைத்த, வடபுல விஞ்சயன் வை யிடத் தகன்கடைத், தென்றிசைப் பாண னெழிமை யானெனப், போகா விறகு டன் றலைக்கடை பொருந்தி,.....சாதாரி, யுலகுயி ருள்ளமு மொன்றுபட் டொடுங்க, விசைவிதி பாடி யிசைப்பகை தணந்த, கூடற் கிறையோன்" (கல். சச.)

பீடொன் றியவன் றனைமதித்துப் போய பின்னர்ப் பிரிவின்றி
[1]மாடு நின்ற முறைசெய்வோர் தம்மைப் பார்த்து மதியுடைகம்
பாடும் பாண பத்திரனே யழையு மழையும் பரிவினென
வோடிந் தகைமை யவர்விரைவி லோடி யழைப்ப வுடன்வந்தான். (ஏ)

பதறு வந்த விசைப்பாணன் பட்டுச் சட்டை யிட்டணியின்
புதுமா மணிகள் கதிர்வீசப் பொன்மண் டபங்கள் பொலிந்திலங்கு
மதிதோய் கோயி லுட்புக்கு மன்னர் பெருமா னனைக்கண்டு [னவே.
துதிசெய் திறைஞ்சி வாய்புதைத்துச் சொன்ஞ னழைத்த தென்னை

வளவன் பொன்னி நன்ஞட்டில் வரிசை கூர வொருபாண
னளவில் பாணர் புடைசூழ வரிவைக் குழாத்தி னெடும்வந்து
விளரி முதலா கல்லிசைகண் மேன்மை பயக்கப் பாடியுளங்
களிகொண் டகத்துப் போனதுகொண் டழைத்தே னிங்குக் கடிதுன்னை.

இன்று பூசை குடமுழக்கம் [2]பருந்து மூங்கி லிலைவீழ்ச்சி
யொன்று மூயர்சிச் சிலிபறவை யுச்சி மலைநீர் விழுக்காடு
நின்ற வோசை யிசையனைத்து நெறியிற் பாடு கேனென்று
வென்றி கூறி வந்தவனே வெல்ல வலையோ வெனக்கேட்டான். (கூ)

கேட்ட மாறன் றிருமுன்பு கீத நாத ஜுரைப்பான்வான்
றீட்டும் புகழாய் நீயிருப்பச் சேர்ந்த வடியார்க் குயர்புகொடித்
தேட்டை நீக்கு மிசைச்சொக்க னிருப்பக் கேட்ட தென்னையிசைப்
பாட்டின் றகுதிக் கெனையொப்பப் பாடற்குண்டோ படிமீது. (கo)

அஞ்சே னஞ்சே ஞெருவர்க்கு மஞ்சா திங்கு வந்தவனை
மிஞ்ச வஞ்சும் படிபாடி வென்றே யோட்டி விடக்கடவேன்
செஞ்சொல் வல்லாய் தோற்றவர்கள் செயுங்கா ரியங்க ளுரையென்னப்
பஞ்ச வணுகன் பரிவெய்தி வியந்தா னுயர்ந்த பணிகல்கி. (கக)

கூ. பீடி ஒன்று இயவன் - பெருமைபொருந்திய வாத்தியத்தையுடைய வன்; எழுவாய்.

எ. பதறு - பதறி. பெருமாள் - பெருமையையுடையவன்.

அ. விளரி - ஒருபண்.

கூ. பூசை - பூனை. சிச்சிலி - மீன்குத்திக் குருவி. பறவை-குயில், வண்டு முதலியவை. உச்சிமலை நீர்விழுக்காடு-அருவியின்வீழ்ச்சி; விழுக்காடு-விழுதல். இச்செய்யுளின் பொருளை, "சிச்சிலி பூனை குட முழக்கஞ் செம்மைத்தா,முச்சி மலை நீர்விழுக்கா டொண்பருந்து-பச்சைநிற, வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கா னிழற்பறவை, யேயுக்கா லோசை யியல்பு" (இசைமரபு) என்பதனாலுணர்க; "வண்டின் றூரியுங் கஞ்ச நாதமுஞ்,சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வது,மருவி யோசையு முழவின் முழக்கமும், வலம்புரிச் சத்தமும் வெருவின் புணர்ச்சியு, மின்னுமென் றிசைப்பப் பன்னிய வியொடு" என்பது கல்லாடம், உரு.

கo. கீதநாதன் - பாணபத்திரர்; "கானகாதா" என்பர்பின்னும்; கஉ. ஏட்டை - இனைப்பு. உண்டோ - யாரேனும் உளரோ.

கக. பணி - ஆபரணம். கஉ. காயகன் - இசையில் வல்லவன்.

(பி - ம்.) [1]'பாடுநின்ற' [2]'ஈங்குமூங்கிலிலை வீழ்த்தி'

வேறு.

நலமலி கான நாதா நல்லிசை காண்பே ஞளைப்
பொலிவுடை நின்னி டத்துப் போவென விடைகொ டுப்பக்
கலைமுழு துணர்ந்த செல்வக் காயக னினிமை கூர்ந்து
தலையிறுல் வணங்கி வாழ்த்திப் போயினன் றனது தேத்து. (கஉ)

இத்தக வதியா ராகி யெதிரிலை யென்று பேசி
யொத்திய ருளம் வல்ல பாடிவா னுடனே வந்த
வித்தகப் பாடி வார்கள் வரவர வீதி யேறிச்
சுத்தசா ளரசங் கீதம் பாடிடத் தொடங்கி னார்கள். (கங)

சுந்தர வணிய ணிந்து தொகு[1]முடிச் சுற்றுஞ் சுற்றிச்
சிந்துரப் பொட்டு மிட்டுச் சிறந்தகுப் பாய மிட்டுச்
சந்தன மிட்டு வீணை தண்டியாழ் கையின் வாங்கி
வந்ததந் திரிதி ருத்திப் பாடினர் மயங்க வெங்கும். (கச)

மற்றவர் பாடக் கண்ட பத்திரன் மனங்க லங்கி
யுற்றது நமக்குக் [2]குன்ற வுயர்புடைக் கான னன்னூல்
கற்றிசை வல்லே மல்லேங் காவலன் றிருமு னின்று
சற்றல வுரைத்தே மென்னுய் முடியுமீ தெனத்த ளர்ந்தான். (கரு)

மிஞ்சநெஞ் சஞ்சி னேனு மெல்லிசை வல்லா னெல்லார்
நெஞ்சையுங் கடந்த செல்வ னேசர்கட் கென்று நேசன்
குஞ்சரக் தாங்குங் கோயிற் குழகனீங் கிருப்பக் கொன்னே
யஞ்சுவ தென்கொ ஞமென் முலவா யரன்பாற் சென்றான். (கசு)

வேண்டிய தடியார்க் கீயு மெய்யனே கருணை வாழ்வே
பாண்டிநன் னுட னேயிப் பகையினை யடிமை வேண்டிப்
பூண்டிது கழித்தல் வேண்டும் புகலிலை யென்று வீழ்ந்து
மாண்டக விறைஞ்சி யேத்திப் போந்தனன் வருத்தத் தோடும். (கள)

கங. சுத்த சாளர சங்கீதம் - சுத்தமும் சாளரமுமாகிய ஸங்கீதம்; சுத்தம் - இயல்பான கடையுள்ள இசை; சாளரம் - வேறேர் இராகத்தின் கடையைத்தழுவி இனிமையை யுண்டாக்கும் இசை; இது சாலகம் எனவும் சாயாலகம் எனவும் வழங்கும்; "சுத்தசா ளரசங் கீதம் பாடுதற்கு" (சo.)

கச. முடிச்சுற்று-தலைச்சாத்து. குப்பாயம் - சட்டை. வீணையையும் தண்டையுடைய யாழையும்; வீணைவேறு, யாழ்வேறு; "குழலும் வீணையும் யாழு மென் றிவையன குழைய" (கம்ப. ஊர்தேடு. சு.) தந்திரி - தந்தி.

கரு. நமக்கு குன்ற உற்றது - நமக்கு ஓரிடையூறு மலையாகவந்துவிட்டது. வல்லேம் அல்லேம் - வல்லமையுடையேம் அல்லேம்.

கசு. "குஞ்சரத்தாங்கு கோயிற் கூத்தன்" (சூஅ: கரு); "குழகனே" (திருநா. தே.)

கள. பாண்டிநன்னுடனே: "பாண்டிநன் னுடுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே" (தீந்வா. திருப்படையாட்சி. க.) இப்பகையினைக் கழித்தல் வேண்டும். இதபூண்டி. மாண்டக - மாட்சிமை பொருந்த.

(பி - ம்) [1]'முடிச்சாத்துஞ்சாத்தி' [2]'நன்று'

செப்புறு மிவள்ற னன்பைத் திருவுளத் தடைத்தி ரங்கி
மெய்ப்படி மாது மின்றி விரைவொடு மெவருங் காண
வொப்பருந் துயரந் தீர்ப்பா னும்பர்கட் கரச னுய
வப்பெருந் தலைமை யோனு மடிமையாம் வடிவு கொண்டான். (கஅ)

வே று.

கடிகமழ் சடையையுங் கங்கை யாளையும்
படமுடை யரவையு மொளித்துப் பான்மைசேர்
முடிமிசை நிறைவுற மூடொ ணுதலோர்
செடிபடுந் துணியுடைச் சீரை சுற்றினன். (கங)

நெற்றியிற் றிலகநீ ரெளிர நீளரா
வெற்றுமென் குண்டல மிலங்கு காதிடைக்
குற்றமில் குறிஞ்சிலிக் கொத்து மன்றியே
தூற்றிய [1]விடத்தரங் காயுந் தூக்கினன். (உ0)

தாவில்வெண் கவடியுந் தரித்துத் [2]தாண்மிசைக்
கோவையிற் சதங்கையுங் கோத்துக் கட்டினன்
காவியந் தார்பொலி மெய்யிற் காந்தளம்
[3]பூவினே டாவிரைப் போதுஞ் சூடினன். (உக)

வெறிகமழ் நீறுமெய் பூசி வீதியி
னுறுமவர் தங்களே விலாவொ டிப்பமென்
கறைமலி கச்சையு நழுவக் கட்டியே
குறைவற நீள்பெருங் கொடுக்கு நாற்றினன். (உஉ)

துறைச்சிறு விரன்மரு தோன்றி தோன்றுகிர்
கிறக்கவிட் டஞ்சன மலர்க்க ணிற்கவிட்
டிறைக்கழற் பெருவிர லிருப்பு மோதிர
மிறுக்கியிட் டிரண்டிசை யாண்டி பாடினன். (உங)

கஅ. திருவுளத்தடைத்து - திருவுளங் கொண்டு. இச்செய்யுளின் நாலா மடி முரண்.

கசு. செடி - நாற்றம்; செடிகமழுமாம். துணி - துண்டம். சீரை - கந்தை.

உ0. குறிஞ்சிலி - ஒருவகை மரம். விடத்தரங்காய் - விடத்தேரை மரத்தின் காய்; இம்மரப்பெயர், விடத்தேரை, விடத்தேரெனவும் வழங்கும்.

உஉ. விலாவொடிப்ப - சரித்தலால் விலாவை ஒடிக்க; "கையர் விலாவிலொடி யாக்கி ஞரால்" (நஅ: சஅ.) கறை - அழுக்கு. கொடுக்கு - ஆடைத்தொங்கல்; "பேதித் தறுதற் கச்சைபுனைந் ததிலே யிட்டான் பெருங்கொடுக்கு" என்றார் முன்னும்; நo: சு.

உங. துறை - இசைத்துறை. மருதோன்றி - மருதாணி; இதன் இலையை அரைத்து நகங்களிற்பூசினுல் அவை சிவக்கும். கிரியாண்டி - ஒருவகை இசைப்பாட்டு.

(பி - ம்.) [1]'விடத்தலங்' [2]'தோண்மிசை' [3]'பூவினையாவிரைப்போதிற்'

வே று.

பரிவிஞன் மிக்க பாண பத்திர னடிமை யானென்
றுரஇுடை விறகு வெட்டி யூன்றுகட் டாகக் கட்டி
யரியமென் முடிமேல் வைத்தாங் கம்பலஞ் சந்தி மற்றுந்
தெருவினு முலாவிப் பாணர் தெருவிடை முடுகிச் சென்றான். (உச)

மறுவறு முயர்மென் றோளின் வலிய[1]கோ டாரி மன்ன
முறுவல்செய் தாகம் வேர்ப்ப மொய்ம்பமர் தடக்கை வீசிப்
பொறை[2]யடி யாளை வேண்டி யிழிதொழில் பூண்டு கொண்டானன்
றிறவொடு நின்று மெல்ல வுலாவினு னுலக நாதன். (உடு)

மாலையங் குழல்சேர் [3]பாணர் மாலையர் மாலை யெய்திக்
கோலவெள் வளைகள் சோர்வா ரவரவர் கோத்து டுத்த
சேலைகள் சரியநிற்பார் திருந்திய நாணி ழப்பார்
மேலுறு பசலைகொள்வார் [4]விரும்புசுவை கொள்வார் வீழ்வார். (உசு)

கந்தரம் வேர்ப்ப வேர்ப்பக் கட்டிய விறகு கூறி
வந்தவன் குமர வேளோ மதனவே ளோவொ ளித்துச்
சந்தைகள் பாட மண்ணிற் றனிவிளை யாடல் வல்ல
சுந்தரன் றானே யோமற் றியாவனு வெனத்து திக்தார். (உள)

வே று.

அருடங்கிய வடிவந்திக ழசலந்தரு முமைபங்கனும்
வரமொன்றும துரையம்பதி வரமங்கல விசைமங்கைய
ரிருகுன்றிரு தனமொன்றிடை யிடையும்படி கொடிவந்தனர்
தெருவென்செயு மினியிங்கர சிவசங்கர சிவசங்கர. (உஅ)

வே று.

உரவிது கெடிதுநின் றெரியு மொன்றுபோ
லரிதிது கொடிவரு மடவி தூரிது
தருமொரு விறகொரு காசு தையலீ
ரெரிவிழுங் கொண்மினென் றினைய [5]கூறுவன். (உக)

உச. உரன் - வைரம்; "உரவிது" (உசு.) ஊன்றுகட்டி - ஒருவகைக் கட்டு.

உடு. மொய்ம்பு - வலி.

உசு. மாலையங்குழல் - பூமாலையணிந்த கூந்தல். பாணர் மாலையர் - விறலியர்; விறலியரை மாலையரென்று வழங்கல் மரபு; இள: கூறி. மாலை எய்தி - மயக்கமுற்று. காட்சியாற் சூல் கொள்ளுதலை, "சொக்கனைக் கண்ட நீதி மங்கையர்.....பொங்கிய பெருஞ்சூல் கொள்வார்" (உஅ : கூள) என்ப தனுலுணரப்படும்.

உள. கூறி - விலகூறி. சந்தைகள் - வேதங்கள்.

உஅ. இடை இடையும்படி இருதனங் கொடிவந்தனர்; இடைதல் - மெலி தல்.

உக. உரவிது - வல்லமையையுடையது. எரிவிழும் - தணல்விழும்.

(பி - ம்.) 1'கோடாலி' 2'அடியாரை' 3'மாதர்' 4'விரும்புமால்' 5'கூறினன்'

ஆடிவன் விறலிய ரருக ணேந்துபண்
பாடிவன் வளஞ்சொல்வன் பார்ப்ப னிற்பன்மூன்
ஜோடிவ னிப்படி யுலாவிப் பாணர்தம்
வீடெலா நடித்தனன் விறகு விற்றிலன். (கூ0)

வே று.

கூறிய பின்னர் மூன்னர்க் குறுகிய பாண னில்லத்
தேறரும் புறத்துத் தெற்றி யேறல்கண் டிரவி போக
மாறிலா விறகு மூன்றி வைத்துல கங்க டோறும்
வேறற நின்ரூன் யாவுங் கடந்தவன் கிடந்தான் மெல்ல. (கூக)

வே று.

பாதார விந்தஞ் [1]சோதி நீண்முடி நேடிப் பண்பார்
வேதாவு மாலுங் காணு விண்ணவ ஹலகுக் கெல்லா
மாதார மாகி நின்ரு னரையிருட் போதின் மெல்லச்
சாதாரி யென்னுங் கானம் பாடினன் தரணி யுய்ய. (கூஉ)

வே று.

ஓதிக்குள் ளாளம் விந்துநாத மொலியு ருட்டித் தூக்கெடித்தல்
பதித்த னலிதல் கம்பித்தல் குடில மென்னுந் தொழில்பத்து
மெடித்துக் [2]காட்ட நாதாதி யிமையோர் மூதலா வதிசயிப்பப்
படைத்த விசையைத் தனிப்பாடப் பதினு லுலகு முருகியவால். ()

வே று.

மருவிய விறலி யோடி மஞ்சநீ டலத்து வைகு
மரியசொற் பாணன் கேட்டூ தென்கொலென் றச்சங் கூர்ந்து
[3] விரைவொடு மிழிந்து சென்று வியன்சரா சரங்கள் யாவு
முருகிடப் பாடுவோய்நீ [4]யாரெனக் குரைத்தி யென்ரூன். (கூச)

அத்திறங் கேட்டிளைத்தார் போனடித் தொடுக்கி யையா
கொத்திசை வல்லே னல்லேன் கொண்டிலார் விறகொ ருத்தர்
மெத்திய பயத்தால் வந்தேன் மெல்லிசைக் காச னுய
பத்திரற் கேவல் செய்யும் பண்ணறை யடிமை யான்காண். (கூடு)

கூக. தெற்றி - திண்ணை. மாறு - மலாறு; ஒப்புமாம்.

கூஉ. சாதாரி-ஒருவகைப் பண்: இது வடமொழியில் தேவகாந்தாரி யென்றுகூறப்படும்.

கூங. இதிற்கூறிய இசைத்தொழில் பத்தினையும், "உள்ளாளம் விந்துவுட னாத மொலியுருட்டுத், தள்ளாத தூக்கெடித்த றுன்படுத்தல் - மெள்ளக், கருதி னலிதல்கம் பித்தல் குடில, மொருபதிற் றொழிலென் றுரை" என்னும் இசை மரபு வெண்பாவாலும் உணர்க.

கூச. மஞ்சம் - கட்டில்.

கூடு. கொத்திய இசை - தொகுதியாகிய இசைகளில். பண்ணறை அடிமை - இசையற்றவனுகிய அடிமை.

(பி - ம்.) 1'சொக்கன்' 2'காட்டிநாதாதி' 3'விரைவினினெழுந்து' 4'யாரெனவுரைத்தி'

என்றிறை கூற முன்ன மென்கொலா மெனக்க லங்கிச்
சென்றுதன் னுழையுட் புக்குச் செறிதரு கிளைஞர்க் கூட்டிப்
புன்றலை யடியான் [1]பாடற் கொப்பிலை போற்று நாயன்
வென்றிகொள் பாடல் கேட்க வேண்டுமோ வேண்டா வின்றே. ()

[2] இத்திறப் பாடல் யாரே யறிகுவார் யாவும் வல்ல
வுத்தமன் பாடி னல்லா லொருவரா ற் பாட வொண்ணு
தெத்தலத் தோரு நாணப் பரிபவப் படுமு னின்றே
புத்திர ரோடுங் கூடிப் போவதே கரும மென்று. (கஎ)

வரையறு சிவிகையோடு மடிதரு கவிகை யோடு
முருவுடை மாத ரோடு மூதவிய கிளைஞ ரோடு
[3] மரையிரு விடையின் மெல்ல வெழுந்தடற் பரியி னோடு
நிரைகளி றேறும் போது னெஞ்சறை பறை[4]மூன் னுக. (கஅ)

வே று.

ஒக்குமொக்குமெ னக்கலங்கிடி மொக்கலோடும்வி ரைந்துதன்
மிக்கபோர்வலி கெட்டுமுட்டொடும் விட்டவூரில்வி டாதுளக்
துக்கமெய்திய கன்றுபோனது கண்டுதாய்தரு கைபோடு
மிக்கபத்திர னுக்கான்கன வின்கண்வந்துவி ளம்பினன். (கக)

வே று.

பத்திரன் புலரு முன்னம் பரிபுர லயத்துச் சென்று
சத்தியக் குன்றே யுய்ந்தேன் றருமமாக் கடலே யுய்ந்தே
னெத்தலத் தினுமெ னக்கிங் கெதிரியார் நீயி ருப்பச்
சுத்த[5]சா ளரசங் கீதம் பாடுதற் கெனைத்து ரித்தான். (சஐ)

முன்புரக் தானே மாலே யடிமையா வுடையாய் முற்று
மன்பிலா வடிய னேனுக் கடிமையென் றுரைப்ப தேதின்
[6] மென்பசுங் கரஞ்சி வப்ப விறகினே வெட்டிக் கட்டித்
துன்புறச் சுமப்ப தேயென் றழுதுகை தொழுது சொன்னன். (சக)

வழுதிபால் விரைவின் வந்து மனவலி சாலப் பேசிப்
பழுதறு பாடி வாணைப் [7]பண்ணியல் வாது பாட
வழைமுடி மன்ன ரேறே [8]யென்னுமுன் னுங்கு நின்ற
தழைவுடை முறைசெய் வோரை யேவினன் றரணி வேந்தன். (சஉ)

கக. இறை - விடை, தலைவன். நாயன் - தலைவன்.

கஎ. பரிபவப்படுமுன் - அவமானப்படுமுன். புத்திரர் - மாணாக்கர்கள்.

கஅ. மடிதருகவிகை - மடக்கிய குடை. மிக்க அச்சமுண்டான பொழுது நெஞ்சம்துடிக்குமாதலால் அதனைப் பறைபறைதல் என்று கூறுதல் மரபு; "நீத்தருமாம்பறை யறைய" என்பர்பின்னும்; "இருவர்மா மனமும் பறையறைந தயர்வுட னடுங்க" (வி. பாரதம், இராச. உசூ.)

கக. முட்டி - வாத்தியங்கள். சஅ. விட்ட - தங்கிய.

(பி-ம்.) 1'பாட்டுக்கு' 2'இத்திறப்பாடலாரே' 3' அரையிருளோடும்' 4'கறங்க' 5'சாளகசங்கீதம்' 6'மென்றிருக்கரம்' 7'பண்ணிசை' 8'என்னமு ன்'

மற்றவர் சென்று வந்த பாணனே மனைக்கா ணுமற்
கொற்றவன் றிருமு னெய்திக் கூறுவா றறியாப் பாண
னுற்றபே ரச்சத்தோடு மொருவரு மறியா வாறு
மூற்றிர வின்கட் கெட்டுப் போயினன் முட்டுங் கட்டி. (சக)

[1] என்றவர் சொல்லத் தென்னன் வென்றவா றெங்ங னென்ன
நின்றபத் திரனு ரைப்பான் யானல னெருனற் கங்குற்
றன்றிரு மிடற்ருன் மெல்லச் சாதாரி பாடிச் சென்று
வென்றிகொள் கருணைச் சொக்கன் வென்றனன் விறகா ளாகி. (சச)

வித்தக மன்ன வென்ன வேந்தனு நெருனற் போது
பத்திர னடிமை யென்று பண்பட விறகு கூறி
யுத்தமத் தெருக்க டோறு முலாவிஞேன் றன்னை யானுஞ்
சித்திரச் சொக்க னென்றே கண்டனன் செய்தி [2]கொண்டி. (சடு)

பேசுவ தென்கொல் காணப் பேரருள் கூர்ந்து காணு
வீசனுன் னினைவின் வந்தா [3]னெள்ளினி வேண்டி மென்று
தூசணி முதலா நல்கித் தும்பிநீ டெ ருத்தத் தேற்றி
யோசைசேர் நகரி தன்னே வலம்வரு வித்தா னேங்க. (சசு)

தன் றிருக் கரங்கள் கூப்பி யாவர்க்குந் தலேவர் நீரிங்
நின்றெழுந் தருளு மென்ன வின்னிசைப் பாணன் வாழ்த்திச்
சென்றுதன் னுழையுட் சார்ந்து சேர்ந்தவர்க் [4]கியன்ற நல்கி
மன்றுளு தினேயே பாடி யிருந்தனன் மகிழ்ச்சி கூர்ந்து. (சஎ)

பாண்டியன் பல்கா லீசன் [5]பரிவுகண் டதிச யித்து
வேண்டிய செய்ய வல்லான் வெல்லவல் லான ருட்சேர்
காண்டகு சொக்க னல்லாற் கண்டதுண் டோத லத்து
மீண்டொரு தெய்வ மென்ருன் சென்னியும் வியந்தான் கேட்டி. ()

கனத்திறை சொல்லக் கண்ட கருணேசே ரிறைவி சென்று
பனிப்பற நகைத்து வாங்கிப் பாணர்தம் மடியார் சாலத்
தனிப்பர தேசம் போலுல் விறகையுஞ் சுமந்து தாமே
நினேப்பற வருவ ரென்ற வளனுரை நின்ற தென்றும். (சகூ)

ஒதரு மனத்தால் வாக்கா லுனரொனுன் கருணே கூர்ந்து
தூய்தகு மடிமை வேண்டி யடிமையாய்ச் சுமத்தல் கண்டு
ராதலா லடியார் தங்கட் கெளியவ னரன லாது
வேதவாய்க் கண்ட துண்டோ வேறெருரு தெய்வ மெண்ணின். (நுo)

ஆகத்திருவிருத்தம் - கருகூ.

சசு. நீடு தும்பி எருத்தத்து - நீண்டயானையின் பிடரியில்.

சஅ. பல்கால் அதிசயித்து. சென்னி - பாணபத்திரன்.

சக. கனத்திறை - விறகின் சுமையையுடைய சிவபெருமான். சொல்லுதாம் பாணர்க்காகச் சென்றுவந்ததைச் சொல்லிபருள். பனிப்பு அற - நடுக்கம் நீங்க. வாங்கி - விறகுகட்டை வாங்கிக்கொண்டு; வாங்கினனதுவென இயைக்க.

(பி - ம்.) 1'என்றது சொல்லத்' 2'கண்டு' 3 'ஏதினி' 4 'இனியநல்கி, மன்றுளுனேயே' 5'பத்திகண்டு'

நிநி.—திருமுகங்கொடுத்த திருவிளையாடல்.*

மின்னுபுகழ்ப் பத்திரன்றென் னவன்க ணுரு மேவாது சுந்தர ன்பான் மேவி யன்பி, னன்னெறியிற் பாடுங்கா ணுத மெய்ய [1]ஞதா ந்த ஞதத்துக் கினிய நாத, னின்னிசைக்குத் தானாசா யிருப்பப் பாடி மிவன்கண்டத் திசைக்கினிமை கூர்ந்து பாங்கர், மன்னுமைமா தொடுநீங்கா துருக்க ரந்து வந்திருப்ப னந்தரத்து வானோர் [2]வாழ்த்த.

கானகெறி பாடிமுடித் தேகுங் காலைக் காசொருகா [3]லணியொரு கான் மணிக ளோர்கா, லீனமிலா சனமொருகான் மவுலியோர்கா லின் னதெனு தெடுத்தடைவே யிலங்க வைத்து, ஞானமுதல் வன்போகக் கண்டி [4]வாழ்ந்து நாளுமகிழ் மிகுவிரைவிற் கொண்டி போந்து, தீன மற [5]வுண்டி டித்து வந்தோர்க் கிட்டஞ் செய்தருள்சிந் தனைசெய்வன் றிறத்துச் சேர. (உ)

இத்தகவு தனிநடந்து செல்லுங் காலை யிறைவனுக்குந் தனக்கு முத லில்லை யாகச்,சித்தமகிழ் பொருள்வேட்டோர் மன்னர் மாட்டுஞ் செல்லாதங் கிரவுபகல் சிவனைப் பாடி, மெத்துமிடி யினுமிருப்போ [6] ஞருநா ணுடி விறலியர்பா டகர்பாணர் புகழக் கண்டி, புத்தியினைத் தென்செய்கே னிறைவா வீவான் பொருளில்லை யென்றறையிற் றுயி ன்ருன் புக்கு. (ஙு)

[7] அறியுமிவன் கொடைத்தகவுந் தன்பால் வைத்த வன்புங்கண் டின்பங் கூர்ந் தறையிற் சென்று, மறுவறுகல் லிசைப்பாண கொடுத்த லாலே வறுமையடைந் தனைகந்தம் பொருளு னக்கே, பிறரொருவ

க. தான் அரசாய் இருப்பதும். அந்தரத்து - ஆகாயத்தில்.

உ. ஞானமுதல்வன் - சிவபெருமான். தீனம் - வறுமை. அருள்சிந்தனை செய்வன் - திருவருளைச்சிந்திப்பன்.

ஙு. ஈவான் - புலவர்களுக்கு ஈதற்கு; உசுஃ ஙு.

* "தாரமுய்த்தது பாணற் கருளொடே" (திருஞா. திருவியமகம், திரு வாலவாய்); "பாணனிசை பத்திமையார் பாடுதலும் பரிந்தளித்தான்" (திரு ஞா. தே. கோளிலி); "குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென, மதி மலி புரிசைத் திருமுகக்கூறி, யன்புருத் தரித்த வின்னிசைப் பாணன், பெற நிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய, மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்" (கல். கடி.)

(பி - ம்.) 1'காதிரக்கத்துக் கினியநாத ஞேதும்' 2'போற்ற' 3'அணியொரு கா லமணி யோர்கால்' 4'நாளு நாளு மவாவற விரைவிற்' 5 'உண்டுடுத்தும் வந் தோர்க் கிட்டுஞ் சிறந்தருள் சிந்தனை செய்வன்' 6'ஒருகாளுடி' 7'அறியுமவன்'

ரறியாமற் றருத லாலே பிறங்குபொரு ளறைகாப்போர் மூதலா யாரு
ங், குறைவிலுயர் பண்டாரப் பொருள்க டம்மிற் குறித்தனகண் டில
மென்னக் கொடுத்தெ ழுந்தே. (சு)

வே று.

எப்பெரும் பொருளுஞ் சாலக் களவு [1]போ கின்ற வென்றுங்
தப்பிய முரிவா யில்லே தாளுறு கதவஞ் சென்று
கைப்படத் திறந்தா ரில்லே கள்ளர்யா ரியாவும் வல்ல
வொப்பருஞ் சொக்கன் றன்னை யொழியவே றில்லை யென்று. (நெ)

இன்னல்கூர்ந் தைய கோவென் றிராப்பக லேயுற் றென்னை
முன்னுற நாடி நாடி முறையிடத் தொடங்கா நின்றார்
மின்னிய பொருள்க டம்மை மீளவுங் தருவே மாயின்
மன்னிய மனிதர் முற்று [2]நோகுவர் வழக்கு மன்றே. (கூ)

[4]உனக்கினி யளித்தற் கென்பா லுறுபொரு ளில்லை யென்றன்
மனத்தினுக் கினியான் றாயான் மகிழ்ந்துகம் மடியார்க் கென்று
நினைத்தன கொடுக்க வல்லா [5]னிலத்துயிர் கழறுஞ் சொற்க
ளனைத்தையு மறிந்தி ரங்கு மன்புடைச் சேர மான்காண். (எ)

விதமுறு [6]தனங்கண் மிக்க வேண்டிய வளிப்பன் முழா
[7] ததர்வுற விரைவிற் சென்றிவ் வோலையை [8]யளித்தி யென்று
மதிமலி புரிசை யென்றோர் வரைதரு திருமு கத்தை
முதிர்தரு கனவிற் காணக் கொடுத்தனன் முக்கட் சொக்கன். (அ)

சு. பண்டாரம் - பொன்னை; "பல்லாருங் கொள்கவெனப் பண்டாரந் தனைத்திறந்து" திருவிளை.

நெ. முரிவாய் - கள்ளவாயில்.

கூ. வழக்கு - நீதி.

எ. எல்லாவுயிர்களுஞ் சொல்லுகின்ற சொற்களை அறிந்துகொள்பவராதலால் அவருக்குக் கழறிற்றறிவார் என்பது திருநாமமாயிற்று; பெரிய. சதுரிற் றறிவார். கச - ஆம் திருவிருத்தம்பார்க்க.

அ. "மதிமலிபுரிசை" என்னும் திருமுகப்பாசுர அகவல் வருமாறு:—"மதி மலி புரிசை மாடக் கூடற், பதிமிசை நிலவும் பாணிற வரிச்சிறை, யன்னம் பயில் பொழி லால வாயின், மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க், குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ், குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமா வுகைக்குஞ் சேரலன் காண்ச, பண்பால யாழ்வல பாண பத்திரன், றன்போ லென்பா லன்பன் றன்பாற், காண்பது கருதிப் போக்தனன், மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

(பி - ம்.) [1]'போகின்றதின்றும், தப்பியமுரிவாய்' [2]'வேறேகா தென்று', 'வேறுகாதென்று' [3]'நோவர்கள்' [4]'உனக்கினியெனக்களித்தற்கு' [5]'நிலத்துவாழுயிர்த்தரங்கள்' [6]'தனங்கள்வாழ' [7]'இதமுற' [8]'கொடுநீ'

துய்யநன் னெஞ்சன் வாங்கி முடிமிசைச் சூடிக் கொண்டிங்
கையனே பொருளே வேண்டி [1]யன்புடை நின்னை விட்டு
வையகங் காப்போர் தம்பான் மன்னவோ வென்ன நந்த
மெய்யுரை மறுத்தல் வேண்டா [2]மேவென மறுத்தா னில்லே. (ஈ)

பழுதிலா நாயன் சொல்லே மறுத்திடல் பாவ மென்று
தொழுதுமுன் றுயிலு ணர்ந்தான் சொக்கனைக் கண்டா னில்லே
யெழுதிய திருமு கங்கண் டதிசயித் திறைஞ்சி யொல்லே
யுழைகடக் திரவிற் போனு ணெருவரு மறியா வாறு. (ஊ)

மல்லலஞ் சிறப்பி னேங்கு மாமலே காட்டி ளன்பார்
வில்லவன் விரும்பி வாழு மேதகு மணிக்கு டங்கள்
சொல்லரு மிரவி யென்னச் சுடர்விடு மூயர்மா டத்துச்
செல்லமர் கொடுங்கோ னூரிற் சென்றனன் சிறிது காளில். (ஹ)

தாங்கரும் பசியா னெஞ்சு தளர்வுறும் வயுமை யாள
னீங்கிவ ணெருவ னுரென் றியாவரு மிகழ்ந்து கூற
வோங்கிசை யுருவமெங்கு மொளிகொள்வெண் ணீற்றுரன் மூடி
யாங்கொரு தண்ணீர்ப் பந்தர் மூலையி லமர்ந்தான் மெல்ல. (கஉ)

இன்னதன் மையினி ருப்ப விரவிடைச் சேர மான்கட்
பன்னிசைச் சொக்கன் சென்று பாகெம் பத்தன் காண்பா
னின்னக ரடைந்தான் றேடி நிறைவுசெ யென்னக் கேட்ட
மன்னவன் றுயிலு ணர்ந்து மந்திரி களேவி டித்தான். (கஊ)

நயந்துறு கனவின் செய்தி நவின்றமுன் விடுப்பப் போனேர்
[3]பயின்றநீண் மறுகு தோறும் [4]பரந்துறு நவம தாக
வியைந்தவோர் பத்தர் மேவக் கண்டிரோ வென்று நாடி
வுயர்ந்தவன் றன்னே யந்த வுழையிடை யிருப்பக் கண்டார். (கச)

அரியமா தவத்தீர் காண்பா ணுசையா யிருந்தா னும்மை
யுரைகெழு மரசன் றன்பா லுவந்தெழுந் தருளு மென்னக்
கருதிநீ ரழைப்ப மேவேன் காவலற் கிறையிற் சென்று
பெரியகா ரியத்தின் வந்தே னுரைத்திடும் பிறங்க வென்றான். (கடி)

கக. நாயன் - தலேவன். வில்லவன் - சேரன். செல் - மேகம்.

கஉ. பசியும் வறுமையுமுடைமையை, "பரிஸ்மல் குரவலேப்பப் பசியொரு புதத்தலேப்ப" (கஅ) என்பதனாலு முணர்க; "இலசையுருவம்" என்றது அவருக் குள்ள ஸக்தீதப்பிரியின்மிகுதி கூறியவாறு.

கஙு. நிறைவு - மகிழ்ச்சி.

கச. அந்த உழை இடை - தண்ணீர்ப் பந்தரிடத்தே.

கடி. அரசன் உழுமைக்காண்பான் ஆசையாயிருந்தான். உரை - புகழ். பெரியகாரியம்: "பெரியகாரியமுமா" (கம்ப. வேள்வி. முகூ.)

(பி - ம்.) 1'அன்புறு' 2'மேகென' 3'பயின்றநீண்' 4'பகர்ந்துறு'

பணிவிடை யமைச்சர் போந்து பகர்ந்தது சாற்றப் போற்று
மணிமுடி யரசன் சால மகிழ்ந்துவா னகத்தி னேறு
ணணிபொலி மணிகள் சிந்த வடியிணை கோவச் சார்ந்தாங்
கிணையிலா தவனைச் சொன்ன வெல்லையி லிருப்பக் கண்டான். (கசு)

நின்றமன் னவனைப் பாரா னிறைந்தபே ரருளைப் பார்த்தாங்
கொன்றிய புளகத தோடு மொழிகளாக் கண்ணீ ரோடுஞ்
சென்றவ ரதிச யிப்பச் சிறப்புடை யிசையெ டுத்து
மன்றினு ளாடுஞ் சொக்கைப் பாடினான் மதுரைப் பாணன். (கஎ)

அரசனுஞ் சிவன்பால் வைத்த வன்பு கண் டிருகி யக்தோ
பரிவினல் குர[1]வ லேப்பப் பரியொரு புறத்[2]த லேப்ப
வுரைகெழு கானம் பாடி முறுதியைப் பாரா தித்
பரமனே யிவர்வே றல்ல ரென்றுபன் முறைது தித்தான். (கஅ)

பத்தரெங் குள்ளீர் வந்த காரியம் பகரு மென்ன
வுத்தம மதுரை நம்மூ ருன்றனக் கென்று கல்ல
சித்திரச் சொக்கன் றந்த திருமுகங் கொணர்ந்தே னென்று
பத்திரங் கொடுத்[3]தா துங்கிப் பத்திரன் பணிந்து நின்றான். (கக)

வேறு.

இருமைசேர் திருமுக மிறைஞ்சி யீடுகொண்
டரிதிகழ் தவிசின்[4]மீ திருத்தி யாதரித்
துரைகெழு பாசுர வுரையைக் கண்டெழும்
பரிவொடு சூடினன் பாடி யாடினன். (உ0)

தன்வயிற் சுந்தரன் சால வைத்துள
மன்னிய பரிவினைக் கண்டு [5]கண்டிவாழ்ந்
தின்னிசைப் பாணனை யெடுத்த வேத்தன
னுன்னரு மவன்செய லொன்றும் பார்த்திலன். (உக)

கக. விரைதது வந்தமையால் மணிகள் சிதறின. சேர் நடந்து சென்றமை, கூ - ஆம் பாடலாலும் வலியுறுகின்றது. சொன்ன எல்லை-தணலிர்ப் பக்தர்; கஉ.

கஙு. பத்திரம் - திருமுகம். உன்றனக்கென்றுதந்த திருமுகமென்க; உன்றனக்கு எப்றும் நலல சொகதம் என்ன இயைத்தலுமாம்.

உ0. இருமை - பெருமை. [5]கொண்டி - மனங்கனிந்து. சூடினன் - தலேமேல் வைத்துக்கொண்டான்.

உக. திருமுகப் பாசுரத்தில், "தன்போலென்பா லென்பன்" என்றதனல் தன்வயின் வைத்துள்ள பரிவு காணப்பட்டது.

(பி-ம்.) 1'அசைப்ப' 2'அசைப்ப' 3'ஓடுதல்' 4'நீதத்தி' 5'வாழ்ந்தனன்'

வேறு.

ஓடை யானைப் பிடர்மிசை யோங்குற
நாடி காண நகர்வலங் கொண்டுபோய்க்
கூட நீடுதன் கோயிலுட் புக்கல
1 ரேடி தாங்கு தவிசி லிருத்தினன். (உஉ)

வேறு.

இருந்தவன் றன்னை யீச னுகவே பாவித் தெண்ணெய்
வருந்துமெய்ம் முழுதும் பெய்து மஞ்சன மாட்டிச் சூட்டிச்
சுரும்புசூழ் மாலை சாத்தித் தூசுதன் கலனை பூசிப்
பரிந்தறு சுவையி னூட்டிப் பணிந்தனன் கரங்கள் கூப்பி. (உங)

பேணுற்ற காவற் றெல்லைப் பெரும்பொரு ளறையுட் பட்ட
வாணிப்பொன் காசு தூசு தேசுடை யணியா ரங்கன்
மாணிக்க முத்து மற்றும் வகைவகை பொதிசெய் தோங்கப்
பாணற்கெண் ணிறந்த கோடி பரிப்பவர்க் கொண்டு கட்டி. (உச)

திரள்பரி கயங்க டிண்டே ரவனிகள் சிறக்க நல்க
வருளுடை யன்பன் கோதை யன்புகண் டதிச யித்துக்
கருதிய தனம னைத்துங் கண்டுகைக் கொண்டு மன்னர்க்
குரியன கொள்ளேன் சொக்க னுயர்திரு வாணை யென்றான். (உடு)

மன்னது கண்டு சால வாடிமுன் றெளிந்து மறைஞ்சி
யென்னபுண் ணியஞ்செய் தேன்மற் றிங்கிறை யருளின் வந்து
பின்னுபா வலர்க்கு நாளும் விதரணஞ் செய்ய வேண்டும்
பொன்முழு தையுங்கைக் கொள்ளப் பெற்றதே போது மென்றான்.(ஊ)

முன்புற நின்று போற்றி யின்னன மொழியக் கண்ட
வன்புடைப் பாண னஞ்சி யடிதொழு தவனி காக்கு
நன்குல வரசே யென்னை யிப்படி நவிலா நின்ற
தென்கொனன் கிலாத யாதே ரிழி குலப் பாண னென்றான். (உஎ)

உஉ. ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்.

உங. மெய்முழுதும் எண்ணெய் பய்து மாலை சூட்டித் தூசுசாத்தி.

உச. பொருளறை - பொன்னறை.

உடு. கோதை - சேரர். ஆணை - கட்டளை.

உசு. அதுகண்டு - திருவாணை கூறியதைத் தெரிந்து, முன்வாடிப் பின் தெளிந்து. "என்னபுண்ணியஞ் செய்தனனெஞ்சமே" (தே.) விதரணம்=கொடை.

உஎ. என்னை - அடியேனை.

(பி - ம்.) 1 'ஏடிலங்குகவிசிலிழிச்சினன்'

இயைந்தனன் பொறையர் கோமா னிலங்கெழும் பீற தாக
நயந்துல கனைத்துந் தந்த நான்முக ஞதி யாக
வுயர்ந்தபல் பிறப்புத் தோறு முயிர்க்குயி ராய்நம் மீசன்
சயம்பெற நிற்றல் கண்டீர் தாழ்ந்தீத துயர்ந்த தேது. (உஅ)

இசைந்திது பல்காற் சொல்வ தெம்பெரு மக்க ளென்னே
பொருந்திய சிவனே யாகக் கண்டனன் புதுமை கூர
வருந்தவ ஞணை யாலே நிற்பதற் கறைய மாட்டேன்
விரைந்தெழுந் தருளு மென்று விடுத்தன னல்லாட் கூட்டி. (உக)

நற்றவன் போகப் பின்னர் நடந்துபோய் மீண்ட வஞ்சிக்
கொற்றவன் கோயில் சேர்ந்தான் கோதைதன் பரிச னத்தா
லுற்றெளி யுடம்பு பெற்றுங் குறும்பரி சனங்க ளோடும்
பற்றிய தனங்க ளோடும் பாணனு மதுரை புக்கான். (கo)

வம்பவிழ லங்கற் றென்னன் வரிசைகண் [1]டதிச யிப்பத்
தும்பிபீ டெருத்தத் தோங்கித் தோரைசா மரைகள் வீசப்
பைம்பொன்வெண் குடைநி ழற்றப் [2]பார்மக ணெளிய மிக்க
செம்பொனே டணைந்த [3]செல்வன் சொக்கனு லயத்துச் சேர்ந்தான்.

ஐயனே நினக்கு நல்லா னன்புடைச் சேர மான்போல்
வையகத் தில்லே செம்பொன் வரைபுரை தனம னைத்துங்
கையினின் றிருமு கத்தைக் காணுமு னளித்தா னென்று
பொய்யறக் காட்டிக் கொண்டு போயினு னருள்பெற் றுங்கு. (கஉ)

உஅ. பொறையர்கோமான் - மலைநாட்டார் அரசர். நான்முகனுதியாக எறும்பு ஈறதாக வென்க; "அயன்முதலாகத்துன்னித் தப்பற வெறும்பீறுகத் தனுத்தொறு நிற்பேம்யாமே" எனப்பின்னும்; நிகழ்; 'பிரஹ்மாதிபிபீலிகா பரியந்தம்' என்பது வடமொழிவழக்கு.

உக. இது - இழிகுலப்பாணன் என்பது. சொல்வது என்னை-சொல்வது யாது. எம்பெருமக்கள்- எமது பெரியோராகிய தேவரீர். அருந்தவனுணையாலே- சோமசுந்தராக்கடவுள் 'வரவிடுப்பதுவே' என்றருளிச்செய்தகட்டளையால். அருந்தவன் - சிவபெருமான்; "அருந்தவத்தோர்கே" (புறநா. க.) என்பதன் அடிக் குறிப்பைப்பார்க்க. நல்லாட்கூட்டி - நல்லவீரர்களைச்சேர்த்து; "ஆட்கொளாஞ் செப்பினன்" (சீவக. கஅஉக.)

கo. வஞ்சிக்கொற்றவன் - சேரர். கோதைதன் பரிசனத்தால் - சேர ருடைய ஸ்பரிசத்தால். பரிசித்ததை, உக - ஆம் செய்யுளாலுணர்க. பரிசனங் களோடும் - பரிவாரங்களோடும்.

கக. வரிசை - சம்மானம். தென்னவன்கண்டி அதிசயிப்ப. தோரை - பீலியாற் செய்தவிசிறி.

கஉ. தாமதிக்காது அன்றைத்தினமே அளித்த 'விரைவுதோன்ற, 'காணு முன்' என்றார்.

(பி - ம்.) 1'அதிசயித்து' 2'பாராகெளிய' 3' செல்வச்சொக்கன்'

வந்தகா வலர்சுற் றத்தார் வறுவியோர் வாழ வென்றுஞ்
சிந்திய பொன்னு முத்துஞ் சேலெயுங் கொண்மூ வென்ன
[1] முந்துறப் பொழிந்து காலு முறைமையி னூழி வாழ்ந்து
சுந்தரன் றனையே [2]பாடி யிருந்தனன் றுதிப்ப யாரும். (கக)

ஆகத்திருவிருத்தம் - சஎசுசு.

நிசு.—பலகையிட்ட திருவிளையாடல்.

அன்பு மிக்க வறிவுடைப் பத்திரன்
றுன்ப மற்றுத் தொலைவி னனத்தொடு
நன்கு மிக்கவர் காலும் வியப்புற
மன்சி றக்க மதுரையில் வாழுநாள். (க)

நீடு செல்வ நிதியினைக் கண்டிசை
பாடு பாணர் பொருமையைப் பற்றியே
நாடி யென்றிவ னல்குர வாவனென்
றூடி யாரு மிருப்ப ருரைத்திடார். (உ)

மெய்மை யற்ற வெறுப்புடைப் பாணர்தம்
பொய்மை யைக்கண்டு புண்ணிய னிற்றுமுன்
றையல் கோவைமுச் சந்தியு மன்றியே
மையி ராவும் [3]வழுத்துவ லென்றனன். (ங)

வே று.

இப்பெரு விரதம் பூண்டாண் டியாரினி நடிவு சென்று
பொய்ப்பற யாரும் போற்றப் பாடிகாட் புகழ்க்கு நல்லோன்
றுப்புடை நெஞ்ச னேசஞ் சோதிப்பான் கருதி யோர்கண்
மைப்படி மழைக்கு லத்தை விட்டனன் வருத்து கென்ன. (சு)

பல்லித விலங்கு நாற்கா றபறவைமா னிடர்கண் மற்று
மில்லடைந் தச்சங் கூர விருண்டிற விடித்து மின்னி
மல்லல்வான் முழுது மூடி வாளரா ஞான்ற வென்னச்
சொல்லருங் துளிக டேங்கச் சொரிந்தன சோனை மாரி. (ரு)

ங-ங. வறுவியோர் - தரித்திரர். என்றும் பொழிந்து நாளும் வாழ்ந்து பாடி யாருந்துதிப்ப இருந்தனன்.

(நிசு.)

உ. ஊடி - வெறுத்து.

ங. பொய்மை-மனம்வேறு வாக்குவேறு. முச்சந்தி-காலை, உச்சி, மாலை.

சு. யாமினி-இரவு. "புகழ்க்கு நல்லோன்" (சுசு: சு.) துப்பு-தாய்மை. நெஞ்சன் - பாணர்.

ரு. நாற்கால்விலங்கு. இல்-இடம். ஞான்றவெனல-தொங்கின வென்ன.

(பி - ம்.) 1'மூன்றையினளித்து' 2'நாடி.' 3'வழுத்துவம்'

அரும்பெரு விரதம் யானின் றழியினு மொழியே னென்று
சொரிந்திடி மழையை கல்ல தூமலர் மழையாக் கொண்டி
வருந்தியா லயத்துக் காலாற் குறிவழி தடவி வந்து
தெரிந்திசை யிசைத்தான் வல்லான் செயலென வுணர்ந்து தேறி. ()

முன்னிகழ் புங்க வத்தின் பின்னுற முதிர நின்று
தென்னிசை பாடும் பாணன் றிறத்தினைக் கண்டு பின்னு
மன்னுகன் மழையை யேவ வாங்கது மருத்தோ டொன்றிப்
பன்மலை யருவி யென்னத் திகழ்ந்தது பயம்வி ளைத்தே. (எ)

மைக்குல மெற்றுங் கல்லா லம்பிஞன் மாம ருத்தாற்
றக்கமெய் சால நோவோன் றக்திரி யாழ்ஈ னேந்து
மிக்கஈ ருகிர்ஈ னேந்து விரனடிக் குறவும் போகான்
1 சிக்கன வுடனே நின்று பாடிஞன் சிவனே யுள்ளி. (அ)

அயன்றலை யறுத்தல் பாடி 2யருக்கனை யடர்த்தல் பாடிக்
கயந்தனை யுரித்தல் பாடிக் காலனை யுதைத்தல் பாடி
வியன்புர மெரித்தல் பாடி வேள்கெட விழித்தல் பாடிச்
சயந்தரு புகழ்கண் மற்றும் பாடிஞன் சால வாழ்த்தி. (கூ)

முற்றவெங் தையைநி னைப்பார்க் கெதுமுடி யாது முன்னர்
மற்றது கண்டி ரங்கி வருந்திடா திருந்து பாடென்
றுற்றபே ரிசைக்குச் சென்றுங் குவந்தியர் பலகை யிட்டான்
பற்றியற் பலகை முன்னம் பாவலர் வரக்கொ டித்தான். (கo)

கங்குலி லிறைவன் மேனி காந்திடக் கண்ட பாண
னிங்கிது செய்தற் கெந்தை யெழுவகை யிசைக்கு கல்ல
சங்கர னல்லால் வல்லா ரியாரெனத் தாழா தோங்க
வங்குயர் பலகை யேறி யிருந்தன னருளை வாழ்த்தி. (கக)

சு. யான் இன்று அழியினும் விரதம் ஒழியேன். வல்லான் செயல் - சிவன் செயல்.

எ. புங்கவம் = இடபம். தென் - அழகு. மருத்து - காற்று. மழைகண் மழையாதலின், மலையருவி அதற்கு உவமையாயிற்று.

அ. அம்பு - நீர். சிக்கனவு - உறுதி.

கூ. அருக்கன் - சூரியன்; அரக்கன் என்றபாடத்திற்கு இராவணன் என்று கொள்க. கயம் - யானை. சயத்தரும் புகழ் - பிரதாபம். இச்செய்யுள் "அயன்றலை கொண்டுசெண் டாடல் பாடி யருக்க னெயிறு பறித்தல் பாடிக், கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக் காலனைக் காலா லுதைத்தல் பாடி, யியைந்தன முப்புர மெய்தல் பாடி யேழை யடியோமை யாண்டு கொண்ட, நயந்தனைப் பாடிநின் றூடி யாடி நாதற்குச் சுண்ண மிடித்தகாமே" (திருவாச கம், திருப்பொற்சுண்ணம், கஅ) என்பதைத்தழுவியது; பெரிய. திருநீல கண்ட. நி-ஆம் திருவிருத்தமும் இவ்வாறேயுள்ளது.

கo. இயற்பலகை-சங்கப்பலகை. பாவலர்-சங்கப்புலவர். முன்வரக்கொடித் தான், இப்பொழுது சென்று இட்டான்; இச்செய்யுள் கருத்தடையடையணி.

(பி - மி.) 1'சிக்கென' 2'அரக்கன்'

வே று.

காண்டகு குரலொடு துத்தங் கைக்கிளை
வேண்டிய வுழையிளி விளரி தாரமென்
றீண்டிய நெறியினே ழிசையு மின்புறப்
பூண்டதந் திரிகளிற் புரிந்து பாடினன். (கஉ)

மூன்றிக ழிசைத்துதி முடியப் பாடிமு
னொன்றிய வருத்தமு மொழிந்த தொல்லையின்
1வன்றிறன் மாரியு மருத்து மற்றன
மின்றிகழ் வானமு மீனம் பூத்ததால். (கஊ)

வே று.

பல்வி தப்பொற் பலகையைக் காணவே
மல்ல லோங்கு மிரவியும் வந்தனன்
சொல்ல ருஞ்செயல் கண்டு துதித்தெழுந்
தொல்லை சென்றுதன் னுற்றவர்க் கோதினன். (கசு)

ஆல யத்து 2ளணைந்துற் றவரொடு
மேல வர்நிறை யிட்ட பலகையின்
கோல மீதெனக் காட்டக் குறித்தவர்
கால காலன் கருணையை யேத்தினர். (கஎ)

இலகு கன்றுக் கிரங்கும் பசுவென
வலைவு கண்டினக் கல்லிடை வந்திசைப்
பலகை யிட்டருள் பண்ணிசைச் சொக்கனே
யலது வல்லவ 3ரானெனப் போற்றினர். (கஙு)

வெய்ய பாணர் வெறுப்புவிட் டின்வயிற்
செய்ய சொக்கன் றிருவருள் கண்டன
மைய னேகினக் காரொப் பவரென
மைய றீர வணங்கினர் வாழ்த்தினர். (கஅ)

வே று.

மின்றிகழ் தென்னன் முன்னு மேதினி வியப்பப் பாணன்
சென்றுதன் னுழையுட் புக்குச் செந்தமிழ்ச் சொக்க னேப்போ
லின்றியா 4ரெமக்கு நல்லா ரெனத்துதித் திருந்தான் செல்வ
மொன்றிய மதியங் கண்ட வுததியின் விளங்கிற் றன்றே. (கஆ)

சிந்தைசெய் துலகின் மிக்க தென்றிரு வால வாய்வாழ்
சுந்தரன் றன்னை யாவர் துதிசெய்தா ரவர்கள் வேதச்
சந்தைசொல் லியாண்டு புக்குத் தகும்பெருஞ் செல்வத் தோங்கி
வந்தவெந் துயர நீங்கி வாழ்ந்துவா ளுள்வ ரன்றே. (கஙூ)

ஆகத்திருவிருத்தம் - கடுஙடு.

கஎ. வெய்யபாணர் - அழுக்காறுற்ற பாணர்; எழுவாய்.

(பி-ம்.) 1'வன்றிறல்வாரியும்' 2'அணைந்திட்டவரொடும்' 3'ஆரெனச் செப்பினர்' 4'எனக்கு' 5'யாண்டும்புக்கு'

நள.—இசைவாதுவென்ற திருவிளையாடல்.

தரையிற்பழு தில்லாநெறி தருபத்திரன் மனையாள்
பரிவுற்றிடு தன்காதல னளவிற்பரி வினுமுள்
ளுருகிப்புகழ் தருசுந்தர னளவிற்பரி வுற்றே
பெருகப்புண ரிசைபாடிவள் பிரியாதொரு [1]நாள்போல். (க)

பாலேமொழி சூதேமுலே பணையேதிர டோண்மெல்
[2] லாலேரிலே தானேவயி றரவேயக லல்குல்
சேலேவிழி காரேகுழல் சிலையேநுதன் மலராள்
போலேதிகழ் வாணேரிடை பொய்யேயிது மெய்யே. (உ)

வே று.

இரதியு மொவ்வா வடிவினு ளுருக்கொண் டிசையுலா வுவதெனச் சிறந்தா, டரைபயில் சாதித் தருமநீ தியினுற் சசிகுல வேந்தையுங் கண்டு, பரிவொடு போது நாடனி லொருநாட் பார்த்திபன் றனிவரக் கண்டு, பொருவில்வேள் கணையான் மெலிந்துமெல் லணையிற் புல்ல வா வென்றனன் மெல்ல. (ங)

மையிலாள் கடைதொட் டெயிர்கரங் குறைத்த மாசறு தேசுடை நீதி, யையனே ங்தஞ் சுந்தர னணை யவ்வுரை [3]யிங்கெனக் கடாது, பொய்யிலா வுண்மைப் பத்திர ஞெழியப் புவியுளோ ருடன்பிறந் தவ ரென், றையநுண் ணிடையாண் மறுத்தனண் மருத்தா லசையுமென் கொடியென ருங்கி. (ச)

மறுத்தது கண்டு நெஞ்சக நாணி வலிசெயா தாணையை நினைந்து கறுத்தவ டன்னைப் போவென விடுத்துக் கற்றவ ரவைகடி விளிய மூறித்திடக் கடவ மெனப்புற நாட்டோர் மூற்றிசை பாடுவாட் டேடிச் சிறப்புட னழைத்து வாருமென் றுரைத்துத்தெரிந்தயர் தூதரை விடுத்தான்.

அருமையா வொருவ ரறிந்திடா வாறங் ககற்றியோர் கார்துபோய் விரைந்து, தரைமுழு தெங்குந் தேடிமுன் கொணர்ந்த சயந்தரும் வல்லிசை வல்லாள், பரிவொடுங் கூடி கல்லிசை மாதர் பாணர்தற் சூழவொண் சிறப்பிற், கரிபரி தெருங்கு மதுரையுட் புகுந்து கண்டன டிண்டிறல் வேந்தை. (சு)

ங. அருவமாகிய இசையானது உருக்கொண்டு உலாவுவதென. விறலிபர் கள் அரசனிடஞ்சென்று பாடிவரவேண்டியது மாபாதலின், 'சாதித்தருமநீதி யினுல்' என்றார்.

ச. கைகுறைத்தகதை, சிலப். ௨௨-ஆம் பக்கத்தாலறியலாகும்.

டு. வலிசெயாது - பலாத்காரஞ்செய்யாமல். கறுத்து - கோபித்து. விளிய - அவமானப்பட.

சு. அகற்றியோர் - நீக்கிய வேலைக்காரர்.

(பி - ம்.) 1'நாட்போல்' 2'ஆலேலிலே' 3'இன்னெனக்'

பல்லித மாக மெல்லிசை பாடிப் பணிந்துமு னிருந்திடுங் காலை,
முல்லைசேர் மாலைப் பத்திரன் றேவி முன்னமாங் கிருந்தவ டன்னை,
யெல்லையில புகழா னிங்கிதத் தாலிங் கிவளுடன் பாடுதற் கின்று, வல்
லையோ வென்ன வவளுமிங் கிதத்தான் மண்ணிலா ரெனக்கெதி ரென்றுள். (எ)

அங்கது கேட்டு வந்தவட் கிரங்கி யணிமுத லாடைகள் வழங்கித்
தங்குதற் குரிய நல்லிடங் கூறித் தரத்தொடும் விடுத்தபின் றெழுத
பொங்குகற பினாள் வியந்துநீ தோறபிற் புகலினந்தோல்வியா யிருக்கு
மங்கைகே ளவளா வெலவதற் கான வழியுணர் பழுதுவா ராமல. (அ)

என்னுமுன் னனங்கு பன்முறை வணங்கி யானுமோர் கற்புடை
யாளேன், முன்னது தானே காததுமெ வறிதே முறறவோர் குற்றம்
வா ராது, மன்னநீ யிருப்ப வென்னையார் வெல்வா 1றெனறண்
மன்னவன் கண்டு, நன்னெறி நெஞ்சி னொன்றுவைத் தொன்று நவின்
றுபின் போவென விடுத்தான். (கூ)

வே று.

இரவிடை மறைத்து முன்ன ரெய்திய மாலை தன்பாற்
பரவுதற் கரிய சீர்த்திப் பதிரன் றேவி தன்னை
2 வெருவுரு தென்முன் வகதாற பன்முறை விளிய வைது
வரையறப் பாடச் சொல்லென் றேவியோர் மாதை விட்டான். (கo)

வரன்முறை மற்றை ஞான்மீரூர் மண்டபத் திருந்து முல்லைத்
தெரிவைகல் லிசைபா டுங்காற சென்றவள் சொல்லக் கேட்ட
வரிவையு மதுயா ளாகி யாசன்முன் பேசி வகது
கருகிட வைது கீதம் பாடினளை கற்பி னுளை. (கக)

வாதுறு வைதல கண்டு மனமிக மகிழ்வோ னென்றன்
மேதகு கீத மாதை விளியநீ வைவ தென்னை
யோதரு மவைக்க ளதனுங் குயர்புடை நீங்கள் பேசிச்
சோதுசேர் கானம் பாடுக வீதாறறவா சுமக்க வென்றே. (கஉ)

இப்படிச் செய்த லின்று தகுமென விகல்சேர் மன்னன்
செப்புமுன் 3லுங்கி யைந்து சிறியாழ் திருததி வந்த

எ. முலலை சேர்மாலை - முலலைப் பூமாலையையணிந்த; இம்மாலை கற்பிற்கு உரியது. இகழிதம் - குறிப்பு.

அ. தரம் - தகுதி. புகலிடம் - சொலலுமிடத்து.

கூ. அது - அகதாபு.

கo. எயதியமாலை - வந்தவிதலி. மறைத்து ஒருமாதை விட்டானென்க.

கக. முலலைத் தெரிவை - பதிதரர் மனைவி. முன்பேசி வகது - முன்பு சபதஞ் செய்தவாறு; முன்பு ஏசிவாறது எனறுமாம். கருகிட - கோபித் தும்படி. கற்பினுளளைவது.

(பி - ம்.) 1'என்றலுமன்னவன்' 2'பரிவுறுதென்முன்' 3'ஆங்கிருந்து'

துப்பிலா மாது பாட [1]வியைந்துமென் சுருதி மாது
மொப்பிலா யாழ்தி ருத்திப் பாடிஞ ரூயர்புண் டாக. (கங)

காதிவந் தவடன் பாட்டைக் காகவெஞ சுரம தென்றுங்
கோதில்கற் புடையாள் பாட்டைக் கோகிலச் சுரமதென்றுங்
[2] தீதற வையி ருந்தோர் செப்பிடக் கேட்டுங் துப்பின்
மாதினே வியந்தான் மாறன் மாறிமுற செற்றங் கொண்டே. (கச)

தெறிகெட வாரம் பட்டு நீதுமன் சொல்லக் கண்ட
வறிவுளோர் களுமி ராசா [3]வனுமதி தரும மென்னு
மறைமொழி தனங் னேந்து மாதுர மாக வந்த
விறலியே பாடி ஞளென் றமைதனர் வியாது சால. (கரு)

மறறது கண்டு வந்த விறலியுள் களிப்ப மன்னன்
கறபுடை யாள்வ ருந்தக் கண்டிளம் வருத்தன் மண்ணிற
சொறறரும் வெற்றி தோலவி சொலலிடி னியாவர்க் கிலலை
யெறறிகழ் மாதே விததை செயுமிடத தென்முன் மெல்ல. (கசு)

மன்றிடை யின்று போகி நாளைவந் தேதும் வாதி
லென்றுபி னிசைத்துப் [4]போக்க வேகுதிழை போந்து சாலக்
கன்றுகெஞ சோடி நந்தங கனவனுக் குதவி செய்த
வென்றிகொள் சொக்க னுககு விண்ணபபஞ செயவ மென்றே. (கள)

மே லு.

கருணைசேர் [5]கடவு ளாலயத் தினைந்து கண்ணினீர் சோரவீழ்ந்
தரற்றிதி, தரைமிசை யெவர்க்கும் வைததவன் பொழியத தனியொ

கங. துப்பிலா மாது - வடதலை; 'துப்பினமாது' எ பாபின்னும்; கச.

கச. காகசுரமடகாகம கதறினைப் போலடபாடுவது; அஃதது இசைசுதாழிற் குற்றம் எட்டினுள் ஒன்று; இதனை, "பருக்குரல கடடை கழுவல் விலங்க, லொருகணி யொதுகக்ம் புரைததல - விருப லாக, காகுளி காக சுரமென்னு மிவ் வகடடும், ஆகாவெனச சொனனு ராயதது" எனறுமை இனைமரபு வண பாவால உணாக. 'மாதனன்' எபபதறகு மாறுதலியுடையவனெனனும் பொருளபுலபடபக கூறியிருததல் ஆராயததபாலது.

கரு. வாரம-பாடடுபாதம்; "ஓரகசுர்தது" எபபர் பின்னும்; உடு; "வாரம் பட்டிழித தீயவு கலலவாக, நீரக காயதழ் கலலவுந தீயவா, மோரும் வையத தியதலகயர் பிறவெனு, வீர வேலனெடுங கண்ணி விளம்பினுள்" (சீவக. அசுஅ) எனனுஞசயபுள ஈல டி உணரதடாலது. இராசா அனுமதிதருமம் - இராசாவுடைய அனுமதியேதருமம்; "மனவனெப்படி மனுயிரப்படி" என னும் பழமொழியுள,"மனனவன் சொன்ன காரம சொலவது வழககாதன்றே" (திருவிளா. இசைவாது. கஅ) என்பதும் இங்கே அறியதபாலன. மாதர மாக - இனிமையாக.

கசு. சொல் - புகழ். எல - ஒளி. கள. ஏதம்: முன்னிலடபனமை.

கஎ. எங்களெனனாது கனவனையுமுளபடுத்தி.

(பி - ம்.) [1]'வியதபின்' [2]'தீதமையை' [3]'அனுமதிதாதருமம்' [4]'போக' [5] 'சொக்கன்'

ரன் பெங்கண்மேல் வைத்தா, யுரைகெழு மரச னுளக்கருத் தறிவை யுய்யுமா றறிகிலே னரசே, திருவரு ளொழிய வொருவழி யில்லை காத்தரு ளெனத்துதி செய்தாள். (கஅ)

வேறு.

அன்புடை யாளே நெஞ்சக மஞ்சே
னன்பரி வோடு முதவுவ ஞாலே
மின்பொலி மாறன் றன்புலம் விட்டே
யென்புலம் வாபோ [1]வென்றன னெம்மான். (ககூ)

வேறு.

நின்றதிரு வுரைவிசும்பிற் கேட்டு நீங்கா நேசமொடு நனிவாழ்ந்து போந்த பின்றை, வன் றிறன்மன் னவனவரை மற்றை ஞான்று வரவ ழைத்தின் னிசைவாது கண்ட வைக்க, ணெஞ்ஞ்றியவர் தம்மொடுமுன் னேயினுஞ் சால வுண்மைமறைத்[2]தோரங்கூர்ந் தினிய நெஞ்சங்,குன்ற நவின் றிடத்தோலாக் கற்பு மாது கூறுவாள் சீறியுளங் கொதித்து விம்மி. (உ0)

கைதவகேள் கைதவமா காதி யானுங் கழறுமொரு விண்ணப்பங் கைக்கொ ளொப்பின், மைதிகழுங் கண்டத்தன் சொக்க நாதன் ம ன் டபத்துப் பாடியக்கா லிருந்தோர் தம்மு, ளெய்தியவா ரொருத்திதனே வென்ரு ளென்றங் கியாரொருவர் சொல்கின்ரு ரவளே வென்ற,மெய் தருநா யகிமற்றிங் கென்மு கத்து விளம்புமது [3]செற்றங்கொண் டென்ருண் மெல்ல. (உக)

ஒள்ளியவ டள்ளியுரை செய்யா முன்ன ருயர்புடைய வுலகத்தைப் பேணி யொன்றும், விள்ளுதல்செய் யாதங்கண் மேவி னுல்யாம் வே ரொருவ ராவேமோ வெனப்[4]போ தென்ன, வள்ளலெளி யவர்க்கெ ளிய சொக்க நாதன் மண்டபத்து ளெண்டிசைமண் டலிகர் போற்றத், தெள்ளுதமிழ் வாணரிசை வாணர் சூழச் சேர்ந்திருந்தான் போந்தெ வரும் வியப்ப வேந்தன். (உஉ)

புகழ்தருபத் தினன்றேவி யுண்மைக் கின்று புவிகாண நமைச்ச மப்ப ளென்று கொண்டே, யகமகிழ்வி ளெடும்வந்தாங் கறிவி லாதா ளவையேற வறிவுடையா ளெங்குந் தானுஞ், சகமுதல்வன் றனைநினை ந்து மெல்ல வெல்லிச் சார்தலுமற் றுங்கிருந்த வேந்தற் சார்ந்தோர், முகமுகம்பார்த் தனரென்னுய் விளையு மிந்த முன்னவன்றன் செய தெரியா தென்று கொண்டே. (உங)

உ0. ஓரங்கூர்ந்து - பக்ஷபாதமிகுந்து. உக. கைதவம் - வஞ்சினை. உஉ. என - என்று தன்னுட்கருதி. தமிழ்வாணர் - தமிழ்ப்புலவர்கள். உங. முகமுகம்பார்த்தனர் - ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்; "கண்மல்கு நீரார் முகமுகங்க ணோக்கினரே" (சீவக. கஅ0அ.)

(பி - ம்.) 1'என்றனனிறைவன்' 2'ஓரம்பட்டு' 3'செற்றங்கோளென்ருண்' 4 'போதென்று'

வே று.

பரந்தவன் கண்டி பாடிம் பாணஞ யுருக்க ரந்து
பொருந்தவர் திருந்தா [1]னப்பாற் போதமின் மாது முன்னர்
நிரைந்ததர் திரிதி ருத்தி நேசமன் னவனே வாழ்த்தித்
தெரிந்துதான் வல்ல பாடல் பாடிஞ டூரம் பேசி. (உச)

வே று.

வேர்த்தன ணங்கினள் விதிர்வி திர்த்தனள்
வாய்த்தில விசையென வாயு லர்ந்தன
டூத்தரு முளம்பறை யறையத் தென்னனைப்
பார்த்தன ளவையவை கண்டிம் பாடிஞள். (உடு)

வே று.

பூணெபருக் குரல்க டத்தல் புரைத்தன்மே லொருக்கன் மிக்க
வீனைபடி காக வோசை காகுளி விலங்க னீங்காத்
தனிபடி கட்டை யெட்டின் றகுதியிற் றிகழும் பொல்லா
வினிமையில் சுரத்தைக் கண்டாங் கிருந்தவர் வியந்தா ரில்லை. (உசு)

மூத்தவெண் ணகைகது ளங்க முறுவல்செய் திறையை வாழ்த்திச்
சித்திர யாழ்தி ருத்தித் திருமலி களந்தி ருத்தி
மெத்திய மடப்பத் தோடி மெல்விரல் சிவப்ப வொற்றிப்
பத்திரன் றேவி மெல்லப் பாடிஞள் பண்ணி ஞேங்க. (உஎ)

ஆங்கரி முரற்சி யென்ன வருங்குயி லோசை யென்ன
வாங்கிருங் கடலுள் வாழும் வலம்புரி முழக்க மென்ன

உசை. பரந்தவன் - சிவபெருமான். போதமில்மாது - வத்த விதலி.

உடு. உளம்பறை அறைய-கெஞ்சுகடுங்க; நிசை: கூஅ-ஆம் பாடலின் குறிப்பைப்பார்க்க.

உசு. பெருக்குரல் - வெடித்தகுரலாகிய வெள்ளோசை. கடத்தல் - ஓர் ஓசையான தன்மைநீங்கிப் பலவோசையாய் வருதல். புரைத்தல் - ஒருதானத்தே பாட ஒருதானத்தே நழுவுதல். மேலொருக்கல் - ஒதுக்கிப்பாடுதல். காக வோசை - காகம் கத்திஞற்போலப் பாடுதல். காகுளி - பேய்கத்திஞற் போலப் பாடுவது. விலங்கல் - ஒருபண்ணைப்பாட வேறொருபண்ணிலே விலகிநின்று இசட்டல். கட்டை - நிறமும் தானமுங்குறையும் நீழிசை. இவற்றை, "பெருக்குரல் கட்டை.....சொன்னராய்ந்து" என்னும் இசைமாபுவெண்பாவாலும், "காசிகாகுளி வெடிகுரல் வெள்ளை, பேசாக் கீழிசை யொருபுற மொட்ட, னெட்டியிப் பெறித லெறிந்தநின் றிரட்ட, லோசை யிழைத்தல் கழிபோக் கென்னப், பேசுங் குற்ற மசைவொடி மாற்றி" (கல. உடு) என்னும் செய்யுளாலு முணர்க.

உள. இறை - சிவபெருமான். மடப்பம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

உஅ. அரிமுரற்சி - வண்டின் நாதம். மூவிசை- - மூவகை ஓசை; "தும்பிமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும், பையமுழங்கும்

(பி - ம்.) 1'இப்பாற்' 2'பெருங்குரல்'

வோங்கிய சராச ரங்க ளருகிடப் பாடு நீதி
தாங்குமூ விசையைக் கண்டு துதித்தன ரிருந்தோர் யாரும். (உஅ)

தணிவின்மாத் திரையொன் பானுக் [1]தானங்க ளெட்டி னுனு
ணுணுகிய கிரியை பத்து ணண்பதின் மூன்றெ ழுத்தா
லணுகிய தொழிலா ரேங்கு மைக்திளல் விளங்கு மும்மைத்
திணையெழு பாடல் கண்டு தேவரு மதிச யித்தார். (உக)

வேக்தனுர் செலிப்பு லத்து வினைபட வாங்கி விட்ட
வாய்ந்தமென் சரம்ப டாமுன் மாண்டது செற்ற மேனி
சோர்ந்தது நெகிழ்ந்த துள்ளக் கும்புரு நார தாதி
வாய்க்தவர் பாடிம் பாட லென்றது வாக்கு வாழ்த்தி. (ஈ0)

பரிக்தது புதுமை யேயோ [2]பகைத்தவ னெஞ்ச மெங்கு
நிரம்பியோன் முன்னின் ருலெங் நெஞ்சக முருகா தங்க
ணுரம்படச் செலிப்பு லத்தி லொண்டொடி பாடு மென்மைச்
சரங்கொடுஞ் சரம்போற் றைப்பச் சரங்கொண்டாள் சரமி லாதாள்.

மற்பொலி திண்டோட் டென்னன் வன்பிழை பொறுத்தி லென்ற
கற்புவீ றுடையாய் தோற்றுள் கழுத்திடை வீழ்த்தே றென்ன
விற்பொலி நுதலாள் கேட்டு மெய்த்தவ னருளை வாழ்த்திப்
பொற்புறு கழுத்தி லேறி யிருந்தனள் [3]பொலிவுண் டாக. (ஈஉ)

மாலையைக் கழுத்தி லிட்டோர் மாலெனின் றுலாவக் கண்ட
ஞாலமீ துள்ளோர் மிக்க நகையொடுங் கூடி வாழ்த்தி
யேலவங் நிறைஞ்சிற் கூட லிறைவனை யிறைஞ்சி னல்லான்
மேலொரு தெய்வ முண்டோ வெனவி யந்தார். (ஈக)

லெம்புரியும் - கையைவத்துத், தும்புருவு நாரதரும் பாடியமூ வோசை யென, நம்புநீர் நால்வேதத் துள்" என்பது இசைமரபு.

உக. தானங்கள் எட்டு - இடங்கள் எட்டு. இச்செய்யுட் பொருளை, "மாத்திரைக ளொன்பானு மன்றன மோரெட்டு,மேத்துங் கிரியையெண் ணீரைந்தும்-கோத்தப்,பதின்மூன் றெழுத்தாற் றெழிலேங்கும் பண்ணின்,மதியோர்க ளேந்து நிற மாம்" என்னும் இசைமரபு வெண்பாவால் ஆராய்க.

ஈ0. சரம் - ஸ்வரம்; அம்பென்பது மற்றொருபொருள்; அடுத்த செய்யுளாலு முணர்க.

ஈக. பகைத்தவனெஞ்சம் பரிந்தது புதுமையேயோ. 'எங்கும் நிரம்பியோன் முன்னின்றுல் எங்கெஞ்சக முருகாது' என்பது, "யார்க்கு முன்னவனே முன்னின்றுன் முடியாத பொருளுளதோ" (பெரிய. திருவாருர்ச். சஎ) என்பதைத்தழுவியது. சரம் - ஸ்வரம், அம்பு. சலம் - தணியாக்கோபம், சலனம்; லகரத்திற்கு ரகரம் இங்கே போலியாகவந்தது.

ஈஉ. மெய்த்தவன் - சிவபெருமான்.

ஈக. மாலையை - பிறலியை; பூமாலையை யென்பது மற்றொரு பொருள்; "வாடிய மாலை வாடா மாலைதாள் வீழக் கண்டே" என்பர்பின்னும்; ஈடி.

(பி - ம்.) [1]'தாளங்கள்' [2]'பகைத்தவர் நெஞ்சோ' [3]'பொலிவுகூர்ந்து'

மறுவில்சங் தரனைப் பாடி மதுரைவாழ் விறலி வந்த
விறலியை வென்ரு ளென்றல் புதுமையோ வெனவி யந்து
செறிமணிக் கவிகை தாசு சிவிகைமற் றெவையு நல்கிக்
கறைகெழு வேற்கண் ணுளைக் [1]கழுத்தினின் றிறக்கி விட்டான். ()

வாடிய மாலை வாடா மாலைதாள் வீழக் கண்டே
யாடரும் பெரிய காம மாலவாய் மாலை யென்று
சேடுறக் கொடித்துத் தெய்வச் செயலல்லான் மனிதர் செய்யு
நீடிய செயல்கள் சற்று நிலைநில்லா நிலைநில் லாவே. (கூடு)

கண்டன மெங்ங னென்னிற் கருணைசேர் சொக்கன் றன்னை
யுண்டென விருந்தாள் வென்ரு ளுலகினை யாளு கின்ற
வெண்டரு கம்மை யுண்டென் றிருந்தவ டோற்ரூண் மற்றென்
பண்டிறன் மொழிவ தென்று பன்முறை யதிச யித்தான். (கூசு)

மற்றவர் தம்மைத் தத்த மனைவயிற் போக வேவிக்
கற்றைவார் சடிலச் சொக்கன் கருணையை விறலி கற்பைப்
பொற்புற வாழ்த்தி வேந்தன் போயின [2]னினைய நல்கி
நற்றமி ழிறைவன் ரூணு நகையொடுங் கோயில் புக்கான். (கூஎ)

பத்திரன் ரூணு மிக்க பழுதில்கற் புடையா ளோடும்
வித்தக னருளா லங்கண் வீற்றிருந் தளவில் கால
முத்தம விமானத் தேறி யும்பர்கோன் முதலோர் வாழ்த்த
வெத்தலத் தோரு ங்காண வேகிஞன் சிவலோ கத்தே. (கூஅ)

ஆகத்திருவிருத்தம் - கஉ0கூ.

கூடு. சேடு - பெருமை.

கூசு. பண்டிறல் - பழைய செய்தி.

கூஎ. 'சொக்கன்': "ஆலவாய்ச் சொக்கனே" (தீருஞா. தே; மதுரைக் கலம். டு, க0, கூட, கூசு, அ2.; மீனாட்சி இரட்டைமணிமாலை, உ,க0.) நற்றமிழிறைவன் - சிவபெருமான்.

கூஅ. அளவில்காலம் வீற்றிருந்து.

(பி - ம்.) [1]கழுத்தினினிறக்க' [2]'உயர்பூணல்லி'

நி.அ.—பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்.*

முன்னமோர் காலம் வெய்ய மூரணடு படையான் மிக்க
வின்னெறி பயக்கும் வேளாண் மாபினி லிலங்கு வானேர்
வன்னியர் தலைவன் ரேன்றி மாசறு குலத்துக் கொத்த
கன்னியை மணந்த றத்தின் வாழ்த்தனன் காட்டு நாட்டு. (க)

ஆங்கவன் றனக்கு முன்னை யரும்பெருந் தவத்தா னன்மை
[1] யோங்கிய விராறு மைந்த ரவள்வயிற் றுதித்து நீங்காப்
பாங்குறு செல்வத் தோடும் பழுதற வளர்ந்தி யாருந்
தாங்கரு மிளமைத் தன்மை யடைந்தனர் சால வன்றே. (உ)

விழைதரு நாளி னல்ல மேம்படு தந்தை தாய
ருழையிடை [2]யிறப்ப மிக்க செல்வமு மொழிந்து தூய
வழகினல் வலியா லோங்கு மருங்குல மைந்தர் முன்னைப்
பழவினை யிழுப்ப வாடிப் போயினர் பரதே சத்து. (ங)

தொல்லியம் பதிவிட் டொன்னர் துரப்பமற் றியாவும் விட்டு
நல்குர வலைப்பப் [3]போனேர் நாடொறும் வருந்த மேனி
பல்லித நிலங்க டோறு நாஞ்சிலாற் பகலு மல்லும்
புல்லற வுழுது [4]கொண்டு புன்பயிர் விளைத்துண் டாரால். (ச)

அடைவினித் தகவிற் போது மரும்பெரும் புதல்வ ரங்கண்
படிபுகழ் வேட்டை வேட்டுப் பாசவெஞ் ஞாளி விட்டுத்
தொடர்விடா விதிவ சத்தாற் சுழன்றுமுன் முளத்தன் பின்றிக்
கடியபல் விலங்கு கொன்று காட்டிடை யுலாவு நாளில். (ஞ)

க. மூரண் அடி - பகையை வெல்லுகின்ற. இன்னெறி - இனியநெறி; இல்லறநெறியுமாம். வன்னியர்-ஒருவகைச் சாதியார். காட்டு நாடு-பாண்டிய நாட்டின் கண்ணதாகிய சிறிய தாரு நாடு; அது களவேள்வி நாடென்றும் பெயர்பெறும்; "முன்னோர் பாண்டியன் சோழற் காய்ந்து, பெருங்கள வேள்வி செய்த பீடைக் காட்டு நாட்டுள்" என்பதனலு முணர்க; சச: இச.

உ. அன்று, ஏ: அசைநிலைகள். ங. உழை - வீடு.

ச. தூரப்ப - ஓட்ட. மேனி வருந்த. நாஞ்சில் - கலப்பை. புன்பயிர் - நெற்பயிரல்லாதவைகள்.

ஞ. ஞாளி - நாய்.

* "ஏனக்குருளைக் கருளினே போற்றி" (திருவா. போற்றி. கஉக); "கோலமேனிவராகமே" (ஷெ. திருக்கழுக்குன்றப்பதிகம், ங); "ஏவண்டபன்றிக் கிரங்கி யீச னெனத்தை பெருந்துதையாதி யர்று, கேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த கிடப்பறி வாரெம் பிரானுவாரே" (ஷெ. திருவார்த்தை. உ); "தாயாய் முலையைத்தருவானே" (ஷெ. ஆனந்தமாலை. ஙி.)

(பி - ம்.) [1] 'ஓங்கியபுதல்வரீராறு' [2] 'இறந்தகல்ல' [3]'போனகாட்டிடை' [4] 'நாளும்'

மெய்ப்படி சாபம் வல்ல மேதகு மூணர்வி னுலே
ரொப்பிலா முனிவன் றூற்றி னுழைபுகுந் திருந்து மிக்க
செப்பருந் தவஞ்செய் காலேச் சென்றவர் திரண்டு சூழ்ந்து
தப்பென வங்கை [1]கொட்டிப் பாடினர் சால நக்கு. (சு)

வேறு.

மற்றது கண்டு முற்றிய தவஞ்செய் மாமுனி சீறியாங் கவரைப்,
பற்றியெங் நிலமு முழும்பழ மையினுற் பரிவுடைத் தமுந்தொழி லுமக்கே, யுற்றதோர் பன்றி வயிற்றகத் துதித்தின் முழுமின்வெங் குருனாக ளாகிப், பெற்றதா யினையு மிழந்திடக் கடவீ ரென்றுமுன் பிழையறச் சபித்தான். (எ)

மூனிவரன் சபிப்ப நெஞ்சக மஞ்சி மூதிர்தரு பத்தியிற் கூடி, நினையடி தொழுதே மாசிலா தவனே நீள்பிழை பொறுத்தரு ளின்றென், றனைவரும் வணங்கக் கண்டுதா யிறந்தா லருளுடைச் சொக்கனின் னருளான், மனிதரா யுதித்துத் தலைவரா கென்று மறுபெருஞ் சாப முங் கொடித்தான். (அ)

வேறு.

இன்றெறிச் சபிப்பப் போந்தாங் கெல்லைசூழ் முதிய வெற்பில்
வன்னியர் நெடுமூ கத்து மைந்திறக் கூனற் கேழ
றன்வயிற் றுதியா முன்னந் தாயையொண் புவியாண் மாறன்
மின்னிய கணையா லெய்து கொன்றனன் வேட்டை யாட்டில். (கூ)

வேறு.

யாயிழந்த போதகங்கள் யாய்வாவு காணுமற்
காய்துயரங் கொண்டழுங்கல் கண்டுகரு ணைச்சொக்க
னேயவுரை யாவு மூணர்வா னியைந்தவற்றின்
ரூய்வடிவங் கொண்டான் றவத்தோ ரதிசயிப்ப. (கo)

சு. தூறு - புதர். தப்பு - ஒருவகைப்பறை.

எ. உழுந்தொழில் உமக்கே பரிவுடைத்து. குருனாகளாகி - குட்டிகளாகி. முன்பிழை - தப்பெனக்கையைக் கொட்டிப் பாடியது.

அ. சொக்கன் இன்னருளால் - சொக்க நாயகரது இனிய அருளினுல். மறுபெருஞ் சாபம் - சாபவிமோசனம்; இதனைப் பிறிது சாபமென்றார் முன்; உ: கூ.

கூ. வன்னியர் - மேற் கூறிய பன்னிரு மைத்தர்கள்; எழுவாய்.

கo. யாய் - தாய்ப்பன்றி. போதகங்கள் - பன்றிக்குட்டிகள். அழுங்கல்-வருந்துதலில். உரையாவும் உணர்வான் - சொக்க நாயகர்.

(பி - ம்.) [1]'கொட்டியாடினர்'

வட்ட முறிமதிய மென்ன வளைதுண்ட
நெட்டை முகமிலங்க நேர்ந்ததனி வாறுடிப்பக்
குட்டிபரிந் துண்ண விருபாலுங் கூர்முலைப்பால்
விட்டொழுக வோடி நடந்ததால் வெவ்வேனம். (கக)

படியிடந்த கோலம் பரவுகின்ற கோல
முடையபெருங் கோல முறுமிக் குறுகி
யடிபரப்பி யாவு மலைப்பப் படிந்தே
மடிசுரந்து காட்டிமூலை யூட்டியதால் வாழ. (கஉ)

வேறு.

அருள்சுரந் தெழில்சேர் மடிசுரந் தளித்த வமுதபா னத்தினு லன்றே
குருளைபன் னிரண்டி மெழிறர வளர்ந்து குஞ்சர நிகாவப் பொருப்பி
லுரனுறு கோட்டாற் றழல்விழி யுமிழ 1வொண்டல மேடவ லாகப்
புரையற வமுது திரிந்தன வியைந்த பொலிவுட வலியினு லோங்கி.

வேறு.

பொருவி லாத பொதியின் முனிவகே
ளரிய நாத னருள்கூர் திருமூலை
வரிசை கூர்வாய் மடித்துக் குடித்தநற்
பெரிய கோலங்கள் பின்னரென் செய்தன. (கச)

ஆகத்திருவிருத்தம் - கசுகஎ.

நுகூ.—பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.*

அருள்பொழியுந் திருமேனி யங்கயற்க ணுமைமைமங்கை
தரைபுகழு முதுகேழற் றனுக்கொண்ட தலைவனேப்பார்த்
தருகியபே ரருள்கண்டாண் டதிசயித்தன் புறத்துதித்துத்
தெரிதரநின் றுரைசெய்வாள் செய்யதிரு வாய்மலர்ந்து. (க)

கக. வட்டமுறி மதியம் -வட்டம் முறிந்த சந்திரன்; என்றது பிறை மதியத்தை. துண்டம் - மூக்கு. இருபாலுமுண்ண - இரண்டுபக்கத்தும் உண்ணும்படி.

கஉ. படியிடந்த கோலம் - ஆதிவராகம். கோலம் - வடிவு, பன்றி.

கஙு. அன்றே - அக்காளே. அலை - பள்ளம்.

கச. இச்செய்யுள் அகத்தியமுனிவரை நோக்கி முனிவர்கள் விளம்பியது.

* "கருமுகிற் கணிநிறத் தழகமர் பிறைமையற்றீ, நரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச், செங்கோன் முனையிட் டருணீர் சேக்கிச், கோடுகள வென்னும் படர்க்கோ கட்டுத், தீட்டிய ராணை வேலி சோலித், தருமப் பெரும்பயி ருலகு பெற வளிக்கு, நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்" (கல். சுo.)

(பி - ம்.) 1'ஒண்டலமிடம்வலமாகப்'

வேறு.

விலங்குகள் கொன்று காட்டி வேட்டையா டுதலைப் போதுக்
தலம்புகழ் மன்ன வர்க்குத் தருமமா மதனுற் பாவ
மீலைந்தவர் மேற்செல் லாது வறிதுவெவ் விலங்கு சாக
கலக்தத னுருவங் கொண்ட தென்கொலோ நாய னீரே. (உ)

அன்றியும் பெருமை மிக்க வலகில்லை யாளிற் றேயா
தென்றுமே லாக வோங்குக் தலைவர்கீ ரிழிந்த பொல்லாப்
பன்றியு நாற்கா லுள்ள பல்பெருஞ் சாதிக் கெல்லா
மொன்றிய கடைய கன்றே வுளத்திடை யோருங் காலே. (ஊ)

அப்படி யிருப்ப விக்க வங்கங்கொண் டிலாவு கின்ற
தெப்படி யருளிச் செய்யுங் காரண மென்றி றைஞ்சத்
துப்பிதழ் மாதே கேளா யயன்முத லாகத் துன்னித்
தப்பற வெழும்பீ றாகத் தனு தொறு நிற்பம் யாமே. (எ)

அவ்வவ யோனி தோறு மவ்வவ வுருவங் கொண்மீட
யெவ்வுயி ரையும்வ ளர்ப்பே மிரங்கியா மீது நிற்க
வுய்வுற வளித்த மக்க ளியாவ ரு மொத்தி ருப்பச்
செவ்விய வன்பு தாபர்க் கொருவர்மேற் செல்லக் கண்டேம். (ஏ)

வேறு.

ஆதலா லெமக்கு மீங்கித னளவி லன்புமிக் கதுவது பிறங்க
வோதுவா மதற்குக் காரண முன்ன மொருப்பருக் தலமூனி சபிப்ப
வேதமில் வராக வயிற்முதித் நிடிமு னிறக்தது தாயுமப் போதே
வேதனே யுறுதல் கண்டியாம் வளர்ப்பான் கொண்டன மிரங்குதாய் மேனி.

ஈங்குமுன் வளர்த்த நருமமா மலைதா மிக்கொடுங் காட்டிடைச் சின்ன
டுங்கற வுலாவி யிவ்வுடல் விட்டோர் நீதிலா வினையருத் திரனுக்
கோங்கிய புதல்வ ராகிகல் லெழுக்க முயர்புக முறிவுற வுதித்த
யாங்குதென் னவத்துச் சேணைகா ராக ளாகுகம் மாண்யா லெண்ணுன். (ஐ)

வேறு.

துப்பிதழ்ப் பச்சை மேனிச் சுருள்கருங் குழலா ளங்குச்
செப்பிய மாற்றங் கேட்டுத் தருவுளங் கண்டு வாழ்த்து
மெய்ப்புழுப் பிரம ஞகப் பிரமனமெய்ப் புழுவ தாக
வொப்புட ஞக்க வலலீ ருமக்கிது புதுமை யன்றே. (அ)

உ. கலக்து - விரும்பி.

ச. இருத அகரம் - பல் வடிவம். காரணத்தை அருளிச செய்யும். துப்பு - பவழம். தனுத்தொறும் - உடம்புகள் தோறும். இச்செய்யுளின் பின்னிரண்டடியின் கருத்து, நிகி: உ அ - ஆம் செய்யுளிலும் வந்துள்ளது.

ரு. யாம் எல்லையையும் வளர்ப்பேம்.

சு. இதன் அளவில-இடபன்முதலாட்டிகளிடத்தில்; இது சாதியொருமை.

எ. நம்மாலேயால இவைதாம செய்ன காயகர்களாகும்.

வேறு.

அடைந்தது சிறிய தாயினு மருள்கூர்ந் தளப்பரும் பெருமையை யளிக்குங், கடம்பமா வனத்தீர் தும்பெரு மூலப்பாற் கடல்குடித் தவைகளி கூர்ந்து, மடங்கல்போல் வலியுஞ் செல்வமு மோங்கி மன்ன வர்க் கமைச்சரா ய் வாழ்ந்து, நெடும்பெருங் கால மிருப்பதிங் குரை க்க வேணுமோ நினைத்திடி னென்ன. (கூ)

வேறு.

1 திருந்துகா யகன்ம கிழ்ந்து தேவர்பூ மாரி பெய்யப்
பொருந்திய கோலக் கோலம் பூண்டது விட்டு நீண்ட
வரந்தரும் பெரிய துங்க மதுரையம் பதியிற் போந்தங்
கரும்பெருங் கோயில் புக்கா னங்கயற் கண்ணி யோடும். (கo)

கனலுமிழ் செங்கட் டுங்கக் கடும்பிறைக் கோட்டு மாக்கள்
வினையறச் சிறிது கால மூலாவிமீண் டருளால் வெற்பிற்
புனையுரு விட்டுப் போந்து புனிதவே ளாண்கு லத்தோர்
தனியுயர் தலைவ னுக்கு மைந்தராய்ச் சார்ந்த வன்றே. (கக)

2 பிறந்தபின் ரூய்மார் தந்தை பேசரு முவகை கூர்ந்தங்
கறம்பல செய்து போற்றி யடைவினின் வளர்ப்ப யார்க்கு
நிறங்களும் வலியும் வாக்கு நீதியு மறிவு மற்றெத்
திறங்களு மொப்பக் கண்ட தேவரு மதிச யித்தார். (கஉ)

மண்ணவ ரதிச யிப்ப வளர்ந்தவா றுயர்ந்தோர் சொல்லத்
தண்ணளிச் செழியன் கேட்டுத் தன்னுழை வரவ ழைத்துப்
புண்ணிய வடிவீர் தும்போற் கண்டிலே மென்னப் புல்லி
யுண்ணிறைந் ததிச யித்தா னெருவர்போ லுருவங் கண்டே. (கங)

3 இந்தவெந் திறஞ்சேர் மைந்த ரெழிலினு லறிவா னந்தஞ்
சுந்தரன் குமாரர் போலு மிருந்தன ரெனத்து தித்துத்
தந்திர மூற்றும் போற்றத் தனித்தனிப் பட்டங் கட்டி
மந்திரித் தலைவ ராக வைத்தனன் வரிசை கூர. (கச)

மழைமதப் புழைக்கை யானை வாம்பரி தேர்ப தாதி
செழுமையிற் பொங்கு நான்கு சேனைக்குந் தலைவ ராகிப்
பழுதிலா நினைவா லோங்கும் பன்னிரண் டமைச்சர் சுட்குந்
தழைகதா மதும்தாய் மாடந் தலைதுதனி யிருப்ப வீற்றான். (கஎ)

கூ. அளித்தல், கடம்பவனத்திற்கு அடை. வேணும் - வேண்டும்.

கo. கோலக்கோலம்: மடக்கு.

கக. பிறைக் கோட்டு மாக்கள் - பன்றிக்குட்டிகள். மாக்கள்சார்ந்த.

கச. அறிவால் நாதம். தந்திரம்-சேனை. போற்ற-பாதுகாக்க. பட்டம்-சேனைபதிப்பட்டம். சேனைத்தலைவர், மந்திரிகளாக இருத்தலும் உள்ளதாதலின்

(பி - ம்.) 1'திருத்தாயகன' 2'பிறங்குபன்னிருதாய்தாதை' 3'இத்தோர் பருவமைத்தர்'

ஏறறிப்படி மதுரைத் தென்ன னீள்பெருங் கோயில் வாயில்
சிறப்புற விருந்து நாளுஞ் செய்தியா ராய்ந்து சால
[1] வறத்தினே ரொழுகிச் சொக்க ஞணைபால் விளங்கி யெங்கு
முறப்புகழ் கொண்டார் சேணே யோட்டுசா மந்த ராகி. (கசு)

கலமலி சிறிது காலஞ் சென்றபி னவையொன் றில்லா
வலியினு லறிவா லோங்கி வன்னியத் தலைவ ராகிச்
சிலைபொலி தடக்கை வேந்தைத் திசைவிச யஞ்செய் வித்தார்
தலமெலா மதிச யிப்பச் சாற்றரும் [2]பகைக டக்தே. (கஎ)

வேறு.

கொன்றைச் சடில முடிச்சொக்கன் கொற்ற மாறற் கிரவின்க
ணென்றிப் புகுந்த செய்தியெலா முணர்த்தச் சொக்கன் குமரரல்லா
லின்றிப் புதுமை வல்லவரா ரென்று தெளிந்தா னன்றுமுதற்
பன்றிக் குறும்பர் பன்னிருவ ரென்னச் சிறந்தார் படிமீது. (கஅ)

கருணை கூர்ந்து கேழலுருக் கொண்டு கருகி முலையூட்டி
வரிசை பூனைவன் னியராக்கி மண்ணு மலர்த்து வாழ்வித்தாங்
கரிய சிவலோ கமுமளித்தோன் சீர்த்தி விளங்க வவைவளர்ந்த
கரிய மலையைப் பன்றிமலை யென்பா ரின்றுங் காசினியில். (ககூ)

ஆகத்திருவிருத்தம் - ககூசு.

சுo.—கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.*

விரும்பி யுயரமூனம் விண்ணிற் பறக்குங்
கருங்குருவி யெக்காலுங் காக்கைக் கொளித்தே
நெருங்கு வனத்தொதுங்கி நீள்பதங்க மூன்ரு
வருந்த லொழிக்தலர்ந்தாங் கஞ்சியுழல் காலம். (க)

"மந்திரித் தலைவராக வைத்தனன்" என்றார்; இதலை, வருஞ்செய்யுட்களாலு முணர்க. போலும்: உம்மை, அசைநிலை.

கக. மந்திரிகளும் சேனைத்தலைவர்களும் அரசனுடைய அரண்மனைவாயிலிலிருந்து தத்தம் தொழிலகளை இயற்றுதல் இயல்பு; சுக: சo - ஆம் செய்யுளோப்பார்க்க. சாமந்தர் - சேனைத்தலைவர்.

கள. வன்னியத்தலைவராகி - சேனைபதிகளுக்குத்தலைவராகி; இக்காலத் பதிகம், க-ஆம் செய்யுட் குறிப்பைப்பார்க்க.

கஅ. முன்பு, "சுக்தரன் குமாரர் போலுமிருந்தனர்" (கச) என ஐயுற்றவன், இப்பொழுது தெளிந்தானென்றுணர்க.

ககூ. அவை - அப்பன்றிக்குட்டிகள்.

(சo)

க. பதங்கம் - விட்டில்.

* "கருக்குருவிக் கன்றருளினை போற்றி" (திருவா. போற்றி. உoக); "இவ்வுல குயிர்வளித்த, பஞ்சின் மெல்லடிப் பாவைகூறுகிக், கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த, வெண்டிரு நீற்றுச் சேக்கர் மேனியன்" (கல். எ.)

(பி - ம்.) [1]'அறத்தினினேக்கிச்' [2]'பகைகடிக்தே'

ஆங்கவற்றுண் மிக்க வறிவுள்ள தோர்குரு வி
யோங்கு மொருகா லருளா லுணர்ந்தபடி
மீங்கிவ் வுலகி லியாவர்க்கு முண்டிபகை
தீங்ககல வெல்லாரு முண்டகனைத் தேருங்கால். (உ)

வென்றிப் புரம்வென்றோன் வேகா முடியறுத்தோன்
குன்றக் கரியுரித்தோன் கூற்றங் கெடவுதைத்தோன்
மன்றற் பதம்பணிந்தே வாழ்ந்து ரந்சயிப்ப
வின்றிப் பகைவெல்ல வல்லே மெனத்தேறி. (ஊ)

காணி னினியிதற்கோர் காரணமுண் டெக்கிலத்தும்
பூணு முருக்கொண்டு பூசைகொரு மீசர்களிற்
சேணிமிருங் கோயிற் றிருவால வாயனல்லாற்
பேணுங் கருணை யுடையா ரிலைபிறங்க. (எ)

என்று கருதி யிரணியத்தண் டாமரையிற்
சென்று விரைவின் முழுகிச் சிறகடித்துத்
துன்றுபுகழ் கொண்டானைச் சூழ்ந்துலகோர் கொண்டாட
நின்று பரவப் புகுந்ததுமுன் னீங்காது. (ஏ)

வேறு.

அருந்தவ னதிசயித்தங் கருங்கருங் குருவி நெஞ்சிற்
பொருந்திய நினைவு கண்டு பொருவின் மூர்த்தி தொழுத்தா லோங்கி
விரைந்துயர் பலத்தை கல்கு மிருத்தியுஞ் சயம தென்னுங்
திருந்திய மந்தி ரத்தைச் செவிப்புலத் துபதே சித்தான். (ஐ)

1 வழிபடு வோரி னின்போன் மண்மிசைச் சொல்லற் கில்லை
பிழையிலை விடியு முன்னம் பிரமமா 2முகுர்த்தத் துன்ற
3 னுழையினிம் மந்தி ரத்தை யுவணரா சனுமுள் ளஞ்சும்
பழுதற வோது னக்குக் காக்கைபாற் பயமோ வில்லை. (ஒ)

உ. உணர்ந்தபடியாவது.

ஈ. வென்றிப்புரம்-முன்பு வெற்றியையுடைய புரங்கள்; "வென்றிக்களிற் றை விரிதாரவன் வென்ற வாறும்" (சிவக. கச.) சிவபெருமானுடைய செயற் கருஞ் செய்கைகளுள், பெரும்பகைகளை வென்றமை பகையை வெல்லக்கருதிய களிக்குருவியாற் கருதப்பட்டது.

ச. சேண் நிமிரும்.

ஞ. இரணியத்தண்டாமரை - பொற்றாமரைத் தீர்த்தம்.

ட. அருந்தவன் - சிவபெருமான்; "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோன்" (புறநா. கடவுள்) என்பதன் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

எ. முகுர்த்தம் - முகூர்த்தம். பிரமமா முகூர்த்தமென்பது, இரவில், இருபத்தைந்து நாழிகைக்குப் பிற்பட்டகாலம். இம்மந்திரத்தை ஓது. உவண ராசன் - கருடன்.

(பி - ம்.) 1'வழிபடுவோர்களின்போன்' 2'முஹூர்த்தத்' 3'உழையில்'

அரும்பெரும் புத்தி யுள்ள வன்புடைச் சடக மேகின்
பெருங்குலக் கிளைக்கு மப்பாற் பெறும்பெறு மிளம்பார்ப் பிற்கும்
பொருந்துமிம் மந்தி ரத்தைப் போதியிப் புவன மெச்சப்
பரிந்தவை யாவு முய்ந்து பயமறத் திரிவ தற்கே. (அ)

அயர்வறு சிறப்பின் மிக்க வவனிமீ தென்று ணந்த
முயர்வினே யாடல் காண வும்பரு மதிச யிப்பச்
செயிரறு பறவைக் கெல்லாந் தீபமே யனைய வுன்றன்
[1]பெயரது வலியா னென்று பேசிடக் கடவ தென்றே. (கூ)

கருணையிற் பரிசஞ் செய்து கருதியித் தகவுஞ் சொல்லீப்
பொருவரு நின்னி டத்துப் போவென விடைகொ டுப்பக்
குருவியு மாலீத் தன்பு கூர்ந்துபோய் விடியு முன்னர்
விரைவொடும் புகுந்து காட்டில் வெல்லுமந் திரமோ திற்றல். (கo)

மறுவறு சிகரம் பன்னுள் வலஞ்செய்து சிறகு நோவ
நெறியினின் வணங்கிப் பெற்ற நிகரிலா மந்தி ரத்தைப்
பிறிவருஞ் சாதிக் கெல்லாம் பிஞ்ஞக னருளாற் கூடி
யறிவுற வுபதே சிப்ப வப்படி யோதிற் றன்றே. (கக)

நன்பரி வெய்தி யாவு நவையற வோது மூன்னர்
வன்பெரும் பகையை வெல்ல வல்லநன் னினைவு தோன்ற
மூன்பது கண்ட பின்ன ரவையவை மூடிக்கிக் காக்கை
யின்புறு தலேயி லெற்றப் புகுந்தன வெங்கு மெங்கும். (கஉ)

[2] கோக்கய நோக்கை நீக்கிக் கூர்க்குமூக் குடைய யாக்கைக்
காக்கைக டலேபி ளக்கக் கத்தமூற் பகைகி னேந்து
மேக்குறீஇ யொன்றுக் கொன்று விரைவொடி மாறி மாறிப்
போக்கறத் தொடர்ந்து குட்டப் புகுந்தன வெங்கு மெங்கும். (கங)

ஆங்கது கண்ட போதே யதிசயித் தவனி யோர்கள்
பாங்குடைச் சொக்கன் வல்ல வல்லபம் பாரீர் பாரீ

அ. சடகம் - கரிக்குருவி. இளம்பார்ப்பு - இளையகுஞ்சு. போதி - உபதேசஞ்செய். பரிந்தவையாவும் - தன்புற்றவைகளெல்லாம்; பரிந்து - தீயன்புற்று என்றுமாம். திரிவதற்குப் போதி.

கக. நிகரிலா மந்திரம் - பகையில்லாமைக்குக் காரணமாகிய மந்திரம்; "நீலமொடு நெய்த னிகர்க்கு மூான்" (ஐங்குறு.உ); "நிகரடி விலேயே"(சிலப். பக்கம், ஈ உக.)

கஉ. கோக்கயம் - தலேமையாகியகரிக்குருவி. நோக்கைநீக்கி - கண் ணோட்டத்தை யொழித்து. மேக்குஉதீஇ - மேலேசென்று.

கங. பாரீர் பாரீர் - பூமியிலுள்ளவர்களே பாருங்கள்; "பகராரக்கக் கலம் பகத்தைப் பாரீர் பாரீர்" (அரிங்கக்கலம். தனியன், உ); அடிக்குமாம். இதை ஞ்சினபின்னரே வன்மையுண்டாயிற்றென்று வருவிக்க.

(பி - ம்.) [1]'பெயரையும்' [2]'கோக்கை நீஞேக்கை', 'நோக்கிய நோக்கை'

சீங்குமுன் கண்ட தன்றிங் கிறைஞ்சின பின்ன ரென்றே
வாங்குகரு முவகை கூர்ந்தார் பெயரையும் வலியா னென்றார். (கச)

வே று.

செங்கெறி நாயன் றேவர்க டேவன்
முன்வரு நீதி முடித்தன னென்றே
தொன்னெறி மலரோன் வந்து துதித்தான்
றன்னுடை யுள்ளஞ் சால வெருண்டே. (கடு)

வே று.

சொற்ற ரும்பெரிய சுந்தர னருளா
னற்க ருங்குருவி காமிசைத் தோன்றும்
விற்பொலி மன்திர [1]மித்திஞ் சயத்தின்
கற்ப னேயின்றுங் காணப் படுமே. (கசு)

ஆகத்திருவிருத்தம் - கசுடூ.

சுக.—மாமேருவிற் கயல்செண்டுபொறித்த திருவிளையாடல்.*

தேர்பரி கரியா ளீண்டுந் திறற்பெரும் படையான் மிக்குப்
போர்புரி தெவ்வர்க் காய்ந்து புனிதனுக் கன்பு பூண்ட
சீரிய புகழான் முன்னோர் தென்னனுக் கிர[2]கு லத்து
வாரிசு மூலக முற்று மதுரையி லிருந்து காத்தான். (க)

மன்னுயிர் காப்போ ரோர்கான் மறையவர் தமையு கழ்ந்து
தொன்னெறி யருள்சே ரெந்தை சொக்கனுண் டென்றி ருப்ப
நன்னெறி மறையோ ரெல்லா [3]நல்குர வுற்றே யெங்கு
மின்னல்கொண் டிழலப் புக்கா ரியாகமுஞ் சடங்கும் விட்டே. (உ)

கடு. நூடூ: நு; நாயன் - தலைவன்.

கசு. இத்தலத்தில், சோமசுந்தரக்கடவுள் உபதேசித்தருளியபின்பு, ஒவ்வொருதினத்திலும் விடியற்காலத்தில், கரிக்குருவிகள் மிருத்தியுஞ்சய மந்திரத்தை ஜபித்தக்கொண்டு வருகின்றன வென்பது ஐதிஹ்யம்; "ஆற்றல் வேண்டுசொலா மரனை யன்பினல், போற்றியிம் மனுப்புகல் கென்னல் போன்றமுன், சாற்றிய மந்திரத் தன்னைக் கார்க்குரீஇ,வீற்றுவீற் றுருவிருக் துரைத்தன் மேயின" (காஞ்சிப்புராணம், பன்னிரு.சமய: விடியல்வருணனை)என்னுஞ் செய்யுளாலுணர்க. மித்திஞ்சயம் - மிருத்தியுஞ்சய மந்திரம்; "சத்தியஞான மித்திஞ் சயத்தினையுபதே சித்தான்" (தீருவிளை. கரிக்குருவிக்கு.கூ.)

(சுக) [லிக்க.

க. ஆள் - காலாட்கள். உக்கிரகுலத்தைத் தோன்றியென ஒருசொல்வருவிப்பு.

உ. சடங்கு என்பது யாசமல்லாத கர்மக்களை.

* "சேலுடன் செண்டிடுமேருப் பொன்வரையி" (பரிபா. சுக.); "கயலெழுதிய விமய நெற்றியின்" (சிலப். ஆய்ச்சியர் குரவை.)

(பி - ம்.) [1]'மிருத்தியுஞ்சயத்தின்' [2]'குலத்தள்' [3]'நல்குரவாகியெல்லும்'

ஆங்கவர் நீங்க [1]இல்லா வரும்பெரு வேள்வி முன்னு
வோங்கிய தருமம் யாவு மொழிதலா லொழிவி லாத
தாங்கரு மழைம றுத்து மென்முதற் முனி யங்கள்
பாங்குற வினைவில் லாமற் படைகுடி தளர்ந்த வன்றே. (கூ)

மாநிலக் தளர்தல் கண்டி வழுதிவெக் துயருற் றோர்நாட்
டானிருக் தரைக்கி டந்து தனிமனத் தோர்வான் யாமின்
றீனமின் மறையோர் தம்மை யிகழ்தலா லிறைவி ரும்பு
மூனமில் வேள்வி குன்ற வொழிந்தது பொழிந்த மாரி. (சு)

இன்றியா மறிந்தோ மூண்மை யெங்ஙன மென்னி னல்லோர்
சென்றுதே வரையும் வேள்வித் திறத்துளோர் தமையும் பூசித்
தொன்றுவ ரதனுற் பெய்யு முயர்மழை காலத் தென்று
நன்றிகொள் பழையோர் சொல்வ ரென்றுநள் ளிருட்டி யின்ருன். (எ)

கருணைசேர் சொக்கன் கண்டி கனவிடைச் சென்று சொல்வான்
றெரிவுற நமக்கே நல்ல தென்னவ வருந்தே லின்று
பெருகிய படையு முன்றன் [2]பீடிடைக் குடியு மற்றே
சொருவரும் வாடா வாறிங் குரைப்பனீ யுணர்ந்த தொக்கும். (சு)

விண்படர் துங்கச் செம்பொன் மேருவைச் சென்று ணர்த்தித்
தண்பெரும் பொன்னு னக்கு வேண்டுப தறித்தெ டுத்தாங்
கொண்கிரி நின்ன தாக வுனதுறு குறியு மிட்டுப்
பண்பொடு கொண்டி போதி பகட்டிலொட் டகத்தி னன்றே. (எ)

நின்னுடைத் தானைக் கெல்லா நிறைவுற யாண்டொன் றிற்கு
மன்னுமப் பொன்னிற் செம்பொன் மழையென வெடித்துப் பெய்து
செந்நெறித் தேவர் கட்குந் தீதிலா வொழுக்க மிக்க
நன்னெறி மறையோர் கட்கு நல்கிடு நயங்கள் [3]கூர. (அ)

பொழிமழை மறுத்த நந்தம் புரமதா மறையோர் தம்மைத்
தொழுதெழா நிகழ்த்த லான்மேற் றுதிசெய்து நம்மேல் வைத்த
பழுதிலா வன்பு போல வவர்கடம் பாலும் வைத்து
[4]வழிபடின் யாண்டொன் றிற்குள் வையகந் தழைக்கு மன்றே. (கூ)

கூ. அரசருக்குரிய ஆறங்கங்களுட் சிறந்தமையின், படையும் குடியும் கூறப்பட்டன; "பெருகிய படையுமுன்றன் பீடிடைக்குடியும்" (சு.)

டு. காலத்துப் பெய்யுமென்க. சு. நமக்கே: ஏகாரம், பிரிநிலை.

எ. தறித்து - வெட்டி. உனதுறுகுறி யென்றது, மீனமுத்திரையை. போதி - வா. பகடி - யானை. நன்று - மிகுதியாக.

அ. இச்செய்யுளின் கருத்தை கக-ஆம் செய்யுளும் புலப்படுத்தும்.

கூ. நந்தம் புரமதாம் - நம்முடைய வடிவமாகிய; புரம் - உடம்பு. இச் செய்தலால் மறுத்த.

(பி - ம்.) 1'நில்லா' 2'பீடுசேர்குடியுமற்றும்' 3'கூர்ந்தே' 4'வழிபடி'

வே று.

துணைவன் யானெனைச் சொல்லிமுன் மறைந்திடக் கனவை
யுணர்வு ளானெழுந் ததிசயித் தொருவருக் குரையா
னணைய வாயில்வா யமைச்சர்கள் குறிப்பறிந் தளவி
றணிவில் சேனையை விடியுமுன் சாற்றினர் கிளர. (கo)

அடர்ந்த தானையோ டாங்கவன் வடதிசை நோக்கி
நடந்து பல்பெருங் காதமூ நாளிடைப் போக்கி
[1] மடங்கல் யாளிகள் வானவர் தானவர் மற்று
மிடைந்த காஞ்சன மேருமால் வரைமருங் கடைந்தான். (கக)

மற்றதன் சாரன் மாட்டோர் வளநகர் மேவி யங்க
ணுற்றதா னையை[2]யி ருத்தி யோங்குதன் றிறலி னோடு
மூற்றிர விற்சென் றீசன் மொழிந்தன மொழிந்து கிற்பச்
சற்றுண ராமை கொண்டு சாடிஞன் பாணிச் செண்டால். (கஉ)

அங்கது கண்டு கம்பித் தமரர்மெய் புனைந்து வந்து
செங்கணே றனைய மன்னன் [3]றிண்மையை யதிச யித்தின்
றிங்கியா னுரைப்ப தொன்றுண் டென்னுடை யுருவஞ் சாற்றிற்
சங்கம மென்றொன் றுண்டி தாபர மென்றொன் றுண்டால். (கங)

வே று.

மன்னிய சங்கம வடிவம் யானிது
முன்னிகழ் தாபர வடிவ முன்னரிற்
மின்னிய வெற்பகத் தினக்கு வேண்டுசெம்
பொன்முறித் தேகெனப் புகழ்ந்து சொன்னதால். (கச)

மூற்றிகழ் தச்சரான் முறித்தி லங்குசெங்
கற்படி வரையென வெடித்துக் காஞ்சன
வற்புதச் சிகரிபண் டார மாகவே
கொற்றவன் றன்கயற் குறிபொ றித்தனன். (கடு)

சென்றுகந் தகமென மறுகச் செண்டிஞற்
கன்றின்மு னடித்தவன் பரவக் கண்டி வாழ்ந்
தொன்றிய சங்கம வுருக்கொண் மேருவும்
வென்றரீ போகென விடைகொ டுத்ததால். (கசு)

கo. கனவை ஒருவருக்கும் உரையாஞகி அணைய. [பொன்.

கக. மடக்கல் - சிங்கம். யாளிகள் - யானையாளிகள். காஞ்சனம் -

கஉ. செண்டு - ஒருவகையாயுதம்; "செண்டுகொண்டு கரிகாலனெருகாலி லிமையச் சிமயமால் வரைதிரித்தருளிமீள" (கலிங்க. இராசபா. க்கடு.)

கங. சங்கமவுருவம் தாபரவுருவமென எனக்கு இரண்டுவடிவங்கள் உள்

கச. 'யான்' என்றது, தன்னுருவத்தை. இது - இம்மலே. [ளன.

கடு. சிகரி - மலே. கயற்குறி - மீனமுத்திரை; "வழுதிக்கொடிச் சேலெழுதிய மால்வரை' (கூ ம. சம்பு. கo.)

பி - ம்.) [1]'மடங்கலாளிகள்' [2]'இருத்தியோங்கிய' [3]'திண்மைகண்டு'

வே று.

ஒருவரா லணுக வொண்ணு வுயர்வட கிரியிற் செம்பொன்
கரையறத் தறித்தெ டுத்துக் கயலொடு செண்டுங் தீட்டிப்
பெரியவ னருளே வாழ்த்திப் பெருங்கடற் படையி ருப்பின்
விரைவொடும் வந்தான் வந்தா னிரவியும் வென்றி காண. (கள)

மன்னிய மனிதர் மூற்று மற்றுமோர் மேரு வென்னக்
கொன்னுறு நாவற் செம்பொற் குன்றினைக் கண்டு வாழ்ந்து
பொன்வரை யடித்து மீனம் பொறித்துயர் பொன்கொ ணர்ந்த
தென்னவ னினக்கா பொப்பா சென்றனர் செய்தி கேட்டு. (கஅ)

பெரும்படைக் கியாண்டொன் றிற்குப் பெரும்பொருள் வீரும்பகல்கி
யிருங்கிரி மச்ச மாக்கி யீழங்கொண் டொட்ட கங்கள்
பரும்புழைத் தடக்கை நோன்மூட் பகடியர் சகடு மூன்ரு
வருந்தவோர் வருத்த மின்றி வந்துமா மதுரை புக்கான். (ககூ)

வந்துதன் னுழைபு காமுன் வள்ளல்பொற் கோயில் புக்கிங்
கெந்தையே யடைந்தே னின்ற னருளினு லென்று வாழ்த்திச்
சுந்தர மாக முன்னர் வழங்குவ யாவுந் தோன்றச்
சந்திர மாவ ளித்தான் சந்திர மாகு லத்தான். (உ0)

தங்குயர் வேள்வி யோங்கத் தவிசிடை யிருத்தித் தெய்வ
மங்கல மறையோர் தம்மை மகிழ்ந்துப சாரத் தோடு
பொங்குசெங் கனக நல்கிப் பூசனை செய்தான் வையந்
திங்கண்மும் மாரி பெய்து சிறந்தது செல்வத் தோங்கி. (உக)

ஆண்டியாண் டொன்றிற் குள்ளீண் டகிலமுங் தழைப்பக் கண்டோர்
காண்டகு புதுமை யீது கண்டில மென்று வாழ்த்திப்
பாண்டியன் றனையு மந்தப் பாண்டியற் கன்பு பூண்டு
வேண்டிய தளிக்குஞ் சொக்க வேந்தையும் வியந்தார் சால. (உஉ)

மாதிலங் காப்போர் வேள்வி மறையவர் தேத்துங் தூய
வானிரை மாட்டு மீச னளவினு மடியார் கண்ணு
மீனமி லன்பு பூண்டாண் டினியன செய்வ ரேன்மற்
றூனமேல் வருமோ வாரா துண்மையீ துண்மை யீதால். (உங)

ஆகத்திருவிருத்தம் - கசுஎடு.

கள. பெரியவன் - மகாதேவர்.

கஅ. காவற்செம்பொன் - சாம்பூதமென்னும் தங்கம்.

ககூ. மச்சம் - வெட்டியெடுத்துக்கொண்டு வைத்திருக்கும் மிச்சப்பொன். ஈழம் - பொன்; மேருவை மீனுகச்செய்த அதிலுள்ள பொன்னையெல்லாங் கொண்டென்பது மற்றொருபொருள்.

உ0. முன்னர் வழங்குவ - திருமஞ்சனக் கலசமுதலியவை. சந்திரமா - பொன்னுக; சந்திரம் - பொன். மடக்கணி.

உஉ. ஆண்டி - அப்பொழுது.

சூ உ.—சான்றழைத்த திருவிளையாடல்.

ஓங்குதன முடையாளோர் வணிகன் வையத் துயர்புளதோர் பட்டினத்து முன்னோர் நாளி, னீங்கரிய சுற்றமுட னிருப்ப முன்னை [1] நீள்வினையின் வசத்தாலோர் புதல்வ னின்றி, யீங்குலகி ணைமட மச்ச முன்னு வெத்தகவு மிவட்கல்லா தில்லை யென்னும், பாங்குதி கழ் வுறுமொருபெண் ணருமை யாகப் பயந்துசிறப் பொடுவளர்த் தான் பரிவு கூர்ந்தே. (க)

வருத்தமற [2]வளர்கின்ற கன்னி தன்னை மதுரைக ரிருப்பா னோர் மருமகற்குப், பொருத்தமுறக் கொடுப்பலென வறுதி யிட்டுப் பொருவிலரு குலவணிகன் விருத்த ஞகித், திருத்தமுடை மனைவி யொடு மரித்த பின்னர்ச் செட்டிகளாங் கவற்கான கடஞ்செய் தஞ்சி, விரித்துநிகழ் செய்தியெல்லாக் தோன்ற வோலை [3]விரைவினவன் றனக்கெழுதி விட்டார் கட்டி. (உ)

உன்னுடைய மாமனெழிற் பிள்ளை வேண்டி யுயர்தருமத் தொ ருப்பட்டாக் தவங்கள் செய்து, [4]பின்னரொராண் மகவின்றி யருமை யாகப் பெறற்கரிய பெற்றியினோர் பெண்ணைப் பெற்றிங், கென்னுடை நன் மருமகற்கே கொடுப்ப லென்று யாருமுணர் வுறவுரைத்து விரு த்த ஞகித், தன்மனைவி யொடுமிறந்தான் விரைவின் வந்தித் தையலை யுங் கைப்பிடித்துத் தனங்களைக் கொள்ளே. (ங)

நிந்தவா சகவோலை செல்லா முன்னுங் கிருங்குலமா தொடும்புத ல்வர்ப் பெற்று வாழ்வோன், முந்தவெதிர் வாங்கிவா சித்துக் கண்டு முதிர்ச்சியினுற் சிறிதழுங்கி மகிழ்ந்து சாலச், சிந்தைவரு நல்லுற்றோர் சிலரோ டொன்றிச் சின்னுளிற் பல்காதங் கடந்து சென்றே, யந்தாக ரடைந்தளவில் சிறப்பாற் பொங்கு மன்புடைமைத் துனியிருக்கு மக த்துட் புக்கான். (ச)

நீதியுடை வணிகனுங்கல் லடிமை முன்னு நிதிகளுங்கண் டெதிர் வரவு பார்த்தி ருந்த, மாதையுங்கண் டிரும்பதியோர் விரும்பச் சின் னுண் மனைக்கணிருந் தறநெறியை மனத்தி னோர்ந்தின், றேதுமணஞ்

க. பட்டினத்து - காவிரிப்பூம்பட்டினத்தில்; "முட்டாச் சிறப்பிற் பட்டி னம் பெறினும்" (பட்டினப்பாலை, 1க அ.)

உ. அறுதியிட்டு - நிச்சயித்து. மரித்தபின்னர் - இறந்தபின்னர். கடம்- அபரக்கிரியை. ஓலையிலெழுதி அதனைக்கட்டி விட்டார். [கூட்டுக.

ங. கைக் காள் என்று ஓலையெழுதிக்கட்டி விட்டாரென முன்னதனோடு

ச. 'சின்னுளிற் பல்காதம்': முரண். மைத்துனி-அம்மான்மகள்; "மைத் துனி தடக்கமாட்டே னிவளை" (எ.)

(பி - ம்.) [1]'நீள்விதியின்' [2]'வளர்க்கின்ற' [3]'விரைவில்வணிகனுக்கெழுதி' [4] 'பின்னொராண் மகவின்றி யினிமைகூர'

செய்வதுகும் மதுரை மேவு முற்றவர்முன் ஞெவென்றே யுரைத்து
வான்றேய், போதுதிகழ் பொழின் மதுரை நகரை நோக்கிப் புறப்ப
ட்டா ஞெருப்பட்டான் றனக்கட் டோடிம். (நு)

கே வு.

செந்துவர் வாய்க்க ருங்கட் செப்பிளங் கொங்கை மங்கை
யிந்திரை யணையா ளோடு மினிமைகூ [1]ரடிமை யோடு
நந்துபல் பொருள்க ளோடு நண்ணிய சுற்றத் தோடும்
வந்தன சொல்லி யொல்லை வழியிடை நடக்கு காலை. (சு)

மைத்துனி நடக்க மாட்டே னினைத்தன னென்ன வாய்ந்த
வுத்தமன் பொருள னேத்து முற்றவர் கைக்கொ டுத்து
மெத்தென மாதைக் கொண்டு வருகுவல் விரைவி னீங்கண்
[2] முத்தெயின் மதுரை தன்னிற் போமென மொழிந்து விட்டான்.(ஃ)

மற்றவர் போய பின்னர் வல்லியை மெல்லக் கொண்டாங்
குற்றநல் லடியா ரோடு மோசனை காதம் வந்து
சிற்பரன் விரும்பி வாழுந் திருப்புறம் பயம தென்னும்
பொற்பமர் திருப்ப திக்கட் பொருந்தியொண் கோயில் புக்கான். (அ)

[3] ஆங்கொரு புடையிற் றங்கி யடிசினன் குறவ மைத்துத்
தீங்கற வுண்டி மூன்னர்த் திகழ்விதி வசத்தா லாங்கட்
டாங்கருங் கண்ப டிப்பத் தையலு மரபை நோக்கி
நீங்கவோர் புடைத்து யின்ரு ணெருங்கடி யார்கள் சூழ. (கூ)

நிறைவிஞ லறிவால் வாழ்வா னீதியா லிளமை யாலோர்
குறைவிலா மரபாற் பொங்குங் [4]குலப்புகழ் வணிகன் றன்னைக்
கறுவிவா ளரவு சென்று கடித்தலு நிசிக்கட் கண்டே
முறையிடா வீழ்ந்தார் சூழ்ந்த வடியவர் முதிர வாங்கு. (கo)

விரைவின்மின் னசனி யன்ஞர் வெவ்வலிக் கருட ஞெப்பா
ருரனுடைக் கேழல் போல்வா ரொப்பிலா மயூர நேர்வார்

இ. தனக்கட்டி - பணப்பொதி. சு. இந்திரை - திருமகள்.

எ. மெத்தென - மெல்ல. முத்தெயில் - முதியமதில்.

அ. அடியார் - அடிமை வேலைசெய்பவர்; "அடிமை முன்னு" (நு.) ஓசனை யுங்காதமும். சிற்பரன் - பரமசிவன். திருப்புறம்பயம் - சோழநாட்டுத்திருப் பதிகளுள் ஒன்று; பிரளயகாலத்தில் ஊழிவெள்ளம் சிவாஞ்ஞையால் இதன் புறத்தே சூழ்ந்திருந்ததுபற்றி, இஃது இப்பெயர் பெற்றதென்பர்; "பாஹ்யாம்பு புரம்" என்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர்.

கூ. மரபு - முறைமை. கo. கறுவி - கோபித்து. நிசிக்கட்கடித்தலும்.

ககூ. மின் - மின்னல். அசனி - இடி; மின்னுதலேயுடைய இடியுமாம். கேழல் - பன்றி. மயூரம் - மயில். நகுலம் - கீரி. எண்ணு - காடி. இச்செய்யு ளில், பாம்பிற்குப்பகையாய் உள்ளவைகள் கூறப்பட்டிருத்தல் காண்க.

(பி - ம்.) [1]'அடியாரோடும்' [2]'முத்தையின்மதுரை' [3]'ஆங்கான்னேப்ப னிந்தே யருகுமணியிற்றங்கித், தீங்கறவுருத்தி முன்னர்த்' [4]'குலப்பெரு'

பொரு[1]நகு லத்தை யேய்வார் பொருவிலெண் குக்க டிப்பார்
கருதிமுன் பார்த்துஞ் சாரக் கண்டனர் கைவிட் டார்கள். (கக)

செங்கயற் கண்ணுள் பாம்பு தீண்டவுந் தீண்டா ளாகி
யெங்குல வரசே யாற்றே னின்றெனை யிங்குத் தள்ளிக்
கங்குலி லெளித்தா யென்று கண்ணினீ ரொடுமை சற்றி
யங்கொரு மதிநி னைந்து புலம்புவா ளரனை நோக்கி. (கஉ)

வாளரா வேணி யானே வாரிநஞ் சுண்ட கோவே
காளமார் கடல்போய் மீண்ட கலங்கவிழ்த் தவர்போ னின்றேன்
வேளருரு விரதி வேண்ட மீண்டளித் திலையோ வின்றென்
ளாளரி யுயிர்தா ராயே லவன்வழி யடைவேன் யானே. (கங)

என்றவ ளடியா ரோடு [2]மிரவிடை யரற்ற மூன்ன
நன்றியிற் றெழுவான் வந்த ஞானசம் பந்த ரொல்லை
வென்றியி னுணர்ந்தெ ழுந்து மெலிவதிங் கென்னை யென்னை
நின்றவ ருரையு மென்ன வுரைசெய்வா னிலனை நோக்கி. (கச)

வே று.

எந்தையுயர் [3]பட்டினத்தோர் பெரிய செட்டி யெனைத்தவத்தாற்
பெற்றழகார் மதுரை மன்னு, மூர்தியநன் மருமகற்குக் கொடுப்ப லெ
ன்றே மொழிந்துவா னுலகெய்த வணிகர் கூடி, நொந்தெழுதி யோலை
விடக் கண்டி வந்து நானெறியிற் போய்மன்றல் செய்வ மென்றே, யந்
தமில்பல் பொருளையுங்கொண் டெனை யுங்கொண் டணைந்திரவின்
கிவண்மாண்டா னரவு தீண்டி. (கரு)

வே று.

என்பெருந் தவத்தா லெந்தை யிங்கெழுந் தருளப் பெற்றேன்
றுன்பமு மகன்ற தென்று சொல்லுமுன் பெரிது ரங்கி
மின்பொலி யங்க மென்பூம் பாவையாப் பாடும் வென்றி
நன்குறு கருணை மேனி ஞானசம் பந்த ராங்கு. (கசு)

வென்றிகொ ணஞ்சண் டானை விதிமுறை யிறைஞ்சி யிந்த
மன்றலங் குழலா ளுற்ற வருத்தநீக் கிடுவ மென்றே
நன்றிகொ டிருக்க ணுக்கா ஞன்முகன் மறலி யஞ்சப்
பொன்றிய வணிகன் றன்னை யெழுப்பினர் புதுமை கூர. (கஎ)

கக. காளம் - கருமை. ஆளரி - ஆண்சிங்கம்; என்றது வணிகனை. இச் செய்யுளில் விடத்தின் கொடுமையையும், கணவனையிழந்த மகளிர் துன்பத்தை யும் எளிதில் மாற்றியருளும் ஆற்றலையுடையவரென்பது புலப்படச் சிவபெரு மானைத் துதித்திருக்கும் அழகு மிகப்பாராட்டற்பாலது.

கச. நின்றவர்: வினை. கஎ. மன்றல் - கலியாணம்.

கசு. எந்தை - தேவரீர். அங்கம் - என்பு; திருஞானசம்பந்தர் அங்கத் தைப் பூம்பாவையாகப் பாடியதலம்: மயிலாப்பூர்.

கஎ. வென்றிகொள் - மற்றைத்தேவர்களைவென்ற. 'நஞ்சுண்டானை' என்பது கருத்தடை அடையணி. அஞ்ச எழுப்பினர்.

(பி - ம்.) [1]'நகுலீயம்' [2]'இறைகடையாற்று' [3]'பட்டணத்தோர்'

துயின்றவ ரெழுமா போலத் துண்ணென வெழுந்தி றைஞ்சும்
வயங்கொளி வணிகற் கண்டு வாடிய தொண்ட ரெல்லாம்
வியக்குற வேத்தி ஞர்கண் மிகமிக வதிச யித்து
நயந்திதார் வல்லா ரென்று ஞானசம் பந்தர் தம்மை. (கஅ)

மற்றுமே சொவ்வா நீதி வணிகனைப் புகழ்ந்த தன்றிச்
சொற்புக ழுணங்கை கெஞ்சங் களிப்பவுந் தொடாது 1கின்ற
பொற்பையு மவன்பால் வைத்த வன்பையும் பொருவி லாத
கற்பையுங் கண்டு சால வாழ்த்தினர் காழி வேந்தர். (ககூ)

வேறு.

தொன்மை நீதி வணிகற்குச் சொல்லுவார்
நன்மை தீமை பயப்பிஞ் ஞற்சிவன்
வன்னி கூவம் வருகடி வாகமே
கன்னி மாதினைக் கைப்பிடி யென்றனர். (உ0)

முறைமை மன்னிட முன்ன முனக்கிவள்
குறைவி றந்தையுங் குற்றமி முயரு
முறவி னல்கின துண்டே மருண்டினி
யறையும் வார்த்தையை யைய முறுயென. (உக)

இணையில் வைதிக வாரண மிப்படித்
துணிவு சொல்லத் துணிந்து வணிகனுக்
தணிவி லாத விருப்பிற் றயாவுடை
வணிகன் மாதை விதியின் மணந்தனன். (உஉ)

தெய்வ நீதித் திறங்கண் டதிசயித்
தய்ய வந்தெ னுயிர்தரும் வள்ளலே
யைய னேகல் லருமருந் தேயெனத்
தைய லாளொடும் வீழ்ந்தனன் முண்மிசை. (உங)

மற்ற வன்றனை வைதிக வாரணங்
கற்பி லங்குகின் காதலி தன்னொடு
முற்ற கல்லடி யாரொடு மொல்லைகின்
பொற்ற கன்னகர் போகெனச் செப்பினர். (உச)

கஅ. இது - இவ்வரிபரிசயல். ஞானசம்பந்தர்தம்மை ஏத்தினர்கள்.

உ0. சிவன் வன்னி கூவம் - சிலிங்கப் பெருமானும் வன்னி மரமும் இணறும். கடிவாகவரும்.

உஉ. வைதிகவாரணம் - திருஞானசம்பந்தர்.

உச. பொற்ற - பொலிவுபெற்ற.

(பி - ம்.) 1'நீங்கி, நிற்பது கண்டு சால நினைவுளோர் போற்றுந்திய, கற்பியாங் கண்டி லேமென் றேத்தினர் காழி வேந்தர்'

வேறு.

மாண்டிகன வெனவெழுந்த வணிகன் கற்பின் மாதினெடு கல்லடியார் போற்றப் போந்து, காண்டகுதென் மதுரைநக ரடைந்து பொற்பிற் கருணையுட னெதிர்கொண்ட கிளைஞர் கட்கு, மூண்டபெருஞ் செய்தியெல்லாந் தோன்ற வங்கண் மொழிந்தெவரு மதிசயிப்ப மகிழ்ந்து மாம, னீண்டியகன் பொருளொடுத்தன் பொருளுங் கொண்டாண் டிருந்தனனன் னயம்படவா ணிகஞ்செய் தோங்க. (உரு)

மன்னு[1]மூய ரற்பொடிவாழ் நாளி னல்ல வடிவுகுண மூடையா ளேர் மதலை தோன்றிப், பொன்னணிபா லிலகுபெருஞ் சிறப்பி னேங்கிப் பொலிவினுடன் வளருங்காற் பொருமை மிக்க, மூன்னவன் கொண்டகுல மாதின் மைத்தர் முந்நாத சிறுபுகல்வ னேகிங் கூடி, மின்னியபாஞ் சாலிகமுன் னென நல்ல விளையாட்டி னெருப்பட்டார் வீதி யேறி. (உசு)

வேறு.

தகவிளை யாடு நாளிற் றகவிலாப் புதல்வ ரோர்நாட்
புகலரும் புதல்வன் மேனி புடைத்திட வடிப்பச் சென்று
மிகவெருண் டழுது சொல்லக் கேட்டலும் விம்மி யாற்றாள்
பகைபட வடித்த தென்கொல் கெடுவிர்கா ளெனப்ப கர்ந்தாள். (உஎ)

வேறு.

ஆங்கது கேட்டு விரைவின்வந் தேடி யார்மக ளார்கொலென் கணவ, னேங்கிய விதியிற் கைப்பிடித் தவனோ வொண்பொருட் பரத்தைய ரனைய, தீங்குள தீயோ மைத்தனைச் செறுப்பாய் செப்பிய வாறுகன் றென்று, பாங்குடை யாளை யெழவெழ வைதாள் பன்முறை பரிபவ மாக. (உஅ)

இன்னன விளிய முன்னவ ளேச விளையவள் சாலகொந் தழுது, பின்னுற நவில்வா ளறிவிலா தவளே பேசருஞ் சிறப்புட னடைவின், வன்னியுங் கிணறும் புறம்பயத் திறையு மருளிய பெரியசான் றாக, வுன்னுடைக் கொழுந னெனைமணஞ் செய்தா னுனக்கெலே வுரைப்பதிங் கென்றாள். (உக)

இப்படிச் சொல்ல மற்றவ ணைகையா லியம்பிய நிறமெலா நன்றின் நெறிப்பிலாச் சிலவும் வன்னியாங் கிணறு மாகிய சான்றுனக் குண்டேற் செப்பவா ரூரச் சான்றது சான்றே சிறந்ததம் முற்றவர் முன்னு மெய்ப்பட வக்கு நவிலுமேற் சற்பார் மெல்லிய லல்லலேவற கணிகை.

உசு. பாஞ்சாலிகம் - மாப்பாலை (சிலப்பதி.). [பம்; அமானமுமாரி.
உஅ. செறுப்பாய் - கோபிப்பாய். எழஎழ - மிகமிக. பரிபவம் - துன்
உக. சான்று - சாட்சி. [லாவாயின்.
கூ0. கற்பார்ந்த மெல்லியலாக ஆவாய். அல்லலேவல் - அவைகள் சொல்
(பி - ம்.) 1'உயிரத்பொடு'

வே று.

வன்றவள் சொல்லக் குன்றி யிளையவ ளெங்குந் தானுப்
துன்றிய புகழ்க்கு நல்ல சொக்கனே யறிவ னென்று
சென்றுபொற் கோயில் புக்குச் செங்கணீர் வார வார
மன்றலங் குழல்கள் சோரப் புண்டனண் மண்ணில் வீழ்ந்து. (ஈக)

மன்னுபுன் குணத்தான் றிங்க ளைக்தரைப் பயந்த பொல்லாப்
புன்மைசேர் மடக்கை நென்ன வார்த்தையோ பொறுக்க கில்லை
னென்னுடை நாளை முன்னு யாவையு மழிந்த வின்றே
யுன்னையல் லாலெ னக்கிங் காருள ருற்றூர் மற்றே. (ஈஉ)

மறுவினீ யறிய யானோர் பத்தினி மாதே யாயி
னறிவுளோ ரெவரு நாண வவனிமீ தன்றைச் சான்றின்
றிறையில்வக் துரைத்த லோண்டு பின்னருட் சண்பை வேந்தர்
துறைபட நவின்ற சான்று பொய்க்குமோ சொக்கே பென்றுள். (ஈ)

ஆங்கது சொல்லா முன்ன மருந்பழிக் கஞ்ச சொக்கன்
பாங்குளாள் செயல்கண் டெள்ளங் கசிந்துமுன் பரிப வஞ்செய்
தீங்குசேர் மாதி னுள்ளக் தெளிதல்கா ரணம தாக
வோங்கிய சான்று மூன்று மொலையின் வரவ ழைத்தான். (ஈச)

வே று.

வந்து தோன்ற வணிகர் திரண்டுவக்
தெந்தை யல்ல வன்ன மேயென் றிறைஞ்சின
ரந்த ரத்த ரதிசயித் தேத்தினர்
சிந்தை யாகுலக் தீர்ந்தன தேமொழி. (ஈஎ)

வே று.

ஏற்றமார் பெரிய கோயி லீசான மூலையின் மீது
[1]தோற்றிய தன்றி யாங்க ளறிவமென் றன்று சொல்லச்
சாற்றரு மூவகை கூர்ந்து மூத்தவ ளிளையா டானிற
மேற்றிவக் திறைஞ்சி நின்றாரூள் பொறுத்தருள் பிழையென் றஞ்சி.

உத்தமத் தலைவன் கண்டானண் மெய்ங்களித் தறிவி லாத
புத்திரர் தமையு மந்தப் புன்மைமா தையுமி கழ்ந்தே
யத்தினை நாளு மேத்தி யறிவுடைப் புதல்வற் பெற்ற
பத்தினி மாதி னோடும் வாழ்ந்தனன் பரிவு கூர்ந்து. (ஈஎ)

ஈக. 'புகழ்க்கு மல்லலொக்கு ம்': சக: உள. பொற்கோயில்: "பசும்பொனு லிலங்குவான்றோய், திருக்குமாரியம்" என்பர்பின்; ஈசா: கூ.

ஈஉ. "பத்தினிமாது" என்றது கற்புடையவ ளென்னும் பொருளில் வந்தது; "பத்தினிமாதினோடும்" என்பர்பின்னும்; ஈஎ. *சண்பை - சீகாழி.

ஈஎ. பரிவு - அன்பு.

(பி - ம்.) [1]தோற்றுதல் கண்டி யாங்க ளறிவமென்று'

மூல்லேசே ரணங்கு நெஞ்ச முண்டக மலரிற் பொய்யா
நல்லருட் சொக்கன் றன்னே நாடொறும் வைத்து வாழ்த்தி
யில்லினே விட்டி முன்றி லேகிடா திருந்து மிக்க
பல்பெருஞ் சிறப்பி னேங்கி வாழ்ந்தனள் பழிச்ச யாரும். (கூஅ)

மருத்தயில் பாப்புக் காப்பு வள்ளலே மனத்து வைத்துத்
தருக்கமார் காழி வேந்தர் சடையெனும் யாப்பெ டித்து
விரைத்திரு மருக றன்னில் வெவ்விடங் தீர்த்த தன்றித்
திருப்புறம் பயத்த லத்திற் றீர்த்தனர் திருக்கண் சாத்தி. (கூகூ)

ஆகத்திருவிருத்தம் - களகச.

கூகு. –நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.



முற்றியகா லத்தொருகான் முதுநாரை வடதிசைக்கட்
கற்றமலி செங்கமலங் காவிதிகழ் வாவிதொறுஞ்
சிற்றைகளி கூரவுகள் சேல்கள்வரால் [1]வரிவாளே
வற்றனயா வையுமருந்தி வாழுங்கான் மழையின்றி. (க)

ஆழியுரு வேனயபெரு வாவியினீ ரறக்கண்டே
யூழுடைகல் விதிவசத்தா னுழன்றுழுக நிரைதேடித்
தாழ்வகல [2]யந்தறஞ்சேர் தவமுனிவர் நிறைந்திருந்து
வாழுமொரு வனத்தணைந்த தங்குளதோர் மலர்வாவி. (உ)

தேங்குபெரும் புனறதும்பிச் சிறந்திலங்கத் தனிகண்டு
தாங்கரிய பசியினெடுஞ் சென்றிருப்பச் சலசரங்க
ளோங்குமுயர் வடிவினவா யளவிலவா யுகண்டெழுந்து
பாங்கணைந்து வினேயாடிப் பயமின்றி யுலவினவால். (ங)

வேறு.

தவவள வலியி னுலே சார்ந்துமுன் விளங்கக் கண்ட
நவமுறு நாரை வாழ்ந்து நனிமனத் ததிச யித்திங்
கிவைதமி லொன்றே காம லிரும்பசி தீர வின்று
சுவைபட நுகர்வ மென்று சொல்லிமுன செல்லுங் காலே. (ச)

கூஅ. முல்லே - கற்பு.

கூகூ. மருத்த அயல் - காத்தை யுண்ணுகின்ற. பாப்புக் காப்பு - பரம் பாகிய காப்பையுடைய. சடையெனும் யாப்பு; "சடையாயெனுமால்" என்னு முதற்குறிப்பையுடைய தேவாரம். திருமருகல்-ஒருதிருப்பதி; அதில் விடந்தீர்த்ததை, திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் புராணத்துள்ள சமய - ஆம் திரு விருத்த முதலியவற்றுணர்க.

(கூங)

கூ. சலசரங்கள் - நீர்வாழ்வன.

(பி - ம்.) 1'கயல்வாளே' 2'வந்தறஞ்'

வேறு.

மரவுரி [1]யுடையினர் மார்பி னூலினர்
தரும[2]குண் டிகையொடு தண்டு தாங்கிய
பொருவருங் கரத்தினர் புனலுண் மூழ்குவான்
விரைவொடு நணுகினர் விடியு முன்னமே. (ஙி)

அங்கவர் தங்களத் தளவு நீரினுட்
பங்குற விழிந்தது கண்டு பான்மைமீன்
பொங்குமெய் கலிக்திடா தன்பு பூண்டருட்
டிங்கமா முனிவரைச் சூழ்ந்து கொண்டவால். (சு)

வேறு.

உருகிமுன் கண்ட நாரை யதிசயித் துறையை யுண்டு
பெரியகா யம்ப டைத்தும் பிறிவரும் புதல்வர்ப் போல
நிரையின் மெய்ந் நலியா வாறு நின்றன வறிந்துங் கெட்டே
னருவினைப் பாவி நாமே யயின்றன மறிவி லாமல். (எ)

இனியுயிர் செகுத்துண் ணெனமென் றெண்ணிவெங் கொலைத விர்ந்து
புனலேயே யுண்டு சூழ்ந்து பொய்கையுள் வாழு நாளில்
வினைதரு முன்னம் போகா வெம்பசி போகக் கண்டு
மனமகிழ்ந் ததுசி றந்த முனிவர்கள் வரத்தை வாழ்த்தி. (அ)

மருவிய கிளைகள் கண்டு வந்துயிர் செகுத்துண் ணுது
பெரியநீ மெலிவ தென்கொல் பேசென வுளத்துச் சற்றுங்
கருணையில் லாதீர் நுங்கள் காரியத் தேகு மென்று
பரிவுற நவின்று போக்கி யிருந்தது பத்தி பூண்டு. (கூ)

வேறு.

சந்தி [3]யாமடத் தேகித் தபோதனர்
புந்தி நம்பு புராணம் படித்திட.
வந்து கேட்கப் புகுந்தது மாசறன்
முந்து வேட்டுயர் முத்தியை வேட்டது. (கo)

வேறு.

மற்றொரு தெய்வ மண்ணின் மதுரைநா யகன்போ லில்லை
முற்றிய கருணை கூர்ந்து முத்தியை யளிக்க வல்லா
ருற்றுழை செய்யி னென்னுங் குயர்தவ முனிவ ரோர்நா
னற்சிவ புராணஞ் சொலலக் கேட்டது நயந்து நாரை. (கக)

சு. சூழ்ந்துகொண்டவைகள், மீன்கள்.
எ. உறை - நீர்த்துளி. [விசேடத்தை.
அ. சூழ்ந்து - சுற்றுக்கொண்டு, ஆராய்ந்து. வினைதருபசி. வரத்தை - கo. நம்பு - விரும்புகின்ற. மாசுஅறல் - குற்றமற்றுக்குதல்.
(பி - ம்.) 1'இடையினர்' 2'கண்டிகை' 3'மாமடத்து'

வரமுடைச் சொக்கன் றன்னை வழுத்துவ மென்றெ ழுந்து
தரைபுக ழோடை விட்டுத் தவத்துளோ ரதிச யிப்ப
விரைவொடும் பாண்டி நாட்டு மேதகு மதுரை யந்த
ணருளுடைச் சொக்க நாத ருலையத் தணைந்த தன்றே. (கஉ)

உத்தமக் கனகப் போதா ரோடையின் முழ்கி யேறிப்
பத்தியிற் பறந்து நாளும் பகலுட னிரவுஞ் சித்தம்
வைத்துடல் வருந்தச் சூழ்ந்து வலஞ்செயக் கண்ட மண்ணோர்
புத்தியு ளதிச யித்தார் புதுமையீ தென்ன வாழ்த்தி. (கங)

எங்குமோ நிரைதே ராம [1]வினியதன் னுடலம் வாட
மங்கைபா ரின்று நம்மேன் மண்ணிலோர் பறவை வைத்த
பொங்குபே ரன்பு தன்னை யென்றிறை புகலக் கேட்ட
வங்கயற் கண்ணி மங்கை யகமகிழ்ந் [2]தருளி னாள். (கச)

கொன்னுறு தடத்தி லோர்காற் கடுங்குரற் கொடுங்கூர் மூக்கு
மின்னெடுங் கழுத்துப் பார வெண்சிறைச் செங்கா ணுரை
மன்னிய கயல்சேல் வாளை வரிவரா லுளுவை யார
முன்னிய பனைமீன் முள்ளித் துறைவிளை யாடல் கண்டு. (கரு)

சாதிவா தனையி னுலே தருமநூ னெறிம றந்தே
யாதர வுடனே கூடி யயிலுவா னலகங் காந்து
மீதெழச் சென்று கௌவி மீண்டயி லாகு மிழ்ந்து
நீதிகண் டருவ ருத்து நெஞ்சக மஞ்சி யோரும். (கசு)

முன்னைவா தனையை விட்டு முற்றிய வறிஞர் நெஞ்சிற்
பின்னெரு விகார மின்றி யிருப்பரிப் பிணைப்பு லாலே
நன் னெறி யறிந்த நாமு நாவழி யொழுகிக் கெட்டேன்
றின்னவே நயந்தே நம்போற் றீங்குளா ருண்டோ வின்றே. (கள)

வல்லவன் வாவி மீனை மாற்றுமே லொன்றே வென்னப்
புல்லிய பறவை யாகி யிருப்பவும் பொருவி லாத
நல்லறி வுடைய தாகி யிருந்ததிங் கெனக யந்தே
யொல்லையவ் வாவி மீனை யொழுகித்தான் விழியா லாங்கு. (கஎ)

கங. கனகப்போதா ரோடையில் - பொற்றமரையில்.

கச. அன்புதன்னைப்பார்.

கரு. செங்காணுரை: "காராய் காராய் செங்காணுராய்" (தனிப்பாடல்.) உளுவை, ஆரல், பனை என்பன மீன்விசேடங்கள்.

கசு. வாதனை - பழக்கம். அலகு - மூக்கு.

கஎ. வல்லவன் - சிவபெருமான். ஒன்றே - ஒருவகையான கலத்தானை.

(பி - ம்.) 1'இனியதோருடலம்' 2'தெரியதியாகமும்'

நலமலி யறிவான் மிக்க நாரை[1]வந் தணைய வேண்டித்
தொலைவிலா மீன னேத்துந் தொலைவித்த புதுமை கண்டு
பலகலை வல்லான் வல்ல வல்லபம் பாரீ ரென்றே
யலகிலா மணித ரெல்லா மேத்திடு ரதிச யித்தே. (ஙகூ)

வேறு.

உடலி னீத்த பறவைக் குவகைகூர்ந்
தடைவி னிற்சிவ லோகத் தடையென
விடர கற்றி யிருங்கண நாயகர்
வடிவு பெற்றங் கிருந்தது வான்றொழ. (உ0)

வேறு.

[2] பிரிவறக் கொன்று தின்னுங் கடைப்படும் பிறப்பு நாரை
வரனுறு தேவ ராகி வான்றொழ விருப்பக் கண்டீர்
[3] கருதினிங் கின்றும் பொல்லாக் கடையரா யினுங்[4]கொல் லாதிங்
கரனேவந் திப்ப ரேல்வா னுள்வதற் கையு மின்றே. (உக)

ஆதித்திருவிருத்தம் - களகூடு.

சூசை.—வேதம் உணர்த்திய திருவிளையாடல்.

கந்தலி லாத கால நான்குக வடிவ மாக
வந்தமில் கற்பக் தோறு மடைவினில் வாரா நிற்ற
திந்தவொண் பிரம கற்பத் தின்யந்தவைந் தாவ தான
முந்திய வுகங்க ணுன்கின் முதலுகத் தாதி தன்னில். (ங)

கண்ணுவன் முதலா வுள்ள காரண முனிவர் யாரு
மண்ணிலோ ரிடத்துக் கூடி மனத்திடை யோர்வா ரங்க
ணெண்ணுமுற் கலியு கத்தி னிருக்குமூன் வேத நான்கும்
பண்ணமை நெறியி னோதா தொழிந்தனர் பார்ப்பார் யாரும். (உ)

ஒருமைகெஞ் சகமு முன்னை யிருபிறப் பொழுங்கு மோங்கும்
பெருமைமுத் தழலு நான்காச் சிரமமும் பீடி லங்கு
மரியபால் வேள்வி யைந்து மாதிதா லங்க மாறுந்
தருமவே ழிசையு மற்றுந் தவிர்ந்திழி தொழிலிற் சார்ந்தார். (கூ)

க. காலம்: எழுவாய்.

கூ. வேள்வி ஐந்தாவன: பிரமயாகம், தேவயாகம், மானிடயாகம், பிதுர் யாகம், பூசையாகம் என்பன. ஆதங்கங்களாவன: திருத்தம், வியாகரணம்,

* "வேத நூல்பயில் கின்றது வாயிலே', "மதையிலக்கு பாடலாய்", "நால் வேதமும் டோருள்களு மருளி, யங்கயற் கண்ணி தன்னெடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே" (திருஞா. தே. திருவாலவாய்); "வேதியா வேதகீதா" (திருநா. தே. ஷெ.)

(பி - ம்.) [1]'வந்தனையை' [2]'பரிவற' [3]'கருதுதிரென்றும்' [4]'கொல்லாமல்'

தொன்மைகண் கிலாத கால சுபாவத்தா லோரோர் நாட்டு
நன்மறை [1]யோதி ஞெரு நயந்தரும் பொருடே ரார்கண்
மன்னிய பொருடேர்ந் தோரு மனத்திடை யழுக்கு வைத்துப்
பின்னெரு வர்க்கு நல்கார் பெரியபா வியர்க ளாகி. (சு)

வே று.

மறந்திக ழுவ்வுக மறைந்த தொப்பிலா
நிறந்திக ழிவ்வுக நிகழ்ந்த தின்றியா
மிறந்தநால் வேதமு மிலங்க மண்மிசை
யறிந்திடு மாறெவ்வா றென்ற மூங்குமுன். (நி)

வே று.

வரலுறு மண்ம கட்கு மணிமுடி யாகுந் தொல்லே
விரிபொழின் மதுரை தன்னு ளிருப்பநா மெலியா தங்கண்
வருவிசேல் வேத நான்கு மயக்கற நவில்வ மென்றே
தெரிதர வுரைத்தான் விண்மேற் றீதறு புகழ்க்கு நல்லோன். (சு)

அந்தநல் லுரைகே ளாமு னழகன்வாக் கென்ரு லித்து
வந்துமா மதுரை தன்னுள் வள்ளல்பொற் கோயில் புக்குச்
சந்தையே வடிவாம் வேத புருடனே தாழா தெங்கள்
சிந்தையா குலங்க ளுரத் தெளிதர வுரைத்தி யென்றார். (எ)

மணங்கம ழிறைவன் யாருந் தொழுங்குரு வடிவங் கொண்டாங்
கணிந்துயர் முனிவர் யாரு மதிசயித் திறைஞ்சி யேத்த
வினங்குநூல் வேத நான்கு மினிய[2]வங் கங்க ளாறும்
பிணங்குத லறந வின்றுன் பிணங்குநூ லிணங்கு மார்பன். (அ)

பொருந்திய தவத்தான் மிக்கோர் பொருளொடு மடைவிற் கேட்
கரும்பெரு நிறைவு கூரு மளவினி லெழுந்து காணப் [டாங்
பருங்கைவெங் கயங்க டாங்கும் பசும்பொனு லிலங்கு வான்றேரு
திருந்துமா லயத்தொ ளித்தா னருளுடைத் தேசி கேசன். (கூ)

வே று.

அன்னே யொப்ப வருள்சுரந் திப்படி
நன்ன யத்தி னடிமைக்கு நல்லவர்
சொன்ன யப்புறு சொக்கரை யல்லதிங்
கென்னி லத்தினு மில்லென வாழ்த்தினுர். (கo)

கற்பம், கணிதம், பிரமம், சந்தம் என்பன: இச்செய்யுள் இரத்தினவளி யென்னும் அணி.

சு. 'புகழ்க்கு நல்லோன்': நிகர: ச.

எ. '*அழகன்*': "அழகனீபுயங்களீ", "மூப்புரஞ் செற்றவழக" (தி.நூ.தே.) "அழகனேயால வாயிலட்டனே" (தி.நா. தே.) சந்தை - வேதம்.

(பி - ம்.) 1'ஓதியோரும்' 2'அங்கங்களோடு'

ஏட்டை [1]நீக்கு மிருடிகண் மன்னுயிர்
வாட்ட நீங்க மகிழ்வொடு மோதியே
கேட்ட வேதங் கிளரப் பொருளொடு
நாட்டி னெங்கு நயக்க விரித்தனர். (ககக)

ஏ ல ரு.

அண்டம டங்கலும் வெற்றுக டுங்கனல் கொண்டொழி யுக்கடைகாட்
[2]கண்டக டம்பவ னத்தர னருளது கலவலின் மாலுற்றி
புண்டரி கற்தர வற்தவி ரும்பிர மன்றரு புற்தியினின்
றெண்டிசை யும்மறை யும்பிர வஞ்சமும் யாவையும் வற்தனவே. ()

ஆகத்திருவிருத்தம் - கஎசஎ.

ப ய ன் மு த லி ய ன.

சொக்கனென் றெருகா லோதிற் றுயர்கெடும் பகையு மாளுஞ்
சொக்கனென் றெருநா லோதிற் றெலிவிலாச் செல்வ முண்டாஞ்
சொக்கனென் றெருகா லோதிற் சுருதிசொல் யாண்டுஞ் செல்லுஞ்
சொக்கனென் றெருகா லோதிற் சொர்க்கமு மெளிதா மன்றே. (க)

திருந்திய விறைவ னெண்ணெண்டி ருவிளையாட்டி லொன்றைப்
பொருந்திமுன் கற்போர் கேட்போர் புவிபுக முரச மாகிப்
பெரும்பயன் றுய்த்து நீங்காப் பிறப்பிறப் பொழித்திங் கெய்தா
வரும்பெருஞ் சிவலோ கத்தி னணைவதற் கைய மின்றே. (உ)

* சுற்தர னவதானங்கள்.....சிவலோகத்தே.

தீதில்வண் டருமை பூபத் திருவிளை யாட றன்னை
யாதொரு போதி யாவ ரோதுவார் யாவர் கேட்பா
ராதரத் தோடி மங்க ணங்கயற் கண்ணி யோடும்
வேதநா யகனுங் கேட்பான் மேவுதற் கைய மின்றே. (ங)

வரணுளீர் மூற்றுஞ் சொன்னே னென்னவோர் மாற்ற மின்றிச்
சுரர்தொழு முனிவர் கண்ணீர் துளிப்பமெய் விதிர்ப்பச் செங்கை
நிரைமலர் குவியச் சிந்தை நிறைமல ரவிழத் துங்கக்
கரையழி பேரா னந்தக் கடலிடைத் திளைத்தா ரன்றே. (ச)

ககக. ஏட்டை - இனைப்பு. கஉ. கலவலின் - கலத்தலினால்.

* இச்செய்யுளின் முழுப்பாகத்தை இப்புத்தகம் கருக - ஆம் பக்கத்திற் காண்க.

(பி - ம்.) 1 'நீக்கும்' 2 'கண்டுகடம்ப வனத்தரனுத்திகள் கலவிடமால் கடலில்'

வேறு.

மின்னுபுகழ் தரும்பெரிய கருணைச் சொக்கன் விளையாட லறு
பத்து நான்குஞ் சொன்னே, னென்னமறை விதியின்கட் கேட்ட
பத்தி யிருடிகளெய் தாதபே றெய்தி யார்த்தார், கன்னிதிரு மால்
காளி யீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரைப் புராண மின்று,முன்
னரிய விதியின்கட் கற்போர் கேட்போ ருயரும்ப ருலகாள்வ ருண்
மை யீதால். (நு)

வேறு.

வியாதன்வான் மீகி யெச்சன் விரித்திறை விளையாட் டோங்க
வாதியில் வருமென் ரூய்ந்த வறுபத்து நாலி லக்கந்
தூய்தகு கவிக டம்மைச் சுருக்கிமூ வாயி ரத்தி
லோதிஞ னகத்தி யன்பின் புரைத்தனன் றமிழா லின்றே. (சூ)

ஆகத்திருவிருத்தம் - கஎடுங.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

மூற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சில கையெழுத்துப் பிரதிகளில் மட்டும்
மிகையாக முதலில்வரையப்பெற்றிருந்த
கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள்.

சித்திவிநாயகர்.

விருத்தம்.

க. அத்த னுர்வினை யாடல்க ளாமறு
பத்து நாலெயும் பாடிந் தமிழ்முற்ற
மத்த யானை யவுணனை மாய்த்தருள்
சித்தி யானைதன் சேவடி யேத்துவாம்.

பொய்யாவிநாயகர்.

வெண்பா.

உ. செய்யபுகழ் மேனியனைத் தேவர் தொழுந்தேவை
மெய்யருளும் பொய்யா விநாயகனை - வையமெலாங்
காத்தானை யார்க்கு மிலையானைக் கந்தற்கு
மூத்தானை நாவே மொழி.

முருகக்கடவுள்.

ங. மன்றல் கமழ்குழல்சேர் வள்ளிக்கு வாய்த்தானை
வென்றி மயிலேறும் வேதியனை - யொன்றின்
மூவாயானை யாவர்க்கு மூத்தானை யானைக்
கிளையானை நெஞ்சமே•யேத்து.

கலைமகள்.

ச. *ஆடகஞ் நின்றுறையு மன்னமே நின்னுடைய
பாடகமுஞ் சீறடியும் பற்றினேன் - றேடரிய
வற்புதமே யம்மே யணங்கே மணநாறுங்
கற்பகமே நாயேனைக் கா.

கவிபின்கூற்று.

ஞ. பல்லக்கு மேலேறிப் பல்லக்கு மேலிட்டோம்
பல்லக் கணிசொக்கைப் பாடினேம் - பல்லக்கு
மன்னு குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கு
மென்ன குறையுண் டெமக்கு.

ஞ. பல்லக்குமேல் - சிவிகையின்மேல். பல் அக்குமேல் இட்டோம்-அநேகமாகிய உருத்திராக்கங்களை உடம்பின்மேலணிந்தோம். பல் அக்கு அணி - பலவாகிய எலும்புகளை யணிந்த. பல் அக்கும் மன்னு குறையுண்டு - பலருடைய கண்களும் சேரப்பெற்ற குறையுண்டு; மேற்கூறிய காரணங்களால் எமக்கு என்ன குறையுண்டு என்றபடி.

*இச்செய்யுளுள்ளபிரதியில், 'புத்தக மக்க மாலே' (பக். எ) என்னும் செய்யுள் இல்லை.

நூற்சிறப்புப்பாயிரம்.

வெண்பா.

அம்பதுமத் தார்ச்சல்லி யாண்டான் கவுணியர்கோ
னம்பெரும்பற் றப்புலியூர் நம்பிவியக் . தெம்பெருமா
ஞதிவிளை யாட லறுபத்து [1]நான்கினையு
மோதி முடித்தா னுவந்து. (க)

விருத்தம்.

[2] கார்வளங்கொண் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டிலைத்தோன்
சார்பரசு ராமச் சதுர்வேதி மங்கலமாஞ்
சீர்தகுதென் செல்லிநக ராண்டான்சொற் றில்லைநம்பி
[3] யார்பூனைவான் விளையாட லறுபத்து நான்கன்றே. (உ)

நூற்சிறப்புப்பாயிரம்.

க. பதுமத்தார் - தாமரைப்பூமாலை; அத்தணர்களுக்குரியமாலை தாமரைப் பூமாலையென்பது நூல்வழக்கு. "தாமரைத் தாராரூரன்" (சுந்தர. தே. ஓமாம் புலியூர்.) செல்லி ஆண்டான்-செல்லியூரையுடையான்; இவ்வூர் பரசுராம சதுர் வேதி மங்கலமென்றும் வழங்கப்பெறும். கவுணியர்கோன் - கௌண்டின்னிய கோத்திரத்தார்களுள்ளே தலைமைவாய்ந்தவர். பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பது நூலாசிரியரது இயற்பெயர்; அது தில்லைநம்பியென்றும் வழங்கும்.

உ. கார்வளங்கொள் மண்டலமென்பது மதுரையம்பதிக்குக் கிழக்கேயுள்ள தான, 'மழைக்குப் பஞ்சமில்லாத மங்கல நாடென்னுமிடமென்றும், கப்பி ஞ்சி நாடென்பது, மேற்கூறிய நாட்டிலுள்ள ஒரு சிறிய நாடென்றும் சிலர் கூறுகின்றனர். உரைத்தோன் - உரைத்தான்; வினைமுற்று; ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று. சொல் - புகழ். தில்லைநம்பி - பெரும்பற்றப்புலியூர் நம்பி. ஆர் பூனைவான் - ஆத்திப்பூமாலையை யணிந்தருளுகின்ற சோமசுந்தரக்கடவுளுடைய. விளையாடல் - திருவிளையாடல். தில்லைநம்பி விளையாடல் அறுபத்துநான்கையும் கப்பிஞ்சி நாட்டில் உரைத்தானென்க.

(பி - ம்.) [1]'நான்கடைவே' [2]'கார்வளவன் மண்டிலத்துக்', 'காரவளமண் டிலத்துக்' [3]'ஆர்வானவிளையாடல்'

கணபதிதுணை.

வீரபத்திரக்கம்பரியற்றிய

திருவாலவாயுடையார் திருவிளையாடற்

பயகரமாலை.



காப்பு.

சித்திவிநாயகர்.

கட்டளைக்கலித்துறை.

மன்னிக் கிடக்குநின் பொற்சூளல் லாற்கதி மற்றில்லையென்
றுன்னிக் கிடக்குமென் னுள்ளங்கண் டாயர வொன்றொடொன்று
பின்னிக் கிடக்குஞ் சடைமீதஞ் சாமற் பிறைக்கொழுந்து
மின்னிக் கிடக்குந் தமிழ்க்கூடற் சித்தி விநாயகனே. (க)

கற்பகவிநாயகர்.

பரிவொடு செல்வ மதுரா புரிச்சொக்கர் பாங்கிற்செய்த
திருவிளை யாடற் பயகர மாலையைச் செப்பிடவே
சொரிதரு மும்மத நால்வாய்த் தழைசெவித் துங்கச்செங்கட்
கரிமுகக் கற்பகக் கன்றே கழறற்று காத்தருளே. (உ)

நூல்.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

பூவிற் கவட விருத்தா சுரனைப் பொருதுகொன்று
மேவுற்ற பாவத்தை மண்பெண் புனன்மர மேனிறுத்திச்
சேவித் தொளிர்பொன் விமானமுஞ் சாத்திய தேவர்கள்கோன்
பாவத்தைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (க)

காப்பு.

க. கதி-புகலிடம்; "கதியாரு மில்லை" என்பர்பின்; கூ. கண்டாய்: முன்னிலையசை. பிஞ்சுக்கொழுந்து - மிகக இளமையை யுடையபிறை. பயகரன்-தம்மை நினைப்பவர்களுடைய பயத்தைக் கெடுப்பவர்; என்றது சோமசுந்தரக்கடவுளை; அவர்மீது செய்யப்பட்ட சொன்மாலை பயகரமாலை.

உ. பாங்கு - அழகு. நால்வாய் - தொங்கியவாய். தழைசெவி - தழைத்த காது. கழற்றுதல் - நழுவுதல்.

நூல்.

க. பூவில் - பூமியில். கவடம் = கபடம் - வஞ்சனை. விருத்தாசுரன் - விருத்திராசுரன். தேவர்கள் கோன் - இந்திரன். சொக்கே - சொக்கநாதக்கட

உ.—வேள்ளானைக்குச்சாபந்தீர்த்த திருவிளையாடல்.

இந்திரன் கையிற் றருவாச னிட்ட வீணைமலரைச்
சிந்திவெண் சிந்துரக் தீங்கணைக் தேதென் மதுரைவந்து
முந்துறச் சென்று பணிந்தேத்த மெச்சி முதுபெருஞ்சா
பந்தனைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (உ)

கூ.—தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்.

சீராக வாழு மதுரா புரியிற் செழியர்குலப்
பேரா மரசன் மகமேவண்டித் தந்தருள் பிள்ளையென்ன
நேராக மூன்று முலையா ளொருபெண்ணை நீதியுடன்
பாராளத் தந்தசொக் கேபர தேசி பயகரனே. (கூ)

ச.—மணஞ்செய்த திருவிளையாடல்.

தாண்டிய வெம்பரித் தேரேறி மன்னர் தளத்தைவென்று
மீண்டிடு மூன்று முலையா டடாதகை மேவிநின்கண்
டுண்டி யிரண்டு முலையா மணஞ்செய்து தென்மதுரைப்
பாண்டிய ஞனசொக் கேபர தேசி பயகரனே. (ச)

ரூ.—பதஞ்சலிக்த நடஞ்செய்த திருவிளையாடல்.

விதம்பெற லேப்தென் மதுரையி லேமண வேள்வியிலற்
புதம்பெற வந்த முனிவர் குழாத்தைப் புசியுமென்ன
இதம்பெறத் தில்லை நடங்கண் டலாதுண லில்லையென்ற
பதஞ்சலிக் காடுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (ரூ)

வளே. பரதேசி பயகரன் - யாதொரு துணையுமில்லாதவருடைய அச்சத்தைக்கெடுப்பவர்; ''அடுபழி யஞ்சா நீச ராயினு நினைக்கி னச்சம், படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும், விடுவதை யின்றி வேறு கனைகணு மின்றி வியக், கடவுளைக் காப்ப தன்றே காப்பென்னு கருணை மூர்த்தி'' (திருவிளை. மாபாதகக். கூரு), ''அடியவருக் கெளியரிவர் பரதேசி காவலென் றடியில் வீழ்ந்து'' (ஷி அங்கம். உஎ) என்னும் திருவிருத்தங்களும் இதனைப் புலப்படுத்தும். பரதேசி பயகரனே அடியேனையும் காத்தருள்வாயாகவெனச்சில சொல்வ நுவித்து முடிக்க.

உ. இணைமலர் - தாமரைப்பூவும் துளசமாலையும்; ''பங்கய நறும்பூ வொன்றுட் பகர்துள வத்தா ரொன்றுஞ், செங்கையினல்க'' (உஉ: சு) என்பதனுணர்க. வெண்சிந்துரம் - வெள்ளையானை. சாபம் - காட்டானையாகுக வென்று துருவாச முனிவர் இட்டசாபம்.

கூ. பேராம் - புகழையுடையவனுகிய; அரசன் - மலயத்துவசன்; பிள்ளையைத் தந்தருள்.

ச. தளம் - சேனை; ''நன்றென்று தளமிரண்டி னாபாலர் பலர்திரண்டு கலிலாதிப்'' (வி. பாரத. கசூ-ஆம் போர். கசடு) என்பதனுலும், தளகர்த்தன், தளகாயகன், தளவாயென்னும் வழக்காலும் அறியலாகும். நின்கண் நீண்டி - உம்முடைய திருவிழிகள் நோக்கப்பெற்று.

ரூ. விதம்பெறல் ஏய் - வந்தோர் பலவகைப்பயன்களையும் பெறுதல் பொருந்திய. மணவேள்வி - திருக்கலியாணம்; இருபெயரொட்டு. அற்புதம்

சு.—பூதமண்ட திருவிளையாடல்.

சுசியா ரமுதி னறுசுவை கூட்டித் துலங்குமன்ன
முசியா தளித்தவை யெல்லாரு முண்டு முடிவிலவாப்
புசியாக் குறையமு தூட்டக்குண் டோதரப் பூதத்திற்குப்
பசியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (சு)

எ.—ஆறழைத்த திருவிளையாடல்

அருகிருக் குங்குழி யன்னமெல் லாமுத ரத்தடக்கி
மருவுறு கேணி குளமுத லாவுண்டு வற்றியபின்
பெருகுவிக் கும்வையை வெள்ளமெல் லாம்பெரும் பூதத்திஞற்
பருகுவிக் குஞ்சொக்க னேபர தேசி பயகரனே. (எ)

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

பிரியா வெனது பிதாவின் றிவசம் பெருங்கடல்போய்த்
தரியா திரங்கி யருள்புரி வாயென்று சாற்றிடவே
[1] முரியா ரளகத் தடாதகை யாரன்னே மூழ்கமுங்கீர்
பரிவா யழைத்தசொக் கேபர தேசி பயகரனே. (அ)

கூ.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

வித்தார மாக மதுரா புரியின்முங் நீரைவிடக்
கத்தா வுடனன்றி யான்மூழ் குவது கணக்கல்லவே
மைத்தா ரளகத் தடாதகை யென்ன மலயத்வசப்
பத்தாவைக் காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கூ)

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

தடாதகை யார்தென் மதுரா புரியிற் றவமுமன்பும்
விடாவகை யாலுக் கிரனும் புதல்வனை மேதினிமே
லடாவகை யின்றி யரசாளும் வண்ண மழகிற்குறை
படாவகை யீந்தசொக் கேபர தேசி பயகரனே. (கo)

பெற - அறிவை அடைவதற்கு; "அற்புத மூர்த்தி" என்பர். புசியும் - உண்ணுமின். இதம் - இனிமை; "இதமாடித்தனே" என்பர்பின்; ஈஉ திவ்ய கடம் பரமாகத்த தாண்டவ மெனப்படும்; "பதஞ்சலிக்காடிய பரம நாடக" (திருவா.)

சு. சுசி - சுத்தம். அமுதின் - அமுதம்போலவே. முசியாது - இளைப்பு உறுதபடி. அன்னம் முடிவிலவாக.

எ. உதரம் - வயிறு.

அ. திவசம் - ஸ்ராத்ததினம். தரியாது - தாமதியாதபடி. முரி-வளைவு, சுருள். பரிவாய் - அன்புடன்.

கூ. கத்தா=கர்த்தா - கணவன். கணக்கு - முனை. தடாதகை: விளி. பத்தா=பர்த்தா - கணவன்.

கo. புதல்வனை யீந்த.

(பி - ம்.) [1]'முரியாவளகத்'

கக.—வளைவேல்கொண்டுகொடுத்த திருவிளையாடல்.

தெரியலர் வந்து வணங்கித் திறையிடுஞ் சீர்மதுரை
தரிபெற வேண்டுஞ் சடைமன்ன னேதரு நாட்டரையன்
கிரிகட லேபகை கிட்டின் வளைசெண்டு சத்திதன்தோம்
பரிகரி யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கக)

கஉ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

மதியா வருணன் மழையால் வருத்தவிம் மாநிலத்தோர்
கதியாரு மில்லை சரணெனப் புட்கலா வத்தமுன்ஞ
னதியார் மதுரையை நான்மாடக் கூட னலஞ்சிறக்கப்
பதியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (கஉ)

கங.—சித்திரான திருவிளையாடல்.

சகம்புக ழுன்தென் மதுரா புரியிற் றரைமதிக்க
வகன்தொறு மீசெய்த வாடல்கண் டேயழ கார்வழுதி
யிகழ்ந்துநின் ஞமமென் னென்னவெல் லாம்வல்ல சித்தரெனப்
பகர்ந்தருள் காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கங)

கச.—கல்லானை கரும்புவாங்கின திருவிளையாடல்.

நீங்காத செல்வ மதுரைநன் னாட்டி னிறைபுவியைத்
தாங்காவ லிற்புய மீதுவைத் தோர்தண் மதிக்குலத்தோ
ராங்கார மார்மன் னவன்கைக் கரும்பைக்கல் லானைபிஞற்
பாங்காக வாங்குஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கச)

கடு.—சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்.

உலக மகிழ்வெய்த முன்னுட் புலவ ருடனிருக்கு
மிலகு தவிசை யளித்தருள் வாயென் றெதிர்புகழும்
புலவர் மதுரையி லேழேழு பேரும் பொருந்தச்சங்கப்
பலகை தருஞ்சொக்க னேபர தேசி பயகரனே. (கடு)

கக. தரிபெற - தரித்தலைப் பெற; நீலிபெற. உக்கிரபாண்டியர் சடையுடன் அவதரித்தமையால், 'சடை மன்னனே' என்றார். தரு நாட்டரையன் - இந்திரன். கிரி - மேருமலை. இந்திரன் முதலிய மூவரே ஒருகாலத்துப் பகையாவார். கிட்டின் - வருவாராயின். வளையு ம செண்டும் ஒவ்வோராயுதம். சத்திவேல். பரிகரி - ஒழிப்பாய்.

கஉ. வருத்த - வருத்தச்செய்ய. புட்கலாவத்தமுன்னுல் - புட்கலாவர்த்த முதலிய நான்கு மேகத்தால்; மதுரையை நான்கு மேகத்தால் நான் மாடக் கூடம்பதியாக்கியவரே. நான்மாடக்களின் பெயர்களாவன - கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்பன.

கங. அகன்தொறும் - வீடுகள் தோறும்.

கச. வைத்தோர் - பாண்டியவரசர். ஆங்காரம் - அகங்காரம்.

கடு. தவிசு - ஆசனம்.

கசு.—கிழியறுத்த திருவிளையாடல்.

மாப்பாட லஞ்செறி மாமது ராபுரி வாழ்வழுதி
காப்பா னினைந்த படிகவி பாடிக் கனகத்தினுற்
கோப்பாகக் கட்டுங் கிழியை யறுத்துக் குலதிலகப்
பாப்பானுக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (கசு)

கள.—நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்.

உயர்ந்தநற் கூடல் வழுதிமுன் னேயுன் னுடனெ திர்க்க
வியந்திட நன்னுதற் கண்ணழல் காட்டி மிகவஞ்சியே
கயந்தனில் வீழுகக் கீரனை நீர்க்கரை யேற்றியவன்
பயந்தனைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (கள)

கஎ.—குறுமுனிக்குத் தமிழரைத்த திருவிளையாடல்.

எண்ணுந் தமிழின் பெருமையிற் காட்டி விசைத்திடவு
முண்ணின்ற ஞானக் கீரற்குண் டாகவு மோங்குபுகழ்
நண்ணுங் குறுமுனி வற்குப தேசநற் கூடலிலே
பண்ணுந் தமிழ்ச்சொக்க னேபர தேசி பயகரனே. (கஎ)

கஅ.—ஊமை தமிழறிந்த திருவிளையாடல்.

எழிறிகழ் கூடலி னின்பா லகப்பொரு ளின்பயனை
வழிபடு சங்கத் தவர்மொழி வாயென்று வந்துநிற்க
வொழிவிலி வூர்ச்செல்வ னுப்பூங் கிழார்மக னூமன்றன்னுற்
பழுதொழி கென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கஅ)

உ0.—இடைக்காடனீபின்போன திருவிளையாடல்.

திருந்திய செல்வ மதுரைச் செழியன்முன் சென்றடியே
னருந்தமிழ் பாடினன் றள்ளின னேயென் றவன்செல்லவே
கரும்பன சொல்லி யுடன்வட பாலிடைக் காடனுக்காப்
பரிந்துபின் போனசொக் கேபர தேசி பயகரனே. (உ0)

கசு. பாடலம் - பாதிரிமரம். காப்பால் - சோலையின்கண். கோப்பு - கோத்தல், பெருமை. கிழி - கிழிக்கப்பட்டதுணியாற்கட்டிய பொன்முடிப்பு. குலதிலகம் - குலத்தில் மேலான. பாப்பான் - தருமியென்பவன்.

கள. எதிர்த்தலாலும் தன்னெவியந்திடலாலும். நக்கீரன்: ந, சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச்சொல்.

கஅ. உள் நின்ற. குறுமுனிவற்கு - அகத்தியமுனிவருக்கு. உபதேசத் தைப்பண்ணிய.

கக. அகப்பொருளின் பயனை - இறையனாரகப் பொருளென்னு நூலின் பெர்ருளை. உப்பூர்: ஓரூர். ஊமன் - உருத்திரசன்மர்.

உ0. அவனென்றது இடைக்காடரை. கரும்பை அன்ன.

உக.—கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்.

செருவேறு மன்ன ருடன்புவி மீதிற் றிகழ்சனமு
மருவே தனையுட னீங்கணைந் தாரணி கூடனகர்ப்
பெருவேலை வந்தது வாலுக் கிரனே பிடித்தெறிநின்
பருவேலை யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உக)

உஉ.—வலைவீசின திருவிளையாடல்.

இருமீன் பிடிக்கு மதியரை யன்முன் பெழின்மதுரைப்
பொருமீன்கண் ணுளைத் தருகெனக் கென்று பொருந்தியபின்
வருமீனுங் கப்பலு மங்குற வேசெயு மாமகரப்
பருமீன் பிடித்தசொக் கேபர தேசி பயகரனே. (உஉ)

உங.—வளையல்விற்ற திருவிளையாடல்.

நிகரற்ற தாரு வனமட வார்நின் மதுரைதன்னிற்
றகவுற்ற செட்டிப் புதல்விக ளாகச் சமைந்தவக்காண்
மிகவுற்ற நல்வளை கொள்ளுமென் றேயவர் வீதிதொறும்
பகர்செட்டி யானசொக் கேபர தேசி பயகரனே. (உங)

உச.—இலக்கினம்பிட்ட திருவிளையாடல்.

ஓங்கிய கூடற் பதிச்செம் பியன்வர வுள்ளஞ்சியே
யாங்குள வாச லிலச்சினை யிட்டிறை யாங்கிருப்ப
வீங்கொரு வாசல்விட் டேதொழு வித்திட பக்குறியே
பாங்குட னிட்டசொக் கேபர தேசி பயகரனே. (உச)

உடு.—மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.

சாத்திய மேன்மை தவறு மதுரைத் தலமதனில்
வாய்த்தநற் செல்வ வணிகனைப் போல வளர்மதியின்
கோத்திர மன்னன் முடிசூட மாணிக்கங் குற்றமறப்
பார்த்திவற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (உடு)

உக. அருவேதனை - தீர்த்தற்கரியதுன்பம். பெருவேலை - பெரியகடல். ஆல்: அசை. வேலையெறி.

உஉ. இருமீன் - பருத்தமீனை. அதியரையன் - வலிச்சாதிக்கு அரசன். தருக எனக்கு. மகரப் பருமீன் - கந்திதேவராகிய பருத்த மகரமீனை.

உங. தாருவனம் - தாருகாவனம். பகர்தல் - விற்றல்.

உச. செம்பியன் - சோழன்; சிபிமரபிற் பிறந்தவனென்றபடி. வாசலில். இலச்சினை - மீனமுத்திரை. இறை - அரசன்; இங்கே பாண்டியன். இடபக் குறி - இடபமுத்திரை.

உடு. கோத்திரம் - குலம். மன்னன் - பாண்டியன்.

உசு.—ஆனையெய்த திருவிளையாடல்.

வகையான தொன்றை யறியார் மறுமண் டலத்தமணர்
தொகையாக மேவி வழுதிதன் மேல்விடச் சூழ்ச்சியினுன்
மிகையானே வேந்தினைக் கூடற் பதியை விழுங்கவந்த
பகையானே யெய்தசொக் கேபர தேசி பயகரனே. (உசு)

உஎ.—ஞானுபதேசஞ்செய்த திருவிளையாடல்.

ஞாலத்தர் போற்று மதுரைமன் னன்பொரு ணல்கியனு
கூலப் பெரும்பரி கொள்ளப் பெருந்துறை கூடியரு
ளாலித்த ஞான வுபதேசம் வாதவூ ராளிக்கன்பிற்
பாலித் தருளுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உஎ)

உஅ.—நரி குதிரையான திருவிளையாடல்.

அரியார்க்குஞ் சோலே மதுரையின் மன்ன னடற்பரிக்கா
வெரியார்த்த கோபத்தின் வாதவூ ராளி யிடுக்கணுறத்
தரியாத் திருவுளத் தாலே நரிதன்னைத் தாரணியிற்
பரியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (உஅ)

உக.—குதிரை நரியான திருவிளையாடல்.

வரிபயின் மீனத் துவசன்முன் னேதென் மதுரைதன்னில்
விரிவுறச் செண்டு வெளிதனிற் காட்டி விழுப்பமுட
னெருகலின் முன்றந்த பொன்னுக்கெல் லாம்பரி மகரென்றபின்
பரிநரி யாக்குஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உக)

௫0.—மண்சுமந்த திருவிளையாடல்.

அடல்வந்த மானப் பரிக்கு நரியிட் டமைச்சனுக்காக்
கடல்வந்த வெள்ள மழைப்பித்துத் தென்கரை கட்டுதற்காச்
சுடவந்த பிட்டுக்குக் கூடையி லேமண் சுமந்தடியும்
படவந்த தென்சொக்க னேபர தேசி பயகரனே. (௫0)

உசு. வகை - நற்செயலின் கூறுபாடு. மறுமண்டலம் - வேறு நாடு; பகைவர்நாடு. அமணர்-சைனர். அமணர் சூழ்ச்சியினுல்விட. யானே வேந்து - யானையையுடைய பாண்டியன்.

உஎ. நல்கி - நல்குதலால். பெருந்துறை - ஆருடையார் கோயில்; பிரு ஹத்தீர்த்த மென்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர். ஆலித்த - களிப்புமு தற்குக் காரணமாகிய. வாதவூராளி - திருவாதவூரை ஆள்பவர்; திருவாதவூர்.

உஅ. அரி-வண்டு. எரியார்த்த-நெருப்பை யொத்த. தரியா-தாங்காத.

உக. வரி - கீற்று. மீனத்துவசன் - பாண்டியன். செண்டு வெளி - குதி ரையைச் செலுத்தும் முற்ற வெளி. விழுப்பம் - சிறப்பு. நெருகல் - நேற் றைத்தினம்.

௫0. அமைச்சனுக்கு - மந்திரிக்கு. என் - யாது.

கூக.—விருத்தகுமார பாலரான திருவிளையாடல்.

சேலிகல் கூடற் புரத்தே மறையவன் செல்வமின்னே
மாலடி போற்று மறையோன் புதல்வன் வதுவைசெய்யக்
கோலமென் னென்ன விருத்தனு மாகிக் குமாரனுமாய்ப்
பாலனு மானசொக் கேபர தேசி பயகரனே. (கக)

கூஉ.—மாறியாடின திருவிளையாடல்.

விதமான வெண்ணெண் கலைவல்ல கூடலின் மீனவனற்
புதமா கடத்தி னருமைகண் டேபொற் பதம்வருந்த
விதமா கடித்தனை யெத்தனை கால மெனவிரங்கிப்
பதமாறி யாடுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கஉ)

கூங.—பழியஞ்சின திருவிளையாடல்.

செழியன் றமிழ்தெரி கூடலிற் பூசுரன் றேவிவடத்
திழியுமம் பாலுயி ரேகிற்றென் றுதிர்ந்த வேடன்கொன்றுன்
மொழியும் பரிசிவை யென்றுற்கும் வேந்தற்கு மூதலித்துப்
பழியஞ்சி யானசொக் கேபர தேசி பயகரனே. (கங)

கூச.—மகாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.

தோதக வாசகன் மாமது ராபுரி சூழ்பதியிற்
பேதக மாக மறையோன் புதல்வன் பிதாவைக்கொன்று
தீதகந் தன்னிலுஞ் செய்யா ததுசெய்யச் சேர்ந்தபெரும்
பாதகந் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (கச)

கூரு.—அங்கம்வெட்டின திருவிளையாடல்.

புடவிக்குள் வீறு மதுரா புரியிற் புகழ்ப்பணிக்கன்
றிடமூற்ற மைந்தரிற் சித்தனென் போன்செய்த தீமையிஞற்
கடகொட்டி வாளிட் டெதிரிட் டவன்றனைக் கண்டதுண்டம்
படவெட் டியசொக்க னேபர தேசி பயகரனே. (கரு)

கக. கூடற்புரம் - கூடல் நகரம். என்னென்ன - என்னவென்று கூறிக் கண்டோர் ஆச்சரியமடையும்படி.

கஉ. வல்ல மீனவன் - பாண்டியன். அற்புதமா - ஆச்சரியமாக. எண - என்று பாண்டியன் வருந்திக் கூறினமையால்.

கங. கடத்தி - ஆலமரத்தினின்றும், என்னை-என்று நினையாமல். என் றுற்கும்-என்ற பிராமணனுக்கும். மூதலித்து-ஒப்புவித்து. அஞ்சி-அஞ்சியவன்.

கச. தோதக ஆசகல் - வஞ்சகமாகிய குற்றம் நீங்கிய. பேதகம் - வேறுபாடு.

கரு. வீறு - ஒப்புயர்வற்று ஓங்கிய. பணிக்கன் - ஆயுதவித்தை கற்பிக்கும் உபாத்தியாயன்; கரு: க, பார்க்க. மைந்தரில் - மாணாக்கருள்ளே. கடகு - கேடகம். எதிரிட்டவன் - சித்தன். ஓட்டி - பொருந்தி; சபதஞ்செய்கென்றமாம். வாள்இட்டு - வாள்கொண்டு.

உசு.—ஆனையெய்த திருவிளையாடல்.

வகையான தொன்றை யறியார் மறுமண் டலத்தமணர்
தொகையாக மேவி வழுதிதன் மேல்விடச் சூழ்ச்சியினுன்
மிகையானே வேந்தினைக் கூடற் பதியை விழுங்கவந்த
பகையானே யெய்தசொக் கேபர தேசி பயகரனே. (உசு)

உஎ.—ஞானுபதேசஞ்செய்த திருவிளையாடல்.

ஞாலத்தர் போற்று மதுரைமன் னன்பொரு ணல்கியனு
கூலப் பெரும்பரி கொள்ளப் பெருந்துறை கூடியரு
ளாலித்த ஞான வுபதேசம் வாதவூ ராளிக்கன்பிற்
பாலித் தருளுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உஎ)

உஅ.—நரி குதிரையான திருவிளையாடல்.

அரியார்க்குஞ் சோலே மதுரையின் மன்ன னடற்பரிக்கா
வெரியார்த்த கோபத்தின் வாதவூ ராளி யிடுக்கணுறத்
தரியாத் திருவுளத் தாலே நரிதன்னைத் தாரணியிற்
பரியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (உஅ)

உக.—குதிரை நரியான திருவிளையாடல்.

வரிபயின் மீனத் துவசன்முன் னேதென் மதுரைதன்னில்
விரிவுறச் செண்டு வெளிதனிற் காட்டி விழுப்பமுட
னெருகலின் முன்றந்த பொன்னுக்கெல் லாம்பரி ஙரென்றபின்
பரிகரி யாக்குஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உக)

௫0.—மண்சுமந்த திருவிளையாடல்.

அடல்வந்த மானப் பரிக்கு நரியிட் டமைச்சனுக்காக்
கடல்வந்த வெள்ள மழைப்பித்துத் தென்கரை கட்டுதற்காச்
சுடவந்த பிட்டுக்குக் கூடையி லேமண் சுமந்தடியும்
படவந்த தென்சொக்க னேபர தேசி பயகரனே. (௫0)

உசு. வகை - நற்செயலின் கூறுபாடு. மறுமணடலம - வேறு நாடு; பகைவர்நாடு. அமணர்-சைனர். அமணர் சூழ்ச்சியினுல்விட. யானே வேகத - யானையையுடைய பாண்டியன்.

உஎ. நல்கி - நல்குதலால். பெருக்துறை - ஆளுடையார் கோயில்; பிரு ஹத்தீர்த்த மென்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர். ஆலித்த - களிப்புமு தற்குக் காரணமாகிய. வாதவூராளி - திருவாதவூரை ஆள்பவர்; திருவாதவூரர்.

உஅ. அரி-வண்டு. எரியார்த்த-நெருப்பை யொத்த. தரியா-தாங்காத.

உக. வரி = கீற்று. மீனத்துவசன் - பாண்டியன். செண்டு வெளி - குதி ரையைச் செலுத்தும் முற்ற வெளி. விழுப்பம் - சிறப்பு. நெருகல - நேற் றைத்தினம்.

௫0. அமைச்சனுக்கு = மந்திரிக்கு. என் - யாது.

சக.—மாமனுகவ்து வழக்குரைத்த திருவிளையாடல்.

எண்பார் மதுரை வணிகன் புதல்வரில் லாமையினு
னண்பா மருகை மகவாக்கிச் சென்றபி ஞதியர்கள்
கண்காணி கைக்கொள்ள மாமனைப் போல்வழக் காடச்செட்டிப்
பண்பாக வந்தசொக் கேபர தேசி பயகரனே. (சக)

சஉ.—அட்டமாசித்திபகரிக்த திருவிளையாடல்.

நலங்கிளர் வெள்ளிப் பொருப்பினின் மூவிரு நாரியர்க
லெங்குப தேசம் பராமுகஞ் செய்திடத் தொன்மரத்தி
னிலங்கிய நீழலிற் கல்லாக்கி மாற்றிமுன் பெண்சித்தியும்
பலந்தரச் சொன்னசொக் கேபர தேசி பயகரனே. (சஉ)

சஙு.—தண்ணீர்ப்பந்தர்வைத்த திருவிளையாடல்.

மூந்திப் பருதி குலத்தடன் மன்னன் முதிர்படையால்
வந்திடக் கண்டு மதுரையர் கோன்செய்யும் வாறெதென்னத்
தந்திரத் தாலவன் முன்றேற்கு நீசெல்க வென்றுதண்ணீர்ப்
பந்தரை வைத்தசொக் கேபர தேசி பயகரனே. (சஙு)

சச.—இந்திரன்முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்.

மடலவிழ் சோலை மதுரையர் வேந்தன் மழைபொழியா
திடர்செயுங் காரைச் சிறைவைக்க நீக்கென் றிமையவர்கோ
னடல்செயு நாளி லவன்முடி மேல்வளை யாரு நின்று
படவெறி யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (சச)

சஞ.—பொன்னனையாளுக்கருள்புரிந்த திருவிளையாடல்.

மணிதிகழ் மாட மலிமது ராபுரி வாழ்சித்தரேர்
துணிவுட னின்னன்பு கேட்டணைந் தேமென்று சொல்லிப்பின்ன
ரணிதிகழ் பூவணப் பொன்னனை யாளுக்கன் ருணிப்பொன்னைப்
பணிவிடைக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (சஞ)

சக. மருகை - சகோதரியின் பிள்ளையை. நாதியர்கள் - ஞாதியர்; தாயாதியர். கண்காணி - கண்காணிக்கப்பட்ட விளைநில முதலியவை. செட்டிப் பண்பாக - வைசியவேடமாக.

சஉ. பராமுகஞ்செய்திட - அசட்டை செய்ய. தொன்மரம் - ஆலமரம். மாற்றி - மாறச்செய்து; பெண்வடிவமாக்கி. முன்பு எண்சித்தியும். பலம் - பிரயோசனம்.

சஙு. வாறு - விதம்; பிற்காலத்து நூல்களில் இச்சொல் இந்த உருவத்துடன் மோனையில் வழங்குகின்றது. தந்திரத்தால் - சேனைகளுடன். தோற்கும் - தோற்பான்.

சச. காரை - மேகத்தை. அடல் - போர். வளையைஎறி.

சஞ. பூவணம் - திருப்பூவணம். ஆணிப்பொன் - உரையாணியாகிய பொன். பணிவிடை - கைங்கரியம்; "மூர்த்திபணிவிடை" என்பர்பின்; இத.

சசு.—சோழனைக்கொண்டாழியிற்றழுத்த திருவிளையாடல்.

வேதா வணங்கு மதுரா புரியில் வெகுண்டடைந்தான்
நீதாக வந்த வளவனென் றோதச் செழியனுக்கா
வாதார மாய்ச்சென் றமராடிப் பண்டுகொண் டாழியென்னும்
பாதாளத் திட்டசொக் கேபர தேசி பயகரனே. (சசு)

சள.—திருவாலவாயான திருவிளையாடல்.

ஆம்பா ரணைத்து மலைகோத்து நீங்குமக் ஙாளினின்னை
வேம்பார் தொடைப்புய னெல்லை விளம்பென வேண்டிடவே
தேம்பாத செல்வத் திருவால வாயெனச் சீருடைய
பாம்பால் வளைத்தசொக் கேபர தேசி பயகரனே. (சள)

சஅ.—வராகுணனுக்குச் சிவலோகங்காட்டின திருவிளையாடல்.

வராகுண தேவன் பிரமத்தி வந்து வருத்தியஞாட்
டிராமுட னேயிடை மாமரு தூரிற் செறுத்ததனை
யுராகமூற் சூழ்ந்த மதுரையி லேயவற் கூரறியப்
பராகதி காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (சஅ)

சகூ.—விடைக்குறியம்பெய்த திருவிளையாடல்.

மடைத்தலை முத்தங் கொழிக்கு மதுரையின் மேல்வளவன்
றிடத்துட னேவரப் பாண்டிய னுள்ளந் தெளியச்செய்து
விடைக்குறி தீட்டிய வம்பாற் கரிபரி வீழ்ந்துமுற்றும்
பட்டத்தொலை வித்தசொக் கேபர தேசி பயகரனே. (சகூ)

ரூ0.—உலவாக்கோட்டைவைத்த திருவிளையாடல்.

பெருங்கோ லிலாவும் வயல்சூழ் மதுரைப் பெரும்புரியின்
மருங்கோடி வாழ்கின்ற சூத்திர வாதித்தன் மாதவர்க்கா
யிருங்கோ டிலாத வமுதிட் டிளைத்தன னென்றவற்குப்
பருங்கோட்டை யீந்தசொக் கேபர தேசி பயகரனே. (ரூ0)

சசு. வளவன் - சோழன். வளவன் வெகுண்டடைந்தான். கொண்டாழி-தன்பாற் கொண்டு உள்ளேயமுத்திய இடம். பாதாளம் - மிகவும் ஆழமான நீர்நிலை.

சள. அலை - கடல். விளம்பென்று நின்னை வேண்டிடவே. தேம்பாத-குறையாத. ஆலவாயென்பது அன்மொழித்தொகையாகப் பாம்பின்பெயரா இப் பின் அதன்வேண்டுகோளின்படி மதுரைக்காயிற்று.

சஅ. தேவரென்று அரசரைக் கூறுதல்மரபு. அதனைச் செறுத்தென்க. பராகதி - மேலான முத்தி.

சகூ. மடைத்தலை - நீர்மடையில். திடம் - வலி. விடைக்குறிதீட்டிய அம்பு - இடபமுத்திரை பொறித்தபாணம். பட - அழிய.

ரூ0. கோடு - கரை. மருங்கோடி - சுற்றத்தாரோடு. சூத்திரவாதித்தன் - வேளாளருள் உயர்ந்தோன்; சூத்திரசூளாமணியென்று முதனூலில் இவன் பெயர் கூறப்படும். கோடு-மறு. பருங்கோட்டை - பருத்த நெற்கோட்டையை.

நிக.—ழர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்.

கலித்துயர் தீர்க்கு மதுரையி லேயன்பர் காதலிஞ
லொலித்திடு பூசைக்குச் சந்தன முட்ட வுரைத்துச் செங்கை
சலித்திடு மூர்த்தி பணிவிடை யிம்மையிற் றுழ்வறவே
பலித்திட வீந்தசொக் கேபர தேசி பயகரனே. (நிக)

நிஉ.—காரியார் நாரியார் பாப்பதுந்த திருவிளையாடல்.

மாப்பல வுங்கமு கும்புடை சூழ மதுரைதன்னிற்
கோப்புடன் காரியர் நாரியர் மேற்குல வேந்தன்றன்மேல்
யாப்பலங் கார மெழுத்துப் பொருட்சொற் கியையச்செய்த
பாப்பகுந் திட்டசொக் கேபர தேசி பயகரனே. (நிஉ)

நிஊ.—புலிழலேபுல்வாய்கீகநுளின திருவிளையாடல்.

மாலொடு தேவர் மகிழ்ந்தேத்து நீப வனத்துழையைக்
கோலொடு வேடுவர் கொல்லக்கண் டேயதன் குட்டிக்குத்தாய்
போலுடன் வந்தந்தப் புல்வாய் மறிக்குப் புலியைழலேப்
பால்கொடு வென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (நிஊ)

நிசு.—சாதாரிபாடின திருவிளையாடல்.

புயவறழ் சோலை மதுரையின் மன்னன் புகழவர்தோ
னியலிசை வல்ல னெனவே வரவியற் பாணனுக்கா
வியனுற வேழிசைச் சாதாரி பாட விறகுசுமை
பயனுற வேந்துசொக் கேபர தேசி பயகரனே. (நிசு)

நிடு.—திருமுகங்கொடுத்த திருவிளையாடல்.

வேடிக்கை யாக மதுரா புரிமன்னன் மேன்மையெலா
நாடிப் புகழு மியற்பாண பத்திர னல்லிசைக்காத்
தேடிக் கொடுக்கவும் போதாமற் சேரற்குச் சீட்டுக்கவி
பாடிக் கொடுத்தசொக் கேபர தேசி பயகரனே. (நிடு)

நிக. கலித்துயர் - வறுமை முதலியவர்தின் துயர். ஒலித்திடு - மணி முதலியவைகள் முழங்கப்பெற்ற. மூர்த்தி - மூர்த்திநாயனார். ஈந்த - அரசாட்சியைக்கொடுத்தருளிய.

நிஉ. மாப்பலவும் - மாமரமும் பலாமரமும்; பெரியபலவுமாம். காரியர் நாரியர் - காரியார் நாரியார் என்னும் புலவர்கள். யாப்பும் அலங்காரமும் எழுத்தும் பொருளும் சொல்லும் என்னும் ஐந்திலக்கணத்திற்கும் பொருந்த. பாப் பகுந்திட்ட - செய்யுட்களைப்பிரித்திட்ட.

நிஊ. நீபவனம் - கடம்பவனம்; மதுரை. உழையை - மானை. கோலொடு. அம்பைக்கொண்டு. புல்வாய் மறிக்கு - மான்குட்டிக்கு; "புலிழலே புல்வாய்க் கருளினே போற்றி" (திருவாசகம்.)

நிசு. பாணனுக்கு - பாணபத்திரர் பொருட்டு. சாதாரி - சாதாரியென்னும் பண்ணை; இப்பண்ணைத் தேவகாந்தாரி என்பர் வடநூலார்.

நிடு. பாணபத்திரன் - மேற்கூறிய பாணபத்திரர். சீட்டுக்கவியென்பது "மதிமலி புரிசை" என்னுங்கவியை.

நிசு.—பலகைபிட்ட திருவிளையாடல்.

மூத்தமி ழோரெண் மதுரையி லுன்னேமுப் போதுமல்லான்
மெத்திய யாமத்தும் பாடப்பெய்ம் மாரிக்கு வேண்டியதோர்
சித்திர மாம்பொற் பலகை செழுந்தமிழ்ப் பாணனென்னும்
பத்திரற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (நுசு)

நிஎ.—இசைவாதுவென்ற திருவிளையாடல்.

முடிவொன் றிலாத மதுரா புரிமன்னன் முத்தமிழ்நூல்
குடிகொண்ட வெற்றி விறலிதன் னேடிசை கூறென்றநாள்
வடிவங் திகழ்பத் திரன்மனை யாளிசை வாதுவெல்லும்
படிவங் துதவுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (நுஎ)

நிஅ.—பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்.

வென்றிகொள் கூடலில் வேளாளன் சேய்கண்மென் றூறகழ்ந்து
வன்றிறன் மாமுனி சாபத்துக் கேழல் வடிவுறத்தாய்க்
கொன்றிடப் பாண்டியன் ரூய்போல வந்து கொழுமுலையப்
பன்றிகட் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (நுஅ)

நிகூ.—பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

நீலக் கரும்பன்றிக் குட்டிமூன் நான்குநின் பாலருந்திக்
கோலத் துடன்வளர்ந் தக்கோல நீங்கித்தென் கூடலிலே
சீலத் தவர்புகழ் வேளாளர் கோத்திரத் திற்சனிக்கப்
பாலர்க் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (நுசு)

சுஎ.—கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

பொறையற்ற காகத்துக் காற்றும மலேதினம் போதகொந்தே
குறைவற்ற செல்வ மதுரைவந் தேதன் குறையனைத்து
மறையமித் துஞ்சய மந்திரத் தாலக் கரிக்குருவிப்
பறவைக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (சுஎ)

நிசு. எண் - எண்ணுகின்ற. மெத்தியயாமத்தும் - நிரம்பிய பாதியிரவி லும். மாரிக்கு - மழையாலுண்டாகும் துன்பத்தை நீக்கும்பொருட்டு.

நுஎ. விறலி தன்னேடு - மாற்றாளாகிய விறலிதன்னேடு.

நிஅ. சேய்கள் - பிள்ளைகள். தூறு அகழ்ந்து - புதர்களைப் பெயர்த்து. கேழல்வடிவு - பன்றிவடிவம். பாண்டியன் தாய்ப்பன்றியைக் கொன்றிட.

நுசு. மூன்றான்கும் - பன்னிரண்டும். சோலத்துடன் - அழகுடன்; பன்றி களுடன் என்றுமாம். அக்கோலம் நீங்கி - அத்தவடிவம் நீங்கப்பெற்று. செனி க்க - பிறக்க. அருள் - மந்திரிகளாக இருக்கும்படி கருணைசெய்த.

சுஎ. காகத்திற்கு ஆற்றுமல் - காசம்செய்யும் துன்பத்தைப் பொறுத்தற்கு வலியில்லாமல். போத கொந்து - மிக கொந்து. மித்துஞ்சயமந்திரத்தால் - மிர்த்தியுஞ்சய மந்திரத்தால்.

சுக.—மாமேருவிற் கயல்செண்டுபொறித்த திருவிளையாடல்.

நான்மறை யோரை வழுதி யிகழ்நன் மாரியின்றி
மேலுயர் பூதலத் தெல்லோரு மாழ மிடிகெடவே
சேலுடன் செண்டிட்டு மேருப்பொன் வாங்கித் திகழ்மதுரைப்
பால்வரச் செய்தசொக் கேபர தேசி பயகரனே. (சுக)

சுஉ.—சான்றழைத்த திருவிளையாடல்.

கதிசேர் வணிகன் விடத்தா லுயிர்விடக் கன்னிகையால்
விதிசேர் சம்பந்த னெழுப்ப மணந்தவர் மேவுறுகா
ணதிசேர் புறம்பயக் கூவ மிறைவன்னி நன்மதுரைப்
பதிசேரப் பண்ணுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (சுஉ)

சுங.—நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

கத்திக் கழனி தொறுமீ னருந்துஞ்செங் காஞரைதான்
மூத்திக் குரிய பெரியோரைச் சேர்ந்த முகிழ்த்தத்திரு
லெத்திக்கு மெண்ணு மதுரா புரியிற்சென் றேகிச்செய்த
பத்திக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (சுங)

சுச.—வேதமுணர்த்திய திருவிளையாடல்.

மரியாத மாமறை மாய்ந்திட முன்னுகம் வந்தவர்காட்
டெரியாம லந்தண ரெல்லாந் திகைப்பத் தெளிந்திடவே
விரிவான வேதத்தை யெல்லாருங் கண்டு விளம்புகென்னப்
பரிவாய்ப் பகர்ந்தசொக் கேபர தேசி பயகரனே. (சுச)

திருவிளையாடற் பயகரமாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சுக. மிடி - தரித்திரம். சேலுடன் செண்டிட்டு - செண்டென்னும் ஆயுதத்தாலடித்து மீனமுத்திரைவைத்து.

சுஉ. சான்று - சாட்சி. கதி - விளங்குதல், நடை. கன்னிகை - விவாகமாகாதவள். அவர்மணந்து - அவ்வணிகனும் அக்கன்னிகையும் கலியாணம் செய்துகொண்டு. கூவம் - இணை. இறை - சிவலிங்கப்பெருமான். வன்னி-வன்னிமரம்.

சுங. கத்தி - முழங்கி. முகிழ்த்தம் - முகூர்த்தம்; நல்வேளை.

சுச. மரியாத - இறவாத. முன்னுகம் - முதல்யுகம். தெளிந்திடவே விளம்புகென்ன. கண்டு - தரிசித்து.

கணபதிதுணை.

கடம்பவன புராணம்.

பத்தாவது

இலீலாசங்கிரகவத்தியாயம்.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

புரந்தரன்முன் விருத்திரா சுரனே வீட்டும் புன்பழிநாற் கூருக்கி
நீக்கி வன்தே, யரந்தைதவிர் நிருத்தங்கண் டிருக்கத் தேவர் மனங்க
வரு மடல்வேட்ட மென்னப் போந்து, வரந்தருநற் கதம்பவனத்
தருளா லெய்தி வரதனைக்கண் டாவிப்பொற் கமலஞ் சூட்டித், திரள்
தருசித் திரையில்விடாப் பழிநீங் கற்கெண் டிண்கயமா னஞ்சாத்திச்
சிறப்பின் வாழ்ந்தான். (க)

உ.—வெள்ளானைக்குச் சாபந்தீர்த்த திருவிளையாடல்.

வாசவன்கூ றிடவயிரா வதமீ பக்கான் வந்தருளா லீசனைக்கண்
டிறைஞ்சி வேந்தன், றேசுபெறு நூருவாசன் கொடுத்த சேடந் திரு
முடிசூ டாதிகழத் தென்னர் கோவாற்,பேசுமா முடிபிளக்க வெற்று
ணென்றும் பெரிதுதகைத் திடிமெனவின் னகன்று மண்ணிற்,
காசுறச்செல் கென்றுமுடன் சபிப்பப் போந்தே னெனக்கழறிக் கடிஞ்
சாபந் தீர்ந்தே கிற்றல். (உ)

ங.—தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்.

தென்னன்மல யத்துவசன் காதன் மாதர்ச் சேர்ந்துகெடுங்
காலங்கள் போக்கி வேந்த, ரின்னகைமா தினைமணந்து மகவி லாம
லியற்றுதவத் தான் மூன்று மூலையி னூலோர், மின்மகவை யருளவரு

க. வீட்டும் - கொன்ற. புன்பழியை. அரந்தை - துன்பம். நிருத்தம் - ஆடல். வேட்டம் மனங்கவருமென்று தேவர்கள்கூற. கதம்பவனம் - கடம்பவனம்; கதம்பம் - கடம்பு. ஆவி=வாவி. திரம் - நிலைபெறுதலே. சித்திரையில் - சித்திரைமாதத்தில், சித்திரைநட்சத்திரத்தில். எண்திண் கயமானம் - திண்ணிய எட்டு யானைகளாற் சுமக்கப்பட்ட விமானம்.

உ. கூறிட - சொல்ல. நீபக்கான் - கடம்பவனம். வேந்தன் - இந்திரன். தேசு - ஒளி. சேடம் - சேஷம். இகழ - இகழ்தலால். எற்றுண் - அடிக்கப்படுவாய். காசு - குற்றம்.

ங. மலையத்துவசன்: கொடியில் பொதியில்மலை எழுதப்பெற்றிருத்தலின், இவனுக்கு இப்பெயர் வந்தது; இவனை மலைக்கொடி மன்னனென்பர்; ச: க.

ளால மைச்சன் விளங்கியபேர் தடாதகையாங் கணவற் கண்டான், மன்னுமூலை மறைந்தரசா மெனப்பொன் மோலி வைத்தரசன் வான டைந்தான் மதுரை யாண்டாள். (ங)

ச.—மணஞ்செய்த திருவிளையாடல்.

மும்மூலையாள் கணவனேவேட் டெழுந்தெண் டிக்கு முடுகிவிச யஞ்செய்து கயிலை மேவ, வம்மினென விமையவர்போர் புரிந்தாற் சூது வந்துரைப்ப வஞ்சலென்றீ சன்முன் கண்டான், செம்மையிற் காண் பளவின்மற்றைத் தனம றைந்த செயலறிந்தே யருளெனலுந் திருக்கண் சாத்தித், தம்முறையான் மணந்துமுடி சூடி வையந் தனை யாண்டு சிவலிங்கார்ச் சனையுஞ் செய்தான். (ச)

ஙி.—பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்.

திருமணத்தின் வந்தோர்க டமைமீ ராடிச் சென்மினிவ ணென மூழ்கிமுனிவர் தேவர், வருமவரிற் பதஞ்சலிமா முனிவன் றில்லை மன்றினடங் கண்டல்லாற் புசியே னென்னத், தருமகவான் சாத்திய பொன் மான மீது தளிர்ப்பொகுகண் டறிதியெனக் காட்டி முன்னே, யருமறைசூழ் கனகசபைத் தென்பால் வெள்ளி யம்பலத்தி னடம் புரிந்தான் புசித்தான் கண்டி. (ஙு)

சு.—பூதாண்ட திருவிளையாடல்.

தடாதகைசொல் வாளிறைவ நின்னே டிங்குத் தாவில்பலர் வருவ ரென வமைத்த வன்னம், விடாதசுரர் சுரர்நாகர் நரர்க ளுண்டி மிக வளருந் தொலைந்தலே யென்னும் வேலை, யடாதபசி யால்வருந்தி மெலிந்த குண்டோ தரனுற்றே·னெனவலற வீசன் காட்ட, வடாது கயி லைக்கிரிநே ரன்னக் குன்றை வாரியயின் றதுகொடியின் மங்கை நாண. (சு)

எ.—ஆறழைத்த திருவிளையாடல்.

பொருவருமா தபத்திரந்தாங் கியநான் சிற்றூண் புசித்திலேத்தே னென்றன்னங் குழுகி ணுன்கின், வருதலுநாற் றிசையாய் விழுங்கித் தெண்ணீர்த் தாகத்தான் மடிப்பொய்கை வாவி கூபப், பொருபுன லுள் ளனகுடித்தும் புனிதா நீரென் றேலிட்ட பூதநதி யழைத்துக் காட்ட, வொருவுகிழக் ககன்ற புனன் மீண்டுஞ் செல்ல வுறிஞ்சியது மணல்பிறங்க வாயங் காந்து. (எ)

காதல் மாதர் - போகஸ்திரீகளே. அமைச்சன் கூறியதை, "ஐயமில்" (கூ: அ) என்னுஞ் செய்யுளாலறிக. வேந்தரின்னகைமாது - குலஸ்திரீ.

ச. வேட்டி - விரும்பி. வம்மின் - வாரும். ஆற்றாது - வலியில்லாமல். அஞ்சல் - அஞ்சற்க. சிவலிங்கம் என்றது மடியூரிற் பூசித்த சிவலிங்கப் பெருமானை. அதைச் சிவலிங்கத்தின் திருநாமம் இம்மையே நன்மைதருவார் என்பது.

ஙு. கனகசபை, இப்போதுள்ள வெள்ளியம்பலத்திற்கு வடக்கே யிருந்ததாக வேறுநூல்களாலும் தெரிகின்றது.

சு. வடாது - வடக்கின்கண்ணுள்ளது.

எ. ஆதபத்திரம் - குடை. கூபம் - கிணறு. ஓலிட்ட - ஓலமிட்ட.

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

அன்புடைய வன்னைகட லாடற் கெண்ண வவண்மொழிகேட் டீசனேத்தன் வயத்த தாக்கு, நன்புடையா டொழுதுரைத்தம் மாற்றங் கூற நயந்தறியா ரெனவிருந்து முகம்வா டக்கண், டின்புடைநின் முகவாட்டந் துணிந்து காண்பா னெண்ணிபிருந் தேதெனவேழ் கடலுங் கூவத், தென்புடலி கடவாதவ் வடைவின் வந்து சிவதீர்த் தத் தடத்துறவேழ் கடலென் முர்கள். (அ)

கூ.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

வாருதியொன் றுவந்தனையேழ் கடலு மிங்கு வந்தனகம் மிறை யருளா லாடி கென்னப், பேருததி மாமடவா ராடிற் கொண்கன் பிறங் குசுத ஞன்கன்றே டாடி னலலாற், சாருறவா டாவென்பர் வர சென் றியாய்மூன் சாற்றுதல்சாற் றப்பதிபை யழைத் துக் காட்டிச், சீருதவு கணவனெடா டிப்போற் முமுன் சிவலோகங் கொடுக்கவவர் சேர்ந்து வாழ்ந்தார். (கூ)

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

பொன்மலய மயிலாசு புரிந்து காக்கும் புவிமுழுதோர் புரமென வே புரக்கும் வேந்தன், மன்மதிகன் மரபாங்க விருங்கீகா மாறன் மாறறுசுர் தரமாற ஞதி மாறன், மென்முளரிக் கண்ணுவந்தோ னருளால் வேலோன் விமலேதடா தகைவயினுக் கிரங்கு சென்மோர், நன் மகவாய்ச் சடையொடுமூற் பவிக்கமோலி நனிகவித்நான் கோச்சடில வருமை னென்முர். (கo)

கக.—வளவேல்தேண்டுகொடுத்த திருவிளையாடல்.

தாவருமுக் கிரன்றலையிற புவிவன் பாரந் தாங்கெனவைத் தருள் புரிந்தங் கிமைபியார் வேந்த, னேவ முடி சாடுகென வளையுந் தந்து நூக்குகடல் சுவறவெறி கெனமேவ லீந்து, மேவருகந் துகம் போல விமையோர் வாழ்பொன் மேருவினை யடிக்கெனவன் செண் டை கல்கித், தேவர்புகழ் மணம்புணர்வித் தமலையோடுஞ் சிறந்த கணத் தொடுமறைந்தான் செழிக்க வையம். (கக)

அ. நன்பு - நன்மை. சிவதீர்த்தம் - எழுகடலுண்டாகிய தீர்த்தம்; கடம்ப. ச: ளை-டார்க்க.

கூ. வாருதி = வாரிதி - கடல். உததி - கடல். சுதன் - பிள்ளை. ஆன்கன்று - பசுக்கன்று. சாருற - பொருந்த. வரர் - பெரியோர்.

கo. மலயம் - பொதியில்மலை. புரம் - நகரம். மதிகன்மரபு - சந்திர குலம். முளரிக்கண் - அக்கினிக்கண். வேலோன் - முருகக்கடவுள். வயின் = வயிறு, இடம். உற்பவிக்க - பிறக்க. சடிலம் - சடை. உருமன் - இரண்டாம் வருணத்தார்க்குரிய பொதுப்பெயர்.

கக. தாவரும் - கேடற்ற. ஓவம் - சித்திரவேலை. நூக்குகடல் - செலுத்துகின்றகடல். கற்றகம் - பற்று. செண்டு - ஓராயுதம். அமலை - தடாதகை.

கஉ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

தாணுவலி யறிவானங் கெண்ணி யேவுந் தடங்கடலைச் சுரர்சித் தர் மனிதர் நாகர், பூணரவா வெனுமுன்விடக் குடித்த வென்றிப் புட் கலா வருத்த முதற் புயல்க ணுன்கா, மாணுறுமா மழையையே வுற நான் மாட மாக்கிவலி தொலைவிக்க விகல்விட் டேகி, நாணெடு தாழ்ந் தருச்சித்தான் வருணன் றூய நகரிதனை நான்மாடக் கூட லென்றூர். (கஉ)

கந.—சித்தரான திருவிளையாடல்.

மாத்திரைபொக் கணம்யோக பட்டத்தோடு மதுரையிலெல் லாம்வல்ல சித்த ராகி, யேத்திமட வாரெல்லாம் வீதி தோறு மின வளைசிக் திடவெங்கும் வந்து லாவிச், சேர்த்திமென் ஞள்பிடிப்ப வகப்ப டாது சென்றுமருத் தின்றிசைக்கல் லிபத்தின் பாங்கர்த், தோத்திரஞ்சே ரால்யத்துட் டென்னர் கோமான் மொழுதிவான் வரமதியா திருந்தான் சொக்கன். (கந)

கச.—கல்லாலை கநும்புவாங்கின திருவிளையாடல்.

வல்லவநீ யாக்கினஞ சித்த ஞயின் வாங்குவிகல் லிபத்தால்யாங் காண்ப மென்றே, யெல்லலர்கா ணக்கைக்கன் னல்லக்காட் டாமுன் வாங்கியயின் றிதுகமல நாள மென்றே, கொல்லருமார் பணிதரள வடமும் பற்றித் துணைவினயின் றநிரமுழங் கிடமுன் சீறும், வில் லரச னஞ்சியதி சயிப்ப வானில் விரைவினெடு நகைத்தொளித்தான் விமலச் சித்தன். (கச)

கஙி.—சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்.

தவிசுவிரும் பிப்புலவர் வேண்டக் கன்மாப் பாவறிவ தொரு பலகை தந்தே பின்பு, புவிபுகழ்கீ ரன்பரணன் கபிலன் முன்னுப் புகழ்ந்தடைவி னிருந்துதமிழ் வைத்தாங் கெய்தி,விதமெனுங் காலநீ ளத்தாற் செய்யு டலைமயங்கி மீண்டொருகான் மலைதல் கொண்டாண், டவைபொருந்து பொருள்செய்து கூட்டித் தாணு மேறிஞ னரனுற்பத் தொன்ப தென்றூர். (கஙி)

கஉ. தாணு=ஸ்தாணு - சிவபெருமானுடைய. பூண்அரவா - அரவைப் பூணுகவுடையாய். இகலவிட்டு - மாறுபாட்டைவிட்டு.

கந. பொக்கணம்-ஒருவகைப்பை; திருச்சீற். உசஉ-பார்க்க. மன்னுள்-அரசனுடைய ஆள். மருத்தின் திசை - வாயுமூலை. கல் இபம் - கல்லானை.

கச. ஆக்கினஞசித்தன் - ஆஞ்ஞாவித்தன்; இஃது அவருடைய திருநாமம். வாங்குவி - வாங்கச்செய்வாய். கன்னலை-கரும்பை. நாளம் - தாமரைக்காம்பு. மார்புஅணி - மார்பில் அணிக்த. துணைவின் - விரைவாக. கமலநாளமன்று வாங்கி அயின்றது.

கஙி. கன்மாப்பாவறிவ தொருபலகை - பாக்களை அறிவிப்பதாகிய பெரிய தொரு கற்பலகை; இது சங்கப்பலகை; "கன்மாப்பலகை யேறியிருந்து ஆராய் வுழி", "கன்மாப் பலகையேற்றி" (இறை. சூ. க-உரை.) விதம் - பலவகை. மலைதல் - போர்செய்தல். அரன் ஏறினன்.

கசு.—கிழியறுத்த திருவிளையாடல்.

திருந்துசிவ முனிதருமி தளர்த்தேன் மன்றல் செய்வான்வண் பொருளிலையென் றேத்த விங்குப், பொருந்துமடக் தையரொடியர் தலத்து லாவும் புகழ்மாற னணைந்தமணங் கண்டீ தென்கொ லருந் தமிழா லிதுபொருந்தப் பாடி வாரே லளிப்பலென்றோர் பொற்கிழிநற் சபையுட் டீக்க, மருந்தனையான் கொங்கென்றோர் கவிதை பாடிக்கிழி யறுப்பான் வழங்கியொப்பித் தனன்கீழ் நின்றே. (கசு)

கஎ.—நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்.

நாவலவ ரன்பர்பிழை பொறுக்குஞ் சொக்கே நக்கீரன் பிழை பொறுத்துன் னுதற்கட் டீயால், வேவுறச்சுட் டிடுதியர்நீத் தருளா கல்கி விளங்கியசொல் லெனும்புகழுந் தாதி கேட்டுப், பூவைகயற் கண்ணிபொடும் பொய்கை மேவிப் பொன்மலர்ச்செங் கைகொடுத் துக் கரையேற் றென்றே, தேவர்புக ழாலயத்துட் சென்று போற் றத் தேவியொடுஞ் சென்றுகரை யேற்றி னனே. (கஎ)

கஅ.—தருமிதனிக்குத் தமிழரைந்த திருவிளையாடல்.

ஒண்கவிகுன் றும்பின்ன முறுகீ ழற்கிங் குரைதமிழ்தா லருள் பவர்யா ரெனவெம் மன்னே, திண்புயப்பீபாக் துயர்தருதென் றிசை வை கென்று தென்முனிக்குக் கயிலையின்று புகன்ற ஞான்று, விண்புகழ்முத் தமிழுரைத்தா யென்றி றைஞ்ச விளம்பியயான் மறந் தனனீ நினைத்தி ருந்தா, யெல்லவழிகன் றென்றவற்கு முணர்த்து வா யென் றியன்முனிவா வெனவழைத்துப் ஞபதே சித்தான். (கஅ)

கக.—ஊமைதமிழறிந்த திருவிளையாடல்.

சங்கத்தா ரிறையனுர் பொருட்கே லேருந் தகைமைபெற வுரை யெழுதி மலிந்து மூன்சென், றெங்கட்கே கறிபவனே நல்ல சொல் லென் றியம்பவெல்லா மறிவனிவ்வூர் வணிகன் மைந்தன், றுங்க வருத் திரசன்ம னூமன் றன்னைத் தூயமண்ட பத்துவைத்துச் சொன்மி னன்மைக்,கங்கமுறும் புளகெனப்போந் திருத்திக் கண்மீட யக்கீரன் முதன்மூவ ருரைகொண் டார்கள். (ககூ)

கசு. சிவமுனி - தருமியின் தகைதை. தருமி - ஒரு பிரமசாரிப் பிராமணன். மன்றல் செய்வான் - கலியாணம் செய்துகொள்வதற்கு. பொற்கிழி - பொன் முடிப்பு. தூக்க - தொங்கக்கட்ட. மருந்து - அமுதத்தை.

கஎ. நக்கீரன் - சிறப்பையுடைய கீரன். வேவுற - வேதும்படி. சொல் எனும்புகழ் அகதாதி - சொல் என்பதை முதலிலே (பத்ர கலியோதி காளத்தி பாதியர் தாதி யென்னும் பிரபித்தம் (கஎ: டு.) பூவை - காகணவாய்ப்புள். கயற் கண்ணி - மீனுக்கியம்மை. பொய்கை - பொற்றாமரை.

கஅ. யாரென - யாரென்று சோமசுந்தரக்கடவுள் வினவ. தென்முனி - அகத்தியர். எண்வழி - ஞாபக ஆற்றல்.

ககூ. இறையனுர் பொருட்கு - இறையனுரகப்பொருட்கு. ஏனோரும் - மற்றையோரும். மலிந்து - சொற்போர்செய்து. நல்லமைக்கு - கல்லாபாருக்கு. உங்களுக்குத் தெரிவித்தற்கு. மூவர் - நக்கீரர், கபிலர், பரணர்.

உ0.—இடைக்காடன்பின்பேர்ன திருவிளையாடல்.

கூறுமிடைக் காடனியற் கவிதை பாடிக் கொடுகாண மன்னி கழ்ந்து தள்ள கொக்தே, வீறுயரா லயத்தணுகிப் பொருணீ சொல் லுன் மெல்லியென மறைபுகலு மிகழ்ந்த துன்னே, மாறகலுன் றேவி யைமற் றீலேயென் றேத்தி வரைந்தேக யானுமே குவலென் றேகி, யேறியசங் கத்தொடிருந் தழைப்பப் போந்தா னிடத்தைவட திரு வால வாயென் ரூர்கள். (உ0)

உக.—கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்.

